(b). பி - என்பவனுக்கு ௧,000 ரூபாய் பாக்கியிருக்கிற - சி - என்பவன் அதைச்செலுத்தத்தவறினால், ஆறுமாசக்கடைசியில் அந்தத் தொகையை - பி - என்பவனுக்குத் தான்செலுத்துகிறதாக - எ - என்பவன் வாக்குத்தத்தம் செய்கிறான். அப்பிரகாரமே - சி - எனபவனுக்கு கெடுவு கொடுக்கிறதாக - பி - என்பவன் வாக்குத்தத்தஞ்செய்கிறான். இதில் அவனவன் செய்கிற வாக்குத்தத்தம் மற்றவனுடைய வாக்குத்தத்தத்துக்கு பிரதிபலனாயிருக்கிறது, அதுகள் சட்டசம்மதமான பிரதிபலனாகும்.

(c). எ - என்பவன் தனக்கு - பி - என்பவனால் செலுத்தப்பட்ட ஒரு தொகைக்காக, பி - என்பவனுடைய கப்பல் பலான சபரிலே உடைந்துபோனால் அவனுக்கு அந்த கப்பற் கிரயத்தை கொடுப்பதாக வாக்குத்தத்தஞ் செய்கிறான். இதில் - எ - என்பவனுடைய வாக்குத்தத்தம் - பி - என்பவன் கொடுத்த பணத்துக்குப் பிரதிபலனாயிருக்கிறது, பி - எனபவன் பணங்கொடுத்தது - எ - என்பவனுடைய வாக்குத்தத்தத்துக்குபிரதிபலனாயிருக்கிறது, இதுகள் சட்ட சம்மதமான பிரதிபலன்களாகும்.

(d). பி - என்பவனுடைய குழந்தையைக் காப்பாற்றுகிறதாக - எ - என்பவன் வாக்குதத்தஞ்செய்கிறான், அதற்காக வருஷந்தோறும் - எ - என்பவனுக்கு ௧000, ரூபாய் கொடுப்பதாக-பி - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறான். இதில் அவனவன் செய்கிற வாக்குத்தத்தம் மற்றவனுடைய வாக்குத்தத்தத்துக்கு பிரதிபலனாயிருக்கிறது. அதுகள் சட்டசம்மதமான பிரதிபலன்களாகும்.

(e). எ - பி - சி - என்பவர்கள் மோசத்தினாலே தாங்கள் சம்பாதித்தது அல்லது சம்பாதிப்பதாகிய லாபத்தை தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதாக உடன்படிக்கைசெய்துகொள்ளுகிறார்கள். அதினுடைய நோக்கம் சட்டத்துக்கு விரோதமானதாகையால், அந்த உடன்படிக்கைசெல்லாது.

(f). பி - என்பவனுக்கு சர்க்காரில் ஒரு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதாக - எ - என்பவன் வாக்குதத்தஞ் செய்கிறான், எ - என்பவனுக்கு ௧000 - ரூபாய் கொடுப்பதாக - பி - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறான். அதற்காக பிரதிபலன் சட்டத்திற்கு விரோதமுள்ளதாகையால், அந்த உடன்படிக்கை செல்லாது.

(g). ஒரு பூஸ்திதிக்குடையவனுடைய ஏஜெண்டாகிய - எ - என்பவன் முதலாளிக்குத் தெரியாமல் பணம் வாங்கிக்கொண்டு, முதலாளியினுடைய நிலத்தை பி- என்பவனுக்கு குத்தகைக்கு வாங்கிக்கொடுப்பதாய் உடன்படுகிறான். எ - பி - என்பவர்கள் செய்துக்கொண்ட உடன்படிக்கையானது, எ - என்பவன் தன்முதலாளிக்கு சங்கதியை மறைத்துச்செய்த மோசமென்று பொருள்படுகிறபடியால், அந்த உடன்படிக்கை செல்லாது.

(h). எ - என்பவன் கொள்ளைக்காக - பி - என்பவன்பேரில் தான் செய்த பிராதை விட்டுவிடுவதாக - பி - என்பவனுக்கு வாக்குதத்தஞ் செய்கிறான், கொள்ளையடித்த பொருளின் கிரயத்தை மறுபடி கொடுத்துவிடுவதாய் - பி - என்பவன் வாக்குதத்தஞ் செய்கிறான். அந்த உடன்படிக்கையினுடைய நோக்கம் சட்டத்துக்கு விரோதமானதாகையால், அது செல்லாது.

(i). சட்ட நிர்மாண சபையாருடைய ஒரு ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின்படி ரிவினியூ பாக்கிக்காக - எ - என்பவனுடைய பூஸ்திதி விற்கப்படுகிறது, பாக்கிதாரன் அந்த பூஸ்திதியை விலைக்கு வாங்கக்கூடாதென்றும் அந்த ஆக்ட்டினால் தடைசெய்யப்பட்டிருக்கிறது. பி - என்பவன் - எ - என்பவனோடு கலந்து பேசிக்கொண்டு அந்த பூஸ்திதியைக் கொள்ளுகிறான், பின்பு தான் செலுத்தின கிரயப்பணத்தை - எ - என்பவனிடத்தில் பெற்றுக்கொண்டு அவனுக்கு அந்த பூஸ்திதியை விற்றுப்போடுவதாய் உடன்படிக்கைசெய்கிறான்.

அந்த உடன்படிக்கையினாலே அந்த விவகாரம் காரியத்தில் பாக்கிதாரன் கிரயத்துக்குக் கொண்டதுபோலாகி சட்டத்தின் உத்தேசத்திற்கு விரோதம் தேடினமையால், அந்த உடன்படிக்கை செல்லாது.

(j). பி - என்பவனுடைய முக்தியாராகிய - எ - என்பவன் முக்தியாராக - பி என்பவனிடத்தில் தனக்கு செல்லும்வாக்கைக்கொண்டு - சி - என்பவனுக்கு அனுகூலஞ் செய்கிறதாய் வாக்குதத்தஞ் பண்ணுகிறான், சி - என்பவன் - எ - என்பவனுக்கு க,000 ரூபாய் செலுத்துவதாய் வாக்குதத்தஞ்செய்கிறான். இது அநீதியாகையால், அந்த உடன்படிக்கை செல்லாது.

(k). எ - என்பவன் தன்னுடையமகளை - பி - என்பவனுக்கு வைப்பாட்டியாக வாரத்துக்குவிட உடன்படுகிறான், அப்படி வாரத்துக்கு விடுவது இந்தியன் பினல் கோடின்படி தெண்டிக்கப்படத் தக்கதல்லாவிட்டாலும் அது அநீதியாகையால், அந்த உடன்படிக்கை ரத்தாய்விடுகிறது.

செல்லாத உடன்படிக்கைகள்.

பிரதி பலன்களிலும் நோக்கங்களிலும் எவ்வளவாவது சட்டத்திற்குவிரோதமாயிருக்குமாகில் உடன்படிக்கைகள் செல்லாது.

௨௪. ஒன்றல்லது பலநோக்கங்களுக்காகவோ ஒரு பிரதிபலனில் யாதொரு பாகமாவதுஒரே ஒரு நோக்கத்திற்காகபலபிரதிபலன்களில்யாதொன்றாவது, யாதொன்றில் எவ்வளவுபாகமாவதுசட்டத்துக்கு விரோதமா யிருக்குமாகில், உடன்படிக்கை செல்லாது.

திருஷ்டாந்தம்.

கிரமமான ஒரு நீலதொட்டியையும் மற்றசரக்குகளிலே அக்கிரமமான ஒரு வியாபாரத்தையும் - பி - என்பவன் பட்சத்தில் மேல்விசாரணை செய்துக்கொள்ளுகிறதாக - எ - என்பவன் வாக்குதத்தம் பண்ணுகிறான் - எ - என்பவனுக்கு வருஷத்தில் க0,000 ரூபாய் சம்பளங்கொடுக்கிறதாக - பி-என்பவன் வாக்குதத்தஞ்செய்கிறான் - எ - என்பவனுடைய வாக்குதத்தத்தின் நோக்கத்திலும் - பி - என்பவனுடைய வாக்குதத்தத்தின் பிரதிபலனிலும் ஓர்பாகம் சட்டத்திற்கு விரோதமாயிருக்கிறபடியால், அந்த உடன்படிக்கை செல்லாது.

பிரதி பலனில்லாத உடன்படிக்கை செல்லாது.

௨௫. பிரதி பலனில்லாமல் செய்யப்பட்ட உடன்படிக்கையானது.—

எழுதிரிஜிஸ்தர் செய்யப்பட்டிராவிட்டாலும்.

(க). ஒருவருக்கொருவர் நெருங்கின பந்துவாயிருக்கிற இருபட்சத்தாருக்கு முண்டாகிய இயற்கையான ஆசாபாசத்தின்பொருட்டு, வெளிப்படையாயெழுதி, தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்தர்செய்வதற்காக அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டிராவிட்டாலும்;

(உ). வாக்குத்தத்தஞ் சேய்கிறவனுக்காக வேதோ ஒரு காரியத்தை யாவது, வாக்குத்தத்தஞ் செய்கிறவன் எதைச் செய்ய சட்டப்படி நிர்ப்பந்திக்கப்படத் தக்கவனுயிருக்கிறுனே அந்தகாரியத்தையாவது அதுவரையிலே வலியச் செய்திருக்கிறவனுக்கு முழுதுமாவது ஒருபாகமாவது வதிலளிப்பதற்கு வாக்குத்தத்தமாயிராவிட்டாலும்.

செய்யப்பட்ட யாதொரு காரியத்திற்காக வதிலளிப்பதற்கு வாக்குத்தத்தமாயிராவிட்டாலும்.

(ங). வியாச்சியங்களைக்குறித்த காலநிர்ணயசட்டமில்லாவிட்டால், கடன் கொடுத்தவன் வசூல் செய்திருக்கும்படியான கடனை முழுதுமாகிலும் ஓர்பாகமாகிலும் செலுத்துவதாகக் கடனிறுக்கத் தக்கவனுவது, அதுவிஷயமாய்ப் பொதுவாகவாகிலும் பிரத்தியேகமாகவாகிலும் அதிகாரங்கொடுக்கப்பெற்ற அவனுடைய ஏஜெண்டாவது எழுதி கையெழுத்துப்போட்டுக்கொடுத்த வாக்குத்தத்தமாயிராவிட்டாலும், செல்லாது.

காலநிர்ணயசட்டத்தினுல் தோஷமுண்டாயிருக்கிற கடனைச்செலுத்துவதற்குவாக்குத்தத்தமாயிராவிட்டாலும்.

அப்படிப்பட்டதாயிருக்கிற விஷயங்களிலெதிலாவது அப்படிப்பட்ட உடன்படிக்கை கந்திராக்ட்டு ஆகும்.

விவரம்-க.—வாஸ்தவமாய்ச் செய்யப்பட்ட யாதொரு தானத்தை கொடுத்தவன் விஷயத்திலும் பெற்றுக்கொண்டவன் விஷயத்திலும் அந்த தான ஊர்ஜிதத்திற்கு இந்தப்பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினுலும் பாதகமுண்டாகமாட்டாது.

விவரம்-உ.—வாக்குக்கொடுக்கிறவன் ஏதேச்சையாய் தன்னுடைய சம்மதிகொடுத்திருக்கிற உடன்படிக்கையானது, பிரதிபலன் குறைவாயிக்கிறதினுல்மாத்திரம் செல்லாமற்போகமாட்டாது ; ஆனுல் வாக்குத்தத்தஞ் செய்கிறவனுடைய சம்மதி ஏதேச்சையாயக் கொடுகசப்பட்டதா இல்லையா வென்கிற வாதத்தை நிசசயிப்பதில் கோர்ட்டார் பிரதிபலன் குறைவாயிருப்பதை ஒரு அம்சமாக ஆலோசிக்கலாம்.

திருஷ்டாந்தம்,

(a). பிரதிபலநில்லாமல் - பி - என்பவனுக்கு க,000 ரூபாய்கொடுக்கிறதாக - எ - என்பவன் வாககுதத்தஞ் செய்கிறுன், இது செல்லாத உடனபடிக்கை.

(b). இயற்கையான ஆசாபாசத்தைப்பற்றி - எ - என்பவன் தன்குமாரனுகிய - பி - என்பவனுக்கு க,000 ரூபாய் கொடுக்கிறதாக வாக்குதத்தஞ் செய்கிறான ; எ - என்பவன் - பி - என்பவனுக்குத் தான்செய்த வாக்குதத்தத்தை யெழுதி ரிஜிஸ்தர் செய்விக்கிறுன். இது கந்திராக்ட்டு ஆகிறது.

(c). எ - என்பவன் - பி - என்பவனுடைய பணப்பையை கண்டுபிடித்து அதை அவனுக்குக் கொடுக்கிறுன். பி - என்பவன் - எ - என்பவனுக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கிறதாக வாக்குதத்தஞ் செய்கிறுன். இது கந்திராக்ட்டு ஆகிறது.

(d). எ - என்பவன் - பி - என்பவனுடைய ஆண்குழந்தையைக் காப்பாற்றுகிறுன். இதற்காக - எ - என்பவனுக்குப் பிடிக்கிற செலவைக் கொடுக்கிறதாக - பி என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறுன். இது கந்திராக்ட்டு ஆகிறது.

(e). எ - என்பவன் - பி - என்பவனுக்கு க,000 - ரூபாய்பாக்கியிருக்கிறது, ஆனுல் காலநிர்ணய சட்டத்தினுலே அந்தக் கடனுக்கு தோஷமுண்டாயிருக்கிறது. அந்தக்கடனுக்காக - பி - என்பவனுக்கு ௫00-ரூபாய் செலுத்துகிறதாக - எ - என்

பவன் வாக்குத்தத்தம் எழுதி அதில் கையெழுத்துச்செய்கிறான். ...ட்டு ஆகிறது.

(f). ௧,௦௦௦ - ரூபாய் பெறுமான ஒரு குதிரையை - ௧௦ - ரூபாய்க்கு ... எ - என்பவன் உடன்படுகிறான். அந்த உடன்படிக்கைக்கு - எ - என்பவனுடைய சம்மதி ஏதேச்சையாய்க் கொடுக்கப்படுகிறது. பிரதி பலன் குறைவாயிருந்தபோதிலும் அந்த உடன்படிக்கை கந்தராக்ட்டு ஆகிறது.

(g). ௧,௦௦௦ - ரூபாய் பெறுமான ஒரு குதிரையை - ௧௦ - ரூபாய்க்கு விற்க எ - என்பவன் உடன்படுகிறான் - எ - என்பவன் அந்த உடன்படிக்கைக்குத் தன்னுடைய சம்மதியை ஏதேச்சையாய்க் கொடுக்க வில்லையென்கிறான் - எ - என்பவனுடைய சம்மதி ஏதேச்சையாய்க் கொடுக்கப்பட்டதா இல்லையாவென்று யோசிப்பதில் கோர்ட்டார் பிரதிபலன் குறைவாயிருக்கிற சங்கதியை ஒரு அம்சமாகக் கொள்ளவேணும்.

விவாகத்தை நிறுத்துவதற்கான உடன்படிக்கைசெல்லாது.

௨௬. மைனர்தவிர வேறேயாதொரு நபரினுடைய விவாகத்தை நிறுத்துவதற்கான பிரதி உடன்படிக்கையும் செல்லாததாகும்.

வியாபாரத்தை நிறுத்துவதற்கான உடன்படிக்கைசெல்லாது.

௨௭. சட்ட சம்மதமான எவ்வித தொழிலையாவது வியாபாரத்தையாவது வர்த்தகத்தையாவது நடத்தவொட்டாமல் எவனையாவது தடுக்கிற பிரதி உடன்படிக்கையும் அந்த அளவுக்கு செல்லாததாகும்.

எதின்பிரயோசனம் விற்றுப்போடப்படுகிறதோ அந்தவர்த்தகத்தை நடத்தாதிருக்கும்படியான உடன்படிக்கைக்கு பாதகமில்லை.

விலக்கு-௧.—ஒருவர்த்தகத்தின் பிரயோசனத்தை விலைக்குக்கொள்ளுகிறவனாவது அவனிடத்திலிருந்து அந்தப்பிரயோசனத்துக்கு சுதந்கரமடைகிறவனெவனாவது குறிக்கப்பட்ட பிரதேச யெல்லைக்குள் அவ்வித வர்த்தகத்தை நடத்திக்கொண்டிருக்கிறவரையில், அதை விற்றவன் அந்த எல்லைக்குள் அவ்விதவர்த்தகத்தை நடத்தாமலிருப்பதாக அதைக்கொண்டவனோடு உடன்படிக்கைசெய்யலாம், ஆனால் அப்படிப்பட்ட எல்லைகள் அந்த வர்த்தகத்தின் தன்மையை யோசிக்குமளவில் கோர்ட்டாருக்கு யுக்தமானதாய்க் காணப்படவேண்டும்.

கூட்டுப்பங்கு பிரிவினைக்கு முந்தி பங்குக்காரர்களுக்குள் உண்டாகிற உடனபடிக்கைக்கு பாதகமில்லை.

விலக்கு-௨.—கூட்டுப்பங்குக்காரர்கள் தாங்களெல்லோருமாவது தங்களில் சிலராவது இதற்கு முந்திய விலக்கில் குறித்திருக்கும்படியான பிரதேச எல்லைக்குள் அந்தக்கூட்டுப்பங்கு வர்த்தகம்போன்ற வர்த்தகத்தை நடத்துகிறதில்லையென்று அந்தக்கூட்டுப்பங்கு பிரிவினையின்போதாவது, பிரிவினைக்கு முந்தியாவது உடன்படிக்கை செய்துக்கொள்ளலாம்.

கூட்டுப்பங்கு நடந்துகொண்டிருக்கையில் உண்டாகிற உடன்வடிக்கைக்கு பாதகமில்லை.

விலக்கு-௩.—கூட்டுப்பங்குக்காரர்கள் தாங்களெல்லோருமாவது தங்களில் யாராமொருவராவது அந்தக்கூட்டுப்பங்கு நடந்துக்கொண்டிருக்கையில் அந்தக்கூட்டுப்பங்குக்கு வர்த்தகந்தவிர வேறே யாதொரு வர்த்தகம் நடத்துவதில்லையென்று உடன்படிக்கை செய்துக் கொள்ளலாம்.

நியாயவிவகாரநடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படியான உடன்படிக்கைகள் செல்லாது

உஅ. உடன்படிக்கையைச்சேர்ந்த யாதொரு பட்சத்தானுக்காவது யாதொரு கந்திராக்டின் படிக்காகிலும் கந்திராக்டு சம்பந்தமாயாகிலும் உண்டாயிருக்கிற சுதந்தரங்களை சாதாரணமான கோர்ட்டுகளில் வழக்கமான நியாயவிவகார நடவடிக்கைகளைக்கொண்டு நிறைவேற்றிக் கொள்ளாமல் அவனை சுத்தமாய்த் தடுக்கிறதாகவாவது அவனுடைய சுதந்தரங்களை இவ்வளவு காலத்திற்குள் அவ்விதமாய அவன் நிறைவேற்றிக்கொள்ளலாமென்று காலநிர்னயஞ்செய்கிறதாகவாவதிருக்கிற பிரதி உடன்படிக்கையும் அந்த அளவுக்குச்செல்லாததாகிறது.

விவாதமுன்டானால் அதைபஞ்சாயத்தில் தெரிவித்துக்கொள்ளுவதற்கான கந்திராக்ட்டுக்கு பாதகமில்லை.

விலக்கு - க.—இருவர் அல்லது பலர் யாதொரு விஷயத்தைப்பற்றியாவது விஷயங்களின் யாதொரு இனத்தைப்பறறியாவது தங்களுக்குள்யாதொரு விவாதமுண்டானல், அதை பஞ்சாயத்தில் தெரிவித்துக் கொள்ளவேண்டியதென்றும், அப்படிப்பட்டபஞ்சாயத்தில் தீர்மானிக்கப்பட்டதொகைமாத்திரம் அப்படிசொல்லிக்கொள்ளப்பட்ட விவாக சம்பந்தமாய் வசூல் செய்யப்படவேண்டியதென்றும் உடன்படுகிற கந்திராக்ட்டு இந்தப்பிரிவினலே சட்டத்துக்கு விரோதமாகமாட்டாது.

அப்படிப்பட்ட கந்திராக்ட்டுகளினலே வியாச்சியங்களுக்குத்தடை.

அப்படிப்பட்ட கந்திராக்ட்டு செய்யப்பட்டிருக்குமாகில், அதை நிறைவேற்றுவதற்கென்றே வியாச்சியங்கொண்டுவரலாம்; அப்படி நிறைவேற்றுவதற்காகவாவது மேற்சொல்லியபடி தீர்மானிக்கப்பட்ட தொகையை வசூல்செய்வதற்காகவாவதல்லாமல் வேறே யாதொரு வியாச்சியமானது அப்படிப்பட்ட கந்திராக்ட்டைச்சேர்ந்த ஒரு பட்சத்தானல் மற்றபட்சத்தான்பேரில், அவர்கள் பஞ்சாயத்தில் தெரிவித்துக்கொள்ள மேற்சொல்லியபடி உடன்பட்டிருக்கிற யாதொரு விஷயத்தைக்குறித்துக் கொண்டுவரப்பட்டால், அப்படிப்பட்ட கந்திராக்ட்டு இருக்கிறது அந்த வியாச்சியங்கொண்டுவருவதற்குத் தடையாகும்.

அதுவரையி லுண்டாயிருக்கிற விவாத அம்சங்களை பஞ்சாயத்தில் தெரிவித்துக்கொள்ளுவதற்கான கந்திராக்ட்டுக்கு பாதகமில்லை.

விலக்கு - உ.—இருவர் அல்லதுபலர் தங்களுக்குள் முன்னதாகவே உண்டாயிருக்கிற யாதொரு விவாத அம்சத்தை பஞ்சாயத்தில் தெரிவித்துக்கொள்ள எழுத்து மூலமாய் உடன்பட்டிருக்கிற யாதொரு கந்திராக்ட்டு இந்தப் பிரிவினலே சட்டத்துக்கு விரோதமாகவுமாட்டாது, பஞ்சாயத்தில் தெரிவித்துக் கொள்ளுவதைக்குறித்து அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டத்கிலுள்ள எந்த நிபந்தனைக்காவது இந்தப்பிரிவினலேபாதக முண்டாகவுமாட்டாது.

நிச்சய மில்லாவிட்டால் உடன் படிக்கை கள் செல்லாது.

உகூ. எதினுடைய அர்த்தம் நிச்சயமில்லாததாகவாவது நிச்சயிக்கக் கூடாமையானதாகவாவதிருக்கிறதோ அந்த உடன்படிக்கைகள் செல்லாததாகும்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் - பி - என்பவனுக்கு 'நூறு ட்டன் எண்ணெ' விற்க உடன்படுகிறான். உத்தேசித்தது இவ்விதமான எண்ணெயென்று தெரிவிப்பதற்கு வகையொன்று மில்லை. நிச்சயமில்லாமையினால் அந்த உடன்படிக்கை செல்லாது.

(b). வியாபாரச் சரக்கென்று தெரிந்திருக்கிற குறிக்கப்பட்ட வகையான எண்ணெ நூறு ட்டன் - பி - என்பவனுக்கு விற்க - எ - என்பவன் உடன்படுகிறான். இதில் அந்த உடன்படிக்கையை செல்லாத தாக்கும்படியான நிச்சய மில்லாமை யொன்றுமில்லை.

(c). தேங்காயெண்ணெமாத்திரம் விற்பனைசெய்கிறவர்த்தகனாகிய - எ - என்பவன் - பி-என்பவனுக்கு 'நூறு ட்டன் எண்ணெ' விற்க உடன்படுகிறான். எ - என்பவனுடைய வியாபாரத்தின் தன்மையினால் இந்த சொற்களுக்கு அர்த்தம்விளங்குகிறது, நூறு ட்டன் தேங்காயெண்ணெ விற்பதற்கு - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்திருக்கிறதாகிறது.

(d). எ - என்பவன் 'ராமநகரத்திலே என்னுடைய களஞ்சியத்திலுள்ள தானியத்தையெல்லாம்' [என்றுசொல்லி] - பி - என்பவனுக்கு விற்க உடன்படுகிறான். இதில் அந்த உடன்படிக்கையை செல்லாத தாக்கும்படியான நிச்சயமில்லாமை யொன்றுமில்லை.

(e). எ - என்பவன் 'சி - என்பவனால் நிர்னயிக்கப்படுகிற விலைப்படிக்கு ஆயிர மணங்கு அரிசி' பி - என்பவனுக்கு விற்க உடன்படுகிறான். விலை நிச்சயிக்கக்கூடுமானதாயிருக்கிறபடியால், இதில் அந்த உடன்படிக்கையை செல்லாததாக்கும்படியான நிச்சயமில்லாமை யொன்றுமில்லை.

(f). எ - என்பவன் 'ஐந்நூறு ரூபாய்க்காவது ஆயிரம் ரூபாய்க்காவது என்னுடைய வெள்ளைக்குதிரையை' [என்றுசொல்லி] பி-என்பவனுக்கு விற்க உடன்படுகிறான். இந்த இரண்டு விலைகளில் இன்னது கொடுக்கவேண்டியதென்று தெரிந்துகொள்ளுவதற்கு வகையொன்றுமில்லை. அந்த உடன்படிக்கை செல்லாது.

பந்தயத்திற்காகச் செய்துகொள்ளுகிறஉடன்படிக்கைகள் செல்லாது.

௩௰. பந்தயத்திற்காகச் செய்துகொள்ளுகிற உடன்படிக்கைகள் செல்லாததாகிறது, மேலும் யாதொரு பந்தயத்தில் கெலித்ததாகச் சொல்லப்பட்ட யாதொரு பொருளையாவது, யாதொரு ஆட்டமாகிலும் எதைக்குறித்து யாதொரு பந்தயம் போட்டுக்கொள்ளப் படுகிறதோ அந்த வேறே அநிச்சயமான காரியமாகிலும் தேறுகடையாகிறபடி நடத்துவதற்கு யாவனொருவனிடத்திலே ஒப்பிக்கப்பட்ட யாதொருபொருளையாவது வரப்பற்றுவதற்காக வியாச்சியங் கொண்டுவரப்படாது.

குதிரைப் பந்தயத்திற்காக சில வெகுமதி விஷயத்தில் விலக்கு.

யாதொரு குதிரைப்பந்தயம் கெலிக்கிறவனுக்காவது கெலிக்கிறவர்களுக்காவது கொடுக்கும்படி ஐந்நூறு ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட கிரயமாகிலும் தொகையாகிலுமுள்ள யாதொரு தட்டு - வெகுமானம் - அல்லது பணத்திற்காகசெய்த கையொப்பமாவது கொடுத்த ஈவாவது, கையொப்பஞ் செய்யவாகிலும் ஈவு கொடுக்கவாகிலும் செய்த உடன்படிக்கையாவது இந்தப் பிரிவினாலே சட்டத்துக்கு விரோதமானதா யெண்ணப்படாது.

இந்தியன் பினல்கோட் - உ௬௪ A - பிரிவுக்கு பாதகமில்லை.

இந்தியன் பினல்கோட்-உ௬௪ - A-பிரிவிலுள்ள நிபந்தனைகள் சம்மந்தப்படுகிற குதிரைப் பந்தையத்தைச் சேர்ந்த யாதொரு காரியத்தைச் சட்ட சம்மதமானதாக இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் எண்ணக்கூடாது.

௲ - ம் அத்தியாயம்.—ஈடொட்டான கந்திராக்ட்டுகளைக் குறித்து.

ஈடொட்டான கந்திராக்ட்டு என்பதற்கு விவரணம்.

௲௧. ஈடொட்டான கந்திராக்ட்டு என்பது அப்படிப்பட்ட கந்திராக்ட்டுக்குச் சார்பான ஏதோ ஒரு காரியம் சம்பவித்தாலும் சம்பவியா விட்டாலும், ஏதோ ஒன்று செய்கிறதாகவாவது செய்யாதிருப்பதாக வாவது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கந்திராக்ட்டாகிறது.

திருஷ்டாந்தம்.

பி - என்பவனுடைய வீடு எரிந்துபோனால் அவனுக்கு ௧0,000 ரூபாய் கொடுப்பதாக - எ - என்பவன் உடன்படிக்கை செய்கிறான். இது ஈடொட்டான கந்திராக்ட்டாகிறது.

யாதொரு காரியம் சம்பவிப்பதின்பேரில் ஈடொட்டாயிருக்கிற கந்திராக்ட்டுகளைசெலாமணிசெய்விப்பது.

௲௨. ஒரு அநிச்சயமான பவிஷியத் காரியம் சம்பவித்தால், யாதொன்றைச் செய்வதாகவாவது செய்யா திருப்பதாக வாவது, ஏற்படுகிற ஈடொட்டான கந்திராக்ட்டுகளை, அந்தகாரியம் சம்பவியாவிட்டாலும் சம்பவிக்கிறவரையிலும் சட்டத்தைக்கொண்டு செலாமணிசெய்விக்கக்கூடாது.

அந்தக்காரியம் அசாத்தியமாய்விட்டால் அப்படிப்பட்டகந்திராக்ட்டுகள்செல்லாததாய் விடுகிறது.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் - சி - என்பவனுக்குப் பின்புதான் ஜீவித்திருந்தால்-பி- என்பவனுடைய குதிரையை விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறதாக - பி - என்பவனிடத்திலே உடன்படிக்கை செய்கிறான். எ - என்பவனுடைய ஜீவிதகாலத்தில் - சி- என்பவன் இறந்து போகாவிட்டாலும் இறந்து போகிறவரையிலும் இந்த கந்திராக்ட்டைச் சட்டத்தைக்கொண்டு செலாமணி செய்விக்கக்கூடாது.

(b). எ - என்பவன் - சி - என்பனுக்கு விற்கிறேனென்று சொன்ன ஒருகுதிரையை அவன் வாங்கிக்கொள்ள நிராகரித்தால், அதை குறித்த இன்னவிலைக்கு - பி - என்பவனுக்கு விக்கிறதாக - எ - என்பவன் - பி - எனபவனிடத்தில் உடன்படிக்கைசெய்கிறான். சி - என்பவன் அந்தக் குதிரையை வாங்கிக்கொள்ள நிராகரிக்காவிட்டாலும் நிராகரிக்கிற வரையிலும் அந்த கந்திராக்ட்டை சட்டத்தைகொண்டு செலாமணிசெய்விக்கக்கூடாது.

(c). பி - என்பவன் - சி - என்பவளை விவாகஞ் செய்துகொள்ளும் போது அவனுக்கு ஒருதொகை கொடுக்கிறதாக - எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். சி - என்பவள் - பி - என்பவனை விவாகஞ் செய்துகொள்ளாமல் இறந்துபோகிறாள். அந்த கந்திராக்ட்டு செல்லாததாய் விடுகிறது.

ஒருகாரிம் சம்பவியாததினபேரில் ஈரொட்டாயிருக்கிற கந்திராக்ட்டுகளை செலாமணி செய்விப்பது.

௩௩. ஒரு அநிச்சயமான பவுஷிய, காரியம் சம்பவியாவிட்டால், யாதொன்றைச் செய்வதாகவாவது செய்யாதிருப்ப தாகவாவது ஏற்படுகிற ஈரொட்டான கந்திராக்ட்டுகளை, அந்தக் காரியம் சம்பவிப்பது அசாத்தியமானபின்பு செலாமணிசெய்விக்கக் கூடுமே யல்லாமல் அதற்கு முனனிட்டு செலாமணி செய்விக்கக்கூடாது.

திருஷ்டாந்தம்.

ஏதோ ஒரு கப்பல் திரும்பி வராவிட்டால், ஒரு தொகை - பி - என்வனுக்குச் செலுத்துவதாக - எ - என்பவன் உடன்படுகிறான். அந்த கப்பல் முழுகிப்போகிறது. கப்பல் முழுகிப்போன பின்பு அந்த கந்திராக்ட்டை செலாமாமணி செய்விக்கக் கூடும்.

எதின்பேரில் கந்திராக்ட்டு ஈரொட்டாயிருக்கிறதோ அந்தக்காரியத்தை ஜீவித்திருப்பவன் இனி செய்யவேண்டியதா யிருந்தால் அது இன்னபடிக் காணுல் அசாத்திய மானதாக எண்ணப்படு மென்பது.

௩௪. எதின்பேரில் ஒரு கந்திராக்ட்டு ஈரொட்டாயிருக்கிறதோ அந்த பவுஷியத் காரிய மானது நிஷ்கரிஷையில்லாத காலத்தில் ஒருவன் எதில் பிரவர்த்திப்பானே அந்த மார்க்கமாயிருக்குமாகில், அப்படிப்பட்டவன் யாதொன்றைச்செய்து அதினாலே யாதொரு நிர்னயமான காலத்திற் குள்ளாவது பின்னும் ஈரொட்டாயல்லாமல் மற்றப்படிக்காவது அவன அப்படி பிரவர்த்திக்கவேண்டியது அசாத்கியமாய்ப் போகத்தக்கதாகும்போது, அந்தக் காரியம் அசாத்தியமாய்ப் போகிறதாக எண்ணப்படும்.

திருஷ்டாந்தம்.

பி - என்பவன் - சி - என்பவளை விவாகஞ் செய்துகொண்டால், அவனுக்கு ஒரு தொகை கொடுப்பதாக - எ - என்பவன் உடன்படுகிறான்.

சி - என்பவள் - டி - என்பவனை விவாகஞ் செய்துகொள்ளுகிறாள். டி - என்பவன் இறந்துபோகலாம் பின்பு - சி என்பவள் - பி என்பவனை விவாவகஞ்செய்துகொள்ளலாமென்பது சாத்தியமானபோதிலும், சி - என்பவளை - பி-என்பவுன் விவாகஞ்செய்துகொள்வது இப்போது அசாத்தியமாகவே எண்ணப்படவேண்டும்.

நிர்னயமானகாலத்திற்குள் குறித்தகாரியம்சம்பவிப்பதின் பேரில் ஈரொட்டாயிருக்கிறகந்திராக்ட்டுகள் இன்னபடிக் காணுல் செல்லாததாகும்.

௩௫. நிர்னயமான காலத்திற்குள் குறித்த அநிச்சயமான காரியம் சம்பவிக்குமாகில் எதையாகிலும்செய்வதாகவாவது செய்யாதிருப்பதாகவாவது ஏற்படுகிறஈரொட்டான கந்திராக்ட்டுகள்-அந்த நிர்னயமான காலம் கழிகையில் அப்படிப்பட்ட காரியம் சம்பவியாதிருந்தாலும், அந்த நிர்னயமான காலத்திற்குமுன்னே அப்படிப்பட்ட காரியம் அசாத்தியமாய்விட்டாலும, ரத்தாய்ப்போய்விடுகிறது.

நிர்னயமானகாலத்திற்குள் குறித்த காரியம் சம்பவியாததின் பேரில் ஈரொட்டாயிருக்கிற கந்திராக்ட்டுகளை இன்னபடிக்

நிர்னயமான காலத்திற்குள் குறித்த அநிச்சயமான காரியம் சம்பவியாவிடில் எதையாகிலும் செய்வதாகவாவது செய்யாதிருப்பதாகவாவது ஏற்படுகிற ஈரொட்டான கந்திராக்ட்டுகளை, அந்த நிர்னயமான காலங்கழிந்துபோய் அப்படிப்பட்ட காரியம் சம்பவியாமற்போனாலும், நிர்னயமான காலம் கழிவதற்கு மு

காளுல் செலாமணி செய்விக்கலாம்.

ன்னே அப்படிப்பட்ட காரியம் சம்பவியாதென்று நிச்சயமாய்விட்டாலும், சட்டத்தைக்கொண்டு செலாமணிசெய்விக்கலாம்.

திருஷ்டாந்தம்.

(a). பலான கப்பல் ஒரு வருஷத்திற்குள் திரும்பிவந்தால் - பி - என்பவனுக்கு ஒரு தொகை செலுத்துவதாக - எ - என்பவன் வாக்குத்தத்தஞ்செய்கிறுன். வருஷத்திற்குள் அந்தக் கப்பல் திரும்பிவந்தால், அந்த கந்திராக்ட்டை செலாமணி செய்விக்கலாம்; வருஷத்திற்குள் அந்தக்கப்பல் எரிந்துபோளுல் அந்த கந்திராக்ட்டு செல்லாததாய் விடுகிறது.

(b). பலான கப்பல் ஒரு வருஷத்திற்குள்திரும்பி வராவிட்டால் - பி - என்பவனுக்கு ஒரு தொகை செலுத்துவதாக - எ - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிருன். அந்தக் கப்பல் வருஷத்த்திற்குள் திரும்பி வராவிட்டாலும், வருஷத்திற்குள் எரிந்துபோளுலும், அந்த கந்திராக்ட்டைசெலாமணி செய்விக்கலாம்.

அசாத்தியமான காரியங்களின்பேரில் ஈடொட்டாயிருக்கிற உடன்படிக்கைகள் செல்லாது.

கூசு. ஒரு அசாத்தியமான காரியம் சம்பவிக்குமாகில்எதையாகிலும் செய்வதாகவாவது செய்யாதிருப்பதாகவாவது ஏற்படுகிற ஈடொட்டான உடன்படிக்கைகள் - அப்படிப்பட்ட உடன்படிக்கையைச்சேர்ந்த நபர்களுக்கு அது செய்யப்படுகிற காலத்தில் அந்தக்காரியம் அசாத்தியமென்று தெரிந்திருந்தாலும் இராவிட்டாலும், செல்லாது.

திருஷ்டாந்தம்.

(a). இரண்டு நேர் வரிகள் ஓரிடத்தைசூழ்ந்துகொள்ளுமாகில் - பி - என்பவனுக்கு க,000 - ரூபா கொடுப்பதாக எ - என்பவன் உடன்படுகிருன். அந்த உடன்படிக்கை செல்லாது.

(b). பி - என்பவன் - எ-என்பவனுடைய குமாரத்தியாகிய - சி - என்பவளை விவாகஞ்செய்து கொண்டால், பி - என்பவனுக்கு க,000 - ரூபாய் கொடுப்பதாக எ - என்பவன் உடன்படுகிருன். உடன்படிக்கை காலத்தில் - சி - என்பவள் இறந்துபோயிருக்கிருள். அந்த உடன்படிக்கை செல்லாது.

கந்திராக்ட்டுகளை நிறைவேற்றுவதைக்குறித்து.

௪ - ம் அத்தியாயம்.—நிறைவேற்றப்பட வேண்டிய கந்திராக்ட்டுகள்.

கந்திராக்ட்டைச் சேர்ந்த நபர்களுடைய பொறுப்பு.

கூஎ. வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவது - இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின் படிக்காவது வேறே யாதொரு சட்ட நிபந்தனைகளின்படிக்காவது நிறுத்தி விடப்படாவிட்டாலும் மன்னிக்கப்படாவிட்டாலும், ஒருகந்திராக்ட்டைச் சேர்ந்த நபர்கள் தங்கள் தங்கள்வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவாவது வேண்டியது, நிறைவேற்றுகிறேமென்ருவது சொல்லவேண்டியது.

வாக்குத்தத்தஞ் செய்கிறவர்கள் அதை நிறைவேற்றுவதற்கு முன்னமே இறந்துபோவார்களாகில், அந்த கந்திராக்ட்டில விரோதமான கருத்து தோன்ருவிட்டால், அந்த வாக்குத்தத்தங்கள் அவர்களுடைய பிரதிநிதிகளை கடமைப் படுத்துகிறது.

திருஷ்டாந்தம்.

(a). ௧, ௦௦௦ - ரூபாய் செலுத்துவதின்பேரில் ஏதோ ஒரு தினத்திலே - பி - என்பவனுக்கு சரக்குகளை ஒப்பிக்கிறதாக - எ - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறான். அந்த தினத்திற்கு முன்னமே - எ - என்பவன் இறந்து போகிறான். எ - என்பவனுடைய பிரதிநிதிகள் - பி - என்பவனுக்கு சரக்கை ஒப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள், எ - என்பவனுடைய பிரதிநிதிகளுக்கு ௧, ௦௦௦ - ரூபாய் செலுத்த - பி - என்பவன் கடமைப்பட்டிருக்கிறான்.

(b). ஏதோ ஒரு விலைக்கு ஏதோ ஓர் தினத்தில் - பி - என்பவனுக்காக ஒரு படம் வர்னம் தீர்ப்பதாய் - எ - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறான். அந்த தினத்திற்கு முன்னே - எ - என்பவன் இறந்துபோகிறான். எ - என்பவனுடைய பிரதிநிதிகளாவது - பி - என்பவனாவது அந்த கந்திராக்ட்டைச் செலாயணி செய்விக்கக்கூடாது.

நிறைவேற்றுவதாகச் சொல்வதை அங்கீகரியாமல் நிராகரித்தால் இன்னதாகுமென்பது.

௩௮. வாக்குத்தத்தஞ் செய்கிறவன வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனுக்கு அதைநிறைவேற்றுகிறதாகச் சொல்லியிருந்து, அது அங்கீகரிக்கப்படாவிட்டால, வாக்குத்தத்தஞ் செய்கிறவன் நிறைவேற்றாமைக்காக உத்தரவாதியுமாகான், அதினாலே அந்த கந்திராக்ட்டின்படி அவன் தன்னுடைய சுதந்தரங்களை இழந்து போகவுமாட்டான்.

அப்படி நிறைவேற்றுவதாகச் சொல்லுவதொவ்வொன்றிலும் அடியில்வருகிற திட்டங்கள் நடந்தேறியிருக்கவேணும்:—

௧. அது ஷரத்தொன்றுமில்லாமல் பரிஷ்காரமாயிருக்கவேணும்:

௨. நிறைவேற்றுவதாகச் சொல்லுகிறவன் தன் வாக்குத்தத்தினால்செய்யக்கடமைப்பட்டிருப்பதை முழுதும் அவ்விடத்திலே அக்காலத்தில செய்வதற்கு சக்தியுள்ளவனும் இஷ்டமுள்ளவனுமிருக்கிறானென்று நிச்சயிப்பதற்கு, எவனுக்கு அப்படி சொல்லப்படுகிறதோ அவனுக்கு நியாயமான சாவகாசமுண்டாயிருக்கும்படியான தகுந்த காலத்திலும் இடத்திலும் அப்படிப்பட்ட சங்கதிகளையொட்டியும அது சொல்லப்பட வேண்டியது.

௩. நிறைவேற்றுவதாகச் சொல்லுவது வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனுக்கு யாதொரு பொருளை ஒப்பிப்பதாகச் சொல்லுவதாயிருக்குமாகில், அப்படி ஒப்பிக்கிறதாகச் சொல்லப்பட்ட பொருள் வாக்குத்தத்தஞ் செய்கிறவன் தன்னுடைய வாக்குத்தத்தினால் ஒப்பிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிற பொருள் தானென்று கண்டறிய வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனுக்குத் தகுந்த சாவகாசமுண்டாயிருக்கவேணும்.

சாங்கத்தியமாய் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட பலருக்குள் ஒருவனுக்கு நிறைவேற்றுவதாகச் சொல்லப்படுகையில், அவர்களெல்லோர்க்குஞ் சொல்லப்பட்டால் சட்டத்தினாலே என்ன பிரயோசனமுண்டாகுமோ அதே பிரயோசனங்கள் அதற்கும் உண்டாகும்.

திருஷ்டாந்தம்.

இன்னதரமான ௧௦௦ - பஞ்சுக்கட்டுகளை - ௧௮௭௩ ஹு மார்ச்சுமீ ௧௨ - பி - என்பவனுக்கு அவனுடைய கிடங்கிலே ஒப்பிப்பதாக - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான். இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற பிரயோஜனமுண்டாயிருக்கு

ம்படி நிறைவேற்றும்பொருட்டு, நிர்ணயமான தினத்திலே - எ - என்பவன் - கொ ண்டுவருவதாகச் சொல்லப்பட்ட வஸ்து கந்திராகட்டு செய்யப்பட்ட தரமுள்ள ப ஞ்சுதானென்றும் ௲௰ - கட்டுகளிருக்கிறதென்றும் கண்டறிய - பி - என்பவனுக் குத் தகுந்த சாவகாச முண்டாகும்படியான விதமாய் - பி - என்பவனுடைய கிட ங்குக்குப் பஞ்சைக் கொண்டுவரவேண்டியது.

௩௯. கந்திராக்ட்டைச் சேர்ந்த ஓர் பட்சத்தான் தன்னுடைய வாக்குத்தத்தைப் பூர்த்தியாய் நிறைவேற்ற நிராகரித்தாலும், நிறைவேற்றாமலிருக்கும்படி தன்னை அசக்தனாக்கிக் கொண்டாலும், வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவன் அந்த கந்திராக்ட்டு நடந்துகொண்டேயிருப்பதற்குத் தன்னுடைய சம்மதியை சொற்களாலாகிலும் நடத்தையினாலாகிலும் தெரியப்படுத்தியிராத பட்சத்தில், அவன் அந்த கந்திராக்ட்டை அடித்துப் போடலாம்.

வாக்குத்தத்தைப் பூர்த்தியாய் நிறைவேற்றஓர் பட்சத்தான் நிராகரித்தால்இன்னதாகுமென்பது.

திருஷ்டாந்தம்.

(a) பாடகியாகிய - எ - என்பவள் ஒருநாடகசாலையின் காரியஸ்தனாகிய பி- என்பவனிடத்திலே அவனுடைய நாடகசாலையில் அடுத்த இரண்டுமாசகாலத்திலே வாரந்தோறும் இரண்டு ராத்திரி பாடுவதாக கந்திராக்ட்டு செய்கிறாள், ஒவ்வொரு ராத்திரி பாட்டுக்கு அவளுக்கு - ௲௰-ரூபாய் கொடுப்பதாக பி-என்பவன் உடன்படுகிறான். ஆறானாள் ராத்திரி - எ - என்பவள் நாடகசாலைக்கு வராமல் வேணுமென்று நின்றுவிடுகிறாள். அந்த கந்திராக்ட்டை பி-என்பவன் அடித்துப்போட்டால் போடலாம்.

(b) பாடகியாகிய - எ - என்பவள் ஒரு நாடகசாலையின் காரியஸ்தனாகிய-பி என்பவனிடத்திலே அவனுடைய நாடகசாலையில் அந்த இரண்டுமாசகாலத்திலே வாரந்தோறும் இரண்டு ராத்திரி பாடுவதாக கந்திராக்ட்டுசெய்கிறாள், ஒவ்வொரு ராத்திரிக்கு அவளுக்கு ௲௰ - ரூபாய்விழுக்காடு கொடுப்பதாக - பி - என்பவன் உடன்படுகிறான். ஆறானாள் ராத்திரி - எ - என்பவள் வராமல் வேணுமென்று நின்றுவிடுகிறாள். பி - என்பவனுடைய சம்மதியின்பேரில் - எ - என்பவள் ஏழாநாள் ராத்திரி பாடுகிறாள். அந்த கந்திராக்ட்டை நடத்துவதற்கு - பி - என்பவன் தன்னுடைய சம்மதியைத் தெரிவித்திருக்கிறான், அதை அவன் இப்போது அடித்துப்போடக்கூடாது, ஆனால் ஆறானாள் ராத்திரி - எ - என்பவள் பாடாமற்போனதினாலே-பி என்பவனுக்குண்டாகிய நஷ்டத்தை - அவன் பெறுவதற்கு அர்ஹனாகிறான்.

கந்திராக்ட்டுகளை நிறைவேற்றவேண்டியவர்கள்

இன்னாரென்பதைக்குறித்து.

௪௰. ஒரு கந்திராக்ட்டிலுள்ள யாதொரு வாக்குதத்தத்தை அந்த வாக்குத்தத்தஞ் செய்கிறவனே நிறைவேற்றவேணுமென்பது அந்த கந்திராக்ட்டைச் சேர்ந்த இருபட்சத்தாருடைய கருத்தென்று சங்கதியின் தன்மையினாலே தோற்றுமாகில், அப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தை வாக்குத்தத்தஞ்செய்கிறவன் நிறைவேற்றவேண்டியது. மற்றவிஷயங்களிலே, வாக்குத்தத்தஞ் செய்கிறவனாவது அவனுடைய பிரதிநிதிகளாவது அதைநிறைவேற்றுவதற்குத் தகுந்த நபரை ஏற்படுத்தலாம்.

வாக்குத்தத்தத்தைநிறைவேற்றவேண்டியநபர்.

திருஷ்டாந்தம்.

(a). ஒரு தொகையை - பி - என்பவனுக்குச் செலுத்துவதாக - எ - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறான் - எ - என்பவன் இந்த வாக்குத்தத்தத்தை-பி - என்

பவனுக்குத் தானே நேராய்ப்பணஞ் செலுத்துவதினாலாவது வேறொருவனைக் கொண்டு - பி - என்பவனுக்குச் செலுத்துவிப்பதினாலாவது நிறைவேற்றலாம்; பணஞ்செலுத்துவதற்காக நிர்னயிக்கப்பட்ட காலத்திற்குமுன்னே - எ - என்பவன் இறந்துபோனால், அவனுடைய பிரதிநிதிகள் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டியது. அல்லது அதை நிறைவேற்றுவதற்கு யாதொரு தகுந்த நபரை நேமிக்கவேண்டியது.

(b). பி - என்பவனுக்காக ஒருபடம் வர்னந் தீர்ப்பதாய் - எ - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறான். இந்த வாக்குத்தத்தத்தை - எ - என்பவன் தானே நிறைவேற்றவேண்டியது.

நிறைவேற்றுவதை மூன்றாவது மனிதனிடத்திலே ஒப்புக்கொண்டால், இன்னதாகுமென்பது.

௪௧. வாக்குத்தத்தம் நிறைவேற்றுவதை வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவன் மூன்றாவது மனிதனிடத்திலே ஒப்புக்கொண்டால், பின்பு அவன் வாக்குத்தத்தஞ்செய்கிறவன்பேரில் தொடரக்கூடாது.

கூட்டான பொறுப்பு இன்னின்னாரைப் பிடிக்குமென்பது.

௪௨. இருவர் அல்லது பலர் கூட்டாக வாக்குத்தத்தஞ் செய்திருப்பார்களாகில், அப்போது கந்திராக்ட்டினாலே விரோதமான கருத்து ஒன்றுந் தோன்றாவிட்டால், அந்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய ஜீவித காலத்தில் கூட்டாய் அவர்களெல்லோரும் நிறைவேற்றவேண்டியது, அவர்களில் எவனாவது இறந்துபோனபின்பு அவனுடைய பிரதிநிதியானவன் ஜீவித்திருக்கிற மற்றவன் அல்லது மற்றவர்களோடு சேர்ந்து நிறைவேற்றவேண்டியது, கடைசியாய் ஜீவித்திருப்பவனும் இறந்துபோனபின்பு எல்லோருடைய பிரதிநிதிகளும் சேர்ந்து நிறைவேற்ற வேண்டியது.

கூட்டாய் வாக்குத்தத்தஞ்செய்கிறவர்களில்யாவனொருவனை அதைநிறைவேற்றும்படி நிர்ப்பந்திக்கலாம்.

௪௩. இருவர் அல்லது பலர் கூட்டாக வாக்குத்தத்தஞ் செய்வார்களாகில், வெளிப்படையாய் விரோதமான உடன்படிக்கையில்லாதபட்சத்தில், அந்த வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவன் அப்படிகூட்டாக வாக்குத்தத்தஞ் செய்கிறவர்களில் எவனையாவது அந்தவாக்குத்தத்த முழுமையையும் நிறைவேற்றும்படி நிர்ப்பந்திக்கலாம்.

வாக்குத்தத்தஞ் செய்கிறவர்களில் அவனவன் மற்றவனைத்தன்னோடுகலந்துநிறைவேற்றும்படிநிர்ப்பந்திக்கலாம்.

கூட்டாக வாக்குத்தத்தஞ் செய்கிற இருவரல்லது பலரில் அவனவன்கூட்டாக வாக்குத்தத்தஞ் செய்கிற மற்ற ஒவ்வொருவனையும், கந்திராக்ட்டினாலே விரோதமான கருத்து ஒன்றுந்தோன்றாவிட்டால், சமமாய்த்தன்னோடுகூடக்கலந்து அந்தவாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி நிர்ப்பந்திக்கலாம்.

கூட்டாய் நிறைவேற்றத்தவறிப் போவதினாலுண்டாகும் நஷ்டத்தைப் பகிர்ந்து கொள்வது.

கூட்டாய் வாக்குத்தத்தஞ் செய்கிற இருவர் அல்லது பலரில் யாவனொருவன் அப்படி கலந்து நிறைவேற்றத் தவறிப்போனால், அவர்களில் மற்றவர்கள் அப்படிப்பட்ட தவறினாலுண்டாகிற நஷ்டத்தைச் சமபாகமாய் ஏற்றுக்கொள்ளவேண்டியது.

விவரம்—ஜாமீன்தாரன் தன்னுடைய முதலாளிக்காகத் தான் செலுத்தினபணத்தை அந்தமுதலாளியினிடத்திலிருந்து வசூல்செய்ய இந்தப்பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடையுண்டாகவுமாட்டாது, முதலாளிசெலுத்தினபணத்தினிமித்தம் ஜாமீன்தாரனிடத்திலே எதையாவது வசூல்செய்ய அந்த முதலாளிக்கு சுதந்தர முண்டாகவுமாட்டாது.

திருஷ்டாந்தம்.

(a). எ-பி - சி - என்பவர்கள் - டி - என்பவனுக்கு - ௩,000 - ரூபாய் செலுத்துவதாகக் கூட்டாய் வாக்குத்தத்தஞ் செய்கிறார்கள். டி - என்பவன் - ௩,000 ரூபாயைத்தனக்குச்செலுத்தும்படி - எ-என்பவனையாவது - பி-என்பவனையாவது- சி - என்பவனையாவது நிர்பந்திக்கலாம்.

(b). எ - பி - சி - என்பவர்கள் - டி - என்பவனுக்கு - ௩,000 - ரூபாய் செலுத்துவதாகக் கூட்டாய் வாக்குத்தத்தஞ்செய்கிறார்கள் - முழுமையும் செலுத்தும்படி சி - என்பவன் நிர்பந்திக்கப்படுகிறான் - எ - என்பவன் கடனிறுக்கச் சக்தியற்றவனானாலும், அவனுடைய ஆஸ்தி அவனுடைய கடனில் பாதிசெலுத்துவதற்குப் போதுமானதாயிருக்கிறது சி - என்பவன் - எ - என்பவனுடைய ஆஸ்தியிலிருந்து - ௫00 - ரூபாயும் - பி - என்பவனிடத்திலிருந்து - ௧,௨௫0 - ரூபாயும் பெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

(c.) எ - பி - சி - என்பவர்கள் - டி - என்பவனுக்கு - ௩,000 - ரூபாய் செலுத்துவதாகக் கூட்டாய் வாக்குத்தத்தஞ்செய்கிறார்கள். எவ்வளவாவது செலுத்த சி என்பவனுக்குச்சக்தியில்லை. முழுமையையும செலுத்தும்படி - எ-என்பவன் நிர்ப்பந்திக்கப்படுகிறான் - எ - என்பவன் - பி - என்பவனிடத்திலிருந்து ௧,௫00 - ரூபாய் பெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

(d). எ - பி - சி - என்பவர்கள் - டி - என்பவனுக்கு - ௩,000 - ரூபாய் செலுத்துவதாகக் கூட்டாய் வாக்குத்தத்தஞ்செய்கிறார்கள் - எ - என்பவனும் - பி - என்பவனும் - சி - என்பவனுக்கு ஜாமீன்தாரர்கள் தான் - சி - என்பவன் பணஞ் செலுத்தவில்லை. தொகைமுழுமையும் செலுத்தும்படி - எ - என்பவனும் - பி - என்பவனும் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் - அதை - சி - என்பவனிடத்திலிருந்து வசூல்செய்ய அவர்களுக்கு பாத்தியதையுண்டு.

கூட்டாய் கந்திராக்ட்டுசெய்தவர்களில் ஒருவனை நிவர்த்திசெய்வதினால் இன்னதாகுமென்பது.

௪௪. இநுவர் அல்லது பலர் கூட்டாய் வாக்குத்தத்தஞ் செய்திருப்பார்களாகில், அப்படி கூட்டாய் வாக்குத்தத்தஞ் செய்கிறவர்களில் ஒருவனை வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவன் நிவர்த்திசெய்வதினாலேகூட்டாய் வாக்குத்தத்தஞ்செய்கிறவர்களில் மற்றவன் அல்லது மற்றவர்கள் நிவர்த்தியாகமாட்டார்கள்; மேலும் அப்படி நிவர்த்திசெய்யப்பட்ட கூட்டு வாக்குத்தத்தக் காரனானவன் மற்றக்கூட்டுவாக்குத்தத்தக்காரனுக்கு அல்லது கூட்டு வாக்குத்தத்தக்காரர்களுக்கு உத்தரவாதியாகாமற்போகவு மாட்டான்.

கூட்டான பாத்தியம் இன்னின்னாருக்குண்டாகுமென்பது.

௪௫. ஒருவன் இருவர் அல்லது பலருக்குக் கூட்டாக வாக்குத்தத்தஞ்செய்திருப்பானாகில், அப்போது கந்திராக்ட்டினாலே விரோதமான கருத்து ஒன்றும்தோன்றாவிட்டால், அவனுக்கும் அவர்களுக்குமுள்ள சமபந்தத்தில்,அதைநிறைவேற்றச்சொல்லி கேட்கும்படியான பாத்தியமானது அவர்கள் ஒன்றாய் ஜீவித்திருக்கிற வரையில் அவர்களுக்கு உண்டாகிறது; அவர்களில் எவனாவது இறந்துபோனபின்பு,

ஜீவித்திருக்கிற மற்றவன் அல்லது மற்றவர்களோடு கூட்டாய் மேற்படி இறந்துபோனவனுடைய பிரதிநிதிக்கும், கடைசியாய் ஜீவித்திருப்பவனும இறந்துபோனபின்பு, கூட்டாய் எல்லோருடைய பிரதிநிதிகளுக்கும் உண்டாகிறது.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் தனக்கு - பி - என்பவனும் - சி - என்பவனும் கடன் கொடுக்கப்பட்ட - ௫,000 - ரூபாய்க்குப் பிரதிபலனாக அந்தத்தொகையை வட்டியுடனே நிர்ணயமான தேதியில் கூட்டாய் - பி - சி - என்பவர்களுக்குச் செலுத்துவதாக அவர்களுக்கு வாக்குத்தத்தஞ்செய்கிறான். பி - என்பவன் இறந்துபோகிறான். அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றச்சொல்லி கேட்கிற பாத்தியமானது - சி - என்பவன் ஜீவித்திருக்கையில் அவனோடுகூட்டாய் - பி - என்பவனுடைய பிரதிநிதிக்கும், சி - என்பவன் இறந்துபோனபின்பு, கூட்டாய் பி - சி - என்பவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் உண்டாகிறது.

நிறைவேற்றுவதற்குக்காலமும் இடமும்.

சேட்கப்படாமலே நிறைவேற்றவேண்டியதாயிருக்கிற வாக்குத்தத்தத்தை காலநிர்ணயமில்லாவிட்டால் நிறைவேற்றுவதற்குக் காலம்.

௪௬. வாக்குத்தத்தஞ்செய்கிறவன் வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனால் கேட்கப்படாமலே தன்னுடைய வாக்குத்தத்தத்தை கந்திராக்ட்டின்படி நிறைவேற்றவேண்டியதிருந்து, நிறைவேற்றுவதற்குக் கால நிர்ணயமில்லாதபட்சத்தில், தகுந்த காலத்திற்குள் அந்தஉடன்படிக்கையை நிறைவேற்றவேண்டியது.

விவரம்— 'தகுந்த காலம் இன்னது' என்பது பிரதிவிஷயத்திலும் சங்கதியைச்சேர்ந்த அம்சமாயிருக்கிறது.

காலநிர்ணயமாயிருந்து, நிறைவேற்றும்படி கேட்க வேண்டிய தில்லாமையாகில், வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குக்காலமும் இடமும்.

௪௭. ஏதோ ஒருதினத்தில் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவேண்டியதிருந்து, வாக்குத்தத்தஞ் செய்கிறவன் வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனால் கேட்கப்படாமலே அதை நிறைவேற்ற ஒப்புக்கொண்டிருக்கிறபட்சத்தில், வாக்குத்தத்தஞ் செய்கிறவன் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டிய இடத்திலே அந்ததினத்தில் வழக்கமாய் வர்த்தகம் நடத்திக்கொண்டிருக்கிற காலத்தில் எப்போதாவது அதை நிறைவேற்றவேண்டியது.

திருஷ்டாந்தம்.

ஜனவரி௴ ௧௨ யில் - பி - என்பவனுடைய கிடங்கிலே சரக்கை ஒப்பிப்பதாக - எ - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறான். அந்த தினத்தில் - எ-என்பவன் பி - என்பவனுடைய கிடங்குக்கு சரக்கைக் கொண்டுவருகிறான், ஆனால் வழக்கப்படி அதை மூடிப்போடுகிற காலத்திற்குப்பின்பு கொண்டுவரப்பட்டபடியால்அதை வாங்கிக்கொள்ளவில்லை. எ - எனபவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினவனல்ல.

நிறைவேற்றும்படிதகுந்தகாலத்திலும்இடத்திலு

௪௮. ஏதோ ஒரு தினத்தில் வாக்குத்தத்தத்தைநிறைவேற்றவேண்டியதிருந்து, வாக்குத்தத்தஞ்செய்கிறவன் வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவனால் கேட்கப்படாமலே அதை நிறைவேற்ற ஒப்புக்கொண்டிராதபட்சத்தி

ம்கேட்பது.

ல், யுக்தமான இடத்திலும் வர்த்தகம் நடத்துகிற வழக்கமான காலத்திற்குள்ளும் நிறைவேற்றும்படி கேட்பது வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனுடைய கடமையாகும்.

விவரம்.—'யுக்தமான காலமும் இடமும் இன்னது' என்பது பிரதி விஷயத்திலும் சங்கதியைச்சேர்ந்த அம்சமாயிருக்கிறது.

கேட்கப்படாமலே நிறைவேற்ற வேண்டியதாயிருக்கிற உடன்படிக்கையை இடம் நிஷ்கரிஷையில்லாவிட்டால் நிறைவேற்றுவதற்குஇடம்.

௪௯. வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவனால் கேட்கப்படாமலே அந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட வேண்டியதிருந்து, அதை நிறைவேற்றுவதற்கு இடம் நிஷ்கரிஷை செய்யப்படாதிருந்தால், அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கு தகுந்த காலத்தை நியமிக்கச்சொல்லி வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனைக் கேட்பதும், அப்படிப்பட்ட இடத்திலே அதை நிறைவேற்றுவதும் வாக்குத்தத்தஞ்செய்கிறவனுடைய கடமையாகும்.

திருஷ்டாந்தம்.

நிஷ்கரிஷையான ஒரு தினத்திலே - பி - என்பவனுக்கு ஆயிரம் மணங்கு சணல்நாரை ஒப்பிக்கிறதாக - எ - என்பவன் ஏற்றுக்கொள்ளுகிறான். அதை வரப்பற்றிக்கொள்ளும்பொருட்டு தகுந்த இடத்தை நேமிக்கும்படி - பி - என்பவனை - எ - என்பவன் கேட்டுக்கொள்ளவேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட இடத்திலே அதை அவனுக்கு ஒப்பிக்கவும்வேண்டியது.

வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவனால் நிர்னயிக்கப்பட்ட அல்லது சம்மதிக்கப்பட்ட விதமாயாவது காலத்திலாவது நிறைவேற்றுவது.

௫௰. யாதொரு வாக்குத்தத்தமானது - வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவன் நிர்னயிக்கிற அல்லது சம்மதிக்கிற எவ்விதமாகவாகிலும் எந்தக்காலத்திலாகிலும் நிறைவேற்றப்படலாம்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவனுக்கு - பி - என்பவன் இரண்டாயிரம் ரூபாய் பாக்கியிருக்கிறது. எ - என்பவன் தன்னுடைய கணக்கிலே ஒரு சாவுகாராகிய - சி - என்பவனிடத்தில் அந்தத்தொகையைச்செலுத்தும்படி - பி - என்பவனைக் கேட்கிறான். சி - என்பவனிடத்தில் தானும் பணங்கட்டுகிற - பி - என்பவன் தன்னுடைய கணக்கிலிருந்து - எ - என்பவன் பேருக்கு அந்தத் தொகையை வரவுவைத்துவிடும்படி உத்தரவுசெய்கிறான்; அந்தப்படியே - சி - என்பவனால் செய்யப்படுகிறது. அதற்குப் பின்னிட்டு அந்த வரவு சங்கதி - எ - என்பவனுக்குத் தெரியவருவதற்குமுன்னமே - சி - என்பவன் திவாலெடுக்கிறான். பி - என்பவன் கிரமமாய்ப்பணஞ்செலுத்திவிட்டவனாகிறான்.

(b). எ - என்பவனும் - பி - என்பவனும் ஒருவனுக்கொருவன் கடன்பட்டிருக்கிறார்கள். எ - என்பவனும் - பி - என்பவனும் ஒருவனுக்கொருவன் கொடுக்கவேண்டிய தொகைகளைக் கழித்து கணக்கை பைசல்செய்கிறார்கள், அந்த பைசலின்பேரில் - பி - என்பவன் தான் பாக்கியாகிற நிலுவையை - எ - என்பவனுக்குச் செலுத்துகிறான். இதனாலே - எ - என்பவனும் - பி - என்பவனும் ஒருவனுக்கொருவன் பாக்கியிருந்த தொகைகளை அவனவன் செலுத்திவிட்டதாகிறது.

(c). எ - என்பவன் - பி - என்பவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் பாக்கியிருக்கிறது. கடனுக்குச்செல்லாக - எ-என்பவனுடைய சரக்குகளில் சிலதை - பி - என்பவன பெற்றுக்கொள்ளுகிறான். சரக்கை ஒப்பிக்கிறது கடனுக்குச் செல்லுவைத் தீராகிறது.

(d). எ - என்பவன் தனக்கு நூறுரூபாய் பாக்கியிருக்கிற - பி - என்பவனை அந்த நூறு ரூபாய்க்கு ஒருநோட்டை தனக்கு தபாலில் அனுப்பும்படி கேட்கிறான். பி - என்பவன் அந்த நோட்டை அடக்கஞ்செய்து - எ - என்பவனுக்குக் கிரமமாய் மேல்விலாசமெழுதி ஒரு கடிதத்தைத் தாபாலில்போட்டவுடனே அந்தக்கடன் தீர்ந்துபோகிறது.

பரஸ்பர வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவது.

பரஸ்பர வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவன் நிறைவேற்ற இஷ்டங்கொண்டுசித்தமாயிருந்தாலொழியவாக்குத்தத்தஞ் செய்கிறவன்நிறைவேற்றக்கடமைபூண்டவனுகான்.

௫௧. ஏககாலத்தில் நிறைவேற்றும்படியான பரஸ்பர வாக்குத்தத்தங்களைக்குறித்து ஒருகந்திராக்ட்டு ஏற்பட்டிருக்குமாகில், வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவன் தன்னுடைய பரஸ்பர வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற இஷ்டங்கொண்டு சித்தமாயிராவிட்டால், வாக்குத்தத்தஞ்செய்கிறவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டியதில்லை.

திருஷ்டாந்தம்

(a). எ - என்பவன் - பி - என்பவனுக்கு சரக்கு ஒப்பிக்கிறதாகவும் ஒப்பித்த உடனே - பி-என்பவன் பணஞ்செலுத்துகிறதாகவும் - எ - என்பவனும் - பி - என்பவனும் உடன்படிக்கைசெய்துகொள்ளுகிறார்கள்.

ஒப்பித்தஉடனே சரக்குக்கு பணஞ்செலுத்த-பி - என்பவன் இஷ்டங்கொண்டு சித்தமாயிருந்தாலொழிய - எ - என்பவன் சரக்கு ஒப்பிக்கவேண்டியதில்லை.

பணஞ்செலுத்தின உடனே சரக்கை ஒப்பிக்க - எ - என்பவன் இஷ்டங்கொண்டு சித்தமாயிருந்தாலொழிய - பி - என்பவன் சரக்குக்குப் பணஞ்செலுத்தவேண்டியதில்லை.

(b). எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஓர் கிரயத்திற்கு சரக்கு ஒப்பிக்கிறதாகவும் அந்தக்கிரயம் பல வாயிதாக்களாகச்செலுத்தப்படுவதில் முதல் வாயிதாவானது சரக்கை ஒப்பித்த உடனே செலுத்தப்படுகிறதாகவும் - எ - என்பவனும் - பி- என்பவனும் உடன்படிக்கைசெய்துகொள்ளுகிறார்கள்.

ஒப்பித்த உடனே முதல் வாயிதாவைச்செலுத்த - பி - என்பவன் இஷ்டங்கொண்டு சித்தமாயிருந்தாலொழிய - எ - என்பவன் சரக்கை ஒப்பிக்க வேண்டியதில்லை.

முதல் வாயிதா செலுத்தப்பட்ட உடனே சரக்கை ஒப்பிக்க - எ - என்பவன் இஷ்டங்கொண்டு சித்தமாயிருந்தாலொழிய - பி - என்பவன் முதல் வாயிதாவைச் செலுத்தவேண்டியதில்லை.

பரஸ்பர வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறவரிசைக்கிரமம்.

௫௨. பரஸ்பர வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவேண்டிய வரிசைக்கிரமமானது கந்திராக்ட்டில் வெளிப்படையாய் நிர்னயிக்கப்பட்டிருக்குமாகில், அதுகளை அந்தவரிசைக்கிரமப்படி நிறைவேற்றவேண்டியது; வரிசைக்கிரமமானது கந்திராக்ட்டில் வெளிப்படையாய் நிர்னயிக்கப்பட்டிராவிட்டால், அந்தவிவகாரம் எப்படிப்பட்டதோ அதற்கேற்ற வரிசைக்கிரமப்படி அதுகளை நிறைவேற்றவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a). நிஷ்கர்ஷையான ஓர் விலைக்கு -பி- என்பவனுக்காக -எ-என்பவன் ஒரு வீடு கட்டிக்கொடுப்பதாய் -எ- என்பவனும் பி - என்பவனும் உடன்படிக்கை செய்துகொள்ளுகிறார்கள். அந்த வீட்டுக்காக பணஞ்செலுத்துவதற்கு - பி - என்பவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னமே வீடு கட்டிக்கொடுப்பதற்கு - எ - என்பவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படவேண்டியது.

(b). நிர்ணயமான ஓர் விலைக்கு - எ - என்பவன் தன்னுடைய வியாபார சம்பந்தமான இருப்பை - பி - என்பவனுக்கு ஒப்பித்துவிடுவதாய் - எ - என்பவனும் பி - என்பவனும் உடன்படிக்கைசெய்துகொள்ளுகிறார்கள். பணஞ்செலுத்துவதைக்குறித்து ஜாமீன் கொடுப்பதாய் - பி - என்பவன் வாக்குத்தத்தஞ்செய்கிறான். ஜாமீன் கொடுக்கப்படுகிறவரையிலே - எ - என்பவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படவேண்டியதில்லை, ஏனெனில் அந்த விவகாரத்தின் தன்மையானது - எ - என்பவன் தன்னுடைய வியாபார இருப்பை ஒப்பிப்பதற்குமுன்னமே அவன்ஜாமீன் வாங்கிக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

எந்தக்காரியத்தினாலே கந்திராக்ட்டு நடந்தேறவேண்டியதோ, அந்தக்காரியத்தைத்தடுக்கிற நபரினுடையபொறுப்பு.

௫௩. பரஸ்பர வாக்குத்தத்தங்களைப்பற்றி ஒரு கந்திராக்ட்டு ஏற்பட்டிருந்து அந்த கந்திராக்ட்டைச் சேர்ந்தஒருபட்சத்தான் மறுபட்சத்தானை அவனுடையவாக்குத்தத்தத்தை நிறைவேற்றவொட்டாமல் தடுப்பானாகில், அப்படி தடுக்கப்பட்ட பட்சத்தானுக்குஇஷ்டமிருந்தால் அந்தகந்திராக்ட்டு செல்லாததாகத்தக்கதே; மேலும் அந்த கந்திராக்ட்டை நிறைவேற்றாமையினாலே தனக்கு ஏதாவது நஷ்டமுண்டானால் அதற்கு ஈவை அவன் மறுபட்சத்தானிடத்திலிருந்து வரப்பற்றிக்கொள்ள அர்ஹனாவான்.

திருஷ்டாந்தம்.

ஆயிரம் ரூபாய்க்கு - எ - என்பவனுக்காக - பி - என்பவன் ஏதோ ஒரு வேலையை நடத்துவதாய் - எ - என்பவனும் - பி - என்பவனும் உடன்படிக்கை செய்துகொள்ளுகிறார்கள் - அப்பிரகாரமே - வேலையை நடத்துவதற்கு - பி - என்பவன் இஷ்டங்கொண்டு சித்தமாயிருக்கிறான், ஆனால் அவனை அப்படி செய்யவொட்டாமல் எ - என்பவன் தடுக்கிறான் - பி - என்பவனுக்கு இஷ்டமிருந்தால் அந்தகந்திராக்ட்டு செல்லாததாகத்தக்கதே; அவன் அதைரத்துசெய்யவிரும்பினால், அதைநிறைவேற்றாமையினாலே தனக்குநேரிட்ட யாதொருநஷ்டத்திற்கு ஈவை - எ - என்பவனிடத்திலிருந்து வரப்பற்றிக்கொள்ள அவன் அர்ஹனாவான்.

பரஸ்பர வாக்குத்தத்தங்களடங்கிய கந்திராக்ட்டிலேமுதலில்நிறைவேற்றவேண்டியவாக்குத்தத்தத்தை நிறைவேற்றத்தப்பிப்போனால் இன்னதாகுமென்பது.

௫௪. பரஸ்பர வாக்குத்தத்தங்களைக்குறித்து கந்திராக்ட்டு ஏற்பட்டிருந்து, அந்த வாக்குத்தத்தங்களிலொன்றுநிறைவேற்றப்படுகிறவரையில், மற்றொன்று நிறைவேற்றப்படக்கூடாததாகவாவது நிறைவேற்றும்படி அதுகேட்கப்படக்கூடாததாகவாவதிருப்பதுமல்லாமல், முதல் கண்டிருக்கிற வாக்குத்தத்தத்தைச் செய்கிறவன் அதை நிறைவேற்றத் தவறிப்போயுமிருப்பானாகில், அந்த வாக்குத்தத்தஞ் செய்கிறவன் பரஸ்பர வாக்குத்தத்தத்தை நிறைவேற்றச் சொல்லிக் கேட்கக்கூடாது, மேலும் அந்த கந்திராக்ட்டு நிறைவேற்றப்ப

டாமையினலே அந்த கந்திராட்டைச்சேர்ந்த மறு பட்சத்தாரு ஏதாவது நஷ்டமுண்டானல் அவனுக்கு அந்தநஷ்டங்கட்டிக்கொடுக்க வேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) எ - என்பவன் தான் சவதரிக்கும் சரக்கை - பி - என்பவன் ஏதோ ஒரு சேழ்வு வாங்கிக்கொண்டு கல்கத்தாவிலிருந்து மோரீசுக்கு ஏற்றிக்கொண்டுபோகும்படி பி - என்பவனுடைய கப்பலை அமர்த்திக்கொள்ளுகிருன் - அந்தக் கப்பலுக்கு-எ- என்பவன் யாதொரு சரக்கும் சவதரிக்கவில்லை - எ - என்பவன் பி - என்பவனுடைய வாக்குத்தத்தை நிறைவேற்றச் சொல்லி கேட்கக் கூடாது, மேலும் கந்திராக்ட்டை நிறை வேற்ருமையினலே - பி - என்பவனுக்கு நேரிடுகிற நஷ்டத்தை அவனுக்குக் கட்டிக் கொடுக்கவும் வேண்டியது.

(b). வேலைக்குவேண்டிய சாரம் - மரம் - இவற்றை - பி - என்பவன் சர்பாராசெய்தால், ஓர் நிஷ்கரிஷையான விலைக்கு ஏதோ ஓர் கட்டடவேலையை செய்து முடிப்பதாக-எ - என்பவன் - பி - என்பவனேடு உடன்படிக்கை செய்து கொள்ளுகிருன் - யாதொரு சாரமாவது மரமாவது - பி - என்பவன் கொடுக்க மாட்டேனென்கிருன், வேலை நடத்தப்படமாட்டாது. எ - என்பவன் அந்த வேலையை நடத்த வேண்டியதில்லை, அந்த கந்திராக்ட்டு நிறைவேற்றப் படாமையினலே-எ - என்பவனுக்கு நேரிடுகிற யாதொரு நஷ்டத்தை அவனுக்கு-பி - என்பவன் கட்டிக்கொடுக்கக் சடவன்.

(c). ஒரு மாசவாயில் வந்து சேரமாட்டாத ஒரு கப்பலிலுள்ள சில வர்த்தக சரக்குகளை நிர்னயமான ஓர் விலைக்கு - பி - என்பவனுக்கு ஒப்பிக்கிறதாய் அவனேடு - எ - என்பவன் உடன்படிக்கை செய்து கொள்ளுகிருன், அந்த உடன்படிக்கை தேதி முதல் ஒருவாரத்திற்குள் அந்த சரக்குக்காகப் பணஞ்செலுத்துவதாய்-பி - என்பவன் உடன்படுகிருன் அந்த வாரத்திற்குள் - பி - என்பவன் பணஞ் செலுத்தவில்லை - சரக்கை ஒப்பிப்பதற்கு - எ - என்பவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட வேண்டியதில்லை-பி - என்வன் நஷ்டங்கட்டிக்கொடுக்கவேண்டியது.

(d). மறுநாள் ஒப்பிக்கிறதாய், வர்த்தக சரக்கடங்கிய நூறு கட்டுகளை - பி - என்பவனுக்கு விற்கிறதாய் அவனுக்கு - எ - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிருன், ஒரு மாசத்திற்குள் அதுகளுக்காகப் பணஞ் செலுத்துவதாய் - பி - என்பவன்-எ - என்பவனுக்கு வாக்குத்தத்தஞ் செய்கிருன் - எ - என்பவன் தன்னுடைய வாக்குத்தத்தப்படிக்கு கட்டுகளை ஒப்பிக்காமற்போகிருன் - பணஞ் செலுத்துவதற்கு-பி - என்பவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட வேண்டியதில்லை, எ - என்பவன் நஷ்டங் கட்டிக் கொடுக்க வேண்டியது.

காலம்முக்கியமானதாயிருக்கிற கந்திராக்ட்டிலே நிர்னயமான காலத்தில் நிறைவேற்றத் தவறிப்போனல் இன்னதாகுமென்பது.

ருரு. கந்திராக்ட்டைச் சேர்ந்த ஒரு பட்சத்தான் நிர்னயிக்கப்பட்ட ஒரு காலத்திலாவது அதற்கு முன்னிட்டாவது ஏதோ ஒரு காரியத்தை யாகிலும், நிர்னயிக்கப்பட்ட காலங்களிலாவது அதுகளுக்கு முன்னிட்டாவது ஏதோ சில காரியங்களை யாகிலும் செய்வதாக வாக்குத்தத்தஞ் செய்வது நிர்னயிக்கப்பட்ட காலத்திலாவது அதற்கு முன்னிட்டாவது அப்படிப்பட்ட யாதொருகாரியத்தைச் செய்யத்தவறிப்போனல், காலந்தான்கந்திராக்ட்டுக்கு முக்கியமானதாயிருக்கவேணுமென்பது உபயத்திராளுடைய உத்தேசமாயிருக்குமாகில், வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனுக்கு இஷ்ட மிருந்தால், அந்த கந்திராக்ட்டாவது அதில் எவ்வளவு நிறைவேற்றப்படாம லிருக்கிறதோ அவ்வளவாவது செல்லாததாகத் தக்கதே,

[illegible] முக்கியமில்லாத [illegible] அப்படி தவறிப் [illegible]ல் இன்னதாகுமெ ன்பது

கா[illegible]ன் கந்திராக்ட்டுக்கு முக்கியமானதாயிருக்கவேணுமென்பது உபயதிறாளுடைய உத்தேசமல்லாதபட்சத்தில, நிர்ணயிக்கப்பட்ட காலத்திலாவது அதற்கு முன்னிட்டாவது அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத்தவறிப்போவதினாலே அந்த கந்திராக்ட்டு செல்லத்தகாததாகமாட்டாது; ஆனல் அப்படிப்பட்டதவறுதலினாலே வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவனுக்கு நேரிடுகிறயாதொரு நஷ்டத்திற்காக ஈவை அவன் வாக்குத்தத்தஞ் செய்கிறவனிடத்திலிருந்து வாப்பற்றிக் கொள்ள அர்ஹனுவான்.

சம்மதிக்கப்பட்டகாலந்தவிர வேறே காலத்திலே நிறைவேற்றுவதை அங்கீகரித்தால் இன்னதாகுமென்பது.

வாக்குத்தத்தஞ்செய்கிறவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை சம்மதிக்கப்பட்ட காலத்தில் நிறைவேற்றத் தவறிப்போனதினிமித்தம் செல்லாததாகத்தக்க கந்திராக்ட்டு விஷயத்தில், சம்மதிக்கப்பட்ட காலத்தில் தவிர வேறேயாதொருகாலத்தில் அப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதை வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவன் அங்கீகரித்தால், அவன் நஷ்டத்தை வரப்பற்றுவதற்குத் தான் கருதியிருப்பதைக் குறித்து அப்படி தான் அங்கீகரித்த காலத்தில் வாக்குத்தத்தஞ் செய்கிறவனுக்கு அறிக்கை செய்தாலொழிய, அவன் சம்மதிக்கப்பட்ட காலத்தில வாக்குத்தத்தத்தை நிறைவேற்ருமையினாலே நேரிட்ட யாதொரு நஷ்டம் கட்டிக்கொடுக்கச்சொல்லி தாவாசெய்யக்கூடாது.

அசாத்தியமானகாரியத்தைச்செய்வதற்கான உடன்படிக்கை செல்லாது.

௫௬. அதின்மட்டிலேயே அசாத்தியமாயிருக்கிற ஒரு காரியத்தைச் செய்வதற்கான உடன்படிக்கை செல்லாது.

அசாத்தியமானகாரியத்தையாவது பின்பு அசாத்தியமாகவாகிலும் சட்டத்துக்கு விரோதமானதாகவாகிலும் ஆய்விடுகிற காரியத்தையாவது செய்வதற்கான கந்திராக்ட்டு எப்போது செல்லாது.

கந்திராக்ட்டு செய்யப்பட்டபின்பு, அசாத்தியமாய் விடுகிற காரியத்தையாவது, வாக்குத்தத்தஞ் செய்கிறவன் தடுக்கக்கூடாத யாதொருசம்பவத்தினாலே சட்டத்துக்கு விரோதமாய் விடுகிற காரியத்தையாவது செய்வதற்கான அந்த கந்திராக்ட்டானது அந்தகாரியம் அசாத்தியமாகும்போதாகிலும் சட்டத்துக்கு விரோதமாகும்போதாகிலும் செல்லாததாய்விடுகிறது.

அசாத்தியமான தென்ருவது சட்டத்துக்கு விரோதமான தென்ருவது அறியப் பட்டிருக்கிற காரியத்தை நிறை வேற்ருமையைப் பற்றிய நஷ்டத்திற்கு ஈவு.

அசாத்தியமென்ருவது சட்டத்திற்கு விரோதமென்ருவது தான் அறிந்தாகிலும், தகுந்த ஜாக்கிரதைப் பட்டால் தான் அறிந்து கொள்ளத்தக்க தாக வாகிலு மிருக்கிற ஏதோ ஒரு காரியத்தைச் செய்வதாக ஒருவன் வாக்குத்தத்தஞ் செய்திருந்து, அந்தக்காரியம் அசாத்தியமென்ருவது சட்டத்துக்கு விரோத மென்ருவது வாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவன் அறிந்திராத பட்சத்தில், அந்தவாக்குத்தத்தம் நிறைவேற்றப் படாமையினாலே வாக்குத்தத்தஞ் செய்

யப் படுகிறவனுக்கு நேரிடுகிற யாதொரு நஷ்டத்தை அவனுக்குவாக்குத் தத்தஞ் செய்கிறவன் கட்டிக்கொடுக்க வேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) மந்திரத்தினலே புதையல் கண்டெடுப்பதாக - எ - என்பவன்-பி - என்பவனேடு உடன்படிக்கை செய்கிருன் - அந்த உடனபடிக்கை செல்லாது.

(b). எ - என்பவனும் - பி - என்பவளும் ஒருவரையொருவர் விவாகம் பண்ணிக்கொள்வதாக உடன்படிக்கை செய்து கொள்ளுகிருர்கள் - விவாகத்திற்கு நிச்சயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னமே - எ - என்பவனுக்குப் பயித்தியம் பிடிக்கிறது. அந்த உடன்படிக்கை செல்லாததாய் விடுகிறது.

(c). பி - என்பவளை விவாகஞ் செய்து கொள்வதாக - எ - என்பவன் உடன்படிக்கை செய்கிருன், அவன் முன்னதாகவே - சி - என்பவளை விவாகஞ் செய்து கொண்டிருப்பதால், அவனுட்பட்டிருக்கிற சட்டத்தினலே பல மனைவி கூடாதென்று தடை செய்யப் பட்டிருக்கிறபடியால், அவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை நிறை வேற்ருமையினலே - பி - என்பவளுக்கு நேரிடுகிற நஷ்டத்தை அவளுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டியது.

(d). அந்நியதேசத்து ரேவிலே - பி - என்பவனுக்காகக் கப்பலில் சரக்கை ஏற்றிக்கொள்வதாய் - எ - என்பவன் உடன்படிக்கைசெய்கிருன் - பின்பு-எ - என்பவனுடைய துரைத்தனத்தார் அந்த ரேவு இருக்கிற தேசத்தின்பேரில் யுத்தத்துக்கு வருவதாய்ப் பிரசித்தஞ் செய்கிருர்கள் - அப்படி பிரசித்தஞ் செய்யப்படுகிற போது அந்த கந்திராக்ட்டு செல்லாததாய்விடுகிறது.

(e). பி - என்பவன் முன்னதாய்க்கொடுத்த தொகைக்குப் பிரதிபலனுக ஆறுமாசத்திற்கு ஒரு நாடக சாலையில் கூத்தாடுவதாய் - எ - என்பவன் உடன்படிக்கை செய்கிருன - பலதருணங்களில்-எ - என்பவன் அதிக வியாதியினலே கூத்தாடவில்லை - அந்தத் தருணங்களில் கூத்தாடுவதற்கான கத்திராக்ட்டானது செல்லாததாய் விடுகிறது.

சட்டசம்மதமானகாரியங்களையும் சட்டத்துக்குவிரோதமான மற்றகாரியங்களையும் செய்வதற்கு வாக்குதத்தங்களுண்டா யிருக்குமாகில், முந்தியவை கந்திராக்ட்டும பிந்தியவை செல்லாதஉடன்படிக்கையுமாயிருக்கிறது.

௫எ. முதலாவது, சட்டசம்மதமான சில காரியங்களைச் செய்வதற்கும், இரண்டாவது, குறிக்கப்பட்ட சங்கதிகளைப்பற்றி, சட்டத்துக்கு விரோதமான வேறே சிலகாரியங்களைச் செய்வதற்கும் நபர்கள் பரஸ்பரமாய் வாக்குத்தத்தஞ் செய்வார்களாகில், முதலிணைவாக்குத்தத்தங்கள் கந்திராகட்டாயிருக்கிறது, ஆனல், இரண்டாவதிணை வாக்குத்தத்தங்கள் செல்லாத உடன்படிக்கையாயிருக்கிறது.

திருஷடாந்தம்.

எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஒரு வீட்டை பதினயிரம் ரூபாய்க்கு விற்கிறதாகவும், ஆனல் அந்த வீட்டை — பி - என்பவன் ஜூதமாடுவதற்கு உபயோகித்தால் அதற்கு அவன ஐம்பதினயிரம் ரூபாய் - எ - என்பவனுக்குக் கொடுக்கவேண்டியதென்றும் - எ - எனபவனும் - பி - என்பவனும் உடன் படிக்கைசெய்து கொள்ளுகிருர்கள்.

வீட்டை விற்கிறதும் அதற்காகப்பதினயிரம் ரூபாய் கொடுக்கிறதுமாகிய முதலிணையான பரஸ்பர வாக்குத்தத்தங்கள் கந்திரக்ட்டாயிருக்கிறது.

இரண்டாவது இணைவாக்குத்தத்தங்கள் அந்த வீட்டை - பி - என்பவன் சூதாடுவதற்கு உபயோகிக்கலாமென்கிற சட்டத்துக்கு விரோதமான விஷயத்தைப்பற்றியதாயிருக்கிறது, அது செல்லாதஉடன்படிக்கையாகும்.

இரண்டிலொன்றை நிறைவேற்றுவதாக செய்கிற வாக்குத்தத்தத்தில் ஒரு சாகைசட்டத்துக்கு விரோதமா யிருக்குமாகில் சட்டசம்மதமான சாகை மாத்திரம் நிறைவேற்றிக் கொள்ளப்படத் தக்கது.

௫௮. இரண்டிலொன்றை நிறைவேற்றுவதற்கான வாக்குத்தத்தத்தைச்சேர்ந்த ஒரு சாகை சட்டசம்மதமானதாகவும் மற்றொன்று சட்டத்துக்கு விரோதமானதாகவுமிருக்கிற விஷயத்தில், சட்டசம்மதமான சாகைமாத்திரம் நிறைவேற்றிக் கொள்ளப்படக்கூடும்.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஆயிரம்ரூபாய் கொடுப்பதாகவும், அதற்காக - பி - என்பவன் பின்பு அரிசியாவது தீர்வைகொடாமல் திருட்டுத்தனமாய்க் கொண்டுவந்த அபினியாவது - எ - என்பவனுக்கு ஒப்பிப்பதாகவும் - எ - என்பவனும் - பி - என்பவனும் உடன்படிக்கை செய்துகொள்ளுகிறார்கள்.

இது அரிசி ஒப்பிக்கிற விஷயத்தில் செல்லும்படியான கந்திராக்ட்டாகவும், அபினி விஷயத்தில் செல்லாத உடன்படிக்கையாகவுமிருக்கிறது.

செலுத்தப்பட்ட பணத்தை உபயோகிப்பது.

தீர்க்கவேண்டிய கடன் தெரிவிக்கப்படுமாகில்செலுத்தப்பட்ட பணத்தை உபயோகிப்பது.

௫௯. ஒருவனுக்கு வெவ்வேறான பல கடன்கள் பாக்கியிருக்கிற கடன்காரன் இன்ன கடனைத் தீர்ப்பதற்கு வரவு வைத்துக்கொள்ள வேண்டியதென்று வெளிப்படையாய்த் தெரிவித்தாவது குறிப்பான சங்கதிகளைப் பற்றியாவது அவனுக்குப் பணஞ் செலுத்தினால் அந்தப் பணம் அங்கீகரிக்கப் படுகிற பட்சத்தில் அதை அப்பிரகாரமே உபயோகிக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் - பி - என்பவனுக்கு அனேக கடன்கள் பாக்கியிருக்கிறது, அதுகளிலொன்றாகிய ஆயிரம் ரூபாய் கடன்சீட்டுக்கு ஜூன்மாசம் ௧௨ கெடுவாய்ப்போகிறது. அவன் - பி - என்பவனுக்கு அதேதொகையுள்ள வேறுகடன் பாக்கியில்லை. ஜூன்மாசம் ௧௨ எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஆயிரம் ரூபாய் செலுத்துகிறான். அந்தப் பணமானது அந்தக் கடன்சீட்டைப் பரிஷ்கரிப்பதற்கு உபயோகிக்கப்படவேணும்.

(b). எ - என்பவன் - பி - என்பவனுக்கு மற்றக் கடன்களோடுகூட ௫௯௭- ரூபாய் கடனொன்றுபாக்கியிருக்கிறது பி - என்பவன் - எ - என்பவனுக்கு எழுதி அந்தத்தொகையைச் சேலுத்தும்படி கேட்கிறான் - எ - என்பவன் - பி - என்பவனுக்கு ௫௯௭ - ரூபாய் அனுப்புகிறான். செலுத்தும்படி - பி - என்பவன்கேட்டகடனைத்திர்ப்பதற்கு இந்தப் பணத்தை உபயோகிக்கவேண்டியது.

தீர்ககவேண்டியகடன் தெரிவிக்கப்படாவிட்டால், செலுத்தப்பட்ட பணத்தைஉபயோகிப்பது.

௬௦. செலுத்தப்படுகிற பணத்தை இன்னகடனுக்கு வரவு வைத்துக்கொள்ளவேண்டியதென்று கடன்காரனும் தெரிவிக்காமலிருந்து, தெரிவிக்கிற மற்ற சங்கதிகளுமில்லாதபட்சத்தில கடன் கொடுத்தவன் கடனவாங்கிக்கொண்டவனால் வாஸ்தவமாய்த் தனக்கு பாக்கியாகி செலுத்தப்படத்தக்கதாயிருக்கிற யாதொரு நியாயமான கடனுக்கு தனது யுக்தப்பிரகாரம் அந்தப் பணத்தை வரவுவைத்துக்கொள்ளலாம்; அந்தக்கடனை வசூல்செய்வதற்கு வியாச்சியங்களின் காலநிர்ணயத்தைக்குறித்து அந்தந்த கா

லத்தில் வழங்கி வருகிற சட்டத்தினலே தோஷமுண்டாயிருந்தாலுமிராவி ட்டாலும் நிமித்தமில்லை.

உபயத்திராளில் ஒருவரும் உபயோகிப்பதைக் குறித்து ஒன்றுங்குறிக்காத பட்சத்தில் செலுத்தப்படுகிற பணத்தை உபயோகிப்பது.

சுக. உபயத்திராளில் ஒருவரும் உபயோகிப்பதைக்குறித்து ஒன்றுங் குறிக்காதபட்சத்தில், செலுத்தப்படுகிற பணத்தை காலவரிசைக்கிரமமாய்க் கடன்களை தீர்ப்பதற்கு உபயோகிக்கவேண்டியது ; அந்தக் கடன்களுக்கு வியாச்சியங்களின் காலநிர்னயத்தைக்குறித்து அந்தந்தகாலத்தில் வழங்கிவருகிற சட்டத்தினலே தோஷமுண்டாயிருந்தாலு மிராவிட்டாலும் நிமித்தமில்லை. அந்தக்கடன்கள் சமமான நிலையிலிருக்குமாகில் அந்தப் பணத்தை அந்தந்தக்கடனுக்கு ஏற்ற அளவாகச் செல்லுவைக்க வேண்டியது.

நிறைவேற்றவேண்டியதில்லாத கந்திராக்ட்டுகள்.

மாற்றப்பட்டாவது ரத்து செய்யப் பட்டாவது திருத்தப்பட்டாவதிருக்கிற கந்திராக்ட்டுகளை நிறைவேற்ற வேண்டுவதில்லை.

சுஉ. ஒரு கந்திராக்ட்டைச் சேர்ந்த நபர்கள் அதற்கு வதிலாய் வேறொரு புது கந்திராக்ட்டு செய்துகொள்ளவாவது அதை ரத்து செய்யவாவது திருத்தவாவது சம்மதிப்பார்களாகில் பிரதம கந்திராக்ட்டு நிறைவேற்றப்பட வேண்டியதில்லை.

திருஷ்டாந்தம்.

(a). ஒரு கந்திராக்ட்டின்படி - எ - என்பவன் - பி - என்பவனுக்கு பணம் பாக்கியிருக்கிறது. இனிமேல் - பி-என்பவன் - எ - என்பவனுக்கு வதிலாய் - சி- என்பவனை தன்னுடைய கடன்காரனுக அங்கீகரிக்கும்படி - எ - பி - சி - என்பவர்களுக்குள் உடன்படிக்கையாகிறது. பி - என்பவனுக்கு - எ - என்பவன் கொடுக்கவேண்டிய பழையகடன் தீர்ந்து, பி - என்பவனுக்கு - சி - என்பவன் புதுக்கடன் பட்டதாகிறது.

(b). எ - என்பவன் - பி - என்பவனுக்கு பதினுயிரம் ரூபாய் பாக்கியிருக்கிறது. எ - என்பவன் - பி - என்பவனிடத்திலே ஒரு ஏற்பாடு செய்துகொண்டு, பதினுயிரம் ரூபாய் கடனுக்குவதிலாய் ஐயாயிரம் ரூபாய்க்கு தன்னுடைய (எ - என்பவனுடைய) பூஸ்திதியை - பி - என்பவனிடத்தில் கொதுவை வைக்கிறுன். இது புது கந்திராக்ட்டாகிறது, இதனல் பழயகந்திராக்ட்டு அடிப்பட்டுபோகிறது.

(c). ஒரு கந்திராக்ட்டின்படி - எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஆயிரம் ரூபாய் பாக்கியிருக்கிறது - பி - என்பவன் - சி - என்பவனுக்கு ஆயிரம் ரூபாய் பாக்கியிருக்கிறது. சி - என்பவன் பேருக்கு - எ - என்பவனை அவனுடைய புஸ்தகத்தில் ஆயிரம் ரூபாயை வரவுவைத்துக்கொள்ளும்படி - பி - என்பவன் உத்தரவு செய்கிறுன், ஆனல் அந்த ஏற்பாட்டுக்கு - சி - என்பவன் சம்மதிக்கவில்லை. பி - என்பவன் - சி - என்பவனுக்கு இன்னும் ஆயிரம் ரூபாய் பாக்கிதான், புது கந்திராக்ட்டு செய்துகொண்டதாகமாட்டாது.

வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவன் வாக்குத்தத்தம் நிறை வேற்றப்படுவதை நிறுத்திவிடுவது போ

சுங. வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட பிரதி நபரும் தனக்குச்செய்யப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படுவதை நிறுத்திப் போடலாம் அல்லது முழுதுமாவது கொஞ்சமாவது மன்னிக்கலாம், அல்லது அப்படி நிறைவேற்றுவதற்கான காலத்தை அதிகப்படுத்

டலாம் மன்னித்தாவது போடலாம்.

திலும் படுத்தலாம், அதற்குவதிலாய் தனக்கு யுத்தமாகத் தோற்றுகிற யாதொரு பிரயோஜனத்தை அங்கீகரித்தாலும் அங்கீகரிக்கலாம்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் - பி - என்பவனுக்காக ஒரு படம் வர்னம் தீர்ப்பதாய் வாக்குத்தத்தஞ்செய்கிறுன், பின்பு அவனை - பி - எனபவன் அதைச் செய்யவேண்டாமென்கிறுன். எ - என்பவன் அதுமுதல் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற உடன்பட்டவனல்ல.

(b). எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஐயாயிரம்ரூபாய் பாக்கியிருக்கிறது. அந்த ஐயாயிரம் ரூபாய் செலுத்தப்படத்தக்க காலத்திலும் இடத்திலும் அந்தக்கடன் முழுமைக்கும் செல்லாக - எ - என்பவன் - பி - என்பவனுக்கு ௨௦௦௦ ரூபாய் செலுத்த, பி - என்பவன் அதை ஏற்றுக்கொள்ளுகிறுன். அந்த கடன் முழுதும் தீர்ந்துபோகிறது.

(c). எ - என்பவன் - பி என்பவனுக்கு ஐயாயிரம் ரூபாய் பாக்கியிருக்கிறது சி - என்பவன் - பி - என்பவனுக்கு ஆயிரம் ரூபாய் செலுத்துகிறுன், பி - என்பவன் - எ - என்பவன்பேரில் தனக்குவரவேண்டிய கடனுக்கு ஈடாக அதை ஏற்றுக்கொள்ளுகிறுன். இப்படி பணஞ்செலுத்தப்பட்டதிலுலே அந்தக் கடன் முழுதும் தீர்ந்துபோனதாகிறது.

(d). ஒரு கந்திராக்ட்டின்படி - எ - என்பவன் - பி - என்பவனுக்கு பணம் பாக்கியிருக்கிறது, அது இவ்வளவென்று தொகை நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை. எ - என்பவன் தொகையை நிச்சயிக்காமலே - பி - என்பவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கிறுன், அந்தத்தொகையை அந்தக் கடனுக்கு ஈடாக - பி - என்பவன் ஏற்றுக்கொள்ளுகிறுன். அந்தக் கடன் தொகை எவ்வளவாயிருந்தபோதிலும், இதனுலே அந்தக்கடன் முழுதும் தீர்ந்துபோகிறது.

(e). எ - என்பவன் - பி - என்பவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் பாக்கியிருப்பதுமல்லாமல் இதராளிடத்திலும் கடன்பட்டிருக்கிறுன். அவரவருக்குக்கொடுக்க வேண்டியிருக்கிற கடனுக்கு ரூபாய் - க-க்கு எட்டணுவிழுக்காடு செலுத்துவதாய்-பி என்பவனுள்பட எல்லாக் கடன்காரர்களோடும் - எ - என்பவன் ஒரு ஏற்பாடு செய்துகொள்ளுகிறுன். பி - என்பவனுக்கு ஆயிரம் ரூபாய் செலுத்துவதிலுலே அவனுடைய கடன் தீர்ந்துபோகிறது.

௬௪. எவனுடைய இஷ்டத்தின்பேரில் கந்திராக்ட்டு செல்லாததாகத்தக்கதோ அவன் அதை ரத்துசெய்தால், அதைச்சேர்ந்த மறுபட்சத்தான் அதில் தான் வாக்குத்தத்தஞ்செய்கிறவனுயிருந்து அதில் செய்திருக்கிற யாதொரு வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவேண்டியதில்லை. செல்லாததாகத்தக்க கந்திராக்ட்டை ரத்துசெய்கிற பட்சத்தான் அந்தகந்திராகட்டைச்சேர்ந்த மறுபட்சத்தானிடத்திலே அதினிமித்தம் யாதொரு பிரயோஜனத்தை அடைந்திருப்பானுகில், அவன் அதை யாரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டானே அவனுக்கு அதைக் கொடுக்கும்படியானமட்டிலே மறுபடி கொடுத்துவிடவேண்டியது.

செல்லாததாகத்தக்க கந்திராக்ட்டின் ரத்திலுல் இன்னதாகுமென்பது.

௬௫. யாதொருஉடன்படிக்கை செல்லாததென்று கண்டுகொள்ளப்பட்டாலும், யாதொரு கந்திராக்ட்டு செல்லாததாலுலும், அப்படிப்பட்ட உடன்படிக்கை அல்லது கந்திராக்ட்டைப்பற்றி யாதொரு பிரயோஜனமடைந்திருக்கிறவனெவனுவது யாரிடத்திலிருந்

செல்லாத உடன்படிக்கையைப்பற்றியாவதுசெல்லாததாகிற கந்திராக்ட்டைப் பற்றியாவது பிர

யோஜன மடைந்திருக்கிற வனுடைய பொறுப்பு.

து தான் அதை யடைந்திருக்கிறனே அந்த நப ருக்கு அதை மறுபடி கொடுத்துவிடவாவது அத ற்காக வேறே ஈவளிக்கவாவது கடமைப்பட்டிருக்கிறன்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவனுடைய குமாரத்தியாகிய - சி - என்பவளை விவாகஞ்செய் துக்கொள்ளுவதாக - பி - என்பவன் வாக்குத்தத்தஞ்செய்வதற்குப் பிரதிபலனாய் எ - என்பவன - பி - என்பவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறன். வாக்குத்தத்த மான காலத்தில் - சி - என்பவள் இறந்துபோயிருக்கிறள். இந்த உடன்படிக்கை செல்லாது, ஆனல் - பி - என்பவன் - எ - என்பவனுக்கு அந்த ஆயிரம் ரூபாயை மறுபடி கொடுத்துவிடவேண்டியது.

(b). மேமீ௴ கவுக்கு முன்னிட்டு - உ௫0 மணங்கு அரிசியை - பி - என்பவ னுக்கு ஒப்பிக்கிறதாக அவனிடத்திலே - எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறன். அந்த தேதிக்குமுன்னிட்டு - எ - என்பவன்-க௬0 மணங்குமாத்திரம் ஒப்பிக்கிறன் பின்பு ஒன்றும் ஒப்பிக்கவில்லை. பி - என்பவன் மேமாசம் கவுக்குப் பின்பு அந்த க௬0 மணங்கை வைத்துக்கொள்ளுகிறன். அதுகளுக்காக அவன் - எ - என்பவ னுக்குப் பணஞ்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறன்.

(c). அடுத்த இரண்டுமாச காலத்தில் வாரந்தோறும் இரண்டு ராத்திரி ஒரு நாடகசாலையில் பாடுவதாக அந்த நாடக சாலையின் விசாரணைகர்த்தனகிய - பி - எ ன்பவனிடத்திலே ஒருபாடகியாகிய - எ - என்பவள் கந்திராக்ட்டு செய்கிறள், பி - என்பவன் ஒவ்வொரு ராத்திரி பாட்டுக்காக அவளுக்கு நூறு ரூபாய் கொ டுக்கிறதாய் உடன்படுகிறன். ஆறுநாள் ராத்திரி - எ - என்பவள் நாடகசாலைக்கு வராமல் வேணுமென்று நின்றுவிடுகிறள் அதினலே - பி - என்பவன் அந்த கந்தி ராக்ட்டை ரத்துசெய்கிறன். எ-என்பவள் பாடின ஐந்து ராத்திரிக்கும் அவளுக்கு பி - என்பவன் பணங்கொடுக்கவெண்டியது.

(d). எ - என்பவள் - பி - என்பவனுக்காக ஒரு சங்கீதவாத்தியத்திலே ஆயி ரம் ரூபாய்க்குப் பாடுவதாகக் கந்திராக்ட்டுசெய்கிறள், அந்தப்பணம் முன்னதாய்க் கொடுக்கப்படுகிறது. அவள் அதிக வியாதியினலே பாடக்கூடாமையாயிற்று. எ - என்பவளுக்குப் பாடச் சக்தியுண்டாயிருந்தால், பி-என்பவனுக்கு கிடைத்திருக்கும் படியான லாபம் கெட்டுப்போனதற்காக அவனுக்கு அவள் அந்த நஷ்டங் கட்டிக் கொடுக்கக் கடமைப்பட்டவளல்ல, ஆனல் முனனதாய்க் கொடுக்கப்பட்ட ஆயிரம் ரூபாயை அவனுக்கு மறுபடி கொடுத்து விடவேண்டியது.

செல்லாததாகத்தக்க கந்திராக்ட்டின்ரத்தை தெரிவிக்கிறஅல்லதுஅடித்துப்போடுகிறவிதம்.

௬௬. செல்லாததாகத்தக்க கந்திராக்ட்டின் ரத்தை, பிரோரேபனையைத் தெரிவிப்பதற்காவது அடித்துப்போடுவதற்காவது சம்பந்தப்படுகிற நிபந்தனைகளுக்குட்பட்டு அதேவிதமாய் தெரியப்படுத்தலாம், அல்லது அடித்துப்போடலாம்.

௬எ. வாக்குத்தத்தஞ்செய்கிறவன் தன்னுடையவாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்காக அவனுக்கு நியாயமானசுலபத்தை யுண்டுபண்ணுவதற்குவாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவனெவனுவது அஜாக்கிரதையாயிருந்துவிட்டாலும் நிராகரித்தாலும், அப்படிப்பட்ட அஜாக்கிரதையினலாவது நிராகரிப்பினலாவது எதாகிலும் நிறைவேற்றப்படாமற்போவதைக்குறித்து வாக்குத்தத்தஞ்செய்கிறவன் அப்படிப்பட்ட அஜாக்கிரதை அல்லது நிராகரிப்பினல் மன்னிக்கப்படுவான்.

நிறைவேற்றுவதற்காக நியாயமான சுலபத்தை வாக்குத்தத்தஞ் செய்கிறவனுக்குஉண்டுபண்ணவாக்குத்தத்தஞ் செய்யப்படுகிறவன் அஜாக்கிரதையாயிருந்தால் இன்னதாகுமென்பது.

திருஷ்டாந்தம்.

பி - என்பவனுடைய வீட்டை மராமத்துபண்ணுவதாக அவனோடு - எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான்.

பி - என்பவன் தன்னுடைய வீட்டில் மாமத்து வேண்டியிருக்கிற இடங்களை எ - என்பவனுக்குக்குறித்துக்காட்ட அஜாக்கிரதையா யிருந்து விடுகிறான், அல்லது நிராகரிக்கிறான்.

அப்படிப்பட்ட அஜாக்கிரதை அல்லது நிராகரிப்பினால் கந்திராக்ட்டு நிறைவேற்றப்படாமலிருந்தால், அதற்காக - பி - என்பவன்* மன்னிக்கப்படுகிறான்.

ரு - ம் அத்தியாயம்.—கந்திராக்ட்டினாலே உண்டுபண்ணப்பட்டசம்பந்தங்கள்போன்ற சில சமபந்தங்களைக்குறித்து.

கந்திராக்ட்டு பண்ணத்தகாதநபருக்காவது அவன்பொருட்டாவது சர்பராசெய்யப்பட்ட ஜீவனத்திற்குஆவசியகமான வஸ்துக்களைப்பற்றி தாவா.

சூஅ. கந்திராக்ட்டு செய்யத்தகாத யாதொரு நபருக்காவது யாரை சவரக்ஷணை செய்ய அவன் சட்டப்படி கடமைப்பட்டிருக்கிறானோ அந்த யாதொரு நபருக்காவது, அவனுடைய ஜீவன ஸ்திதிக்குத்தக்கபடி ஜீவனத்திற்கு ஆவசியகமான வஸ்துக்களைவேறேஎவனாவது சர்பராசெய்தால், அப்படி சர்பராசெய்தவன் கந்திராக்ட்டுசெய்யத்தகாதவனுடைய சொத்திலிருந்து அவற்றின் கிரயத்தை வரப்பற்றிக்கொள்ள அர்ஹனாவான்.

திருஷ்டாந்தம்.

(a). பைத்தியக்காரனாகிய - பி - என்பவனுக்கு அவனுடைய ஜீவன ஸ்திதிக்குத்தக்கபடி ஜீவனத்துக்கு ஆவசியகமான வஸ்துக்களை - எ - என்பவன சர்பராசெய்கிறான். பி - என்பவனுடைய சொத்திலிருந்து அவற்றின் கிரயத்தை வரப்பற்றிக்கொள்ள - எ - என்பவன் அர்ஹனாகிறான்.

(b). பைத்தியக்காரனாகிய - பி - என்பவனுடைய மனைவிக்கும் மக்களுக்கும் அவர்களுடைய ஜீவனஸ்திதிக்குத்தக்கபடி ஆவசியகமான வஸ்துக்களை - எ - என்பவன் சர்பராசெய்கிறான் - பி - என்பவனுடைய சொத்திலிருந்து அவற்றின் கிரயத்தை வரப்பற்றிக்கொள்ள - எ - என்பவன் அர்ஹனாகிறான்.

ஒருவன்பாக்கியிருக்கிறபணத்தைச்செலுத்துவதில் சம்பந்தமுள்ள வேறொருவன் செலுத்தினால் அவன் அதைவரப்பற்றுவது.

சூகூ. வேறொருவன் சட்டப்படி செலுத்தக்கடமைப்பட்டிருக்கிற பணத்தைச்செலுத்துவதில் ஒருவன் சம்பந்தமுள்ளவனாயிருந்து அதனாலே அதைசசெலுத்துவானாகில், அவன் மற்றவனிடத்திலிருந்து அதை வரப்பற்றிக்கொள்ள அர்ஹனாகிறான்.

திருஷ்டாந்தம்.

ஜமீன்தாராகிய - எ - என்பவனால் கொடுக்கப்பட்ட பட்டாவின்பேரில் - பி என்பவன் பங்காளத்திலே பூமி அனுபவித்துக்கொண்டிருக்கிறான். எ - என்பவன் கவரன்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷ்பாக்கியாய் நின்றுவிட்டபடியால்அவனுடைய பூமியை கவரன்மெண்டார் விற்பனைக்கு இஸ்தியார் போடுகிறார்கள். ரிவினியூ சட்டப்படி அப்படிப்பட்ட விக்கிரயத்தினாலே - பி - என்பவனுடைய பட்டா ரத்தாய்ப்போகும் - பி - என்பவன் அந்த விற்பனையையும் அதனாலே தன்

---

* "பி - என்பவன்" என்பதற்குவதிலாய் "எ - என்பவன்" என்றிருக்கவேணும்.

னுடைய பட்டாரத்தாவதையும் தடுக்கும்பொருட்டு - எ - என்பவனுடைய பாக்கித்தொகையை கவரன்மெண்டுக்குச் செலுத்துகிறான் - அப்படி செலுத்தப்பட்டதொகையைக்குறித்து - பி - என்பவனுக்குச் சரிசொல்ல - எ - என்பவன் கடமைப்பட்டவனாயிருக்கிறான்.

உபகாரார்த்த மல்லாத செய்கையின்பிரயோஜநத்தை அனுபவிக்கிறவனுடையபொறுப்பு.

௭௦. உபகாரார்த்தமாய்ச்செய்ய உத்தேசியாமல் ஒருவன் வேறொருவனுக்காக சட்டப்படி யாதொரு காரியத்தைச்செய்தாலும், அவனுக்கு யாதொன்றை ஒப்பித்தாலும், மற்றவன் அதின் பிரயோஜனத்தை அனுபவிப்பானாகில், அவன் அப்படி செய்யப்பட்ட காரியத்தை அல்லது ஒப்பிக்கப்பட்ட வஸ்துவைக்குறித்து முன்னவனுக்கு வதிலுக்கு ஈவுகொடுக்க வாவது அதைமறுபடி கொடுத்துவிடவாவது கடமைப்பட்டிருக்கிறான்.

திருஷடாந்தம்.

(a). வர்த்தகனாகிய - எ - என்பவன் - பி - என்பவனுடைய வீட்டிலே பிசகாய் சரக்கை வைத்துவிட்டுப்போகிறான், அந்தசரக்கை - பி - என்பவன் தன்சொந்தம்போல உபயோகிக்கிறான். அவன் அதுகளுக்காக - எ - என்பவனுக்கு பணஞ்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறான்.

(b). எ - என்பவன் - பி என்பவனுடைய சொத்தை தீயினின்றுங்காப்பாற்றுகிறான். அவன் உபகாரார்த்தமாய் அப்படிச்செய்யக் கருதினதாகச் சங்கதிகளால் தெரியவருகிறபட்சத்தில், எ - என்பவன் - பி - என்பவனிடத்திலிருந்து ஈவு பெற அர்ஹனாகான்.

சரக்கு சாமான்களைக்கண்டுபிடித்தவனுடையஉத்தரவாதம்.

௭௧. ஒருவன் வேறொருவனுதாயிருக்கிற சரக்கு சமான்களைக்கண்டுபிடித்து அதுகளைத்தன் ஸ்வாதீனஞ் செய்துகொள்வானாகில், அப்படிப்பட்டவன் தன்வசம் நம்பி ஒப்பிக்கப்பட்டிருந்தால் என்ன உத்தரவாதஞ்செய்யவேணுமோ அதே உத்தரவாதத்திற்கு உட்பட்டிருக்கிறான்.

பிசகினாலாவது நிர்ப்பந்தத்தினாலாவது எவனிடத்தில்பணஞ்செலுத்தப்படுகிறதோஅல்லது வஸ்து ஒப்பிக்கப்படுகிறதோ அந்த நபரினுடையபொறுப்பு.

௭௨. பிசகினாலாவது நிர்ப்பந்தத்தினாலாவது எவனிடத்தில் பணஞ்செலுத்தப்பட்டிருக்கிறதோ அல்லது யாதொரு வஸ்து ஒப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபர் அதை மறுபடி கொடுத்துவிடவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவனும் - பி - என்பவனும் கூட்டாய் - சி - என்பவனுக்கு நூறு ரூபாய் பாக்கியிருக்கிறார்கள். எ - என்பவன் தனித்து அந்தத்தொகையை — சி - என்பவனுக்குச் செலுத்துகிறான் - பி - என்பவன் அந்த சங்கதி அறியாமல் - சி - என்பவனுக்கு மறுபடி நூறு ரூபாய் செலுத்துகிறான். இந்தத்தொகையை - சி - என்பவன் — பி - என்பவனுக்குத் திரும்பக் கொடுத்துவிட கடைமைப்பட்டிருக்கிறான்.

(b). ரெயில்வே கம்பெனியார் தங்கள் வண்டியில் வந்த சில சரக்குச் சட்டத்துக்கு விரோதமாய் வாடகைபோட்டு அதைச் செலுத்தினாலொழிய, அந்த சரக்கு எவன்பேருக்குவந்ததோ அந்த நபருக்கு அதை ஒப்பிக்கிறதில்லையென்று நிராகரிக்கிறார்கள். அந்த நபர் அந்த சரக்கை வரப்பற்றிக்கொள்ளும்பொருட்டு போட்டவாடகைத் தொகையைச்செலுத்துகிறான். அந்தத் தொகையில் சட்டத்துக்கு விரோதமாய் எவ்வளவு அதிகமிருக்கிறதோ அதை வசூல்செய்துகொள்ள அவனுக்கு பாத்தியதையுண்டு.

௯ - ம் அத்தியாயம்.—கந்திராக்ட்டை மீறுவதினாலுண்டாவதைக்குறித்து.

கந்திராக்ட்டை மீறுவதினாலே உண்டாகிறசேதம் அல்லதுநஷ்டத்திற்காக ஈவு.

௭௩- கந்திராக்ட்டுக்கு விக்கினமுண்டானால் அந்தவிக்கினத்தினாலே சங்கட்டமடைகிறவன் அப்படிப்பட்ட விக்கினத்தினாலே காரியங்களின் சாதாரணமான தோரணியில் இயற்கையாய தனக்கு சம்பவித்திருக்கிறயாதொருசேதம் அல்லது நஷ்டத்திற்காவது, உபயத்திராளும் கந்திராக்ட்டு செய்துகொண்டபோது கந்திராக்ட்டு விக்கினப்பட்டால்அதினாலுண்டாகுய்போல அவர்களுக்குத் தெரிந்திருக்கிற சேதம் அல்லது நஷ்டத்திற்காவது ஈவை, கந்திராக்ட்டை விக்கினஞ்செய்தவனிடத்திலிருந்து வரப்பற்றிக்கொள்ள அர்ஹனாவான்.

விக்கின நிமித்தமாக தூரமாகவாகிலும் நேராயல்லாமலாகிலும் அடைந்த யாதொரு சேதம் அல்லது நஷ்டத்திற்காகஅப்படிப்பட்ட ஈவுகொடுக்கப்படாது.

கந்திராக்ட்டினாலே உண்டு பண்ணப்பட்டவற்றைப்போன்ற பொறுப்பைத்தீர்த்துக் கொள்ளத் தவறிப்போவதற்காகஈவு

கந்திராக்ட்டினாலே உண்டுபண்ணப்பட்டவற்றைப்போன்றபொறுப்பு உண்டாயிருந்து அது தீர்க்கப்படா திருக்குமாகில், அதைத்தீர்க்கத் தவறிப்போவதினாலேஅநியாயமடைந்தவனெவனாவது - அதைத்தீர்க்கத் தவறிப்போனவன்அதைத்தீர்ப்பதற்கு கந்திராக்ட்டுசெய்திருந்து தன்னுடைய கந்திராக்ட்டை விக்கினப்படுத்தியிருந்தால் எப்படியோ அவ்வாறேஅவனிடத்திலிருந்து அதே ஈவைப் பெற்றுக்கொள்ள அர்ஹனாவான்.

விவரம்.—கந்திராக்ட்டை விக்கினப் படுத்தினதினாலுண்டாகிற சேதம் அல்லது நஷ்டம் இவ்வளவென்று அளவிடுவதில், கந்திராக்ட்டை நிறைவேற்றாமையினாலே உண்டான அசந்தர்ப்பத்தை நிவர்த்தி செய்வதற்குண்டாகிய வகைகளை யோசிக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a). ஒப்பிப்பதின்பேரில் பணஞ்செலுத்தும்படியாக ஏதோ ஒருவிலைக்குஐம்பது மணங்கு பொட்டிலுப்பை - எ-என்பவன் - பி-என்பவனுக்கு விற்கவும், அதை ஒப்பிக்கவும் கந்திராக்ட்டு செய்கிறான். எ - என்பவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை விக்கினப்படுத்துகிறான். மேற்படி பொட்டிலுப்பை ஒப்பித்திருக்கவேண்டிய காலத்தில் அத்தன்மையான ஐம்பது மணங்கு பொட்டிலுப்பை - பி - என்பவன் என்ன விலைக்கு சம்பாதித்திருக்கத்தக்கதோ அந்த விலைக்கு கந்திராக்ட்டு செய்துக்கொண்டவிலை குறைவுபடுமாகில் அந்த குறைவுபடுகிற தொகையை நஷ்டபாபத்து ஈவாக - பி - என்பவன் - எ - என்பவனிடத்தில் பெற்றுக்கொள்ள அர்ஹனாவான்.

(b). பி - என்பவனுடைய கப்பல் பொம்பாய்க்குச்சென்று அவ்விடத்திலே எ - என்பவனால் சவதரிக்கப்படுகிற சரக்கை ஜனவரிமீ ௧வயில் கப்பலிலேற்றிக்கொண்டு அதை கல்கத்தாவுக்குக் கொண்டுவரும்படியாயும் கொண்டுவருவதின்பேரில் கேழ்வுகொடுப்பதாயும் அந்தக்கப்பலை - எ - என்பவன் கேழ்வுக்கு அமர்த்திக்கொள்ளுகிறான். பி - என்பவனுடைய கப்பல் பொம்பாய்க்கு போகவில்லை, ஆனா

ல் - எ - என்பவன் அந்தக் கப்பல் என்ன திட்டம் பேசி நிஷ்கரிஷைசெய்தானோ அதைப்போலவே அவ்வளவு பிரயோசனமுள்ள திட்டத்தின்பேரில் சரக்கை ஏற்றிக்கொண்டு போவதற்கு தகுந்தசாதனம் சம்பாதித்துக்கொள்ள அவனுக்கு சமயங்கள் வாய்த்தது. எ - என்பவன் வாய்த்தசமயங்களை அவலம்பித்து சரக்கை அனுப்புகிறான், ஆயினும் அப்படிச்செய்வதில் அவனுக்கு பிரயாசையும் செலவும் நேரிடுகிறது. அப்படிப்பட்ட பிரயாசையையும் செலவையுங்குறித்து - எ - என்பவன் பி - என்பவனிடத்திலே ஈவுபெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

(c). ஒரு நிஷ்கரிஷையான விலைப்படிக்கு ஐம்பது மணங்கு அரிசியை - எ - என்பவன் - பி - என்பவனிடத்தில் வாங்கிக்கொள்ள கந்திராக்ட்டு செய்கிறான், ஒப்பிப்பதற்குக் காலநிர்னயமில்லை. பின்பு - எ - என்பவன் அரிசி தனக்கு அனுப்பப்பட்டால் அதைத்தான் ஏற்றுக்கொள்ளுவதில்லையென்று - பி - என்பவனுக்குத் தெரிவிக்கிறான். எ - என்பவன் அதை த்தான் ஏற்றுக்கொள்ளுவதில்லையென்று-பி-என்பவனுக்கு தெரியப்படுத்துகிற காலத்தில் - பி-என்பவன் அரிசிக்கு என்னவிலை சம்பாதிப்பானோ அதற்கு கந்திராக்ட்டு செய்துகொண்ட விலை அதிகப்படுமாகில் அந்த அதிக தொகையை வதிலளிப்பாக - எ - என்பவனிடதமில் பெற்றுக்கொள்ள பி - என்பவனுக்கு பாத்தியதையுண்டு.

(d). பி - என்பவனுடைய கப்பலை அறுபதினாயிரம் ரூபாய்க்கு வாங்கிக்கொள்ள-எ என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான்,ஆனால்அவன்தன் வாக்குத்தத்தத்தைவிக்கினப்படுத்துகிறான். வாக்குத்தத்தத்தை விக்கினப்படுத்துகிற காலத்தில் அந்த கப்பலுக்காக-பி-என்பவனுக்குக் கிடைக்கும் விலைக்கு கந்திராக்ட்டு செய்துக்கொண்ட விலை அதிகமாயிருக்கிற பட்சத்தில், அந்த அதிகதொகையை வதிலளிப்பாக-எ-என்பவன் - பி - என்பவனுக்குச் செலுத்தவேண்டியது.

(e)- ஒரு படகுக்குச் சொந்தக்காரனாகிய - எ - என்பவன் - மிர்ஜாபூரில் விற்கும்பொருட்டு அவ்விடத்திற்கு ஜ-ட என்னும் நாரை ஏற்றிக்கொண்டு, குறித்ததினத்தில் புறப்பட்டுப்போகிறதாக - பி - என்பவனோடு கந்திராக்ட்டு செய்கிறான். ஏதோ ஒரு காரணத்தைப்பற்றி அந்தப் படகுகுறிக்கப்பட்ட காலத்தில் புறப்படவில்லை, அந்தக்காரணத்தை நிவர்த்தித்துப் புறப்பட்டால் புறப்படலாம்; அப்படி புறப்படாமையினாலே, கந்திராக்ட்டின்படி படகு பயணப்பட்டிருந்தால் சரக்குமிர்ஜாபூரில் எந்தகாலத்தில் வந்து சேர்ந்திருக்குமோ அந்த காலத்தில் வராமல் ஆலசியப்பட்டது. அந்த தேதிக்குப் பின்னிட்டு அது வந்து சேர்ந்ததற்குள்ளாக அந்த நாரின்விலை இறங்கிபோயிற்று. எ - என்பவன் - பி - என்பவனுக்கு நஷ்ட ஈவு செலுத்தும்படியானவகை எப்படிஎன்றால்—அந்த சரக்கைக் கிரமப்படி கொண்டுவந்திருந்தால், அதுவந்து சேர்ந்திருக்கவேண்டியகாலத்தில் மிர்ஜாபூரிலே அதற்காக - பி - என்பவனுக்குக் கிடைத்திருக்கும்படியான விலைக்கும் அது வாஸ்தவமாய் வந்துசேர்ந்தகாலத்திலிருந்த கடைவிலைக்குமுண்டாகிய வித்தியாசத்தொகையைத்தான் செலுத்தவேண்டியது.

(f). ஏதோ ஒருவிதமாய் - பி - என்பவனுடைய வீட்டை மராமத்து பண்ண எ-என்பவன் கந்திராக்ட்டுசெய்து, முன்பணம் பற்றிக்கொள்ளுகிறான் - எ - என்பவன் வீட்டை மராமத்து பண்ணுகிறான், ஆயினும் அது கந்திராக்ட்டின்படிக்கில்லை. கந்திராக்ட்டை ஒத்திருக்கும்படி மராமத்து பண்ணுவதற்குண்டான செலவை எ - என்பவ னிடத்திலிருந்து வரப்பற்றிக்கொள்ள-பி-என்பவன் அர்ஹனாகிறான்.

(g). ஜனவரிமாசம் முதல்தேதி முதற்கொண்டு ஒருவருஷத்திற்கு - எ - என்பவன் தன் கப்பலை - பி - என்பவனுக்கு நிஷ்கரிஷையான ஒரு வாடகைக்கு விட கந்திராக்ட்டு செய்கிறான். கேழ்வு உயருகிறது, அதினாலே ஜனவரிமாசம் முதல்தேதியிலே கப்பலுக்குக்கிடைக்கத்தக்க வாடகையானது கந்திராக்ட்டு செய்துகொண்ட வாடகையை விட அதிகப்படுகிறது-எ-என்பவன் தன்னுடையவாக்குத்தத்தத்தை விக்கினப்படுத்துகிறான். ஜனவரிமாசம் முதல்தேதியிலும் அதுமுதற்கொண்டும் ஒரு வருஷத்திற்கு அதே மாதிரியான கப்பலை-பி-என்பவன் எவ்வளவு தொகைக்கு வாடகைக்கு வாங்கிக்கொள்ளக்கூடுமோ அந்தத்தொகைக்கும் கந்திராக்ட்டு செய்து

கொண்ட தொகைக்கு மிருக்கிற வித்தியாசம் எவ்வளவோ அவ்வளவு தொகையை நஷ்ட ஈவாக - எ-என்பவன் - பி - என்பவனுக்குச் செலுத்தவேண்டியது.

(h). ஒரு நிஷ்கரிஷையான விலைக்கு ஒரளவு இரும்பை - பி - என்பவனுக்குச் சவதரிப்பதாக - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான், அந்த விலையானது எ - என்பவன் இரும்பை என்னவிலைக்குவாங்கி ஒப்பிக்கக்கூடுமோ அதைவிட அதிகமாயிருக்கிறது. இரும்பு வேண்டாமென்று-பி-என்பவன் அக்கிரமமாய் நிராகரிக்கிறான். இரும்புக்காக கந்திராக்ட்டு செய்துகொண்ட விலைக்கும் எவ்வளவுக்கு அதை - எ-என்பவன் வாங்கி ஒப்பித்திருக்கக்கூடுமோ அந்ததொகைக்குமிருக்கிற வித்தியாசப்பணத்தை ஈவாக-பி-என்பவன்-எ-என்பவனுக்குச் செலுத்தவேண்டியது.

(i). வழக்கமாய் சாமான்கொண்டு போகிறவனாகிய-பி-என்பவனுக்கு-எ-என்பவன் இந்த எந்திரமில்லாமையினாலே தன்னுடைய ஆலைநின்றுபோயிருக்கிறதென்று தெரிவித்து, அந்த எந்திரத்தைத்தன்னுடைய ஆலைக்கு ஆலசியஞ்செய்யாமல்கொண்டுபோகும்படி அவனிடத்தில் ஒப்பிக்கிறான்-பி-என்பவன அந்த எந்திரத்தை ஒப்பிப்பதற்கு நிரோதுவாய் ஆலசியப்படுத்துகிறான், அதினாலே - எ-என்பவன கவரன்மெண்டாரிடத்திலே ஒருலாபகரமான கந்திராக்ட்டைப் போக்கடித்துககொள்ளுகிறான். எந்திரத்தை ஒப்பிக்க எவ்வளவு காலம் ஆலசியப்பட்டதோ அந்தக்காலத்திலே ஆலை வேலை செய்திருந்தால் அதினால் கிடைத்திருக்கும்படியான சராசரிலாபத்தொகையை நஷ்ட ஈவாக - பி-என்பவனிடத்தில் பெற்றுக்கொள்ள -எ-என்பவன அர்ஹனாகிறானேயல்லாமல், கவரன்மெண்டு கந்திராக்ட்டைப்போக்கடித்துக்கொண்டதினாலே நேரிட்ட நஷ்டத்தைப்பெற்றுக்கொள்ள அர்ஹனல்ல.

(j). ட்டன் ஒன்றுக்கு நூறு ரூபாய் விழுக்காடு ஆயிரம் ட்டன் இரும்பை எ-என்பவன் சவதரித்து நிஷ்கரிஷையான இன்னகாலததில் - பி - என்பவனுக்கு ஒப்பிக்கிறதாக-பி-என்பவனோடு கந்திராக்ட்டு செய்துகொண்டு, பி - என்பவனோடு தான் செய்துகொண்ட கந்திராக்ட்டை நிறைவேற்றும்பொருட்டு, நான் உன்னிடத்தில் ஒப்பந்தஞ்செய்கிறேனென்று-சி-என்பவனுக்குச்சொல்லி, ட்டன் ஒன்றுக்கு எண்பது ரூபாய் விழுக்காடு ஆயிரம் ட்டன் இரும்பைக்கிரயத்துக்குக் கொள்ளும்படி-சி-என்பவனோடு கந்திராக்ட்டு செய்கிறான்-சி-என்பவன்-எ-என்பவனோடு தான் செய்து கொண்ட கந்திராக்ட்டை நிறைவேற்றத் தவறிப்போகிறான், எ - என்பவன வேறே இரும்பு சம்பாதிக்கக்கூடவில்லை, அதனாலே-பி-என்பவன கந்திராக்ட்டை ரத்து செய்கிறான். எ - என்பவன் - பி - என்பவனோடு செய்துகொண்ட கந்திராக்ட்டை நிறைவேற்றியிருந்தால். அதினாலே-எ-என்பவனுக்குக்கிடைத்திருக்கும்படியான லாபமாகிய இருபதினாயிரம்ரூபாயை - எ - என்பவனுக்கு - சி - என்பவன் செலுத்தவேண்டியது.

(k). ஏதோ ஒரு எந்திரத்தைக் குறித்ததினத்திலே நிஷ்கரிஷையான விலைக்கு - பி - என்பவனுக்குச் செய்து ஒப்பிக்கிறதாக அவனோடு - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான. குறித்த காலத்திலே அந்த எந்திரத்தை - எ - என்பவன் ஒப்பிக்கவில்லை, அதனாலே - பி - என்பவன் - எ - என்பவனுக்குச் செலுத்தவேண்டியதாயிருந்த தொகையைவிட அதிகவிலைக்கு வேறொரு எந்திரத்தை சம்பாதித்துக் கொள்ளவேண்டியவனாகிறான்; மேலும், பி - என்பவன் - எ - என்பவனோடு தான் கந்திராக்ட்டு செய்த காலத்திலே மூன்றாவது மனிதனோடு செய்திருந்து (அதை அப்போது - எ - என்பவனுக்குத் தெரியப்படுத்தாமலிருந்த) ஒரு கந்திராக்ட்டை நிறைவேற்றமாட்டாதவனாய், அந்த கந்திராக்ட்டை விக்கினப்படுத்தினதற்காக ஈவு கொடுக்கவேண்டியவனாகிறான். அந்த எந்திரத்துக் கந்திராக்ட்டின் கிரயத்துக்கும் வேறொரு எந்திரத்திற்காக - பி - என்பவன் செலுத்தின தொகைக்குமிருக்கிற வித்தியாசப்பணத்தை - எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஈவாகச்செலுத்தவேணுமேயல்லாமல், நஷ்ட ஈவாக - பி-என்பவன் மூன்றாவது மனிதனுக்குச் செலுத்தின தொகையைக் கொடுக்கவேண்டியதில்லை.

(l). ஒருவீட்டை - சி - என்பவனுக்குக் குடிக்கூலிக்கு விடுவதாய் - பி-என்பவன் கந்திராக்ட்டு செய்திருக்கிறான், அந்த வீட்டை ஜனவரிமீ ௧௨-யில் - சி-

என்பவனுக்கு - பி - என்பவன் ஸ்வாதீனப்படுத்தும்படியாக அந்த ஜனவரிமீ கூஉக்குள் அந்த வீட்டைக்கட்டி முடிப்பதாய் கட்டட மேஸ்திரியாகிய - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான் - பி - க்கும் - சி - க்கும் நடந்திருக்கிற கந்திராக்ட்டு - எ - என்பவனுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எ - என்பவன் அந்த வீட்டை பேஜாவாய்க்கட்டுகிறபடியினாலே, ஜனவரிமீ கூஉக்கு முன்னிட்டே அது விழுந்துபோகிறது, அதை - பி - என்பவன் மறுபடி கட்டவேண்டியவனாகிறான், அதனால் அவன் - சி - என்பவனிடத்திலிருந்து வரத்தக்கதாயிருந்த குடிக்கூலியை இழந்துபோகிறதுமல்லாமல், தன்னுடைய கந்திராக்ட்டு விக்கினப்படுவதற்காக - சி - என்பவனுக்கு ஈவுங் கொடுக்கவேண்டியவனாகிறான். அந்த வீட்டை மறுபடி கட்டுவதற்கான செலவுக்காகவும் இழந்துபோன குடிக்கூலிக்காகவும், சி - என்பவனுக்கு கொடுத்த ஈவுக்காகவும், எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஈவு செலுத்தவேண்டியது.

(m). ஏதோ ஒரு சரக்கை இன்ன இனமானதென்று உறுதியாயச் சொல்லி எ - என்பவன் - பி - என்பவனுக்கு விற்கிறான், பி - என்பவன் அந்த உறுதிப்பாட்டை நம்பி அதை அப்படியே உறுதிசொல்லி - சி - என்பவனுக்கு விற்கிறான். அந்த சரக்கு அந்த உறுதிப்பாட்டின்படி இருக்கவில்லை, ஆதலால் ஈவாக ஒரு தொகையை - பி - என்பவன் - சி - என்பவனுக்குச் செலுத்தக்கடவன். இந்தத் தொகையை - எ - என்பவனிடத்திலிருந்து - பி - என்பவன் வரப்பற்றிக்கொள்ள அர்ஹனாகிறான்.

(n). குறித்ததினத்திலே - பி - என்பவனுக்கு ஒரு தொகையைச் செலுத்துவதாய் - எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். அந்ததினத்தில் - எ - என்பவன் அந்தப்பணத்தைச் செலுத்தவில்லை. பி - என்பவன் அந்த தினத்தில் அந்தப்பணத்தைப் பெற்றுக்கொள்ளாமையினால், தன்கடனைச் செலுத்த அசக்தனாய், சுத்தமாய் முழுகிப்போகிறான். செலுத்துவதாக - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்திருக்கிற அசல் தொகையையும், பணஞ்செலுத்துகிற தேதிவரையிலே அதற்கு வட்டியையும் அவன்செலுத்தவேண்டியதேயல்லாமல் வேறே யாதொன்றையும் - பி - என்பவனுக்குச் செலுத்தவேண்டியவனல்ல.

(o). நிஷ்கரிஷையான விலைக்கு ஜனவரிமீ கூயில் ஐம்பது மணங்கு பொட்டிலுப்பை - பி - என்பவனுக்கு ஒப்பிப்பதாய் - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான். பினபு - பி - என்பவன் ஜனவரிமீ கூஉக்கு முன்னமே அந்தபொட்டிலுப்பை ஜனவரிமீ கூயிலிருந்த கடைவிலையைவிட உயர்ந்த விலைக்கு - சி - என்பவனுக்கு விற்பதாய் கந்திராக்ட்டு செய்கிறான் - எ - என்பவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை விக்கினப்படுத்துகிறான். பி - என்பவனுக்கு - எ - என்பவன் செலுத்தத்தக்க ஈவுதொகையை இவ்வளவென்று நிச்சயிக்கையில், ஜனவரிமீ கூயிலிருக்கிற கடைவிலையின்பேரில் கணக்கு செய்யவேண்டியதேயல்லாமல், சி - என்பவனுக்கு விற்பதினாலே - பி - என்பவனுக்கு கிடைத்திருக்கும்படியான லாபத்தின்பேரிலல்ல.

(p). நிஷ்கரிஷையான தினத்தில் - பி - என்பவனுக்கு ஐந்நூறு பஞ்சுக்கட்டுகளை விற்பதாகவும் ஒப்பிக்கிறதாகவும் - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான் பி - என்பவன் தன்னுடைய வியாபாரத்தை என்னவிதமாய் நடத்துகிறானோ அந்த வயணமொன்றும் - எ - என்பவனுக்குத்தெரியாது. எ - என்பவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை விக்கினப்படுத்துகிறான், பி - என்பவன் பஞ்சில்லாமையினாலே தன்னுடைய ஆலையை நிறுத்திவிடவேண்டியவனாகிறான். ஆலையை நிறுத்திப்போடுவதினாலே - பி - என்பவனுக்கு உண்டான நஷ்டத்திற்காக அவனுக்கு - எ - என்பவன் உத்தரவாதியல்ல.

(q). ஏதோ ஒருவித துணியினால் ஒருவிதமான குல்லாய்கள் செய்ய - பி - என்பவன் எத்தனப்படுகிறான். அதுகள் அந்த ரிதுக்காலம்போய்விட்டால் ஒருவருக்கும் வேண்டியிராது ; அப்படிப்பட்ட துணியை ஜனவரிமீ கூயில் - பி - என்பவ

னுக்கு விற்பனைசெய்து ஒப்பிப்பதாய் - எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். குறித்தகாலம் தப்பிப்போவதுமல்லாமல் அந்த வருஷத்துக்கு அந்த துணியினாலே குல்லாய்கள் செய்வதற்கு காலாதீதமாய்ப் போகிறவரையில் அந்த துணி ஒப்பிக்கப்படவில்லை. அந்தத் துணியின் கந்திராக்ட்டு விலைக்கும் அதை ஒப்பிக்கிறகாலத்திலிருந்த கடைவிலைக்குமுண்டான வித்தியாசப்பணத்தை - பி - என்பவன் - எ - என்பவனிடத்திலிருந்து ஈவாகப்பெற்றுக்கொள்ள அர்ஹனாகிறானேயல்லாமல், குல்லாய்கள் செய்வதினாலே கிடைக்குமென்று அவன் நினைத்திருந்த லாபத்தையாகிலும், குல்லாய்கள்செய்வதற்குப் பண்ணின ஆயத்தங்களுக்காக அவனுக்குப்பிடித்த செலவுகளையாகிலும் பெற்றுக்கொள்ள அர்ஹனல்ல.

(r). கப்பற்சொந்தக்காரனாகிய - எ - என்பவன் ஜனவரி௴ ௧௨யில்பயணப்படுகிற தன்னுடைய கப்பலில் - பி - என்பவனை கல்கத்தாவிலிருந்து சிட்னிக்குஏற்றிக்கொண்டுபோவதாய் - பி - என்பவனோடு கந்திராக்ட்டுசெய்கிறான். பி-என்பவன் தன்னுடைய பணத்துக்குண்டான வாடகைப்பணத்தில் பாதியை அனாமத்தாக எ - என்பவனுக்குச் செலுத்துகிறான். ஜனவரி௴ ௧௨ கப்பல் பயணப்படவில்லை, அதனாலே — பி - என்பவன் கொஞ்சகாலம் கல்கத்தாவில் தடைபட்டு நிற்கவேண்டிவந்து, அதைப்பற்றி கொஞ்சம் செலவும் நேரிட்ட பின்பு, வேறொருகப்பலிலே சிட்னிக்குப்போகிறான், அதனாலே சிட்னியில் காலாதீதமாய் வந்துசேர்ந்து கொஞ்சம்பணம் நஷ்டப்படுகிறான். பி - என்பவனுக்கு வட்டி சஹிதமாய் அவனுடைய அனாமத்து பணத்தையும், கல்கத்தாவில் அவன் தடைபட்டு நின்றதினால் அவனுக்குப்பிடித்த செலவையும், முதலில்பேசின கப்பலுக்காக உடன்பட்ட தொகையைவிட இரண்டாவது கப்பலுக்கு அதிகமாய் ஏதாவது வாடகைப்பணஞ் செலுத்தியிருந்தால், அந்த அதிகப்பணத்தையும் - எ - என்பவன்செலுத்தவேண்டியவனேயல்லாமல், பி என்பவன் காலாதீதமாய் சிட்னியில் வந்து சேருவதினாலே நஷ்டப்படுகிற பணத்தைச் செலுத்தவேண்டியவனல்ல.

விக்கினமாகிற பட்சத்தில் செலுத்தத்தக்கதாக ஒரு தொகை கண்டெழுதப்படுகிற கந்திராக்ட்டுவிக்கினப்படுவதற்காக ஈவுபெற்றுக்கொள்ளபாத்தியதை.

௭௪. ஒரு கந்திராக்ட்டு விக்கினஞ் செய்யப்பட்டால், அப்படிவிக்கினஞ் செய்யப்படுவதற்காக இவ்வளவுதொகைசெலுத்துவதாய் அந்த கந்திராக்ட்டில் ஒரு தொகை கண்டெழுதப்பட்டிருக்கிறபட்சத்தில், அதனாலே சேதமாவது நஷ்டமாவதுவாஸ்தவமாய் உண்டாயிருப்பதாக ருஜுவுசெய்யப்பட்டாலும் படாவிட்டாலும், கந்திராக்ட்டு விக்கினப்பட்டதென்று முறையிடுக்கொள்ளுகிற நபர்அந்த கந்திராக்ட்டை விக்கினப்படுத்தின நபரினிடத்திலிருந்து அப்படி கண்டிருக்கிற தொகைக்கதிகப்படாமல் யுக்தமான ஈவு தொகையைப் பெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

விலக்கு.—எவனாகிலும் யாதொரு ஜாமீன்பத்திரத்தையாவது முச்சிலிக்காவையாவது அத்தன்மையான வேறேஆதாரவையாவது எழுதிக்கொடுத்தாலும், யாதொரு சட்ட நிபந்தனைகளின்படிக்காவது, இந்தியா கவரன்மெண்டாராலாகிலும் யாதொரு பிரதேச கவரன்மெண்டாராலாகிலும் செய்யப்படுகிற உத்தரவின்படிக்காவது, ஜனங்களுக்குப்பிரயோஜனகரமான யாதொருபொதுவானகடமை அல்லது காரியத்தை நிறைவேற்றுவதாக யாதொருபத்திரம் எழுதிக்கொடுத்தாலும், அப்படிப்பட்ட யாதொரு ஆதாரவின ஷரத்து விக்கினப்படுவதின்பேரில், அதில் கண்டிருக்கிற தொகை முழுமையும் அவன் செலுத்தக்கடவான்.

விவரம்.—ஒருவன் கவரன்மெண்டாரோடு ஒரு கந்திராக்ட்டு செய்துகொண்ட மாத்திரத்தினாலேயே, அவன் யாதொரு ஜனப்பொதுவான கடமையை மெற்போட்டுக்கொண்டவனுமாகான், ஜனங்களுக்குப் பிரயோஜனகரமான யாதொருகாரியத்தைச்செய்ய வாக்குத்தத்தம் பண்ணினவனுமாகான்.

திருஷ்டாந்தம்.

(a). குறித்ததினத்திலே - எ - என்பவன் தான் - பி - என்பவனுக்குஐந்நூறு ரூபாய் செலுத்தத்தவறினால், பி - என்பவனுக்கு ஆயிரம் ரூபாய்ச் செலுத்துவதாக அவனோடு கந்திராக்ட்டு செய்கிறான். அந்த தினத்தில் - எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஐந்நூறு ரூபாய் செலுத்தவில்லை. ஆயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமல்கோர்ட்டாருக்கு யுக்தமாகத்தோற்றுகிற ஈவு தொகையை - எ - என்பவனிடத்திலிருந்து பி - என்பவன் வரப்பற்றிக்கொள்ள அர்ஹனாகிறான்.

(b). எ - என்பவன் கல்கத்தாவிற்குள் தான் சர்ஜியனாக வைத்தியஞ்செய்தால், பி - என்பவனுக்கு தான் ஐயாயிரம்ரூபாய்கொடுப்பதாக - பி - என்பவனோடுகந்திராக்ட்டு செய்கிறான். எ-என்பவன் அப்படியே கல்கத்தாவில் சர்ஜியனாக வைத்தியஞ்செய்கிறான். ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமல் கோர்ட்டாருக்கு யுக்தமாகத்தோற்றுகிற ஈவு தொகைக்கு - பி - என்பவன் அர்ஹனாகிறான்.

(c). ஏதோ ஒருதினத்திலே கோர்ட்டில் ஆஜராகிறதாகவும், ஆஜராகாவிட்டால் ஐந்நூறு ரூபாய் தெண்டமிறுக்கிறதாகவும் எ-என்பவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கிறான். அந்தப்படி அவன் ஆஜராகாமல்தவறிப்போகிறான், அந்த தெண்டத்தொகை முழுமையையும் அவன் செலுத்தக்கடவன்.

கந்திராக்ட்டை நியாயமாய்ரத்துசெய்கிறவன் ஈவுக்குஅர்ஹனாகிறான்.

௭௫. ஒரு கந்திராக்ட்டை நியாயமாய் ரத்து செய்கிறவன் அந்த கந்திராக்ட்டு நிறைவேற்றப்படாமையினாலே தனக்கு நேரிடுகிற யாதொருநஷ்டத்திற்காக ஈவு தொகை பெற்றுக்கொள்ளஅர்ஹனாகிறான.

திருஷ்டாந்தம்.

(a) ஒரு பாடகியாகிய - எ - என்பவள் - அடுதத இரண்டு மாசகாலத்தில்வாரந்தோறும் இரண்டுராத்திரி ஒரு நாடகசாலையில் பாடுவதாய் அந்த நாடகசாலையின் அதிபனாகிய - பி - என்பவனோடு கந்திராக்ட்டுசெய்கிறாள், அவளுக்கு ஒவ்வொரு ராத்திரிபாட்டுக்கு நூறு ரூபாய் கொடுக்கிறதாக - பி - என்பவன் உடன்படுகிறான். ஆறுநாள்ராத்திரி - எ - என்பவள் நாடகசாலைக்கு வராமல் வேணுமென்றுநின்றுவிடுகிறாள், அதினாலே - பி - என்பவன் அந்த கந்திராக்ட்டைரத்துசெய்கிறான். கந்திராக்ட்டு நிறைவேறாமையினாலே - பி - என்பவனுக்கு நேரிடுகிற நஷ்டத்திற்காக அவன் தனக்கு ஈவு தொகை கிடைக்கவேணுமென்று தாவாசெய்ய அவனுக்குபாத்தியதையுண்டாகிறது.

சரக்குகள்விற்பனை.

௭-ம் அத்தியாயம்.—விற்கப்பட்ட சரக்கினுள்ள சொத்துவம் இன்னபடிக்கானால் கொண்டவனை அடையுமென்பது.

சரக்குஎன்பதற்குஅர்த்தம்.

௭௬. இந்த அத்தியாயத்திலேசரக்கு என்கிற பதத்தையானதுசகலவித அசையும்பொருளென் அர்த்தமாகும்.

எஎ. விற்பனை என்பது சொத்தைக் கிரயத்துக்குமாற்றிக்கொள்ளுவதாகும். இதனாலேவிற்கப்பட்ட பொருளின் சொத்துவமானது விற்றவனிடத்திலிருந்து கொண்டவனுக்குச் சங்கிரமிக்கிறது.

விற்பனையென்பதற்குஅர்த்தம்.

எஅ. சரக்கின் கிரயத்தைச் செலுத்தியாவது, சரக்கைஒப்பித்தாவது, கிரயத்தை வாங்கிக்கொள்ளச் சொல்லியாவது சரக்குஒப்பித்துக்கொள்ளச்சொல்லியாவது, கொஞ்சம் பணம்செலுத்தியாவது, அச்சாரங் கொடுத்தாவது, கொஞ்சம் சரக்குஒப்பித்தாவது, பணஞ்செலுத்துவதையாகிலும சரக்குஒப்பித்ததையாகிலும் அவ்விரண்டையுமாகிலும் நிறுத்திவைக்கும்படிவெளிப்படையாகஅல்லது குறிப்பாக உடன்படிக்கை செய்தாவது,

இன்னபடிக்கானால்விற்பனைபலிதமாகுமென்பது.

இவ்வளவென்று நிஷ்கரிஷையாயிருக்கிற சரக்கை அந்தகிரயத்துக்காகவாகிலும், அந்தக்கிரயத்தை நிஷ்கரிஷையான அந்த சரக்குக்காகவாகிலும், கொடுக்கிறதாய்ச் சொல்வதினாலும் அங்கீகரிப்பதினாலும் விற்பனை பூர்த்தியாகிறது.

நிஷ்கரிஷையான சரக்கை விற்பதாகக் கந்திராக்ட்டு ஏற்பட்டிருந்தால், விற்கப்பட்ட சரக்கிலுள்ள சொத்துவமானது கிரயமுழுமையுமாகிலும் அதில் எவ்வளவாகிலும் செலுத்தப்படுகிற போதாவது, அச்சாரங்கொடுக்கப்படுகிற போதாவது, சரக்கு முழுமையுமாகிலும் அதில் எவ்வளவாகிலும் ஒப்பிக்கப்படுகிறபோதாவது கிரயக்காரனை அடைகிறது.

கிரயம் செலுத்துவதையாவது சரக்கு ஒப்பிப்பதையாவது அவ்விரண்டையுமாவது நிறுத்திவைக்க வேணுமென்று வெளிப்படையாகவாகிலும் குறிப்பாகவாகிலும் உபயத்திராளும் சம்மதித்தால், விற்கிறதாகச் சொன்னபிரோபனை அங்கீகரிக்கப்பட்ட உடனே சொத்துவம்மாறுகிறது.

திருஷ்டாந்தம்.

(a). ஐந்நூறு ரூபாய்க்கு-எ-என்பவனுடைய குதிரையை - பி-என்பவன் விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறேனென்கிறான். பி-என்பவனுடைய பேச்சை-எ-என்பவன் அங்கீகரித்து, அந்தக்குதிரையை-பி-என்பவனுக்கு ஒப்பித்துவிடுகிறான். ஒப்பிக்கப்படுவதின்பேரில் அந்தக்குதிரை - பி-என்பவனுடைய சொத்தாகிறது.

(b). எ-என்பவன்-பி-என்பவனுக்கு சரக்கை அனுப்பி, உமக்கு இஷ்டமிருந்தால், அதை நிஷ்கரிஷையான இன்ன விலைக்கு நீர் வாங்கிக்கொள்ளலாம், உமக்கிஷ்டமில்லாவிட்டால், அதைத்திருப்பி விடலாமென்று கேட்டுக்கொள்ளுகிறான். பி-என்பவன் அந்த சரக்கை நிறுத்திக்கொண்டு அது தனக்கு இஷ்டந்தானென்று எ-என்பவனுக்குத்தெரிவிக்கிறான். அந்த சரக்கை-பி-என்பவன் நிறுத்திக்கொள்ளும்போதே அது அவனுதாய் விடுகிறது.

(c). பி - என்பவன் - எ - என்பவனுடைய குதிரைக்கு ஆயிரம் ரூபாய் விலை கொடுக்கிறதாகவும், அந்தக்குதிரையை குறித்த இன்ன தினத்திலே தனக்கு ஒப்பிக்கவேண்டியதென்றும், குறித்த வேறொரு தினத்திலே அந்தக்கிரயத்தைச்செலுத்துகிறேனென்றும் - எ - என்பவனுக்குச்சொல்லுகிறான். அந்த பேச்சை - எ-என்பவன் அங்கீகரிக்கிறான். பிரோபனை அங்கீகரிக்க[illegible]டனே அந்தகுதிரை - பி-என்பவனுதாகிவிடுகிறது.

(d). பி-என்பவன் ஒரு மாசத்தில் பணங்கொடுக்கிறதாகச்சொல்லி - எ - என்பவனுடைய குதிரையை ஆயிரம் ரூபாய்க்கு விலைக்குக்கேட்கிறான். அந்த பேச்சை எ - என்பவன் அங்கீகரிக்கிறான். அந்த பேச்சு அங்கீகரிக்கப்பட்ட உடனே அந்தக்குதிரை - பி - என்பவனு தாகிறது.

(e). ஓரளவு அரிசியை இரண்டாயிரம் ரூபாய்க்கு விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறதாகவும், அடுத்த மார்ச்சிமீ ௧௨ பணஞ்செலுத்துகிறதாகவும், பணஞ்செலுத்துகிற வரையிலே அரிசியை எடுத்துக்கொண்டுபோகிற தில்லையெனறும், ஜனவரிமீ ௧௨-யில் - பி - என்பவன் - எ - என்பவனுக்குச் சொல்லுகிறான். அந்தப் பேச்சை எ - என்பவன் அங்கீகரிக்கிறான். அந்தப் பேச்சு அங்கீகரிக்கப்பட்ட உடனே அந்த அரிசி பி - என்பவனுதாய் விடுகிறது.

இனி நிச்சயிக்கப்பட வேண்டியதாக வாவது செய்யப்பட வேண்டியதாகவாவது முடிக்கப்படவேண்டியதாக வாவதிருக்கிறவஸ்து விற்கப்பட்டால், அதின் சொத்துவம் பிறனை அடைவது.

௭௯. இனி நிச்சயிக்கப்பட வேண்டியதாவது செய்யப்பட வேண்டியதாகவாவது முடிக்கப்படவேண்டியதாக வாவதிருக்கிற வஸ்துவின் விற்பனையைக்குறித்த கந்திராக்ட்டு ஏற்பட்டிருந்தால், அந்த வஸ்து நிச்சயிக்கப்படுகிற வரையிலாகிலும் செய்யப்படுகிற வரையிலாகிலும் முடிக்கப்படுகிற வரையிலாகிலும், அதின் சொத்துவ மானது கொள்பவனை அடையாது.

திருஷ்டாந்தம்.

படகு செய்கிறவனாகிய - எ - என்பவனுக்கு - பி - என்பவன் தனக்கு ஒரு படகு செய்யும்படி உத்தரவு பண்ணுகிறான். வாயிதாக்களாகக் கிரயத்தைச் செலுத்தும்படியான ஏற்பாடில்லை, படகு செய்து கொண்டிருக்கச்சே, - பி - என்பவன் அந்தக் கிரயத்துக்காக அப்போதப்போது - எ - என்பவனுக்குப் பணஞ்செலுத்துகிறான். அந்த படகு முடிக்கப்படுகிறவரையில் அதின் சொத்துவம் - பி - என்பவனை அடையாது.

கொள்பவன் எந்தஸ்திதியில் பெற்றுக்கொள்ள வேண்டியதோ அந்த ஸ்திதியில்விற்பவன்போடவேண்டியதா யிருக்கிற சரக்குகளின் விற்பனை பூர்த்தியாவதைக் குறித்து.

௮௦. சரக்குகளின் விற்பனையைக் குறித்து ஏற்பட்டிருக்கிற கந்திராக்ட்டின்படி அதுகளைக் கொள்பவன் எந்த ஸ்திதியில் ஏற்றுக்கொள்ளவேண்டியதோ அந்த ஸ்திதியில் அதுகளைப்போடும் பொருட்டு, விற்பவன் அதுகளுக்கு ஏதாவது செய்ய வேண்டியதிருந்தால், அப்படிப்பட்ட காரியம் செய்தாகிற வரையில் அந்த விற்பனை பூர்த்தியாகாது.

திருஷ்டாந்தம்.

(a). கப்பல் செய்கிறவனாகிய - எ - என்பவன் தான் கப்பல் செய்யுந் துறையிலிருக்கிற ஒரு கப்பலை ஓர் நிஷ்கரிஷையான விலைக்கு - பி - என்பவனுக்கு விற்றதாயும், அந்தக் கப்பலை சபர் செய்வதற்கு யோக்கியமாய் கயறு முதலானதுகள்மாட்டி ஜோடித்து ஒப்பிப்பதின்பேரில் கிரயத்தைப் பெற்றுக்கொள்வதாயும் கந்திராக்ட்டு செய்கிறான். அந்த கந்திராக்ட்டின்படி, அந்தக் கப்பலை கயிறு முதலானது மாட்டி ஜோடித்து ஒப்பிக்கிறவரையில், அந்தக் கப்பலின் சொத்துவம் - பி - என்பவனை அடையாது.

விலையை நிர்னயிக்கும் பொருட்டு விற்பவன் சரக்குக்கு ஏதாவது செய்ய

௮௧. விலைத் தொகை நிர்னயிக்கும் பொருட்டு விற்பவன் சரக்குககு ஏதாவது செய்யவேண

வேண்டியதிருந்தால், அதின்விற்பனை பூர்த்தியாவதைக்குறித்து.

டியதிருந்தால், அது செய்கிற வரையில் விற்பனை பூர்த்தியாகாது.

திருஷ்டாந்தம்.

(a). ஓர்வகை மரப்பட்டைப் போரையுடைய - எ - என்பவன் அதை - பி - என்பவனுக்கு விற்பதாகவும், ட்டன் ௧-க்கு நூறு ரூபாய் விழுக்காடு அதைநிறுத்து ஒப்பிப்பதாகவும் கந்திராக்ட்டு செய்கிறான். குறித்த இன்ன தினத்திலே அதை எடுத்துக்கொண்டு போகிறதாகவும், அன்றைக்கு அதற்குப்பணஞ் செலுத்துகிறதாகவும் - பி - என்பவன் ஒப்புக்கொள்ளுகிறான். அதிலோர் பாகம் எடைபோட்டு - பி - என்பவனுக்கு ஒப்பிக்கப்படுகிறது; அந்த கந்திராக்ட்டின்படி மீதி எடைபோட்டாகிறவரையில் அந்த மீதியிலுள்ள சொத்துவம் - பி - என்பவனை அடையாது.

(b). ட்டன் - ௧ - க்கு ஏதோ ஒரு விலை விழுக்காடு - பி - என்பவனுக்கு ஒரு களிமண்போரை விற்பதாய் - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான். அந்த கந்திராக்ட்டின்படி - பி - என்பவன் அந்தக் களிமண்ணை தன்னுடையசொந்த வண்டிகளில் போட்டுக்கொண்டு, எ-என்பவனுடைய நிலத்திலிருந்து களிமண்ணைக்கொட்டிக்கொள்ளுகிற தன்னுடைய இடத்திற்கு ஓட்டிக்கொண்டு போகும்போது, எடைபோடுகிற ஒரு எந்திரத்தண்டைக்குப்போய் அந்த எந்திரத்திலே ப்ரதிபாரத்தையும் நிறுக்க வேண்டியவனா யிருக்கிறான். இதில் விற்றவன் செய்யவேண்டிய தவேறொன்று மில்லை; விற்பனை பூர்த்தியாகிறது, களிமண்போரின் சொத்துவமும் கொண்டவனை உடனே அடைகிறது.

கந்திராக்ட்டு தேதியில் சரக்கு நிர்ணயிக்கப் படாதிருந்தால், விற்பனை பூர்த்தியாவதைக்குறித்து.

௮௨. விற்பதாகக் கந்திராக்ட்டு செய்கிற காலத்தில் சரக்கு நிச்சயிக்கப் படாதிருந்தால், அந்த விற்பனை பூர்த்தியாவதற்கு அந்த சரக்கு நிச்சயிக்கப்பட வேண்டியதா யிருக்கிறது.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் தன்னுடைய தொட்டியிலுள்ள இருபது ட்டன் எண்ணையை பி - என்பவனுக்கு விற்க உடன்படுகிறான். எ - என்பவனுடைய தொட்டியில் எண்ணை இருபது ட்டன்னுக்கு அதிகமாயிருக்கிறது - அந்த எண்ணையில் எவ்வளவும் - பி - என்பவனுடைய சொத்தாகவில்லை.

௮௩. விற்பதாக உடன்படிக்கை செய்கிற காலத்தில் சரக்கு நிச்சயிக்கப் படாதிருந்தால், அந்த உடன்படிக்கையில் கண்டிருக்கிற விவரமுள்ள சரக்கு அந்த உடன்படிக்கையின் பொருட்டு ஒரு பட்சத்தாலே பின்னிட்டு உரித்தாக்கப்பட்டு, அப்படி உரித்தாக்கப் படுவதும் மறுபட்சத்தாலே ஒப்புக் கொள்ளப்படுகிற பட்சத்தில், சரக்கு நிச்சயிக்கப் பட்டதாய் விற்பனை பூர்த்தியாகிறது.

பின்னிட்டு உரித்தாக்குவதினாலே சரக்கு நிச்சயிக்கப்படுவதாகும்.

திருஷ்டாந்தம்.

ஹாக்ஸ்ஹெட் என்னும் அளவுகொண்ட பீப்பாய் இருபதை நிரப்புவதற்குப் போதுமானதை விட அதிகமாய் மொத்தமாக சர்க்கரை வைத்துக்கொண்டிருக்கிற எ - என்பவன் அந்த அளவுகொண்ட இருபது பீப்பாய் சர்க்கரையை - பி - என்பவனுக்கு விற்பதாய் கந்திராக்ட்டு செய்கிறான். கந்திராக்ட்டுக்குப் பின்பு - எ - என்பவன் அப்படிப்பட்ட இருபது பீப்பாய்களில் சர்க்கரையை நிரப்பி, அந்த பீப்பாய்கள் தயாரா யிருக்கிறதென்று - பி - என்பவனுக்கு அறிக்கை செய்து, அதுகளை எடுத்துக் கொண்டு போகும்படி அவனுக்குச் சொல்லுகிறான். கூடுமானசீக்கிரத்

தில் அதுகளை எடுத்துக்கொண்டு போகிறதாய் - பி - என்பவன் சொல்லுகிறான். இப்படி - எ - என்பவனால் உரித்தாக்கப்படுவதினாலும் - பி - என்பவனால் சம்மதிக்கப் படுவதினாலும், அந்த சர்க்கரை - பி - என்பவனுடைய சொத்தாய் விடுகிறது.

விற்பவன் தெரிந்தெடுப்பதினாலே சரக்கு நிச்சயிக்கப் படுவது.

அச. விற்பதாகக் கந்திராக்ட்டு செய்கிற காலத்தில், சரக்கு நிச்சயிக்கப்படாதிருந்து, கந்திராக்ட்டின் ஷரத்துகளின்படி, கொண்டவனுக்கு அதுகள் உரித்தாக்கப்படுகிறவரையில் அந்த சரக்கு விஷயமாய் செய்யக்கூடாத ஒரு காரியத்தை விற்பவன் செய்ய வேண்டியதாயிருக்குமாகில், விற்பவன் அந்தகந்திராக்ட்டுக்கு ஒற்றுமையான யாதொரு சரக்கைத் தெரிந்தெடுக்க அதிகாரமுடையவனா யிருக்கிறான், அவனப்படி செய்வதினாலே சரக்கு நிச்சயிக்கப் படுகிறது.

திருஷ்டாந்தம்.

எ - என்பவனுடைய களஞ்சியத்தி லிருக்கிற விஸ்தாரம் அரிசியில் ஐம்பது மணங்கு அரிசியை விலைக்கு வாங்கிக் கொள்வதாய் விலை நிர்ணயித்து நிஷ்கரிஷையான ஓர் தினத்திலே பணங் கொடுப்பதாய் - பி - என்பவன் அந்த - எ - என்பவனோடு உடன்படிக்கை செய்கிறான். அரிசிக்காக - பி - என்பவன் பைகள் அனுப்ப வேணுமென்றும், எ - என்பவன் அதுகளில் அரிசியை நிரப்பவேணு மென்றும் ஒப்புகொள்ளப் பட்டிருக்கிறது. பி - என்பவன் அப்படியே செய்கிறான், எ - என்பவன் அந்தப் பைகளில் ஐம்பது மணங்கு அரிசியைப் போடுகிறான. சரக்கு நிச்சயிக்கப் பட்டாச்சுது.

அசையாப் பொருளோடு கூட அசையும் பொருள் விற்கப் பட்டால், அசையும் பொருளின் சொத்துவம் அடைவது.

அடு. அசையாப் பொருளையும் அசையும் பொருளையும் சேர்த்து விற்பதாய் உடன்படிக்கை செய்யப்பட்டால், அசையாப்பொருளின் சொத்துவம் கொண்டவனை அடைவதற்கு முன்னமே அசையும் பொருளிலுள்ள சோத்துவம் அடையாது.

திருஷ்டாந்தம்.

ஒரு வீட்டையும் வீட்டலங்கார சாமான்களையும் விற்பதாய் - எ - என்பவன் பி - என்பவனோடு உடன் படிக்கை செய்கிறான். அந்த வீடு - பி - என்பவன் பேருக்காகிறவரையில் அந்த வீட்டலங்காரச் சாமான்களி லுள்ள சொத்துவம் - பி - என்பவனை அடையாது.

சரக்கானது கொண்டவனுதான பிறகு உண்டாகிற நஷ்டத்தை அவனே அடைவது.

அசு. சரக்கானது கொண்டவனுடைய சொத்தானபிறகு, அது அழிந்து போவதினாலாவது கெட்டுப் போவதினாலாவது உண்டாகிற யாதொரு நஷ்டத்தை அவனே அடைய வேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவனுடைய நிலத்தி லிருக்கிற ஒருகட்டைகள் போருக்கு - பி - என்பவன் நூறு ரூபாய் கொடுக்கிறே னென்பதை - எ - என்வன் அங்கீகரித்து, ஏதோ ஒரு தினம் வரையில் - எ-என்பவனுடைய நிலத்தில் அந்தக் கட்டைகள் இருக்கவேணு மென்றும் பணஞ் செலுத்தப் படுகிறவரையிலே அதுகளை எடுத்துக் கொண்டு போகக் கூடாதென்றும் ஏற்பாடு செய்து கொள்ளப்படுகிறது. பணஞ் செலுத்தப்படுவதற்கு முன் கட்டைகள் - எ - என்பவனுடைய நிலத்தில் இருக்கும்

போதே தெய்வகதியாய்த் தீப்பிடித்து அழிந்துபோகிறது. அந்த நஷ்டத்தை பி - என்பவன் அடையவேணும்.

(b). ஒரு ஏலத்திலே ஒரு படத்தை - எ - என்பவன் ஆயிரம் ரூபாய்க்குக் கேட்கிறான். கேட்ட பின்பு தெய்வகதியாய் அதற்குக் கெடுதி சம்பவிக்கிறது. அந்ததெய்வகதியானது ஏலத்தில் விடுவதற்கு முன்னே சம்பவித்தால், அந்த நஷ்டம் விற்றவனோடு போய்விடுகிறது; ஏலத்தில் விட்டபிறகு அந்த தெய்வகதி சம்பவித்தால், அந்த நஷ்டம் எ - என்பவன் பேரில் விழுகிறது.

உற்பத்தியில்லாதிருக்கும்போது விற்க ஒப்புக்கொண்ட சரக்கின் சொத்துவம் அடைவது.

௮௭. இன்னும் உற்பத்தியாகாதிருக்கிற சரக்குகளின் விற்பனையைக்குறித்து கந்திராக்ட்டு ஏற்பட்டால், விற்றவனாலாவது விற்றவனுடைய அனுமதியின் பேரில் கிரயக்காரனாலாவது சரக்கு உற்பத்தியானபின்பு அந்த கந்திராக்ட்டை அனுசரித்துச் செய்யப்பட்ட காரியங்களால் அந்த சரக்கின் சொத்துவம் அடையலாகும்.

திருஷ்டாந்தம்.

(a). எ-என்பவன் வருகிற வருஷத்திலே தன்னுடைய நீலத்தொட்டியில் உற்பத்தியாகிற நீலத்தையெல்லாம் ஓர் நிஷ்கரிஷையான விலைக்கு - பி-என்பவனுக்கு விற்பதாய் கந்திராக்ட்டு செய்கிறான். நீலம் உற்பத்தியானபின்பு-எ-என்பவன்-நீலம் என்னிடத்தில் தயாராயிருக்கிறது, அதை உமதிஷ்டப்படி செய்துகொள்ளலாமென்று-பி-என்பவனுக்குகடிதமூலமாய்த்தெரிவிக்கிறான். அந்தநீலத்தின் சொத்துவமானது அந்த கடிதத்தின் தேதி முதற்கொண்டு-பி-என்பவனுக்கு சங்கிரமிக்கிறது.

(b). எ - என்பவன் அப்போதிருக்கிற பயிரை அறுத்துக்கொண்டபின்பு தன்னுடைய நிலத்தில் உற்பத்தியாகும் எந்த பயிரையாவது - பி-என்பவன் கைப்பற்றி விற்றுக்கொள்ளலாமென்று ஒரு நிஷ்கரிஷையான விலைக்கு கந்திராக்ட்டு செய்கிறான். இந்த கந்திராக்ட்டு உண்டான காலத்திலிருந்த பயிரை அறுத்துக்கொண்டபின்பு உற்பத்தியாகிற ஏதோ ஒருபயிரை-எ-என்பவனுடைய அனுமதியின்பேரில் - பி-என்பவன் இந்த கந்திராக்ட்டின்படி ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுகிறான். ஸ்வாதீனப்படுத்திக்கொண்ட உடனே அந்த பயிரின் சொத்துவம் - பி -என்பவனை அடைகிறது.

(c). எ-என்பவன் அப்போதிருக்கிற பயிரை அறுத்துக்கொண்ட பின்பு தன்னுடைய நிலத்தில் உற்பத்தியாகும் எந்த பயிரையாவது - பி-என்பவன் கைப்பற்றி விற்றுக்கொள்ளலாமென்று ஒரு நிஷ்கரிஷையான விலைக்கு கந்திராக்ட்டு செய்கிறான். இந்த கந்திராக்ட்டு உண்டானகாலத்திலிருந்த பயிரை அறுத்துக்கொண்டபின்பு உற்பத்தியாகிற ஏதோ ஒரு பயிரை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள - பி - என்பவன் இந்த கந்திராக்ட்டின்படி-எ-என்பவனைக்கேட்டுக்கொள்ளுகிறான். எ-என்பவன் ஸ்வாதீனப்படுத்த மாட்டேனென்கிறான். ஸ்வாதீனப்படுத்த நிராகரிப்பதினால் - எ - என்பவன் கந்திராக்ட்டை விக்கினஞ்செய்தவனானாலும் பயிரின்சொத்துவம் - பி - என்பவனை அடையவில்லை.

கந்திராக்ட்டு உண்டாகிற காலத்தில் விற்பவனுடைய ஸ்வாதீனத்திலிராத சரக்கைவிற்கவும், பின்னிட்ட ஓர்தினத்தில் ஒப்பிக்கவும் கந்திராக்ட்டு.

௮௮. பின்னிட்ட ஓர் தினத்தில் ஒப்பிக்கும்படியாக சரக்கை விற்பனை செய்வதைக்குறித்த கந்திராக்ட்டு பிறக்கிற காலத்தில் அந்த சரக்கு விற்பவனுடைய ஸ்வாதீனத்திலிராவிட்டாலும், கிரயத்துக்குக் கொண்டாலன்றி வேறேவிதமாய் அதை சம்பாதிக்கலாமென்பதற்கு அக்காலத்தில் அவனுக்கு முகாந்தரமில்லாவிட்டாலும் அந்த கந்திராக்ட்டு உடன்படுத்துகிறது.

திருஷ்டாந்தம்.

ஈஸ்ட்டிண்டியா ரெயில்வேகம்பெனியைச்சேர்ந்த ஐம்பதுபங்குகளை - பி-என்பவனுக்கு விற்பதாகவும், அதே வருஷம் மார்ச்சி௴ - ௧௨-யில் அதுகளை ஒப்பித்து பணம்பற்றிக்கொள்வதாகவும், எ - என்பவன் முன்னிட்ட ஜனவரி௴ ௧௨ கந்திராக்ட்டுசெய்கிறான். கந்திராக்ட்டுசெய்கிற காலத்தில் - எ - என்பவனுடையஸ்வாதீனத்தில் யாதொரு பங்குமில்லை. அந்த கந்திராக்ட்டு செல்லாமணியாகிறது.

கந்திராக்ட்டில்விலை நிர்ணயிக்கப் படாதிருந்தால்அதைநிச்சயிப்பது.

௮௯. விற்கப்பட்ட சரக்கின் கிரயம்விற்பனையைக்குறித்தகந்திராக்ட்டில் நிர்ணயிக்கப்படாதிருந்தால், கிரயத்துக்குக் கொண்டவன் விற்றவனுக்குக் கோர்ட்டார் யுக்தமாக நினைத்துத் தீர்மானிக்கிற கிரயத்தைச் செலுத்தக்கடவான்.

திருஷ்டாந்தம்.

பட்னாவில் வாசஞ்செய்கிற - பி - என்பவன் ஏதோ ஒரு விதமான பண்டியைச் செய்யும்படி கல்கத்தாவில் பண்டிசெய்கிறவனாகிய - எ - என்பவனுக்கு உத்தரவு செய்கிறான். விலையைக் குறித்து உபயத்திராளுக்கும் பேச்சு ஒன்றுமநடக்கவில்லை. உத்தரவின்படி வண்டிசெய்தானபின்பு, கொண்டவனுக்கும் விற்றவனுக்கும் விலையைக்குறித்து விவாதமுண்டாகில், கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிற விலையைத்தீர்மானிக்க வேண்டியது.

ஒப்பிப்பது.

ஒப்பிக்கிற விதம்.

௯௦. விற்கப்பட்ட சரக்கை கொண்டவனுக்காவது அவனுக்காக அதுகளைப் பற்றிக்கொள்ள அதிகாரம் பெற்றயாவனொருவனுக்காவது ஸ்வாதீனப் படுத்தும்படியான பிரயோஜனமுள்ள யாதொருகாரியத்தைச்செய்வதினாலே அந்த சரக்கு ஒப்பிக்கப் படுவதாகலாம்.

திருஷ்டாந்தம்.

(a). எ-என்பவன்-பி-என்பவனுக்குஒரு குதிரையைவிற்று அதை-தன்னுடைய லாயத்திலிருந்து-பி-என்பவனுடையலாயத்துக்குக்கொண்டு போகும்படிசெய்கிறான் அல்லது கொண்டுபோகவொட்டுகிறான். பி-என்பவனுடைய லாயத்துக்குக் கொண்டுபோவது ஒப்பிப்பதாகிறது.

(b) இங்கிலாந்திலிருக்கிற-பி-என்பவன் பொம்பாய் வர்த்தகனாகிய-எ-என்பவனிடத்திலிருந்து நூறு பஞ்சுக்கட்டுகளை அனுப்பும்படி உத்தரவுசெய்து. அதுகளுக்காக பொம்பாய்க்கு தன் சொந்தக்கப்பலை அனுப்புகிறான். அந்தக்கப்பலில் பஞ்சை யேற்றுவது-பி - என்பவனுக்கு ஒப்பிப்பதாகிறது.

(c). ஒருகிடங்கில் பூட்டியிருக்கிற ஏதோவொரு குறித்தசரக்கை-எ - என்பவன் பி - என்பவனுக்கு விற்கிறான். பி - என்பவன் அந்தசரக்கை எடுத்துக்கொள்ளும்படியாக அவனுக்கு அந்தகிடங்கின் சாவியை-எ - என்பவன் கொடுக்கிறான் இது ஒப்பிப்பதாகிறது.

(d). எ - என்பவன் குறித்த ஐந்துபீப்பா யெண்ணெயை - பி - என்பவனுக்கு விற்கிறான். அந்த எண்ணெ - எ - என்பவனுடைய கிடங்கிலிருக்கிறது, அந்த ஐந்து பீப்பாய்களை - பி - என்பவன் - சி - என்பவனுக்கு விற்கிறான். அதுகளுக்காக கிடங்கு வாடகையை - எ - என்பவன் சி - என்பவனிடத்தில் பெற்றுக்கொள்ளுகிறான். இதனாலே - எ - என்பவன் - சி - என்பவனுடைய கிடங்குக்காரனாக அந்த சரக்கை வைத்துக்கொண்டிருக்க சம்மதித்திருப்பதாய்த் தெரியவருகிறபடியால், இதனால் அந்த எண்ணெயை - சி - என்பவனுக்கு ஒப்பித்ததாகிறது.

(e). ஒரு கிடங்குக்காரனாகிய - சி - என்பவனுடைய ஸ்வாதீனத்திலுள்ள ஐம்பதுமணங்கு அரிசியை - எ - என்பவன் - பி - என்பவனுக்கு விற்கிறான். அந்த

அரிசியை - பி - என்பவனுக்கு ஒப்படை செய்யும்படி அவன் மூலமாய் - சி - என்பவனுக்கு - எ - என்பவன ஒரு உத்தரவு அனுப்புகிறான், அப்படிப்பட்ட உத்தரவுக்கு - சி - என்பவன் சம்மதித்து, தன்னுடைய புஸ்தகத்திலே அந்த அரிசியை பி - என்பவன் பேருக்குமாற்றி எழுதிப்போடுகிறான். இது ஒப்பிப்பதாகிறது.

(f). ஒப்பிக்குங்காலத்தில் பணம் பெற்றுக்கொள்ளுவதாய், எ - என்பவன் டன் - க - க்கு ஆயிரம் ரூபாய் விழுக்காடு ஐந்து டன் எண்ணெயை-பி-என்பவனுக்கு விற்க உடன்படுகிறான். எவனுடையதுறையிலே - எ - என்பவனுடையஇருபது டன் எண்ணெ யிருக்கிறதோ அந்தத் துறைகாரனாகிய - சி - என்பவனுக்கு-எ என்பவன் அதில் ஐந்து டன் எண்ணெயை - பி - என்பவன்பேருக்குச் செய்து போடும்படி உத்தரவு கொடுக்கிறான். சி - என்பவன் தன்னுடைய புஸ்தகத்தில்அப்படிமாற்றி எழுதிப்போட்டு அப்படி எழுதினதைக்குறித்து - பி - என்பவனுக்குத் தெரியப்படுத்தும்படி ஒரு அறிக்கைப்பத்திரிகையை - எ - என்பவனுடையகுமஸ்தாவி னிடத்திற் கொடுக்கிறான். எ - என்பவனுடைய குமஸ்தா அந்த அறிக்கைப் பத்திரிகையை - பி - எனபவனிடத்திற் கொண்டுபோய் எண்ணெயின் கிரயத்தைச் செலுத்தினால், அதை அவனுக்குக் கொடுக்கிறே னென்கிறான். - பி - என்பவன் பணஞ்செலுத்த நிராகரிக்கிறான். எ - என்பவனால் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து டன் எண்ணெயை - பி - என்பவன தனக்காக வைத்திருக்கும்படி - சி - என்பவனைதன்னுடைய ஏஜண்டாகக்கொள்ள சம்மதிக்காதபடியால், அவனுக்கு ஒப்பித்ததாக மாட்டாது.

துறைகாரனுக் காவது சாமான்கொண்டுபோகிறவனுக்காவது ஒப்பித்தால் இன்னதாகுமென்பது.

௯௧. விற்கப்பட்ட சரக்கு துறைகாரரிடத்திலாவது சாமான்கொண்டுபோகிறவ ரிடத்திலாவதுஒப்பிக்கப்பட்டால், கொண்டவனிடத்தில் ஒப்பித்தாற் போலாகிறது, ஆனால் சரக்கை பத்திரமாய் வைத்திருப்பதற்காகவாகிலும் ஒப்பிப்பதற்காகவாகிலும் அந்தத்துறைகாரனையாவது சாமான்கொண்டுபோகிறவனை யாவது உத்தரவாதியாய்க் கொள்வதற்கு, கொண்டவனுக்குக் கூடுமானதாயிருக்கும்படியான விதமாய் ஒப்பிக்கப்பட்டிருந்தாலொழிய, கொண்டவனுக்குப் போய்ச்சேராத சரக்கின் கிரயத்திற்கு அவன் பொறுப்பாக மாட்டான்.

திருஷ்டாந்தம்.

ஆக்ராவிலிருக்கிற - பி - என்பவன் ரெயில்வே மூலமாய் தனக்கு மூன்று பீப்பா எண்ணெயை அனுப்பும்படி கல்கத்தாவிலிருக்கிற - எ - என்பவனுக்கு உத்தரவு பண்ணுகிறான். எ - என்பவன் மூன்றுஎண்ணெபீப்பாய்களை - பி - என்பவன்பேருக்கு விலாசம்போட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய், அதுகளின் பத்திரத்திற்காக ரெயில்வே கம்பேனியாரைப் பொறுப்பாக்கும்பொருட்டு அனுசரிக்க வேண்டிய விதிகளின்படிச் செய்யாமல் அதுகளை அங்கேபோட்டுவந்துவிடுகிறான். அந்த சரக்கு - பி - என்பவனுக்கு வந்து சேரவில்லை. கிரயத்தைக்குறித்து - பி-என்பவன்பேரில் வியாச்சியந்தொடருவதற்கு அது தகுந்த படிஒப்பித்ததாகமாட்டாது.

ஓர்பாகமாத்திரம்ஒப்பிக்கப்பட்டால், இன்னதாகுமென்பது.

௯௨. சரக்கு முழுமையும் ஒப்பித்துக்கொண்டிருக்கும் தோரணியில் அதில் ஓர்பாகம ஒப்பித்தால், அது-அந்தசரக்கிலுள்ள சொந்துவத்தைஆதீனப்படுத்தும்பொருட்டு முழுமையும்ஒப்பித்தாற்போலாகிறது; ஆனால் சரக்கு முழுமையிலுமிருந்து பிரிக்கவேணுமென்கிற எண்ணத்தோடு அதில் ஓர் பாகமாத்திரம் ஒப்பிக்கப்பட்டால், அதினாலே மற்றதும் ஒப்பிக்கப்பட்டதாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

(a). கொண்டவனாகிய - எ - என்பவன்பேருக்கு அனுப்பப்பட்ட சரக்கை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் ரேவில் வந்து சேருகிறது. கப்பற்காரன் சரக்கைஇறக்க ஆரம்பித்து முழுமையையும ஒப்பிக்கும் தோரணியில் - எ - என்பவனுக்கு அந்த சரக்கில் ஓர் பாகத்தை ஒப்பிக்கிறான். இதனால் அந்த சரக்கிலுள்ள சொத்துவத்தை ஆதீனப்படுத்தும் பொருட்டு - எ - என்பவனுக்கு சரக்குமுழுமையையும ஒப்பித்ததாகிறது.

(b) ஒப்பிப்பதின்பேரில் பணம் வாங்கிக்கொள்வதாய் எ - என்பவன் ஒரு கட்டைகளின்போரை பி - என்பவனுக்கு விற்கிறான். விற்பனைக்குப்பின்பு, அந்தக் கட்டைகளில் கொஞ்சமெடுத்துக்கொண்டு போகவேணுமென்று பி - என்பவன் - எ - என்பவனைக் கேட்டுக்கொண்டு அவனிடத்தில் செலவு பெற்றுக்கொள்ளுகிறான். இதனாலே சட்டப்படி முழுமையும் ஒப்பித்ததாகமாட்டாது.

(c). எ - என்பவன் பி - என்பவனுக்கு ஐம்பதுமணங்கு அரிசிவிற்கிறான். அந்த அரிசி எ - என்பவனுடைய கிடங்கிலிருக்கிறது. அந்த விற்பனைக்குப்பின்பு அந்த அரிசியில் பத்துமணங்கை பி-என்பவன்-சி என்பவனுக்கு விற்கிறான், பி - என்பவன் கேட்டுக்கொள்வதின்பேரில், எ - என்பவன் அந்த பத்துமணங்கை சி-என்பவனுக்கு அனுப்புகிறான். இதனால் சட்டப்படி முழுமையும் ஒப்பித்ததாகமாட்டாது.

கொள்பவன் ஒப்பிக்கச்சொல்லி கேட்கிறவரையில் விற்பவன்ஒப்பிக்கக் கடமைப்பட்டவனல்ல.

௯௩. பிரத்தியேகமான யாதொரு வாக்குத்தத்தஞ் செய்யப்படாதிருக்குமாகில், கொள்பவன் ஒப்பிக்கச்சொல்லி கேட்கிறவரையில் விற்பவன்அந்தசரக்கை ஒப்பிக்கக்கடமை பூண்டவனல்ல.

ஒப்பிக்குமிடம்.

௯௪. ஒப்பிப்பதைக்குறித்து யாதொரு பிரத்தியேகமான வாக்குத்தத்தம் நடந்திராதபட்சத்தில், விற்கப்பட்ட சரக்காவது விற்பனைகாலத்தில் அது இருந்த இடத்திலே ஒப்பிக்கப்படத்தக்கதாகிறது; விற்பதாய் கந்திராக்ட்டு செய்யப்பட்ட சரக்கானது விற்பதாய் கந்திராக்ட்டு செய்யப்படுகிற காலத்தில் அது இருக்கிற இடத்தில் ஒப்பிக்கப்படத்தக்கதாகிறது, அக்காலத்தில் அந்த சரக்கு உற்பத்தியாகாதிருந்தால், அது உற்பத்தியாகிற இடத்திலே ஒப்பிக்கப்படத்தக்கதாகிறது.

சரக்கை நிறுத்திக்கொள்ளும்படி விற்பவனுக்குள்ள பாத்தியதை.

சரக்கை நிறுத்திக்கொள்ளும்படியான பாத்தியதை விற்றவனுக்குண்டென்பது.

௯௫. கந்திராக்ட்டினாலே வேறேகருத்துத்தோன்றாவிட்டால், விற்கப்பட்டசரக்குவிற்றவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிறவரையிலும் அதின்கிரயம் முழுமையுமாவது அதில் எவ்வளவாவது செலுத்தப்படாதிருக்கிறவரையிலும், அந்த சரக்கைவைத்துக்கொண்டிருக்கவிற்பவனுக்கு பாத்தியதை யுண்டாயிருக்கிறது.

பின்னிட்டு ஓர்தினத்தில் பணஞ் செலுத்தப்படுவதாயிருந்து, ஒப்பிப்பதற்கு காலநிர்ணயமில்லாத விஷயத்தில் நிறுத்திவை

௯௬. பின்னிட்ட ஓர்தினத்தில் பணஞ்செலுத்தும்படியாயும், சரக்கு ஒப்பிப்பதற்கு காலநிர்ணயமில்லாமலும் கந்திராக்ட்டு ஏற்பட்டிருந்தால், விற்றவனுக்கு சரக்கை நிறுத்தி வைத்துக்கொள்ளும்படியான பாத்தியதை கிடையாது, கொண்டவன் பணஞ்செலுத்தாமல் சரக்கை அப்போதே ஒப்பித்துக்கொள்

த்துக்கொள்ளும் பாத்தி யதை.

ள அர்ஹனாகிருன். ஆனால் கொண்டவன் சரக்கு ஒப்பிக்கப்படுவதற்கு முன்னமே கடனிறுக்கச் சக்தியற்றவனானாலும், பணஞ்செலுத்த நிர்ணயிக்கப்பட்ட காலம் சரக்கு ஒப்பிக்கப்படுவதற்கு முன்னமே வந்துவிட்டாலும், விற்றவன் கிரயப்பணத்தினிமித்தம் அந்த சரக்கை நிறுத்திக்கொள்ளலாம.

விவரம்—ஒருவன் வழக்கமாய் நடந்துக்கொண்டிருக்கிற வர்த்தக தோரணியில் தன் கடன்களை செலுத்தாமல் இருந்துவிட்டாலும், அதுகளைச் செலுத்த சக்தியற்றவனானாலும், கடனிறுக்கச் சக்தியற்றவனெனப் படுகிருன்.

திருஷ்டாந்தம்.

எ-என்பவன் தன்னுடைய கிடங்கிலுள்ள ஓரளவு சர்க்கரையை -பி- என்பவனுக்கு விற்கிருன். பணஞ்செலுத்துவதற்கு மூன்று மாச கெடுவு கொடுப்பதாய் ஒப்புக்கொள்ளப்படுகிறது. பி-என்பவன் அந்த சர்க்கரையை -எ- என்பவனுடையகிடங்கிலேயே இருக்கவொட்டுகிருன். அந்த மூன்றுமாசம் கழிவதற்கு முன்னே -பி- என்பவன கடனிறுக்கச் சக்தி யற்றவனாகிருன். அந்தக் கிரயப்பணத்தினிமித்தம் அந்த சரக்கை -எ- என்பவன் நிறுத்திக்கொள்ளலாம்.

பின்னிட்ட ஓர் தினத்தில் பணஞ்செலுத்தப்படுவதாயிருந்து, கொண்டவன் விற்றவனுடைய ஸ்வாதீனத்தில் சரக்கை யிருக்கவொட்டுகிற விஷயத்தில், விற்றவனுக்குள்ள பாத்தியதை.

கூஎ. பின்னிட்ட ஓர் தினத்தில் பணஞ்செலுத்தப்படத்தக்கதாயும், கொண்டவன் விற்றவனுடைய ஸ்வாதீனத்திலே அந்த தினம் வரையில் சரக்கை இருக்கவொட்டுகிறதாயும், கண்டிராக்ட்டு வேற்பட்டிருக்கிற பட்சத்தில், கொண்டவன் அதற்காக அப்போது பணஞ்செலுத்தாவிட்டால், விற்றவன் அந்த சரக்கை கிரயத்துக்காக நிறுத்திக்கொள்ளலாம.

திருஷ்டாந்தம்.

எ-என்பவன் தன்னுடைய கிடங்கிலுள்ள ஓர் அளவு சர்க்கரையை -பி- என்பவனுக்கு விற்கிருன். பணஞ் செலுத்துவதற்காக மூனறுமாதகெடுவு கொடுக்கும்படி ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்தமூன்றுமாசமாகிறவரையில் -பி- என்பவன் அந்தசர்க்கரையை -எ- என்பவனுடையகிடங்கில் இருக்கவொட்டுகிருன, அந்தகெடுவுக்குப்பின்பு அதற்காக அவன் பணஞ்செலுத்தவில்லை. அந்தக்கிரயத்துக்காக -எ- என்பவன் அந்த சரக்கை நிறுத்திக்கொள்ளலாம்.

பின்னிட்டுக்கொண்டவனுக்குவிரோதமாய் விற்றவனுக்குள்ள பாத்தியம்.

கூஅ. தான் விற்றசரக்கை தன் ஸ்வாதீனத்தில் வைத்துககொண்டிருக்கிறவன் அதைப்பின்னிட்டுக்கொள்ளுகிறவனுடைய பாத்தியதையைத் தான் ஒப்புக்கொண்டாலொழிய பிந்திய அந்தக் கிரயகாரனுக்குச் சேராதபடி அந்த சரக்கை கிரயப்பணத்திற்காகத் தான் வைத்துக்கொள்ளலாம்.

கொண்டுபோய்க்கொண்டிருக்கையில் நிறுத்துவது.

கொண்டுபோகப் படுகையில் நிறுத்துவதற்கு

கூகூ. விற்றவன் சரக்கை தன்ஸ்வாதீனத்திலிருந்து அனுப்பிவிட்டு, கிரயமுழுதும் பெற்றுக்கொள்ளா திருப்பானாகில், கொண்டவன கடனிறுக்கச் சக்தியற்றவனாகிற

விற்றவனுக்குள்ள அதிகாரம்.

பட்சத்தில், அவனிடத்திற்கு அந்த சரக்கு போய்க்கொண்டிருக்கச்சே விற்றவன் அதை நிறுத்திபோடலாம்.

கOO. கொண்டுபோகிறவனுடைய ஸ்வாதீனத்தில் சரக்கிருக்கும் போதும், கொண்டவனிடத்திற்குப் போய்க்கொண்டிருக்கையில் யாதோரிடத்தில வைக்கப் பட்டிருக்கும்போதும், கொண்டுபோகிறவனுடைய ஸ்வாதீனத்திலிருப்பது அப்படி வைக்கப்பட்டிருப்பதும்தவிர மற்றப்படிகொண்டவனுடைய ஸ்வாதீனத்திலாவது அவனுக்காக வேறொருவனுடைய ஸ்வாதீனத்திலாவது வந்து சேராதிருக்கும்போதும், சரக்கு கொண்டுபோகப்பட்டுக்கொண்டிருப்பதா யெண்ணப்படுகிறது.

இன்னபடிக்கானல் சரக்குபோய்க்கொண்டிருப்பதாக எண்ணபபடுமெனபது.

திருஷ்டாந்தம்.

(a). சென்னப்பட்டணத்திலிருக்கிற - பி - என்பவன் பாட்னவிலிருக்கிற எ - என்பவனுடைய சரக்குக்கு உத்தரவுபண்ணி, அதை சென்னப்பட்டணத்திற்கு அனுப்பும்படி கட்டளையிடுகிருன். சரக்கு கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டு, அவ்விடத்திலே சென்னப்பட்டணத்திற்கு அனுப்பும்படி ஓர் துறைகாரனுகிய - சி - என்பவனிடத்தில் ஒப்பிக்கப்படுகிறது. சரக்கு - சி - என்பவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கையில் அது கொண்டுபோகப்பட்டுக்கொண்டிருக்கிறதென்ருகிறது.

(b). டில்லியிலிருக்கிற - பி - என்பவன் கல்கத்தாவிலிருக்கிற - எ - என்பவனுடைய சரக்கு உத்தரவுபண்ணுகிருன். எ - என்பவன் டில்லியிலிருக்கிற - பி- என்பவன் பேருக்கு சரக்கை அனுப்புகிருன். அவ்விடத்தில் வந்து சேருவதின் பேரில் - பி - என்பவனுடைய கிடங்கில் கொண்டுபோய் போடப்படுகிறது. பி- என்பவன் அதைபற்றிக்கொள்ள நிராகரித்து உடனே பணஞ் செலுத்தாமல் நிறுத்திப்போடுகிருன். சரக்கு கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருக்கிறதென்ருகிறது.

(c). புனவிலிருக்கிற - பி - என்பவன் பொம்பாயிலிருக்கிற - எ - என்பவனுடைய சரக்குக்குஉத்தரவுபண்ணுகிருன். பி - என்பவனல் நேமிக்கப்பட்ட சுமைகாரனுகிய - சி - என்பவன் மூலமாய் - எ - என்பவன புனவுக்கு சரக்கை அனுப்புகிருன. சரக்கு புனவில் வந்துசேர்ந்த பின்பு, பி - என்பவன் கேட்டுக்கொள்வதின்பேரில் அவனுக்காக - சி - என்பவன் தன்னுடைய கிடங்கிலே அதை வைத்துக்கொள்ளுகிருன். இதற்குமேல் சரக்கு கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருக்கிறதாகாது.

(d). லண்டன் பட்டணத்து வர்த்தகனுகிய - பி - என்பவன் பொம்பாய் வர்த்தகனுகிய - எ - என்பவனுடைய நூறு பஞ்சுக்கட்டுக்கு உத்தரவுபண்ணுகிருன். அந்த பஞ்சுக்காக பொம்பாய்க்கு - பி - என்பவன தன் சொந்தக் கப்பலை அனுப்புகிருன். பஞ்சு அந்தக் கப்பலில் எற்றுமதிசெய்து ஒப்பிக்கபடும்போதே கொண்டுபோகப்படுகிறதென்பது அற்றுப்பொகிறது.

(e), லண்டன் பட்டணத்துவர்த்தகனுகிய - பி - என்பவவன் பொம்பாய் வர்த்தகனுகிய - எ - என்பவனுடைய நூறு பஞ்சுகட்டுக்கு உத்தரவுபண்ணுகிருன் அந்தபஞ்சுக்காக - பி - என்பவன் தனசொந்தக்கப்பலை பொம்பாய்க்கு அனுப்புகிருன் எ - என்பவன் பஞ்சை கப்பலில் எற்றுமதிசெய்து ஒப்பித்து, தன்னுடைய உத்தரவுபெற்றவனுக்காவது ஒப்படைச்சுகாரர்களுக்காவது பஞ்சை ஒப்பிக்கத்தக்கதாய் கப்பலதிகாரியினிடத்திலே வார்நாமாவாங்கிக்கொள்ளுகிருன. பஞ்சு லண்டனில் வந்து சேருகிறது, ஆனல் அது - பி - என்பவனுடைய ஸ்வாதீனமாவதற்கு முன்னமே - பி - என்பவன் கடனிறுக்கச் சக்த்தியற்றவனுகிருன், பஞ்சுக்கு கிரயஞ்செலுத்தப்படவில்லை. எ - என்பவன் அந்த பஞ்சை நிறுத்திப்போடலாம்.

௧0௧. இதில் பின்னால் கண்டிருக்கிற விஷயங்களில் தவிர, நிறுத்திப் போடுவதற்காக விற்பவனுக்குள்ள பாத்தியதை யானது - சரக்கு கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருக்கையில், கொண்டவன் அதை வேரொருவனுக்கு விற்று கிரயத்தை வாங்கிக்கொள்வதின்பேரில் அற்றுப்போகாமல், இரண்டாவது கிரயக்காரனுக்காவது அவனுக்காக வேரொருவனுக்காவது ஒப்பிக்கப் படுகிறவளாயில் நடந்தேறிவருகிறது.

நிறுத்திப்போடுகிற பாத்தியதை தொடர்ச்சியாய் நடப்பது.

௧0௨. கொண்டவன் சாக்குக்கு பாத்தியதையைத் தெரிவிக்கிற பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமாவையாவது, வேறே தஸ்தாவேஜையாவது பெற்றுக்கொண்டு, சரக்கு கொண்டுபோகப்பட்டுக்கொண்டிருக்கையில் அதை நல்ல எண்ணத்தோடு பிரவர்த்தித்து அதற்காகப் பெருமான பிரதிபலன் அளிக்கிற இரண்டாவதுகிரயக்காரனுக்கு ஒப்படைசெய்வாளுகில், சரக்கை நிறுத்திப்போடுவதென்னும் பாத்தியதை அற்றுப்போகிறது.

கொண்டவன் பாத்தியதையைத் தெரிவிக்கிற தஸ்தாவேஜை ஒப்பிப்பதின்பேரில் சரக்கை நிறுத்திப்போடுகிற பாத்தியதை அற்றுப்போகிறது.

திருஷ்டாந்தம்

(a). எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஏதோ ஒரு சரக்கை விற்று அவன் பேருக்கு அனுப்புகிறான், அவனுக்கு பில் ஆவ லேடிங் என்னும் வார்நாமாவையும் அனுப்புகிறான். எ - என்பவனுக்கு இன்னும் பணஞ் செலுத்தப்படாதிருக்கச்சே - பி - என்பவன் கடனிருக்கச் சக்தியற்றவனுகிறான், அவன் கடனிறுக்கச் சக்தியற்றவனுனதை அறியாத - சி - என்டவனுக்கு - பி - என்பவன் அந்த சரக்கு கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருக்கையில் அந்த வார்நாமாவை ரொக்கத்திற்கு ஒப்பிக்கிறான். கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருக்கிற சரக்கை - எ - என்பவன் நிறுத்தக் கூடாது.

(b). எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஏதோ ஒரு சரக்கை விற்று அவன் பேருக்கு அனுப்புகிறான் - எ - என்பவனுக்கு இன்னும் பணஞ் செலுத்தப்படாதிருக்கச்சே, பி - என்பவன் கடனிறுக்கச் சக்தியற்றவனுகிறான், அவன் கடனிறுக்கச் சக்தியற்றவனுனதை அறிந்த - சி - என்பவனுக்கு - பி - என்பவன் அந்த சரக்கு கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருக்கச்சே வார்நாமாவை ரொக்கத்திற்கு ஒப்படைசெய்கிறான். அந்த ஒப்படையானது நல்ல எண்ணத்தோடுசெய்யப்பட்டதல்லாதபடியால், கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருக்கிற சரக்கை - எ - என்பவன் இன்னும் நிறுத்தலாம்.

௧0௩. சரக்கைக் கொண்டவன் பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமாவையாவது அந்த சரக்கில தனக்கு சுதந்தரத்தைத் தெரிவிக்கிற வேறே தஸ்தாவேஜையாவது நல்ல எண்ணத்தோடு அடகுவைத்து, அதின் பேரிலே தானே முன்பணம் வாங்கியிருந்தால், அடகு வைத்துக் கொண்டவனுக்கு அந்த முன்பணத்தைச் செலுத்தாமலாவது செலுத்துவதாகப் பணத்தைக்காட்டாமலாவது, விக்கிரயக்காரன் கொண்டு போகப்பட்டுக் கொண்டிருக்கிற சரக்கை நிறுத்தக்கூடாது.

குறித்த முன்பணத்திற்காக சுதந்தர சாஸனம் ஒப்பிக்கப்பட்டிருந்தால், விற்றவன் இன்னவிதமாய் நிறுத்தலாமென்பது.

திருஷ்டாந்தம்.

(a). ௧௨,000 - ரூபாய்ப் பெறுமான சரக்கை - எ - என்பவன் - பி - என்பவனுக்கு விற்று அவன பேருக்கு அனுப்புகிறான். பி - என்பவன அந்த சரக்கின்பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமாவின் பேரிலேயே தனக்கு - சி - என்பவனால் முன்பணமாகக் கொடுக்கப்பட்ட ௫,000 - ரூபாய்க்கு ஈடாக - சி - என்பவனுக்கு அந்த வார்நாமாவை ஒப்படை செய்கிறான. பி - என்பவன் - சி - என்பவனுக்கு ௯,000 - ரூபாய் ருணப்பட்டவனாகி, கடனிறுக்கச் சக்தியற்றவனாகிறான். சி என்பவனுக்கு ௫,000 - ரூபாய் செலுத்தாமலாவது செலுத்துவதாகப் பணத்தைக் காட்டாமலாவது சரக்கை நிறுத்த - எ - என்பவனுக்குச் சுதந்தரமில்லை.

(b). ௧௨,000 - ரூபாய் பெறுமான சரக்கை - எ - என்பவன் - பி - என்பவனுக்கு விற்று அவன்பேருக்கு அனுப்புகிறான். பி - என்பவன் சாதாரணமான பற்று வரவு கணக்கினபேரில் தான் சி - என்பவனுக்கு நிலுவை பாக்கியாயிருக்கிற ௫,000 ரூபாய்க்கு ஈடாக அந்தசரக்கின் பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமாவை சி - என்பவனுக்கு ஒப்படை செய்கிறான். பி - என்பவன் கடனிறக்கச் சக்தியற்றவனாகிறான். அந்த ௫,000 - ரூபாயை - சி என்பவனுக்குச் செலுத்தாமலாவது செலுத்துவதாகப் பணத்தைக் காட்டாமலாவது - எ - என்பவன் கொண்டுபோகப் பட்டுக்கொண்டிருக்கிற சரக்கை நிறுத்துவதற்குச் சுதந்தரமுடையவனாயிருக்கிறான்.

இன்னபடி செய்தால் அது நிறுத்துவதாகு மென்பது.

௧0௪. விற்றவன் - சரக்கு கொண்டுபோகப்பட்டுக்கொண்டிருக்கையில் அதை நிறுத்தலாமென்பதினால், அவன் சரக்கை வாஸ்துவமாய் ஸ்வாதீனப் படுத்திக்கொண்டாலும் கொள்ளலாம், அல்லது அதைக்கொண்டு போகிறவனுக்காவது அது எவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிறதோ அவனுக்காவது தன்னுடைய பாத்தியதையை அறிக்கை செய்தாலும் செய்யலாம்.

விற்றவனுடைய பாத்தியதையைக்குறித்துஅறிக்கை.

௧0௫. அப்படிப்பட்ட அறிக்கையை சரக்கை நேராய்த் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவனுக்காகிலும்செய்யலாம், எவனுடைய ஊழியக்காரன் அதைத்தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறானோ அந்த முதலாளிகளுக்காகிலும் செய்யலாம். முதலாளிக்குச் செய்கிறபட்சத்தில், கொண்டவனுக்கு சரக்கை ஒப்பிக்காமல் நிறுத்தும்படி அந்தமுதலாளி தன்னுடைய ஊழியக்காரனுக்கு கிரமமாய் ஜாக்கிரதைப்பட்டு, தகுந்த காலத்தில தெரியப் படுத்துவதற்கு அனுகூலமாகவேண்டிய காலத்தையும் இருக்கிற சங்கதிகளையும்யோசித்து அதற்குத்தக்கபடி அறிக்கைசெய்யவேண்டியது.

நிறுத்துவதின்பேரில் விற்றவனுக்குள்ள பாத்தியதை.

௧0௬. கொண்டுபோகப் பட்டுக்கொண்டிருக்கையில் நிறுத்துவதென்பதினாலே விற்கப்பட்ட பூரா சரக்கின் கிரயம் செலுத்தப்படுகிறவரையில், சரக்கை தான் நிறுத்திவைக்க விற்றவனுக்குபாத்தியதைபுண்டாகிறது.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் பி - என்பவனுக்கு நூறு பஞ்சுகட்டு விற்கிறான்; அதுகளில் அறுபதுகட்டு பி - என்பவனுடைய ஸ்வாதீனத்தில் வந்துசேர்ந்து, நாற்பதுகட்டு இன்னும் கொண்டுபோகப்பட்டுக்கொண்டிருக்கச்சே, பி - என்பவன் கடனிறுக்கச் சக்தியற்றவனாகிறான்; எ - என்பவனுக்கு இன்னும் பணம் செலுத்தப்படாமையினா

லே அவன் கொண்டுபோகப் பட்டுக்கொண்டிருக்கிற நாற்பது கட்டை நிறுத்திப் போடுகிறான். நூறுகட்டின் விலையும் செலுத்தப்படுகிறவரையில் அந்த நாற்பது கட்டுகளை நிறுத்திவைக்க எ - என்பவனுக்கு பாத்தியதையிருக்கிறது.

மறுபடி விற்பது.

கொண்டவன் நிறைவேற்றத் தவறுவதின்பேரில் மறுபடி விற்பது.

௧௦௭. சரக்கைக்கொண்டவன் தனக்கு விற்கப்பட்ட சரக்கை யெடுத்துக்கொண்டுபோகாமையினாலாவது அதற்காகப ணஞ்செலுத்தாமையினாலாவது கன்திராக்ட்டின்படிதான்செய்யவேண்டியதைச் செய்யத்தவறினால், விற்றவன் தனக்குள்ள பாத்தியதையினால் அந்த சரக்கை நிறுத்தி வைத்துக்கொண் டிருந்தாலும், கொண்டுபோகப்பட்டுக்கொண்டிருக்கையில் அதை நிறுத்திப்போட்டாலும், அதை மறுபடி விற்றுப்போட தான் கருதியிருப்பதை கொண்டவனுக்கு அறிக்கைசெய்து, தகுந்த காலஞ்சென்றபின்பு அதை மறுபடி விற்றுப்போடலாம், அதினால் ஏதாவது நஷ்டமுண்டானால், கொண்டவன் அதை பேற்றுக்கொள்ள வேண்டியதேயல்லாமல், ஏதாவது லாபமுண்டானால் அது அவனுக்குக்கிடைக்கமாட்டாது.

பாத்தியதை.

சரக்கை விற்பவன்கொள்பவனுக்கு ஒப்படைசெய்கிற பாத்தியதை.

௧௦௮. அடியில் கண்டிருக்கிற விஷயங்களில் தவிர, சரக்கை விற்பவன் அதில் தனக்குள்ள பாத்தியதையை யல்லாமல் அதிகபாத்தியதையை சரக்குக் கொள்பவனுக்குக் கொடுக்கமாளாது:—

விலக்கு - ௧.—சொந்தக்காரனுடைய அனுமதியின்பேரில், எவனாவது தன்னுடைய ஸ்வாதீனத்தில் யாதொரு சரக்கையாகிலும், பில்ஆவ் லேடிங்என்னும் யாதொரு வார்சாமாவையாகிலும், டாக் வாரண்டு என்னும் கஸ்ட்டமவுசு உத்தரவையாகிலும், கிடங்குக் காரனுடைய சர்ட்டிபிகேட்டையாகிலும், சரக்கை ஒப்பிக்கும்படி துறைகாரனுடைய சர்ட்டிபிகேட்டு வாரண்டு அல்லது உத்தரவையாகிலும், சரக்குக்கு பாத்தியதையைத் தெரிவிக்கிற வேறேதஸ்தாவேஜை யாகிலும் வைத்துக்கொண்டிருந்தால், அவன் அப்படி எது தன் ஸ்வாதீனத்தி லிருக்கிறதோ அல்லது எதற்கு அந்த தஸ்தாவேசுகள் சம்மந்தப்படுகிறதோ அந்த சரக்கின்சொத்துவத்தை வேறே எவனுக்காவது ஒப்படை செய்து அப்படிப்பட்டவனுக்கு அதில் சரியான பாத்தியதை கிடைக்கச்செய்யலாம், சொந்தக்காரன் அதற்குவிரோதமான என்ன உத்தரவு செய்திருந்த போதிலும் நிமித்தமில்லை : ஆனால் கொள்பவன் நல்ல எண்ணத்தோடு பிரவர்த்திக்க வேண்டியது மல்லாமல், அவன் பிரவர்த்திக்கிற காரியங்களும் அந்த சரக்கையாவது தஸ்தாவேஜுகளையாவது தன் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருப்பவன் அந்த சரக்கை விற்க அதிகார முடையவனல்லவென்று நியாயமான அனுமேய முண்டுபண்ணத்தக்கதாயிருக்கக்கூடாது.

விலக்கு - ௨.—சரக்குக் கூட்டான பல சொந்தக்காரர்களில் ஒருவன் மற்ற சொந்தக்காரர்களுடைய உத்தரவின்பேரில் அந்த சரக்கை தன் ஸ்வாதீனத்திலேயே வைத்துக் கொண்டிருப்பானாகில், அப்படிப்பட்ட கூ

ட்டுச் சொந்தக்காரனிடத்திலே அந்த சரக்கை நல்ல எண்ணத்தோடும், அதைத் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருப்பவன் அதை விற்க அதிகார முடையவனல்லவென்று நியாயமான அனுமேயமுண்டுபண்ணத் தக்கதாயிராத சங்கதிகளில் பிரவர்த்தித்தும், கிரயத்துக்குவாங்கிக்கொள்கிற யாவனொருவனை அந்த சரக்கின் சொத்துவம் அடைகிறது.

விலக்கு-ரு.—ஒரு கந்திராக்ட்டைச்சேர்ந்தமறு பட்சத்தானுடைய இஷ்டானுசாரமாய் செல்லாததாகத்தக்க அந்த கந்திராக்ட்டின்படி சரக்கை ஒருவன் தன் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருக்கும்போது, அப்படி ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவனிடத்திலே மூன்றுவது மனிதனொருவன் அந்தகந்திராக்ட்டு ரத்துசெய்யப்படுவதற்கு முன்னமே அந்த சரக்கை நல்ல எண்ணத்தோடு கொள்வானாகில், எதினால் அந்த கந்திராக்ட்டு செல்லாததாகத்தக்கதோ அந்தக்காரியங்கள் சரக்கைத் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பவனாலாவது எவர்களுக்கு அவன் பிரதிநிதியாயிருக்கிறானோ அவர்களாலாவது செய்யப்படுகிற குற்றமான காரியங்களாகாதபட்சத்தில், அந்த மூன்றுவது மனிதனை அந்தசரக்கின் சொத்துவம் அடைகிறது.

இந்தவிஷயத்திலே, கந்திராக்ட்டைரத்துசெய்யவொட்டாமல்தடுக்கப்படுவதினாலே பிரதம விக்கிரயக்காரனுக்கு ஏதாவது நஷ்டமுண்டானால், அந்த நஷ்டத்திற்காக அவன் பிரதம கிரயக்கார னிடத்திலே ஈவுபெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

திருஷ்டாந்தம்.

(a). சி-என்பவனிடத்திலிருந்து-பி-என்பவன் திருடின ஒருபசுவை-எ என்பவன் நல்ல எண்ணத்தோடு-பி-என்பவனிடத்தில் விலைக்கு வாங்குகிறான். பசுவின்சொத்துவம்-எ-என்பவனை அடையாது.

(b). ஒரு வர்த்தகனாகிய-எ-என்பவன் ஏதோ ஒரு சரக்கைப்பற்றிய பில் ஆவ் லேடிங் என்னும்வார்நாமாவை தன்னுடைய ஏஜெண்டாகிய-பி-என்பவனிடத்தில் ஒப்பித்து, ஏதோ ஒரு குறித்தவிலைக்குக் குறைத்து அந்தச்சரக்கை விற்கக்கூடாதென்றும், டி-என்பவனுக்கு கடனுக்கு விற்கக்கூடாதென்றும்-பி-என்பவனுக்கு உத்தரவுசெய்கிறான். அந்தவிலைக்குக் குறைத்தும் மூன்றுமாசத்திய கடனுக்கும் அந்த சரக்கை-பி-என்பவன்-டி-என்பவனுக்கு விற்கிறான். சரக்கின் சொத்துவம்-டி-என்பவனை அடைகிறது.

(c). எ-என்பவன்-பி-என்பவனுக்கு சரக்குவிற்கிறான், அதற்கு பில்ஆவ் லேடிங் என்னும் வார்நாமா-எ-என்பவனிடத்திலிருக்கிறது, ஆனால் அந்த வார்நாமா-சி-என்பவனுக்கு சரக்கை ஒப்பிக்கும்படி எழுதப்பட்டிருக்கிறதுமல்லாமல், அதை-சி-என்பவன் எண்டார்சு பண்ணவுமில்லை. சொத்துவம்-பி-என்பவனை அடையாது.

(d). எ-பி-சி-என்பவர்கள் அவிபக்த இந்துசகோதரர்கள், அவர்களுக்கு பொதுவில் சிலமாடுகளிருக்கிறது. பி-என்பவனும்-சி-என்பவனும் ஒரு பசுவை எ-என்பவனுடைய ஸ்வாதீனத்தில் விட்டிருக்கிறார்கள்; அதை அவன்-டி-என்பவனுக்கு விற்கிறான். டி-என்பவன் நல்ல எண்ணத்தோடு வாங்குகிறான். பசுவின் சொத்துவம்-டி-என்பவனை அடைகிறது.

(e). மோசம் செய்வதென்றும் குற்றமாகாத மாறுபாடு சொல்லி-எ-என்பவன் தனக்கு ஒருகுதிரையை விற்கவும் ஒப்பிக்கவும்-பி-என்பவனை உட்படுத்துகிறான். பி-என்பவன கந்திராக்ட்டை ரத்துசெய்வதற்குமுன்னமே-எ-என்பவ

ன் - சி - என்பவனுக்கு அந்தகுதிரையை விற்கிருன். குதிரையின் சொத்துவம் - சி என்பவனை அடைகிறது; கந்திராக்ட்டை ரத்துசெய்யவொட்டாமல் தடுக்கப்படுவதி ஞலே - பி - என்பவனுக்கு யேதாகிலும் நஷ்டம் நேரிட்டிருந்தால் அதற்காக அவ ன் - எ - என்பவனிடத்திலே ஈவு பெற்றுக்கொள்ள அர்ஹனுகிருன்.

(f). எ - என்பவன் தனக்கு ஒரு குதிரையை விற்கும்படி - பி - என்பவனை அக்கிரமமாய் பயப்படுத்தி பலவந்தம் செய்கிருன், அல்லது மோசத்தினுலாவது த ப்பு சிருஷ்டனை மூலமாயாவது அவனை உட்படுத்துகிருன், பி - என்பவன அந் தகந்திராகட்டை ரத்து செய்வதற்கு முன்னமே - எ - என்பவன் அந்த குதிரை யை - சி - என்பவனுக்கு விற்கிருன். சொத்துவம் - சி - என்பவனை அடையாது.

பொறுப்பைக்குறித்து.

க0கூ. கொள்பவனுவது அவனை முன்னிட்டுக்கொண்டு தாவா செய் கிறவனெவனுவது, விற்பவனுடைய பாத்தியதை செல்லாதென்கிற ஏதுவினுல், விற்கப்பட்டசொத் தை அடையாமற்போவானுகில், கந்திராக்ட்டினுலே விரோதமானகருத்து தோன்ருதபட்சத்தில், அதி ஞல் நேரிடுகிற நஷ்டத்திற்காகக் கொண்டவனுக்காகிலும் அவனை முன்னி ட்டுக்கொண்டு தாவாசெய்கிறவனுக்காகிலும் விற்பவன் உத்தரிக்கத்தக்கவ னுவான்.

பாத்தியதை குறைவுக்காக விக்கிரையக்காரனுடைய பொறுப்பு.

நல்லதென்பதைக் குறித்தாவது இப்படிப்பட்டதென்பதைக் குறித்தாவது குறிப்பான பொறுப்பை ஸ்தாபிப்பது.

கக0. சரக்கு நல்லதென்பதைக் குறித்தாவ து அது இப்படிப்பட்ட தென்பதைக் குறித்தாவ து குறிப்பான பொறுப்பை அந்தந்த வியாபார வழக்கத்தைக்கொண்டு ஸ்தாபிக்கலாம்.

ஆகாரவஸ்து விற்பதிலேயே அது நல்லதென்கிற பொறுப்பு குறிப்பாயிருப்பது.

ககக, ஆகார வஸ்துக்களை விற்பதிலே அது கள் நல்லவை என்கிற பொறுப்பு குறிப்பாயிருக் கிறது.

மாதிரியைக்காட்டி சரக்கு விற்பதிலே அந்தசரக்கு மொத்தத்திற்கும் பொறுப்புகுறிப்பாயிருப்பது.

ககஉ. மாதிரியைக்காட்டி சரக்கு விற்பதில் அந்த சரக்கு முழுதும் அந்த மாதிரி எப்படிப்பட் டதோ அப்படிப்பட்ட தாகவே யிருக்கிற தென் பதற்குப் பொறுப்பு குறிப்பா யிருக்கிறது.

ககங. ஏதோ ஒரு பேருடையதாய் அந்த பேரைச்சொல்லி சரக்கு விற்கப்பட்டால், கொள்பவன் மாதிரியைப் பார்த் தாவது சரக்கு முழுமையையும் பார்வையிட்ட பின்பாவது, அந்த சரக்கை வாங்கியிருந்த போதி லும், அது வர்த்தக தோரணியில் அந்தப்பெயரா ல் தெரிந்து கொள்ளப்படுகிற சரக்கென்பதற்குப் பொறுப்பு குறிப்பாயிருக்கிறது.

ஏதோ ஒரு பேரைச் சொல்லி சரக்கு விற்கப்பட்டால், அதில் பொறுப்பு குறிப்பாயிருப்பது.

விவரம்.—ஆனல் ஏதோ ஒரு பேருடையதாய் அந்தப் பெயரைச் சொல்லி சரக்கு விற்கப்பட்டபோதிலும் அந்தப்பெயருள்ளதென்பதற்கு உத்தரவாதம் பண்ணுவதில்லையென்று கந்திராக்ட்டில் குறித்துச் சொல் லி எழுதியிருக்குமாகில், பொறுப்பு குறிப்பாய் அடங்கியிருக்கிறதென்ப தில்லை.

திருஷ்டாந்தம்.

(a). கல்கத்தாவிலிருக்கிற - எ - என்பவன் அப்போது மூர்ஷடாபாத்திலிருந்து கல்கத்தாவுக்கு வந்துகொண்டிருக்கிற "கழுவடைப்பட்டு" என்னும்பேர்கொண்ட பட்டுள்ள பன்னிரண்டு மூட்டைகள் - பி - என்பவனுக்கு விற்கிறான். அது "கழுவடைப்பட்டு" என்னும் பேரால் கடைவீதியில் தெரிந்துகொள்ளப்படுகிற பட்டுத்தான்என்பதற்கு - எ - என்பவன் பொறுப்பாளியென்பதுகுறிப்பாயிருக்கிறது.

(b). எ - என்பவன் மாதிரியைப் பார்த்தும் மொத்தசரக்கைப் பார்வையிட்ட பின்பும், "நல்ல பங்காளம்" என்னும் பேர்கொண்ட பஞ்சு மூட்டைகள் நூறை விலைக்கு வாங்குகிறான். அது "நல்ல பங்காளம்" என்னும் பேரால் கடைவீதியில் தெரிந்துகொள்ளப்படுகிற பஞ்சல்ல: இதனால் பொறுப்புக்கு விக்கின முண்டாகிறது.

௱௰௪. குறித்த காரியத்திற்கு சரக்கு உத்தரவு செய்யப்பட்டால், அந்தவிஷயத்திற்காக அந்த உத்தரவில் கண்டிருக்கப்பட்ட பெயர்கொண்டசரக்கு வழக்கமாய் விற்கப்படுகிறபட்சத்தில், சவதரிக்கப்பட்டசரக்கு அந்தவிஷயத்திற்குத்தகுந்ததுதானென்பதற்கு விற்றவன்பொறுப்பாளி என்பதுகுறிப்பாயிருக்கிறது.

குறித்த விஷயத்திற்கு சரக்கு உத்தரவுசெய்யப்பட்டால், பொறுப்பு.

திருஷ்டாந்தம்.

ஒருகப்பலுக்குத் தகடு அடிப்பதற்கான செம்பு அனுப்பும்படி செம்புசெய்கிறவனாகிய -எ- என்பவனுக்கு - பி - என்பவன் உத்தரவுபண்ணுகிறான். அந்த உத்தரவின்பேரில் - எ - என்பவன் செம்பு சர்பாராசெய்கிறான். அந்த செம்பு கப்பலுக்குத் தகடு அடிக்கத்தகுந்ததுதானென்பதற்குப் பொறுப்பு குறிப்பாயிருக்கிறது.

௱௰௫. பிரசித்தமாய்த் தெரிந்திருக்கிற வோர் நிச்சயமான இனமாகிய சரக்கை விற்பதில் யாதோ ஒரு குறித்த விஷயத்துக்கு அது தகுந்ததுதானென்பதற்குப் பொறுப்பு குறிப்பாய் அடங்கியிருப்பதில்லை.

பிரசித்தமாய்த்தெரிந்திருக்கிற வோர் நிச்சயமான இனமாகிய சரக்கை விற்பதில்பொறுப்பு.

திருஷ்டாந்தம்.

பி - என்பவன் பஞ்சு கொட்டுவதற்கான எந்திரஞ் செய்வதற்கு பேட்டெண்டு என்னும் அதிகார பத்திரம் பெற்றுக்கொண்டு அதைச்செய்வதற்குத் தானே உரியவனாயிருக்கிற - எ - என்பவனுக்கு எழுதுகிறதாவது—"என்னுடைய தொழிற்சாலையில் பஞ்சு கொட்டுவதற்கு உம்முடைய பேட்டெண்டு பருத்தி எந்திரத்தை எனக்கு அனுப்பும்" என்று யெழுதுகிறான். அந்த உத்திரவின்படி - எ - என்பவன் அந்த எந்திரத்தை அனுப்புகிறான். அது - எ - என்பவனுடைய பேட்டெண்டு பருத்தி எந்திரமென்று தெரிந்திருக்கிற எந்திரந்தானென்பதற்கு - எ - என்பவன் பொறுப்பாளியென்பது குறிப்பா யிருக்கிறது, ஆனால் - பி - என்பவனுடைய தொழிற்சாலையில் எவ்வகையாய்ப் பஞ்சுகொட்டப்படுகிறதோ அந்த வகைக்கு அது தகுந்ததுதானென்பதற்குப் பொறுப்புண்டாக்கமாட்டாது.

௱௰௬. ஒருவஸ்து என்ன இனமென்று விற்கப்பட்டதோ அந்த இனமாயிருக்குமாகில், அதை விற்றவன் - மோசமில்லாமலும் இனத்தைக குறித்து யாதொரு வெளிப்படையான பொறுப்பில்லாமலுமிருக்கச்சே, அதில் மறைந்திருக்கிற குறைவுக்கு உத்தரவாதியல்ல.

இன்னபடிக்கானால்விற்பவன் மறைந்திருக்கிற குறைவுகளுக்குஉத்தரவாதியல்ல.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஒரு குதிரை விற்கிறான் விற்றகாலத்தில் அந்த குதிரைக்கு - எ - என்பவனுக்குத் தெரியாத ஊனமொன்று இருந்ததாகவெளிப்படுகிறது. இதற்கு - எ - எனபவன் உத்தரவாதியல்ல.

பொறுப்புக்குத் தவறுதலுண்டாவதின் பேரில் கிரயக்காரனுக்குள்ள பாத்தியதை.

௧௧௭. பொறுப்போடு விற்கப்பட்ட ஏதோ ஒரு குறித்தவஸ்து ஒப்பிக்கப்படடும் அங்கீகரிக்கப்பட்டுமிருந்து, பொறுப்பு விக்கினப்படுமாகில், அதினாலேவிற்பனை ரத்தாகத்தக்கதல்ல ; ஆனால் பொறுப்பு விக்கினப்படுவதினாலுண்டான நஷ்டத்திற்காக விற்றவனிடத்திலே ஈவு பெற்றுக்கொள்வதற்கு கொண்டவன் அர்ஹனாகிறான்.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் ஒருகுதிரையை ஊனமொன்றுமில்லையென்று உறுதிசொல்லி பி - என்பவனுக்கு விற்று அதை அவனிடத்தில ஒப்பிக்கிறான்: விற்றகாலத்தில் அந்தக்குதிரைக்கு ஊனமிருந்ததாகத் தெரியவருகிறது. அதனாலே அந்த விற்பனை ரத்தாகத்தக்கதல்ல, ஆனால் அந்த ஊனத்தினாலுண்டான நஷ்டத்திற்காக - எ - என்பவனிடத்திலிருந்து ஈவுபெற்றுக்கொள்ள - பி - என்பவன் அர்ஹனாகிறான்.

நிச்சயிக்கப்படாத சரக்குவிஷயத்தில் பொறுப்புவிக்கினப்படுவதின் பேரில் கிரயக்காரனுக்குள்ள பாத்தியதை.

௧௧௮. கந்திராக்ட்டு ஏற்படுகிற காலத்தில் நிச்சயிக்கப்படாமலாவது உற்பத்தியாகாமலாவதிருந்த சரக்கை விற்பதாகப் பொறுப் புடனே கந்திராக்ட்டு ஏற்பட்டிருந்து, பொறுப்பு விக்கினப்படுமாகில், கொண்டவன் —

அந்த சரக்கு ஒப்பிக்கப்படும்போதே அதை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளலாம் வேண்டாமென்று தள்ளிப்போட்டாலுமபோடலாம்,

அல்லது சரக்கைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு நியாயமாய் வேண்டியிருக்கிற காலவரையிலே அந்த சரக்கை வைத்திருந்து, பின்பு அதைவேண்டாமென்று தள்ளிப்போட்டாலும் போடலாம்; ஆனால் அந்தக் காலத்தில் அந்த சரக்கைப் பரிசோதித்துப் பார்க்கும் பொருட்டுஎன்னசுதந்தரம் வஹிக்கலாமோ அதைவிட வேறேயாதொன்றுஞ் செய்யக்கூடாது.

எந்த விஷயத்திலும் கிரயக்காரன் பொறுப்பு விக்கினப்படுவதினாலுண்டான யாதொரு நஷ்டத்திற்காக விற்றவனிடத்திலிருந்து ஈவு பெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான். ஆனால் அவன் சரக்கை ஏற்றுக்கொண்டு ஈவுக்கு தாவாசெய்ய எத்தனப்பட்டால், அவன் அப்படிச்செய்ய எத்தனப்படுவதை, பொறுப்பு விக்கினமானதைக் கண்டுகொண்டபின்பு தகுந்த காலத்திற்குள் அறிக்கைசெய்யவேண்டியது.

திருஷடாந்தம்.

(a). நிச்சயிக்கப்படாத பஞ்சு இருநூறு கட்டை - எ - என்பவன் மாதிரி காட்டி - பி - என்பவனுக்கு விற்கவும், பி - என்பவனால் கேட்கப்படாமலே அவனுக்கு அதுகளை ஒப்பிக்கவும் உடன்படுகிறான். பி - என்பவனுக்கு மாதிரிப்பிரகாரமில்லாதபஞ்சு ஒப்பிக்கப்படுகிறது - பி - என்பவன் பரிசோதனைசெய்யும்பொருட்டு நியாயமாய் வேண்டியிருக்கிற காலத்தைவிட அதிககாலம் அதை வைத்துக்கொண்டிராவிட்டால், அவன் அதைத்திருப்பிவிடலாம்.

(b). மாதிரி பிரகாரம் இருபத்தைந்து மூட்டை மாவு - எ - என்பவனிடத்தில்வாங்கிக் கொள்வதாய் - பி - என்பவன் உடன்படுகிறான். பி - என்பவனுக்கு மாவு ஒப்பிக்கப்படுகிறது, அவன் அதற்குக் கிரயங் கொடுத்து விடுகிறான். பி - என்பவன் அதைப் பரிசோதிப்பதின்பேரில் மாதிரிக்குச் சரியாயிருக்கவில்லை யென்று கண்டுகொள்ளுகிறான்; பின்பு - பி - என்பவன் இரண்டு மூட்டைகளை உபயோகித்துக் கொள்ளுகிறான், ஒன்றை விற்கிறான் - அவன் இப்போது அந்த கந்திராக்ட்டை ரத்து செய்யவுங் கூடாது கிரயத்தை மறுபடி வரப்பற்றவுங் கூடாது, ஆனால் பொறுப்பு விக்கினப்படுவதினாலே உண்டானயாதொரு நஷ்டத்திற்காக - எ - என்பவனிடத்திலிருந்து ஈவு பெற்றுக்கொள்ள அவன் அர்ஹனாகிறான்.

(c). எ - என்பவனுடைய உத்தரவின்பேரில் அவனுக்காக - பி - என்பவன் இரண்டு ஜதை ஜோடுகள் தைக்கிறான். ஜோடுகள் ஒப்பிக்கப்பட்ட பின்பு அதுகள் எ - என்பவனுடைய காலுக்குச் சரிப்படவில்லை - அந்த இரண்டு ஜதை ஜோடுகளையும் - எ - என்பவன் ஒரு நாள்வரைக்கும் வைத்துக் கொண்டிருக்கிறான். ஒரு ஜதை ஜோட்டை அவன் கொஞ்சகாலத்திற்கு வீட்டில் தரித்துக்கொள்ளுகிறான். மற்றொரு ஜதையைத் தரித்துக்கொண்டு வீட்டை விட்டு நெடுந்தூரம் போய்வருகிறான். முதல் ஜதையை வேண்டாமென்று அவன் நிராகரிக்கலாமே யல்லாமல், இரண்டாவது ஜதையை நிராகரிக்கக் கூடாது - ஆனால் இரண்டாவது ஜதையிலுள்ள குறைவினாலே நேரிட்டயாதொரு நஷ்டத்திற்காக அவன் ஈவு பெற்றுக் கொள்ளலாம்.

பலவகைப் பட்டவை.

உத்தரவு செய்யப்பட்ட சரக்கோடுகூட உத்தரவு செய்யப்படாத சரக்கு அனுப்பப்பட்டால், அதை இன்ன படிக்கானால் கொண்டவன் நிராகரிக்கலாம்.

கககூ. விற்பவன் உத்தரவு செய்யப்பட்ட சரக்கோடுகூட உத்தரவு செய்யப்படாத சரக்கை கொள்பவனுக்கு அனுப்பினால், உத்தரவு செய்யப்பட்ட சரக்கையும் உத்தரவு செய்யப்படாத சரக்கையும் வேறு பிரிப்பதில் கெடுதியாவது தொந்தரையாவது உண்டாவதாயிருக்கும் பட்சத்தில், கொண்டவன் அப்படி அனுப்பப்பட்ட சரக்குகளில் எதையும் அங்கீகரிக்காமல் நிக்கிரகிக்கலாம்.

திருஷ்டாந்தம்.

இன்னதென்று குறித்த பீங்கான்களை அனுப்பும்படி - எ - என்பவன்-பி-என்பவனுக்கு உத்தரவு செய்கிறான். பி - என்பவன் இந்தப் பீங்கான்களையும் உத்தரவு செய்யப்பட்டிராத வேறே பீங்கான்களையும் ஒரு கூடையில்போட்டு - எ - என்பவனுக்கு அனுப்புகிறான். அனுப்பப்பட்ட சரக்குகளில் எதையும் - எ - என்பவன் அங்கீகரியாமல் நிக்கிரகிக்கலாம்.

அங்கீகரியாமல் அக்கிரமமாய் நிராகரித்தால் இன்னதாகு மென்பது.

கஉ0. கொண்டவன் தனக்கு விற்கப்பட்ட சரக்கை அங்கீகரியாமல் அக்கிரமமாய் நிராகரித்தால், அது விற்பனை கந்திராக்ட்டை விக்கினப் படுத்துவதாகிறது.

கொண்டவன் நிஷ்கரிஷையான காலத்தில்கிரயத்தைச் செலுத்தாவிட்டால், ரத்துசெய்ய விற்றவனுக்குள்ள பாத்தியதை.

கஉக. விற்கப்பட்ட சரக்கை கொண்டவனுக்கு ஒப்பித்தானபிறகு, நிர்ணயித்துக்கொண்ட காலத்தில் கிரயக்காரன் கிரயத்தைச் செலுத்தத் தவறிப்போவானாகில், விற்றவன் கந்திராக்ட்டை ரத்துசெய்யலாமென்று அந்த கந்திராக்ட்டில் ஷரத்து கண்டிருந்தாலொழிய, அந்த கந்திராக்ட்டை ரத்துசெய்ய விற்றவனுக்கு பாத்தியதையில்லை.

ஏலத்தில் கூறுகூறாக விற்கப்பட்ட சரக்கின்விற்பனையும் ஒப்படையும்.

க௨௨. ஏலத்தில் சரக்கு விற்கப்படும்போது ஒவ்வொரு கூறிலுள்ள சரக்குக்கும் பரிஷ்காரமாய் வெவ்வேறு விற்பனையாகிறது. அதினாலே அந்தந்தகூறு ஏலத்தில் கேட்டவனுக்கு விடப்பட்ட போதே அதின் சொத்துவம் ஒப்படையாகிறது.

ஏலங் கூறுவோன் விலைகேட்கப்பட்டதாய்பாவனைகாட்டி விலையை உயர்த்தினால், இன்னதாகுமென்பது.

க௨௩. ஏல விற்பனையிலே, ஏலங்கூறுவோன் விலை கேட்கப்பட்டதாய் பாவனைகாட்டி விலையை உயர்த்தினால், கொண்டவனுக்கு இஷ்டமிருக்குமாகில் அந்த விற்பனை ரத்தாகத் தக்கதுதான்.

௮-ம் அத்தியாயம்.—விமோசனத்தையும் பிணையையுங் குறித்து.

விமோசனத்தைக்குறித்த கந்திராக்ட்டு என்பதற்கு விவரணம்.

க௨௪. உபயத்திராளில் ஒரு பட்சத்தான் தன்னுடைய சொந்த நடத்தையினாலாவது வேறே யாவனொருவனுடைய நடத்தையினாலாவது மறுபட்சத்தானுக்கு நஷ்டமுண்டானால் அதிலிருந்தும் அவனைக் காப்பாற்றுவதாய் வாக்குத்தத்தஞ்செய்து எழுதிக்கொடுக்கிற கந்திராக்ட்டானது விமோசனத்தைக் குறித்த கந்திராக்ட்டு என்று சொல்லப்படுகிறது.

திருஷ்டாந்தம்.

(a). ஏதோ ஒரு ௨௦௦ - ரூபாய்த்தொகையைக்குறித்து - பி - என்பவன் பேரில் - சி - என்பவன் விவகாரம் தொடர்ந்தால், அதினாலென்ன உண்டானபோதிலும் அதிலிருந்தும் - பி - எனபவனைவிமோசனஞ் செய்வதாய் - எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான். இது விமோசனத்தைக்குறித்த கந்திராக்ட்டு ஆகிறது.

விமோசனபத்திரம் பெற்றுக்கொண்டிருப்பவன் வியாச்சியஞ் செய்யப்பட்டால், அவனுக்குள்ளசுதந்தரமும் உத்தர வாதமும்.

க௨௫. விமோசனத்தைக்குறித்தகந்திராக்ட்டிலே வாக்குத்தத்தஞ்செய்யப்படுகிறவன் தனக்கு எவ்வளவு அதிகார மிருக்கிறதோ அந்த மட்டில் பிரவர்த்திப்பானாகில், அவன் வாக்குத்தத்தஞ்செய்கிறவனிடத்தி லிருந்து—

(க). விமோசனம் பண்ணுவதாய் செய்கிற வாக்குத்தத்தம் எதற்குச் சம்மந்தப்படுகிறதோ அந்த விஷயத்தைப்பற்றிய யாதொரு வியாச்சியத்திலே தான் நிர்ப்பந்தமாய்ச் செலுத்தும் படி நேரிடுவதான சகல நஷ்டங்களையும்;

(௨). அப்படிப்பட்ட யாதொரு வியாச்சியத்திலே வாதியாகவாவது பிரதிவாதியாகவாவது பிரவர்த்திப்பதில் வாக்குத்தத்தஞ் செய்கிறவனுடைய உத்தரவுக்கு விரோதம் பண்ணாமலும், விமோசனத்தைக்குறித்து யாதொரு கந்திராக்ட்டு பிறக்காதிருந்தால் தான் எவ்விதமாய் நடப்பது விவேகமான காரியமா யிருந்திருக்குமோ அவ்விதமாய்ப் பிரவர்த்தித்து மிருந்தாலும், வாக்குத்தத்தஞ் செய்கிறவன் தனக்கு வியாச்சியங் கொண்டு வரும்படிக்காவது வியாச்சியத்தில் பிரதிவாதஞ் செய்யும்படிக்காவது அதி

காரங் கொடுத்திருந்தாலும், அப்படிப்பட்ட வியாச்சியத்திலே தான் நிர்ப்பந்தமாய்ச் செலுத்தும்படி நேரிடுவதான சகல செலவுகளையும்;

(௩). அப்படிப்பட்ட யாதொரு வியாச்சியத்திலே சமாதானஞ் செய்து கொள்ளுகிற பட்சத்தில், அந்த சமாதானமானது வாக்குத்தத்தஞ் செய்கிறவனுடைய உத்தரவுக்கு விரோத மில்லாமலும், விமோசனத்தை குறித்த யாதொரு கந்திராக்ட்டு பிறக்காதிருந்தால், தான் எவ்விதமாய் சமாதானஞ் செய்து கொள்ளுவது விவேகமா யிருந்திருக்குமோ அப்படிப்பட்டதாயு மிருந்தாலும், வாக்குத்தத்தஞ் செய்கிறவன் அந்த வியாச்சியத்திலே சமாதானஞ் செய்து கொள்ளும்படி தனக்கு அதிகாரங் கொடுத்திருந்தாலும், அப்படிப்பட்ட சமாதானத்தைச் சேர்ந்த ஷரத்துகளின்படி தான் செலுத்தியிருக்கும்படியான சகல தொகைகளையும், வரப்பற்றிக் கொள்ள அர்ஹறனுகிறான்.

௧௨௬. பிணையைக்குறித்த கந்திராக்ட்டென்பது - மூன்றாவானொருவன் தவறிப்போகிற விஷயத்தில் அவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதாகவாவது அவனுடைய கடனைத் தீர்ப்பதாகவாவது செய்கிற கந்திராக்ட்டாகிறது. பிணைப்படுகிற மனிதன்ஜாமீன்தாரனென்று சொல்லப்படுகிறான், எவன் தவறிப்போகிற விஷயத்தில் பிணைப்படலாகிறதோ அந்தமனிதன் கடன்படுகிற மூலபுருஷனென்று சொல்லப்படுகிறான், எவனுக்குப் பிணைப்படலாகிறதோ அந்தமனிதன் கடன்கொடுக்கிறவனென்று சொல்லப்படுகிறான். பிணைப்படுவது வாய்மொழியாகவாவது எழுத்துமூலமாகவாவதிருக்கலாம்.

"பிணை" யைக்குறித்த கந்திராக்ட்டு, "ஜாமீந்தாரன்" "கடன்படுகிற மூல புருஷன்," "கடன்கொடுக்கிறவன்" என்பது.

௧௨௭. கடன்படுகிற மூல புருஷனுடைய பிரயோசனத்திற்காக செய்யப்பட்ட யாதொரு காரியமாவது யாதொருவாக்குத்தத்தமாவது பிணைப்படுவதற்காக ஜாமீன்தாரனுக்குப் போதுமான பிரதிபலனாகலாம்.

பிணைக்குப்பிரதிபலன்.

திருஷ்டாந்தம்.

(a). பி - என்பவன் கடனுக்குச் சரக்கைத் தனக்கு விற்கும்படிக்கும் அதை ஒப்பிக்கும்படிக்கும் - எ - என்பவனைக் கேட்டுக்கொள்ளுகிறான். சரக்கின் கிரயத்தைச் செலுத்துவதற்கு - சி - என்பவன் - பிணைப்படுவானாகில், அப்படியே செய்வதாய் - எ - என்பவன் உடன்படுகிறான். சரக்கைஒப்பிப்பதாய் - எ - என்கிறவன் செய்கிற வாக்குத்தத்தத்திற்குப் பிரதிபலனாயப்பணத்தைச் செலுத்தப்பிணைப்படுகிறதாக - சி - என்பவன் வாக்குத்தத்தஞ் செய்கிறான். எ - என்பவனுடைய வாக்குத்தத்தம் - சி - என்பவனுடைய வாக்குத்தத்தத்திற்குப் போதுமான பிரதிபலனாயிருக்கிறது.

(b). எ - என்பவன் - பி - என்பவனுக்கு சரக்கைவிற்று அதை அவனுக்கு ஒப்பிக்கிறான். பின்பு - சி . என்பவன் அந்தக் கடனுக்காக ஒரு வருஷவரையில் பி - என்பவன்பேரில் வியாச்சியந் தொடராதிருக்கும்படி - எ - என்பவனைக் கேட்டுக்கொள்வதுமல்லாமல், அவனப்படி இருந்தால், பி - என்பவன் பணஞ்செலுத்தத் தவறிப்போகிற பட்சத்தில் அந்த சரக்குக்காகத் தான்பணஞ்செலுத்துவதாயும் வாக்குத்தத்தஞ் செய்கிறான். கேட்டுக்கொண்டபடி வியாச்சியந் தொடராதிருக்க எ - என்பவன் உடன்படுகிறான். இது - சி - என்பவனுடைய வாக்குத்தத்தத்திற்குப் போதுமான பிரதிபலனா யிருக்கிறது.

(c) எ - என்பவன் - பி - என்பவனுக்கு சரக்கை விற்று அதை அவனுக்கு ஒப்பிக்கிறான். அந்த சரக்குக்காக - பி - என்பவன் பணஞ்செலுத்தத் தவறினால் தான் செலுத்துவதாய்ப் பிரதிபலனென்று மில்லாமலே சி - என்பவன் பின்பு உடன்படுகிறான். இந்த உடன்படிக்கை செல்லாது.

ஜாமீன்தாரனுடைய உத்தரவாதம்.

௧௨௮. ஜாமீன்தாரனுடையஉத்தரவாதமானது - கந்திராக்ட்டிலே வேறேவிதமான ஏற்பாடு செய்திராதபட்சத்தில் கடன்படுகிற மூலபுருஷனுடைய உத்தரவாதத்தோடுகூடவே நடந்து கொண்டிருக்கிறது.

திருஷ்டாந்தம்.

உண்டியை அங்கீகரித்தவனாகிய - சி - என்பவன் அதற்குப்பணஞ் செலுத்துவதற்காக - எ - என்பவன் - பி - என்பவனுக்குப் பிணைப்படுகிறான். அந்த உண்டிக்கு - சி - என்பவன் பணஞ் செலுத்தாமற்போகுறான். அந்த உண்டியின் தொகை மாத்திரமல்லாமலும் அதின்பேரில் பாக்கியாகிறவட்டியையும் செலவையுங்கூடச் செலுத்துவதற்கு - எ - என்பவன் கடமைப்பட்டிருக்கிறான்.

தொடர்ச்சியாய்நடக்கிற பிணையென்பது.

௧௨௯. கோர்வையாய் நடக்கிற விவகாரங்களுக்குவியாபிக்கிற உத்தரவாதமானதுதொடர்ச்சியாய்நடக்கிறபிணையென்று சொல்லப்படுகின்றது.

திருஷ்டாந்தம்.

(a). பி - என்பவனுடைய ஜமீன்தாரியின் குத்தகைத்தொகைகளை வசூல்செய்வதற்கு - சி - என்பவனை - பி - என்பவன் அமர்த்திக்கொண்டால், அந்த குத்தகைத்தொகைகளை - சி - என்பவன் கிரமமாய் வசூல்செய்து செலுத்துவதற்காக - எ என்பவன் ௫000 - ரூபாய்க்கு தான் உத்தரவாதஞ்செய்வதாய் - பி - என்பனுக்கு வாக்குத்தத்தஞ்செய்கிறான். இது தொடர்ச்சியாய் நடக்கிற பிணையாகிறது.

(b). தேயிலை வியாபாரியாகிய - பி-என்பவன் அப்போதப்போது-சி - என்பவனுக்கு சர்ப்ரா பண்ணும்படியான தேயிலைக்காக - பி - என்பவனுக்குப் பணஞ்செலுத்த - ௧000 - ரூபாய்மட்டில் - எ - என்பவன் பிணைப்படுகிறான். ௧000 - ரூபாய்க் கிரயத்துக்கு மேற்பட - பி - என்பவன் - சி - என்பவனுக்கு தேயிலை சர்பராசெய்கிறான், அதற்காக - சி - என்பவன் - பி - என்பவனுக்குப்பணஞ்செலுத்துகிறான். பின்பு - ௨000 - ரூபாய்க் கிரயமுள்ள தேயிலையை - பி - என்பவன் சி - என்பவனுக்கு சர்பராசெய்கிறான். சி - என்பவன் பணஞ்செலுத்தத் தவறிப்போகிறான். எ - என்பவன்பட்ட பிணையானது தொடர்ச்சியாய் நடக்கிற பிணையானதால், அவன் அப்பிரகாரமே ௧000 - ரூபாய் வரையில் - பி - என்பவனுக்கு செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறான்.

(c). பி - என்பவன் - சி - என்பவனுக்கு ஒப்பிக்கிற ஐந்துமூட்டை மாவின் கிரயத்தை ஒரு மாசத்தில் செலுத்துவதற்காக - எ - என்பவன் - பி - என்பவனுக்குப் பிணைப்படுகிறான். பி - என்பவன் - சி - என்பவனுக்கு ஐந்து மூட்டைகளை ஒப்பிக்கிறான். அதுகளுக்காக - சி - என்பவன் பணஞ் செலுத்துகிறான். பின்பு பி - என்பவன் - சி - என்பவனுக்கு நாலு மூட்டைகளை ஒப்பிக்கிறான், அதற்கு -சி என்பவன் பணஞ்செலுத்தவில்லை - எ - என்பவன்பட்ட பிணையானது தொடர்ச்சியாய் நடக்கிற பிணையல்லாதபடியால், அப்பிரகாரமே அவன் நாலு மூட்டைகளின் கிரயத்துக்கு உத்தரவாதியல்ல.

தொடர்ச்சியாய் நடக்கிறபிணையைரத்துசெய்வது.

௧௩0. தொடர்ச்சியாய் நடக்கிறபிணையை ஜாமீன்தாரனானவன் பின்னிட்டு நடக்குங் காரியங்களுக்கு நிமித்தமில்லாமற்போகும்படிகடன்கொடுக்கிறவனுக்கு அறிக்கை செய்து அதின்மூலமாய் எப்போதாகிலும் ரத்துசெய்யலாம்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் தான் கேட்டுக்கொள்ளுகிறபடி - சி - என்பவனுக்காக உண்டிகளை - பி - என்பவன் டிஸ்கவுண்டு செய்வதினிமித்தம், ரூ000 ரூபாய்வரையில் பன்னிரண்டு மாசத்திற்கு அப்படிப்பட்ட சகல உண்டிகளுக்கும் கிரமமாய்ப்பணஞ் செலுத்துவதைக்குறித்து - பி - என்பவனுக்குப்பிணைப்படுகிறான். சி - என்பவனுக்காக - பி - என்பவன் ௨000 ரூபாய் வரையில் டிஸ்கவுண்டு பண்ணுகிறான். பின்பு மூன்று மாசக்கடைசியில் - எ - என்பவன் பிணையைரத்துசெய்கிறான். இந்த ரத்தினாலே பின்னிட்டு - ஏதாவது டிஸ்கவுண்டு செய்யப்பட்டால், அதற்காக-பி என்பவனுக்கு எவ்வளவேனும் உத்தரவாதியாகாமல் - எ - என்பவனுக்கு நிவர்த்தியுண்டாகிறது. ஆனால் - சி - என்பவன் பணஞ் செலுத்தாவிட்டால், அந்த இரண்டாயிரம் ரூபாய்க்காக - எ - என்பவன் - பி - என்பவனுக்கு உத்தரவாதியாயிருக்கிறான்.

(b). சி - என்பவன்பேரில் - பி - என்பவன் எழுதுகிற சகல உண்டிகளுக்கும் - சி - என்பவன் பணஞ்செலுத்துவதற்காக - ௧0,000 - ரூபாய்வரையில்-எ-என்பவன் - பி - என்பவனுக்குப் பிணைப்படுகிறான். பி - என்பவன் - சி - என்பவன் பேரில் உண்டி எழுதுகிறான். அந்த உண்டியை - சி - என்பவன் அங்கீகரிக்கிறான். எ - என்பவன் தன்னுடைய பிணையை ரத்துபண்ணுவதாக அறிக்கைசெய்கிறான். பணஞ்செலுத்தவேண்டிய சமயத்திலே - சி - என்பவன்பணஞ் செலுத்தாமற்போகிறான். அதற்கு - எ - என்பவன் தன்பிணையைப்பற்றி உத்தரவாதியாயிருக்கிறான்.

தொடர்ச்சியாய் நடக்கிறபிணையானது ஜாமீன்தாரன்இறந்துபோவதினாலே ரத்து.

௧௩௧. ஜாமீன்தாரன் இறந்துபோனால் அதினாலே, தொடர்ச்சியாய் நடக்கிற பிணைரத்தாவதற்குவிரோதமானயாதொரு கந்திராக்ட்டு இல்லாதபட்சத்தில், பின்னிட்டு நடக்குங் காரியங்களுக்குச் சம்பந்தப்படாமல் அந்தப்பிணை அற்றுப்போகிறது.

பிரதமத்தில் பிணைப்படுகிற இரண்டு பேர்களுடைய உத்தரவாதத்திற்கு ஜாமீனைக்குறித்து அவர்களால்உள்ளுக்குள்ளேசெய்துகொள்ளப்பட்ட ஏற்பாட்டினாலே பாதகமில்லை.

௧௩௨. இரண்டு பேர்கள் ஏதோ ஒரு உத்தரவாதத்தை மேற்போட்டுக்கொள்வதாக மூன்றுமனிதனோடு கந்திராக்ட்டு செய்வதுமல்லாமல், தங்களில் ஒருவன் தவறிப்போனால் மற்றவன்மாத்திரம் உத்தரவாதஞ் செய்யவேண்டியதென்று தங்களுக்குள்ளும் பரஸ்பரம் கந்திராக்ட்டுசெய்துகொண்டால், இந்த இரண்டாவது கந்திராக்ட்டில் அந்த மூன்றுமனிதன்சேராதபடியினாலே, அவனுக்கு அந்த இரண்டாவது கந்திராக்ட்டு பிறந்திருப்பது தெரிந்திருந்த போதிலும், முதல் கந்திராக்ட்டின்படி அந்த மூன்றுமனிதனுக்கு மேற்படி இருவரில் அவனவனும் பிணைப்பட்டிருக்கிற உத்தரவாதத்திற்கு அந்த இரண்டாவது கந்திராக்ட்டு பிறந்திருப்பதினாலே பாதகமில்லை.

திருஷ்டாந்தம்.

எ - என்பவனும் -பி- என்பவனும் கூட்டாகவும் முன்னின்றார் முன்னின்றும் உத்தரிப்பதாக - சி - என்பவனுக்கு ஒரு பிராமிசொரி நோட்டு எழுதிக்கொடுக்கிறார்கள். பி - என்பவன்பொருட்டு உள்ளபடி ஜாமீனாக - எ - என்பவன் சேர்ந்து அதை எழுதிக்கொடுக்கிறான், இந்த சங்கதி அந்த பிராமிசொரிநோட்டு எழுதிக்கொடுக்கப்படுகிற காலத்தில் - சி - என்பவனுக்குத் தெரியும். பி - என்பவன்பொருட்டு ஜாமீனாக அந்த நோட்டை-சி-என்பவனறிய-எ-என்பவன் சேர்ந்து யெழுதிக்கொடுத்தானென்பது அந்த பிராமிசொரி நோட்டைக்குறித்து-எ-என்பவன்பேரில்-சி-என்பவன் தொடருகிற வியாச்சியத்திற்கு எதிர்வாதமாகப் பிரயோசனப்படமாட்டாது.

௧௩௩. மூல புருஷனுக்கும் கடன் கொடுக்கிறவனுக்கும் ஏற்படுகிற கந்திராக்ட்டின் ஷரத்துகளில் ஜாமீன்தாரனுடைய அனுமதியில்லாமல் ஏதாவது மாற்றப்பட்டால் அதினாலே, அதற்குப்பின்னிட்டு நடக்கும் காரியங்களுக்கு ஜாமீன் நிவாரணையாய் விடுகிறது.

கந்திராக்ட்டின் ஷரத்துகளில் ஏதாவது மாற்றப்படுவதினாலே ஜாமீன் நிவாரணை.

திருஷ்டாந்தம்.

(a) சி - என்பவனுடைய பாங்கியிலே மானேஜராகிய - பி - என்பவனுடைய நடத்தைக்காக - எ - என்பவன் - சி - என்பவனுக்கு ஜாமீன்தாரனாகிறான். பின்பு - பி - என்பவனுடைய சம்பளம் உயர்த்தப்படுவதாகவும், அதிகமாய்ப் பணம்வாங்கப்படுவதினால் நேரிடுகிற நஷ்டத்தில் கால்பங்குக்கு அவன் உத்திரவாதியாவதாகவும், பி - என்பவனும் - சி - என்பவனும் - எ - என்பவனுடைய சம்மதியில்லாமல் கந்திராக்ட்டு செய்துக்கொள்ளுகிறார்கள். பி - என்பவன் ஒரு வாடிக்கைக்காரனை அதிகமாய்ப்பணம் வாங்கவொட்டுகிறான், பாங்கிக்கு ஒரு தொகை நஷ்டமாகிறது. எ - என்பவனுடைய சம்மதியில்லாமல் ஏற்பாடு மாற்றப்பட்டதினாலே அவன் தன்னுடைய ஜாமீனிலிருந்து நிவர்த்தி யாவதுமல்லாமல், இந்த நஷ்டத்தைக் கட்டிக் கொடுக்க உத்தரவாதியுமாகான்.

(b). சட்ட நிர்மாண சபையாருடைய ஆக்ட்டினாலே அலுவல்கள் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிற ஒரு உத்தியோகத்திற்கு - சி - என்பவன் - பி - என்பவனை நேமிக்கிறான், அந்த உத்தியோகத்திலே - பி - என்பவன் துர் நடத்தை நடந்தால் அதற்கு தான் உத்தரிப்பதாக - எ - என்பவன் - சி - என்பவனுக்குப் பிணைப்படுகிறான். பின்னிட்ட ஒரு ஆக்ட்டினால் அந்த உத்தியோகத்தின் தன்மை முக்கியமாய் மாறுகிறது. பின்பு - பி - என்பவன் துர்நடத்தை நடக்கிறான்; அவனுடைய துர்நடத்தை பின்னிட்ட ஆக்ட்டினால் பாதிக்கப்படாத ஒரு அலுவல் சம்பந்தமாயிருந்தபோதிலும், எ - என்பவன் தன்னுடைய பிணையைப்பற்றி இனி உத்தரவாதியாகாமல் அந்த மாறுதலினாலே நிவர்த்தியாகிறான்.

(c). பி - என்பவன் குமஸ்தாவாயிருந்துகொண்டு அவன் வரப்பற்றுகிற பணத்திற்கு கிரமமாய்க் கணக்கு சொல்வதற்காக - எ - என்பவன் - சி - என்பவனுக்கு ஜாமீன்தாரனானால், சரக்கு விற்பதற்காக வருஷவாரி சம்பளத்திற்கு - பி - என்பவனைத் தன்னுடைய குமஸ்தாவாய் நேமித்துக்கொள்ள - சி - என்பவன் வொப்புக்கொள்ளுகிறான். பின்பு, நிஷ்கரிஷையானசம்பளமில்லாமல், பி - என்பவன் விற்கிற சரக்கின்பேரில் அவனுக்குக் கமீஷன் கொடுக்கப்படுவதாய் - சி - என்பவனும்-பி என்பவனும் - எ - என்பவனுக்குத் தெரியாமலாவது அவனுடைய சம்மதியில்லாமலாவது உடன்படிக்கை செய்துகொள்ளுகிறார்கள். பின்னிட்டு - பி - என்பவன் நடக்கிற துர்நடத்தைக்காக - எ - என்பவன் உத்தரவாதியல்ல.

(d). பி - என்பவனுக்கு - சி - என்பவன் கடனுக்கு எண்ணெய் சர்பராசெய்வதற்காக - ௩,000 ரூபாய்வரையிலே - எ - ன்பவன் - சி - என்பவனுக்கு தொடர்ச்சியாய் நடக்கிற பிணைப்படுகிறான், பின்பு - பி - என்பவனுக்குக் கடன் அதிகப்படுகிறது; பி - என்பவனுக்கு - சி - என்பவன் ரொக்கத்திற்கு எண்ணெய் சர்ப்பராசெய்து வருவதாகவும், செலுத்தப்படுகிற பணமானது - பி - என்பவன் - சி - என்பவனுக்கு அப்போது பாக்கியாயிருக்கிற கடனுக்கு செல்லுவைக்கப்படுவதாகவும், பி-என்பவனும் - சி - என்பவனும் - எ - என்பவனுக்குத் தெரியாமல் கந்திராக்ட்டுசெய்துகொள்ளுகிறார்கள். இந்தப் புது ஏற்பாட்டுக்குப்பின்புசர்ப்பராசெய்யப்பட்ட துயாதொரு சரக்குக்காக - எ - என்பவன் தன்னுடைய பிணையைப்பற்றி உத்தரவாதியல்ல.

(e). மார்ச்சிமீ - ௧௳ - பி - என்பவனுக்கு ௫000 - ரூவாய் கடன் கொடுப்பதாக - சி - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். அந்தக் கடனைத்தீர்ப்பதற்கு-எ-என்பவன் பிணைப்படுகிறான். சி - என்பவன் - பி - என்பவனுக்கு ஜனவரிமீ ௧௳ ௫000

ரூபாய் கொடுக்கிறான். அந்த பணத்திற்காக மார்ச்சிமீ௨௨க்குமுன்னமே - பி-என்பவன்பேரில் - சி - என்பவன் வியாச்சியந் தொடரலா மாதலால், கந்திராக்ட்டுமாறிப்போயிருப்பதினாலே - எ - என்பவன் தன்னுடைய உத்தரவாதத்தில் நின்றும்நிவர்த்தியாகிறான.

௧௩௪. கடன் கொடுக்கிறவனுக்கும் கடன்படுகிறமூலபுருஷனுக்கும் ஏதாவது கந்திராக்ட்டு பிறந்து அதினாலேகடன்படுகிற மூலபுருஷனுக்கு விடுதலையுண்டானாலும், கடன் கொடுக்கிறவன் யாதொருகாரியத்தைச் செய்வதினாலாவது செய்யாமலொழிவதினாலாவது சட்டப்படி கடன்படுகிற மூலபுருஷனுக்குவிடுதலையுண்டானாலும், அதினாலே ஜாமீன்தாரனும்விடுதலையாகிறான்.

கடன்படுகிற மூலபுருஷனுடைய விமோசனத்தினாலாவது விடுதலையினாலாவது ஜாமீனதாரன் விடுதலையாவது.

திருஷ்டாந்தம்.

(a). சி - என்பவன் - பி - என்பவனுக்கு சர்ப்பராசெய்கிற சரக்குக்காக - எ என்பவன் - சி - என்பவனுக்குப் பிணைப்படுகிறான். சி - என்பவன் – பி – என்பவனுக்கு சரக்கு சர்ப்பராசெய்கிறான், பின்பு - பி - என்பவனுக்குக் கடன்மேலிட்டு, அவன் - தன்னை கடனிலிருந்து நிவர்த்திசெய்கிற பட்சத்தில், தன்னுடைய ஆஸ்தியை தன்னுடையகடன்காரர்களுக்கு ஒப்பித்துவிடுவதாய் (சி – என்பவனுள்பட) தன்னுடைய கடன்காரர்களோடு கந்திராக்ட்டு செய்கிறான். இதனாலே–சி – என்பவனோடு செய்துகொண்டகந்திராக்ட்டினால் - பி-என்பவன் தன்கடனிலிருந்து நிவர்த்தியாகிறான், எ-என்பவனும் அவனுடைய ஜாமீனிலிருந்து விடுதலையாகிறான்.

(b). எ- என்பவன் தன்னுடைய நிலத்திலே அவிரி சாகுபடிசெய்து ஓர் நிஷ்கரிஷையான விலைக்குத் தழையை - பி-என்பவனுக்கு ஒப்பிப்பதாய் அவனோடு கந்திராக்ட்டு செய்கிறான். இந்தகந்திராக்ட்டை- எ-என்பவன் நிறைவேற்றுவதற்காக சி-என்பவன் பிணைப்படுகிறான். எ-என்பவனுடைய நிலத்திற்கு நீர் பாயவேண்டிய ஒரு ஓடையை - பி-என்பவன் திருப்பி அதனாலே அவிரி சாகுபடியாகவொட்டாமல் தடுக்கிறான். சி-என்பவன் தன்னுடைய பிணையைப்பற்றி எவ்வளவேனும் உத்தரவாதியல்ல.

(c). ஏற்பாடான ஒரு காலத்திற்குள்-பி-என்பவனுக்காக ஒரு வீட்டை நிஷ்கரிஷையான ஓர் கிரயத்திற்குக் கட்டிக்கொடுப்பதாகவும், அதற்குவேண்டிய மரத்தை அவன் சர்ப்பரா செய்யும்படியாகவும் அவனோடு-எ-என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான். அந்த கந்திராக்ட்டை - எ - என்பவன் நிறைவேற்றுவதற்காக - சி-என்பவன் பிணைப்படுகிறான். பி-என்பவன் மரம் சர்ப்பரா செய்யாமற்போகிறான். சி-என்பவன் தன்னுடைய ஜாமீனிலிருந்து விடுதலையாகிறான்.

௧௩௫. கடன்கொடுக்கிறவன் கடன்படுகிற மூலபுருஷனோடு ஒழுங்குசெய்து கொண்டாவது, அவனுக்கு கெடுவுகொடுக்கவாகிலும் அவன்பேரில் வியாச்சியம் தொடராதிருக்கவாகிலும் வாக்குத்தத்தஞ்செய்தாவது அதற்காக கடன்கொடுக்கிறவனுக்கும் கடன் படுகிற மூலபுருஷனுக்கும் கந்திராக்ட்டு ஏற்பட்டால் அதினாலே, அப்படிப்பட்ட கந்திராக்ட்டுக்கு ஜாமீன்தாரன் சம்மதிக்காத பட்சத்தில் அவனுடைய ஜாமீன் நிவர்த்தியாகிறது.

கடன் கொடுக்கிறவன் கடன்படுகிற மூலபுருஷனோடு ஒழுங்கு செய்து கொண்டாலும் அவனுக்கு கெடுவுகொடுத்தாலும், அவன்பேரில் வியாச்சியந் தொடராதிருக்க ஒப்புக்கொண்டாலும் ஜாமீன்தாரன்விடுதலையாவது.

கடன்படுகிற மூலபுருஷனுக்கு கெடுவுகொடுப்பதற்காக மூன்றுவது மனிதனோடு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டால், ஜாமீன் தாரன் விடுதலையாகான்.

கஙரு. கடன்படுகிற மூலபுருஷனுக்கு கெடுவுகொடுப்பதாக அவனோடல்லாமல மூன்று மனிதனோடு கடன்கொடுக்கிறவன் கந்திராக்ட்டு செய்தால், ஜாமீன்தாரன் விடுதலையாகான்.

திருஷ்டாந்தம்.

பி-என்பவனுக்காக ஜாமீன்தாரனாய் - எ - என்பவன் எழுதிக்கொடுத்த ஒரு உண்டியை-பி-என்பவன் அங்கீகரித்து கெடுவாய்ப்போயிருக்கிற அந்த உண்டியை வைத்துக்கொண்டிருக்கிற - சி - என்பவன் - பி - என்பவனுக்கு கெடுவுகொடுப்பதாக - ம - என்பவனோடு கந்திராக்ட்டு செய்கிறான். எ - என்பவன் தன் ஜாமீனிலிருந்து விடுதலையானவனல்ல.

கடன் கொடுக்கிறவன் வியாச்சியந் தொடராமல் பொறுத்திருப்பதினாலே ஜாமீன்தாரனுக்கு நிவர்த்தியுண்டாகாது.

கஙஎ. கடன்கொடுக்கிறவன் கடன்படுகிற மூலபுருஷன்பேரில் வியாச்சியந்தொடராமலாவது அவன்பேரில் வேறேயாதொரு பரிகாரந்தேடிக் கொள்ளாமலாவது பொறுத்திருப்பதினால் மாத்திரமே, பிணையில் அதற்கு விரோதமான யாதொரு ஏற்பாடு இல்லாதிருக்கச்சே, ஜாமீன்தாரன் விடுதலையாகான்.

திருஷ்டாந்தம்.

பி-என்பவன் - சி-என்பவனிடத்திலே கடன்பட்டிருக்கிறான், அந்தக்கடன் எ-என்பவனுடைய பிணையின்பேரில் கொடுக்கப்பட்டது. அந்தக்கடன் கெடுவாய்ப்போய் பாக்கியாகிறது. அப்படி பாக்கியான பின்பு ஒரு வருஷவரையிலே - சி-என்பவன் - பி - என்பவன்பேரில் வியாச்சியந்தொடரவில்லை. எ - என்பவன் தன்னுடைய ஜாமீனிலிருந்து நிவர்த்தியானவனல்ல.

கூட்டு ஜாமீன் தாரர்களில் ஒருவனை நிவர்த்தியாவதினாலே மற்றவர்கள் நிவர்த்தியாவதில்லை.

கஙஅ. கூட்டு ஜாமீன்தாரர்களிருக்கிற விஷயத்திலே, கடன் கொடுக்கிறவன் அவர்களில் ஒருவனை நிவர்த்திசெய்வதினாலே மற்றவர்கள் நிவர்த்தியாவதில்லை; அப்படி நிவர்த்தியான ஜாமீன்தாரனும் மற்ற ஜாமீன்தாரர்களுக்கு உத்தரிப்பதில் நின்றும் விடுதலையாவதில்லை.

கடன் கொடுக்கிறவன் யாதொரு காரியத்தைச் செய்வதினாலாவது செய்யா தொழிவதினாலாவது ஜாமீன்தாரன் முடிவாய்த்தேடிக்கொள்ள வேண்டிய பரிகாரத்துக்குக்கெடுதி உண்டானால் ஜாமீன் அற்றுப்போவது.

கஙகூ. கடன்கொடுக்கிறவன் ஜாமீன் தாரனுடைய பாத்தியதைக்குவிரோதமான யாதொரு காரியத்தைச் செய்தாலும், ஜாமீன் தாரனுக்குத் தன்னுடைய கடமையாகத் தான் செய்யவேண்டியிருக்கிற யாதொருகாரியத்தைச் செய்யாதொழிந்தாலும் அதினாலே, கடன்படுகிற மூலபுருஷன் பேரில் ஜாமீன்தாரன் முடிவாய்ப் பரிகாரந் தேடிக்கொள்வதற்குக் கெடுதியுண்டாகிற பட்சத்தில், ஜாமீன்தாரனுடைய உத்தரவாதம் அற்றுப்போகிறது.

திருஷ்டாந்தம்.

(a). சி-என்பவனுக்காக ஓர் நிஷ்கரிஷையான் தொகைக்கு ஒரு கப்பல் செய்து கொடுப்பதாய், பி-என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். இவ்வவ்விவ்வளவு

வேலைமுடிக்கையில் இவ்வளவிவ்வளவு பணம் வாயிதாவாகச் செலுத்தப்படுவதாய் ஏற்பாடாயிருக்கிறது. அந்த கந்திராக்ட்டை - பி - என்பவன் கிரமமாய் நிறைவேற்றுவதற்காக - சி - என்பவனுக்கு - எ - என்பவன் ஜாமீனிருக்கிருன். சி - என்பவன் - எ - என்பவனுக்குத் தெரியாமல் கடைசி இரண்டு வாயிதாக்களை - பி - என்பவனுக்கு முன்னதாய்ச் செலுத்திவிடுகிருன். அப்படி முன்னதாய்ச் செலுத்துவதிஞலே எ- என்பவனுடைய ஜாமீன் அற்றுப்போகிறது.

(b). பி - என்பவனும் அவனுக்காக ஜாமீனுய் - எ - என்பவனும் கூட்டாகவும் முன்னிலைமுர் முன்னின்றும் உத்தரிப்பதாக - சி - என்பவன்பேருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிசொரி நோட்டையும், பி - என்பவனுடைய வீட்டலங்காரச் சமான்களை விற்று அதினல் வருகிற பணத்தை அந்த பிராமிசொரி நோட்டுக்கு செல்லுவைத்துக் கொள்ள - சி - என்பவனுக்கு அதிகாரமுண்டாகும்படி - பி - என்பவனுடைய சாமானுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட விக்கிரயப்பத்திரத்தையும் ஈடுவைத்துக்கொண்டு - சி - என்பவன் - பி - என்பவனுக்கு பணங் கடன் கொடுக்கிருன். பின்னிட்டு - சி - என்பவன் சாமானை விற்கிருன், ஆனல் அவனுடைய துர்நடத்தையினுலும் மனப்பூர்வமான அஜாக்கிரதையினுலும் அதற்கு கொஞ்சம் விலைதான்வருகிறது. அந்தபிராமிசொரி நோட்டு விஷயத்தில் - எ - என்பவனுடைய உத்தரவாதம் அற்றுப்போகிறது.

(c). எ - என்பவன் - ம - என்பவனை - பி - என்பவனிடத்தில் வேலை கற்றுக்கொள்ளுவதற்காக விட்டு, ம - என்பவனுடைய யோக்கியதைக்காக - பி - என்பவனுக்குப் பிணைப்படுகிருன். பி - என்பவனும் அதவா மாசத்திற்கொருதரம் - ம - என்பவனிடத்திலே ரொக்கக்கணக்கு ஒப்பித்துக் கொள்வதாய் வாக்குத்தத்தஞ் செய்திருக்கிருன். பி - என்பவன் தான் சொன்னபடி செய்யாமற்போகிருன், ம - என்பவன் பணத்தை அபகரிக்கிருன். எ - என்பவன் தன்னுடைய பிணையைப் பற்றி - பி - என்பவனுக்கு உத்தரவாதியல்ல.

பணஞ்செலுத்துவதின் பேரிலாவது கட்மையை நிறைவேற்றுவதின் பேரிலாவது ஜாமீன்தாரனுக்குள்ள பாத்தியதை.

௧௪௦. பிணைப்பட்ட கடன் கெடுவுசென்று பாக்கியாய்விட்டாலும், பிணைப்பட்ட வேலையை கடன்படுகிற மூலபுருஷன் நிறைவேற்ருமல் தப்பிப்போனுலும், ஜாமீன்தாரன் தான் செலுத்தவேண்டிய பண முழுமையும் செலுத்துவதின்பேரிலாவது தான்செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் நிறைவேற்றுவதின்பேரிலாவது, கடன்படுகிற மூலபுருஷன் பேரில் கடன் கொடுக்கிறவனுக்குண்டாயிருந்த சகல சுதந்தரங்களும் அந்த ஜாமீன்தாரனுக்குண்டாகிறது.

கடன் கொடுக்கிறவனுக்கிருந்த ஆதாரங்களை அடைவதற்கு ஜாமீன்தாரனுக்குள்ள பாத்தியதை.

௧௪௧. ஜாமீனைக்குறித்து கந்திராக்ட்டு பிறக்கிற காலத்தில், கடன் கொடுக்கிறவனுக்கு கடன்படுகிற மூல புருஷன் பேரில் என்னென்ன ஆதாரங் கிடைத்திருக்கிறதோ அந்தப்பிரதி ஆதாரத்தின் பிரயோஜனத்தையும், அப்படிப்பட்ட ஆதாரம் உண்டாயிருப்பது ஜாமீன்தாரன் அறிந்திருந்தாலும் இராவிட்டாலும், ஜாமீன்தாரன் அடைவதற்கு அர்ஹனுகிருன்; கடன் கொடுக்கிறவன் அப்படிப்பட்ட ஆதாரத்தைப் போக்கடித்தாலும், ஜாமீன்தாரனுடைய சம்மதியில்லாமல் அதைக்கொடுத்துவிட்டாலும், அந்த ஆதாரத்தின் பெறுமானம் எவ்வளவோ அவ்வளவுக்கு ஜாமீன்தாரனுடைய உத்தரவாதம் அற்றுப்போகிறது.

திருஷ்டாந்தம்.

(a). சி - என்பவன் தன்னுடைய குத்தகைதாரனாகிய - பி - என்பவனுக்கு எ- என்பவனுடையபிணையின்பேரில்-உ,௦௦௦-ரூபாய் முன்பணம்கொடுக்கிறான். மேலும் சி-என்பவன் அந்த இரண்டாயிரம் ரூபாய்க்கு - பி-என்பவனுடைய வீட்டலங்கார ச்சாமான்களை கொதுவை வைத்துக்கொண்டு பின்னும் ஆதாரம் ஏற்படுத்திக்கொள்ளுகிறான். சி - என்பவன் அந்தக்கொதுவையை ரத்துசெய்கிறான். பி - என்பவன் கடனிறுக்கச் சக்தியற்றவனாகிறான், சி - என்பவன் பிணைப்பட்டவனாகிய எ-என்பவன்பேரில் வியாச்சியந் தொடருகிறான். அந்த சாமான் கிரயம் எவ்வளவோ அவ்வளவுக்கு - எ - என்பவனுடைய உத்தரவாதம் அற்றுப்போகிறது.

(b). கடன் கொடுக்கிறவனாகிய - சி - என்பவன் - பி - என்பவனுக்கு முன்பணங்கொடுத்து அதற்காக டிக்ரி பெற்றிருப்பதுமல்லாமல் அந்த முன் பணத்திற்காக - எ - என்பவனிடத்திலிருந்து ஜாமீனும் வாங்கிக்கொள்ளுகிறான். பின்பு சி- என்பவன் அந்த டிக்ரியின்படிவாரண்டைக்கொண்டு-பி-என்பவனுடைய சரக்கை ஜப்திசெய்கிறான், பிறகு - எ - என்பவனுக்குத்தெரியாமல் ஜப்தியை நிவர்த்தி செய்கிறான். எ-என்பவனுடைய உத்தரவாதம் அற்றுப்போகிறது.

(c). சி- என்பவனிடத்திலிருந்து - பி - என்பவனுக்குக் கடன்வாங்கிக் கொடுக்கும்பொருட்டு -பி - என்பவனுக்கு ஜாமீன்தாரனாக - எ - என்பவன் - பி . பின்பவனோடு கூட்டாய் - சி - என்பவனுக்கு ஒரு பத்திரம் எழுதிக்கொடுக்கிறான். பின்பு -சி - என்பவன் அதேகடனுக்காக - பி - என்பவனிடத்திலிருந்து பின்னும் வேறே ஆதாரம் பெற்றுக்கொள்ளுகிறான். அதற்குப் பின்னிட்டு அந்த வேறே ஆதாரத்தை - சி - என்பவன் தள்ளிப்போடுகிறான். எ - என்பவனுடைய உத்தரவாதம் அற்றுப்போகாது.

மாறுபாடுசொல்லி அடைந்த பிணைசெல்லாது.

கசஉ. நடக்கிற காரியத்தைச் சேர்ந்த ஒரு முக்கியாம்சத்தைக்குறித்து, கடன் கொடுக்கிறவனாலாவது அவனுக்குத் தெரிந்து அவனுடைய சம்மதியின்பேரிலாவது மாறுபாடுசொல்லப்பட்டு அதின்மூலமாய் அடையப்பட்ட எவ்வித பிணையும் செல்லாது.

சங்கதியை மறைத்துப் பெற்றுக்கொள்ளுகிற பிணைசெல்லாது.

கசங. கடன் கொடுக்கிறவன் முக்கியமான சங்கதியைச் சொல்லாமல் சும்மாயிருந்து பெற்றுக்கொள்ளுகிற எவ்வித பிணையும் செல்லாது.

திருஷ்டாந்தம்.

(a.) எ - என்பவன் தன் பொருட்டு பணம் வசூல் செய்வதற்கு - பி - என்பவனை குமஸ்தாவாக அமர்த்திக்கொள்ளுகிறான். பி - என்பவன் தான் வசூல்செய்த பணத்தில் கொஞ்ச தொகைக்குக் கணக்குச்சொல்லத் தவறிப்போகிறான், அதினாலே அவன் கிரமமாய்க் கணக்கு ஒப்பிப்பதற்காக ஜாமீன கொடுக்கும்படி அவனை- எ - என்பவன் கேட்கிறான். பி - என்பவன் கிரமமாய்க் கணக்கு ஒப்பிப்பதற்காக- சி - என்பவன் பிணைப்படுகிறான். பி - என்பவனுடைய முன்னைய நடத்தையைக்குறித்து-எ-என்பவன் - சி - என்பவனுக்குத்தெரிவிக்கவில்லை. பின்பு - பி - என்பவன் கணக்கு ஒப்பிக்காமல் தவறிப்போகிறான். அந்தப்பிணை செல்லாது.

(b). சி - என்பவன் - பி - என்பவனுக்கு உ,௦௦௦ - ட்டன் வரையிலே சர்ப்பராசெய்யும் இரும்புக்குக்கிரயஞ்செலுத்துவதற்காக - சி-என்பவனுக்கு - எ - என்பவன் பிணைப்படுகிறான். கடை விலைக்கு மேலே ட்டன் - க-க்கு ௫-ரூபாய் அதிகமாய் - பி - என்பவன செலுத்தும்படியாகவும், அந்த அதிகப் பணத்தை ஒரு பழைய பாக்கிக்குச் செல்லுவைக்கும்படியாகவும் - பி - என்பவனும் - சி - என்பவனும் உள்ளுக்குள்ளே உடன்படிக்கைசெய்துகொள்ளுகிறார்கள். இந்த உடன்படிக்கை

எ - என்பவனுக்குச்சொல்லாமல் மறைக்கப்படுகிறது. எ-என்பவன் ஜாமீன்தாரனு க உத்தரிக்கத்தக்கவனல்ல.

கூட்டு ஜாமீன்தாரன் சேருகிறவரையில் தான் கொடுக்கிற ஜாமீன்பேரிலேயே யாதொருகாரியத்தைகடன்கொடுக்கிறவன் நடத்தக்கூடாதென்கிற உடன்படிக்கையின் பேரில் ஒருவன் பிணைப் படுவது.

௧௪௪ ஒருவன் - தான் பிணைப்படும்போது, அந்தப் பிணையிலே வேறொருவன் கூட்டுஜாமீன்தாரனாய் சேருகிறவரையில் கடன்கொடுக்கிறவன் அந்தப் பிணையை அனுசரித்து ஒன்றும் நடத்தக்கூடாதென்கிற உடன்படிக்கையின்பேரில் பிணைப்பட்டால், அந்தவேறொருவன் சேராத பட்சத்தில் அந்தப்பிணை செல்லாது.

ஜாமீன்தாரன் இறுப்பதற்காக அவனுக்கு ஈடு பண்ணவாக்குத்தத்தம் குறிப்பாயிருப்பது.

௧௪௫. பிணைப்படுகிற பிரதிகந்திராக்ட்டிலும் கடன்படுகிறமூலபுருஷன் ஜாமீன்தாரனுக்கு ஈடுபண்ணவேணுமென்கிற வாக்குத்தத்தம் குறிப்பாயிருக்கிறது; அந்தப் பிணையைப்பற்றிஜாமீன்தாரன் கிரமமாய் எவ்வளவுசெலுத்தியிருக்கிறானோ அந்தத் தொகையை அவன் கடன்படுகிற மூலபுருஷனிடத்திலிருந்து வரப்பற்றிக்கொள்ள அர்ஹனாகிறானேயல்லாமல், தான் அக்கிரமமாய்ச்செலுத்தின தொகையை வரப்பற்றிக்கொள்ள அர்ஹனல்ல.

திருஷ்டாந்தம்.

(a). பி - என்பவன் - சி - என்பவனுக்குக் கடன்படுகிறான், அந்தக்கடனுக்கு-எ - என்பவன் பிணைப்படுகிறான். சி - என்பவன் - எ - என்பவனை பணஞ்செலுத்தச்சொல்லி கேட்கிறான், அவன் நிராகரிப்பதின்பேரில் அந்தத்தொகைக்கு அவன்பேரில் வியாச்சியந் தொடருகிறான். எ - என்பவன் எதிர்வாதஞ் செய்வதற்கு நியாயமான ஆதாரங்களிருந்து அந்த வியாச்சியத்தில்எதிர்வாதஞ்செய்கிறான், ஆனால்செலவுடனே கூட அந்தக்கடன் தொகையைச்செலுத்தும்படி அவன் நிர்ப்பந்திக்கப்படுகிறான். அவன் அசல்கடன் தொகையையுமல்லாமல் செலவுக்காகத்தான்செலுத்தின தொகையையும் - பி - என்பவனிடத்திலிருந்து வசூல்செய்துகொள்ளலாகும்.

(b). சி - என்பவன் - பி - என்பவனுக்கு ஒரு தொகை கடன்கொடுக்கிறான், பி - என்பவன் கேட்டுக் கொள்வதின்பேரில் - எ - என்பவன் அந்தத் தொகைக்கு பத்திரமாக தன்பேரில் - பி - என்பவனால் எழுதப்படுகிற உண்டியை அங்கீகரிக்கிறான். அந்த உண்டியை வைத்துக்கொண்டிருக்கிற - சி - என்பவன் பணத்தைச் செலுத்தச்சொல்லி - எ - என்பவனைக் கேட்கிறான், செலுத்தமாட்டேனென்று எ - என்பவன் நிராகரிப்பதின்பேரில் அந்த உண்டியைப்பற்றி அவன்பேரில் வியாச்சியந் தொடரப்படுகிறது. - எ - என்பவன் பிரதி வாதஞ்செய்வதற்கு நியாயமான ஆதாரங்களில்லாமல் அந்த வியாச்சியத்திலே பிரதி வாதஞ்செய்கிறான், அந்த உண்டித் தொகையையும் செலவையும் அவன் செலுத்தவேண்டிவந்தது. அவன் உண்டித்தொகையை - பி - என்பவனிடத்திலிருந்து வரப்பற்றிக்கொள்ளக் கூடுமேயல்லாமல், வியாச்சியத்தில் பிரதி வாதஞ்செய்வதற்கு கிரமமான ஆதாரமொன்றுமில்லாததனால் செலவுக்காகச் செலுத்தப்பட்ட தொகையை வரப்பற்றிக்கொள்ளக் கூடாது.

(c). சி-என்பவன் - பி - என்பவனுக்கு சர்ப்பராசெய்யும் அரிசிக்குக் கிரயஞ் செலுத்துவதற்காக ௨,000 - ரூபாய்வரையில் - எ - என்பவன் - சி - என்பவனுக்குப் பிணைப்படுகிறான். சி - என்பவன் - பி - என்பவனுக்கு இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு அரிசி சர்ப்பராசெய்கிறான், ஆனால் சர்ப்பராசெய்த அ

ரிசிவிஷயத்தில் - எ - என்பவனிடத்திலே இரண்டாயிரம் ரூபாய் பற்றிக்கொள்ளுகிறான், வாஸ்தவமாய் சர்ப்பரா செய்யப்பட்ட அரிசியின் கிரயத்தைவிட அதிகமாய் - எ - என்பவன் - பி - என்பவனிடத்திலே வரப்பற்றக்கூடாது.

கூட்டு ஜாமீன்தாரர்கள் சமமாய்ச்செலுத்தவேணுமென்பது.

கசுசு. இருவர் அல்லது பலர் சாங்கத்தியமாகவாகிலும் தனித்தனியாகவாகிலும், ஒரேகந்திராக்ட்டைப்பற்றியாகிலும் வெவ்வேறு கந்திராக்ட்டைப்பற்றியாகிலும், ஒருவரையொருவர் அறிந்தாகிலும் அறியாமலாகிலும், அதே கடன் அல்லது கடமைக்காக கூட்டுஜாமீன்தாரர்களாயிருந்தால், விரோதமானயாதொரு கந்திராக்ட்டு இல்லாத பட்சத்தில், மேற்படி கூட்டு ஜாமீன்தாரர்கள்கடன் முழுமையையுமாவது கடன்படுகிற மூலபுருஷனால் செலுத்தப்படாமல் அதில் நிலுவையாயிருக்கிற பாகத்தையாவது தங்களுக்குள் ஒவ்வொருவரும் சமபாகமாய்ச் செலுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

திருஷ்டாந்தம்.

(a). இ - என்பவனுக்கு கடன்கொடுக்கப்பட்ட ௩000 - ரூபாய்க்காக - டி - என்பவனுக்கு - எ - பி - சி - என்பவர்கள் ஜாமீனிருக்கிறார்கள். இ - என்பவன் பணஞ்செலுத்தத் தவறிப்போகிறான். எ - பி - சி - என்பவர்கள் தங்களுக்குள் ஒவ்வொருவனும் - க000 - ரூபாய் செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(b). இ - என்பவனுக்கு கடன்கொடுக்கப்பட்ட க000 ரூபாய்க்காக - டி - என்பவனுக்கு - எ - பி - சி - என்பவர்கள் ஜாமீனிருக்கிறார்கள், எ - என்பவன் கால்பங்குக்கும் - பி - என்பவன் கால்பங்குக்கும் - சி - என்பன் அரைப்பங்குக்கும் உத்தரவாதஞ்செய்ய வேணுமென்று - எ - பி - சி - என்பவர்களுக்குள் ஒரு கந்திராக்ட்டு யேற்படுகிறது. இ - என்பவன் பணஞ்செலுத்தத் தவறிப்போகிறான். ஜாமீன்தாரர்களுக்குள் - எ - என்பவன் - உ௫0 - ரூபாயும், பி - என்பவன் - உ௫0-ரூபாயும், சி - என்பவன் - ௫00 - ரூபாயும் செலுத்தக்கடவார்கள்.

வெவ்வேறுதொகைக்குப்பிணைப்பட்டிருக்கிற கூட்டுஜாமீன்தாரர்களின் உத்தரவாதம்.

கசுஎ. வெவ்வேறு தொகைக்குப் பிணைப்பட்டிருக்கிற கூட்டுஜாமீன்தாரர்கள் அவரவருடைய உடன்படிக்கையில் கண்டிருக்கிற தொகைவரைக்கும் சமமாய்ச் செலுத்தக்கடவார்கள்

திருஷ்டாந்தம்.

(a). எ - பி - சி - என்பவர்கள் - டி - என்பவனுக்காக ஜாமீன்படுகிறார்கள்; டி - என்பவன் - இ - என்பவனுக்குக் கிரமமாய்க்கணக்கு ஒப்பிக்காவிட்டால், எ என்பவன் - க0,000 - ரூபாய்க்குஉத்தரவாதியாகவும், பி - என்பவன் - உ0,000ரூபாய்க்கு உத்தரவாதியாகவும், சி - என்பவன் ௬0,000 - ரூபாய்க்குஉத்தர வாதியாகவும் இப்படிவெவ்வேறு தொகைக்கு அவனவன் தனித்தனி வெவ்வேறு பத்திரமாக மேற்படி மூவரும் மூன்றுபத்திரம் எழுதிக்கொடுக்கிறார்கள். டி-என்பவன்-௩0,000-ரூபாய்க்கு கணக்கு கொடுக்கத் தவறிப்போகிறான். எ - பி - சி - என்பவர்களில்அவனவன் தனித்தனி - க0,000-ரூபாய் செலுத்தக்கடவான்.

(b). எ - பி - சி - என்பவர்கள் - டி - என்பவனுக்காக ஜாமீன்படுகிறார்கள்; டி - என்பவன் - இ - என்பவனுக்குக் கிரமமாய்க் கணக்கு ஒப்பிக்காவிட்டால், எ என்பவன் - க0,000 - ரூபாய்க்கு உத்தரவாதியாகவும், பி - என்பவன் - உ0,000 -ரூபாய்க்கு உத்தரவாதியாகவும், சி - என்பவன் - ௬0,000 - ரூபாய்க்குஉத்தரவாதியாகவும், இப்படிவெவ்வேறு தொகைக்கு அவனவன் தனித்தனி வெவ்வேறு பத்திரமாக மேற்படி மூவரும் மூன்று பத்திரம் எழுதிக்கொடுக்கிறார்கள். டி - என்பவன்

௬௦,௦௦௦ - ரூபாய்க்கு கணக்கு கொடுக்கத் தவறிப்போகிறான். ஏ - என்பவன் ௧௦,௦௦௦ - ரூபாய் செலுத்தக்கடவான், பி - என்பவனும் - சி - என்பவனும்தனித்தனி ௧௫,௦௦௦ - ரூபாய் செலுத்தக்கடவார்கள்.

(c). ஏ - பி - சி - என்பவர்கள் - டி - என்பவனுக்காக ஜாமீன்படுகிறார்கள்; டி - என்பவன் - இ - என்பவனுக்குக் கிரமமாய்க் கணக்கு ஒப்பிக்காவிட்டால், ஏ - என்பவன் - ௧௦, ௦௦௦ ரூபாய்க்கு உத்தரவாதியாகவும், பி - என்பவன்-௨௦, ௦௦௦ ரூபாய்க்கு உத்திரவாதியாகவும் - சி - என்பவன் ௬௦,௦௦௦ - ரூபாய்க்கு உத்தரவாதியாகவும், இப்படி வெவ்வேறு தொகைக்கு அவனவன் தனித்தனி வெவ்வேறுபத்திரமாக மேற்படி மூவரும் மூன்றுபத்திரம் எழுதிக்கொடுக்கிறார்கள். டி - என்பவன் - ௭௦,௦௦௦ ரூபாய்க்கு கணக்கு கொடுக்கத் தவறிப்போகிறான். ஏ-பி-சி-என்பவர்களில் அவனவனும் தன்தன் பத்திரத்தின் பூர்த்தியான தொகையைச் செலுத்த வேண்டியது.

---

௯ - ம் அத்தியாயம்—ஒப்படையைக்குறித்து.

‘ஒப்படை’ ‘ஒப்படைகொடுக்கிறவன்,’ ‘ஒப்ப வாங்குகிறவன்’ என்கிற சொற்களுக்குவிவரணம்.

௧௪௮. ஏதோ ஒருகாரிய நிமித்தம் ஒருவன் மற்றொருவனுக்கு ஒப்பிக்கிற வஸ்துக்களை, அந்தக்காரியம் முடிந்தபின்பு, ஒப்பித்தவனுக்கு மறுபடி கொடுத்துவிடும்படியாகவாவது அவன் உத்தரவு செய்கிற பிரகாரம் வேறே எவ்வகையாகிலும் செய்யும்படியாகவாவது கந்திராக்ட்டு ஏற்படுவதின்பேரில், அந்தப்படி ஒப்பிப்பது ஒப்படையாகிறது. வஸ்துக்களை ஒப்பிக்கிறவன் ஒப்படை கொடுக்கிறவனெனப்படுகிறான். எவனுக்கு அதுகள் ஒப்பிக்கப்படுகிறதோ அவன் ஒப்படை வாங்குகிறவனென்னப்படுகிறான்.

விவரம்—வேறொருவனுடைய வஸ்துக்களை முன்னதாகவே தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவன் அதுகளை ஒப்படையாக வைத்துக்கொண்டிருப்பதற்கு கந்திராக்ட்டு செய்துகொள்வானாகில், அந்தவஸ்துக்கள் ஒப்படை வகையாய் ஒப்பிக்கப்படாமற்போனபோதிலும், அவன் அந்த கந்திராக்ட்டினாலே அந்த வஸ்துக்களை ஒப்படை வாங்குகிறவனாகிறான், சொந்தக்காரன் அதுகளை ஒப்படை கொடுக்கிறவனாகிறான்.

ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவனுக்கு வஸதுக்களை ஒப்பிக்கிறவிதம்.

௧௪௯. வஸ்துக்களை ஒப்படைவாங்க உத்தேசித்தவனுடைய ஸ்வாதீனத்திலாவது அவனுக்காக அதுகளை வாங்கிக்கொள்ள அதிகாரம்பெற்ற யாவனொருவனுடைய ஸ்வாதீனத்திலாவது சேரும்படியான யாதொரு காரியம் செய்யப்பட்டால், அது ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவனிடத்தில் வஸ்துக்கள் ஒப்பிக்கப்படுவதாகும்.

ஒப்படைகொடுக்கிறவஸ்துக்களிலுள்ள தோஷங்களைத் தெரியப்படுத்

௧௫௦. ஒப்படை கொடுக்கிற வஸ்துக்களிலே தோஷங்களிருந்தால் அதுகள் ஒப்படை கொடுக்கிறவனுக்குத் தெரிந்திருந்து, அதுகளினாலே அந்த வஸ்துக்களை உபயோகிப்பதற்கு முக்கியமான தடங்கலாவது ஒப்படை வாங்கிக் கொள்ளுகிறவனுக்கு விசேஷ

துவது ஒப்படைகொடுக்கிறவனுடையகடமை.

அபாயங்களாவது உண்டாவதாயிருக்கிற பட்சத்தில், அந்த தோஷங்களை ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவனுக்கு ஒப்படை கொடுக்கிறவன் தெரியப்படுத்தக்கடவான்; அவன் அப்படி தெரியப்படுத்தாவிட்டால், அப்படிப்பட்ட தோஷங்களினாலே ஒப்படைவாங்கிக் கொள்ளுகிறவனுக்கு நேராய் சம்பவிக்கிற நஷ்டத்திற்கு உத்தரவாதியாகிறான்.

வஸ்துக்களை வாடகைக்கு ஒப்படை கொடுத்தால், ஒப்படைகொடுக்கப்பட்ட வஸ்துக்களிலே அப்படிப்பட்ட தோஷங்களிருப்பதை ஒப்படைகொடுக்கிறவன் அறிந்திருந்தாலு மிராவிட்டாலும், அவன் அப்படிப்பட்ட நஷ்டத்திற்கு உத்தரவாதியாகிறான்.

திருஷ்டாந்தம்

(a). எ - என்பவன் துஷ்டகுதிரையென்று தானறிந்திருக்கிற ஒரு குதிரையை - பி - என்பவனுக்கு இரவல் கொடுக்கிறான். அது துஷ்டகுதிரை என்கிற சங்கதியை அவன் தெரியப் படுத்தவில்லை. குதிரை ஓடிப்போய்விடுகிறது. பி - என்பவன் கீழே தள்ளுண்டு தீங்கடைகிறான். சம்பவித்த கெடுதிக்காக - எ - என்பவன் - பி - என்பவனுக்கு உத்தரவாதியாகிறான்.

(b). பி - என்பவனிடத்திலே - எ - என்பவன் ஒரு வண்டியை வாடைகைக்கு வாங்கிக்கொள்ளுகிறான். அந்த வண்டி இடையூறுண்டாக்கத்தக்கது, ஆயினும் அது - பி - என்பவனுக்குத் தெரியாது. எ - என்பவனுக்கு தீங்குண்டாகிறது. அந்த தீங்குக்காக - எ - என்பவனுக்கு - பி - என்பவன் உத்தரவாதியாகிறான்.

ஒப்படைவாங்குகிறவன் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்வது.

கருக. ஒப்படை விஷயங்களிலெல்லாம் ஒப்படை கொடுக்கப்பட்ட வஸ்துக்களைப்போன்ற பரிமாணமும் தன்மையுமில்லையுமுள்ள தன்னுடைய சொந்த வஸ்துக்களை சாதாரணமான விவேகசாலி ஒருவன் அவ்வித சமயங்களிலே எவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்வானோ அவ்வளவு ஜாக்கிரதையோடு ஒப்படை வாங்குகிறவன் தனக்கு ஒப்படை கொடுக்கப்பட்டவஸ்துக்களை பார்த்துக்கொள்ளக் கடவான்.

ஒப்படைவாங்குகிறவன் இன்னபடிக்கானால்ஒப்படை கொடுக்கப் பட்ட வஸ்துவின் நஷ்ட முதலியவற்றிற்கு உத்தர வாதியல்ல.

கருஉ. யாதொரு பிரத்தியேகமான கந்திராக்ட்டு இல்லாவிட்டால, ஒப்படை வாங்குகிறவன் தனக்கு ஒப்படை கொடுக்கப்பட்ட வஸ்துவை கருக - வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிற ஜாக்கிரதையோடு பார்த்துகொள்வானுகில், அது நஷ்டமாய்ப் போனாலும் அழிந்துபோனாலும் கெட்டுப்போனாலும் அதற்காக அவன் உத்தரவாதியல்ல.

ஒப்படைவாங்குகிறவன் ஷரத்துகளுக்கு ஒவ்வாமையானகாரியஞ்செய்வதினாலே ஒப்படைஅற்றுப்போவது.

கருங. ஒப்படைவாங்குகிறவன் ஒப்படைகொடுக்கப்பட்ட வஸ்துக்கள் விஷயத்தில் ஒப்படை ஷரத்துகளுக்கு ஒவ்வாமையான யாதொரு காரியத்தைச் செய்தால், ஒப்படையைக்குறித்த கந்திராக்ட்டானது ஒப்படைகொடுக்கிறவனுடைய இஷ்டானுசாரம் செல்லத்தகாததாய்விடுகிறது.

திருஷ்டாந்தம்,

பி - என்பவனே ஏறிச் சவாரிசெய்வதற்காக அவனுக்கு - எ - என்பவன் ஒரு குதிரையை வாடகைக்கு விடுகிறுன். பி - என்பவன அந்தக் குதிரையை தன்வண்டியில் பூட்டி ஓட்டுகிறுன். இதனுலே - எ - என்பவனுடையஇஷ்டானுசாரம் அந்த ஒப்படை அற்றுப் போகிறது.

ஒப்படைகொடுக்கப்பட்டவஸ்துக்களை ஷரத்துக்குவிரோதமாய் உபயோகித்தால் ஒப்படைவாங்குகிறவன்உத்தரிப்பது.

௧௬௪. ஒப்படை கொடுக்கப்பட்ட வஸ்துக்களை ஒப்படை வாங்குகிறவன் ஒப்படை ஷரத்துகளின்படிக்கல்லாமல் வேறேவிதமாய் உபயோகித்தால், அவன் அதுகளை அப்படிஉபயோகிப்பதினுலாவது உபயோகிக்குங்காலத்திலாவது அதுகளுக்குண்டாகிறயாதொருநஷ்டத்திற்காக ஒப்படை கொடுக்கிறவனுக்கு ஈவு செலுத்தக்கடவான்.

திருஷ்டாந்தம்.

(a). பி - என்பவனே ஏறிச் சவாரிசெய்வதற்காகமாத்திரம் அவனுக்கு - எ என்பவன் ஒருகுதிரையை இரவல்கொடுக்கிறுன். பி - எனபவன் தன்னுடையகுடும்பத்தைச் சேர்ந்தவனுகிய - சி - என்பவனை அந்தக்குதிரையின்மேலேறிச் சவாரி செய்யவொட்டுகிறுன். சி - என்பவன் ஜாக்கிரதையாகவேசவாரிசெய்கிறுன், ஆனுல் அந்தக் குதிரை அகஸ்மாத்தாய் விழுந்து தீங்கடைகிறது. குதிரைக்குண்டான தீங்குக்காக - எ - என்பவனுக்கு - பி - என்பவன் ஈவு கொடுக்கக்கடவன்.

(b). காசிக்குப் போவதற்கென்றேசொல்லி - எ - என்பவன் - பி - என்பவனிடத்திலே கல்கத்தாவில் ஒரு குதிரையை வாடகைக்கு வாங்கிக்கொள்ளுகிறுன். எ - என்பவன் தகுந்த ஜாக்கிரதையோடு சவாரிசெய்கிறுன், ஆனுல்காசிக்குப்போகாமல் கட்டாக்குக்குப்போகிறுன். குதிரை அகஸ்மாத்தாய்விழுந்துதீங்கடைகிறது. குதிரைக்குண்டான தீங்குக்காக - பி - என்பவனுக்கு - எ - என்பவன் ஈவுசெலுத்தக்கடவன்.

ஒப்படைகொடுக்கிறவனுடையசம்மதியின்பேரில்அவனுடைய வஸ்துக்கள்ஒப்படை வாங்குகிறவனுடைய வஸ்துக்களோடு சேர்க்கப்பட்டால், இன்னதாகுமென்பது.

௧௬௫. ஒப்படை வாங்குகிறவன் ஒப்படை கொடுக்கிறவனுடைய சம்மதியினபேரில் அவனுடைய வஸ்துக்களை தன்னுடையசொந்த வஸ்துக்களோடு கலப்பானுகில், இப்படி செய்யப்பட்ட கலப்பிலே ஒப்படை கொடுக்கிறவனும் ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவனும தங்கள தங்கள் பாக அளவுக்கு பாத்திய முடையவர்களா யிருக்கவேண்டியது.

ஒப்படை கொடுக்கிறவனுடைய சம்மதியில்லாமல்கலக்கப்பட்டால்வஸ்துகள் பிரிக்கப்படும்போது இன்னதாகுமென்பது.

௧௬௬. ஒப்படை வாங்குகிறவன் ஒப்படை கொடுக்கிறவனுடைய சம்மதியின்பேரில் அவனுடைய வஸ்துக்களை தன்னுடைய சொந்த வஸ்துக்களோடு கலப்பானுகில் அந்த வஸ்துக்கள் பிரிக்கப்படவாவது வகுக்கப்படவாவது கூடியதாயிருக்கிறபட்சத்தில், அந்தந்த வஸ்துக்களின் சொத்துவம்அவனவனுதாகவேயிருக்கிறது ; ஆனுல் பிரிக்கவாவது வகுக்கவாவது பிடிக்கிற செலவையும் கலப்பினு லுண்டாகிற யாதொரு நஷ்டத்தையும் ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவன் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவனுயிருக்கிறுன்,

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் ஏதோ ஒரு அடையாளம் போட்டிருக்கிற நூறு பஞ்சுக்கட்டுகளை - பி - என்பவனுக்கு ஒப்படை கொடுக்கிறான். பி - என்பவன் அந்த நூறு கட்டுகளையும் வேறே அடையாளம் போட்டிருக்கிற தன்னுடைய சொந்தகட்டுகளோடு - எ - என்பவனுடைய சம்மதியில்லாமல் கலந்து போடுகிறான் : எ - என்பவன் தன்னுடைய நூறு கட்டுகளை திரும்ப வாங்கிக்கொள்ள அர்ஹனாகிறான், பி - என்பவன் அந்தக் கட்டுகளைப் பிரிப்பதற்குண்டான சகல செலவையும் அதைப்பற்றியுண்டாகிற வேறே யாதொரு நஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டவனாயிருக்கிறான்.

ஒப்படை கொடுக்கிறவனுடைய சம்மதியில்லாமல் கலக்கப்பட்டால், வஸ்துக்களைப் பிரிக்கக் கூடாதபோது இன்னதாகுமென்பது.

கடுஎ. ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவன் ஒப்படை கொடுக்கிறவனுடைய சம்மதியில்லாமல் அவனுடைய வஸ்துக்களை தன்னுடைய சொந்த வஸ்துக்களோடு கலக்கும்போது ஒப்படை கொடுக்கப்பட்ட வஸ்துக்களையும் மற்ற வஸ்துக்களையும் பிரித்து அதுகளை திரும்ப ஒப்பித்து விடுவதற்கு அசாத்திமாய்ப் போகும்படியான விதமாய்க் கலந்து விடுவானாகில், வஸ்துக்களின் நஷ்டத்திற்காக ஒப்படை கொடுக்கிறவன் ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவனிடத்திலே ஈவு பெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

திருஷ்டாந்தம்.

நாற்பத்தைந்து ரூபாய் விலையுள்ள ஒரு பீப்பாய் கேப்புமாவை-எ-என்பவன் பி - என்பவனுக்கு ஒப்படை கொடுக்கிறான். பி - என்பவன் அந்த மாவை பீப்பாய் - க-க்கு இருபத்தைந்து ரூபாய் மாத்திரம் பெறுமான தன்னுடையசொந்த நாட்டுமாவோடு - எ - என்பவனுடைய சம்மதி யில்லாமல் கலக்கிறான். எ - என்பவனுடைய மாவு நஷ்டத்திற்காக அவனுக்கு - பி - என்பவன் ஈவு கொடுக்கவேணும்.

ஒப்படைகொடுக்கிறவன் அவசியமானசெலவுகளைக்கட்டிக்கொடுப்பது.

கடுஅ. ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவன் ஒப்படை கொடுக்கிறவனுக்காக ஒப்படை ஷரத்துகளின்படி வஸ்துக்களை வைத்துக்கொண்டிருக்க வேண்டிய தாகவாவது கொண்டுபோக வேண்டியதாகவாவது அதுகளுக்கு ஏதாவது வேலைசெய்ய வேண்டியதாகவாவதிருந்து, ஒப்படை வாங்கிக் கொள்ளுகிறவன் அதற்காக ஈவு பெறவேண்டியதிராத பட்சத்தில், ஒப்படையின் பொருட்டு ஒப்படைவாங்கிக் கொள்ளுகிறவனுக்குப் பிடிக்கிற அவசியமான செலவுகளை அவனுக்கு ஒப்படை கொடுக்கிறவன்கட்டிக்கொடுக்கவேண்டியது.

இலவசமாய் ஒப்படை வாங்கிக்கொள்ளப்பட்ட வஸ்துக்களைமறுபடி கொடுத்துவிடுவது.

கடுகூ. உபயோகத்திற்காக யாதொரு வஸ்து இலவசமாய் இரவல் கொடுக்கப்பட்டால், இரவல் கொடுக்கிறவன் ஓர் குறித்தகாலத்திற்காவது காரியத்திற்காவது அதை இரவல் கொடுத்திருந்தபோதிலும், அவன் அதைத் திரும்பக்கொடுத்துவிடச்சொல்லி எப்போதாவது கேட்கலாம். ஆனால் ஓர் குறித்தகாலத்திற்காவது காரியத்திற்காவது கொடுக்கப்பட்ட அந்த இரவலை நம்பி, யாதொரு காரியத்தை இரவல் வாங்கிக்கொள்ளுகிறவன் செய்திருந்து, அதினாலே ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்திற்குமுன்னமே அந்த

இரவல் வஸ்துவை மறுபடி கொடுத்துவிட்டால், இரவல் வாங்கிக்கொண்டதினாலே வாஸ்தவமாய் அவன் அடையும் பிரயோசனத்தைவிட அவனுக்கு அதிக நஷ்டம் உண்டாகும்படியாயிருக்குமாகில், இரவல் கொடுக்கிறவன் அதைத் திரும்பக் கொடுத்துவிடும்படி நிர்ப்பந்திக்கிற பட்சத்தில், அவன் இரவல் வாங்கிக்கொண்டவனுக்கு அப்படி நேரிட்ட நஷ்டம் அப்படி கிடைத்த பிரயோசனத்திற்கு எவ்வளவு அதிகப்பட்டிருக்கிறதோ அந்தத் தொகையைக் கட்டிக்கொடுக்கவேண்டியது.

ஒப்படைகொடுக்கப்பட்டவஸ்துக்களை காலங்கழிந்தவுடனேயாவது காரியம்முடிந்த உடனேயாவது திரும்ப கொடுத்துவிடுவது.

௧௬௦. வஸ்துக்கள் எவ்வளவு காலத்திற்கு ஒப்படை கொடுக்கப்பட்டதோ அந்தக்காலம்கழிந்த உடனேயாவது, அதுகள் எதற்காக ஒப்படைகொடுக்கப்பட்டதோ அந்தக் காரியம் முடிந்தஉடனேயாவது, அந்த ஒப்படை வஸ்துக்களை ஒப்படை கொடுத்தவன் கேளாதிருக்கச்சேயே அவனுக்குத்திரும்பகொடுத்துவிடுவதாகிலும் அவன் வேறே உத்தரவுசெய்திருந்தால் அந்தப்படி ஒப்பித்துவிடுவதாகிலும் ஒப்படை வாங்கிக்கொண்டவனுடைய கடமையாயிருக்கிறது.

வஸ்துக்களைகிரமமாய்ஒப்பிக்காவிட்டாலும், வாங்கிக்கொள்ளச் சொல்லிகாட்டாவிட்டாலும், ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவனுடைய உத்தரவாதம்.

௧௬௧. ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவன்சரியான காலத்திலே வஸ்துக்களை திரும்ப கொடுத்துவிடாமலாவது ஒப்பிக்காமலாவது வாங்கிக்கொள்ளச்சொல்லி காட்டாமலாவதிருப்பது அவனுடைய தப்பிதமாயிருந்தால், அவன் - அந்த காலமுதற்கொண்டு அந்த வஸ்துக்களுக்கு உண்டாகிற யாதொரு சேதம் அழிவு அல்லதுகெடுதிக்காக ஒப்படை கொடுக்கிறவனுக்குஉத்தரிக்கக்கடவன்.

இலவசமானஒப்படையானது மரணத்தோடு அற்றுப்போகிறது.

௧௬௨. இலவசமான ஒப்படையானது ஒப்படை கொடுக்கிறவன் இறந்து போனாலும் ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவன் இறந்து போனாலும் அதோடு அற்றுப்போகிறது.

ஒப்படைகொடுக்கப்பட்டவஸ்துக்களிலுண்டாகிற விர்த்திக்காவது லாபத்துக்காவது ஒப்படைகொடுக்கிறவனுடையபாத்தியதை.

௧௬௩. ஒப்படை கொடுக்கப்பட்ட வஸ்துக்கள் விர்த்தியானாலும் அதுகளிலிருந்துபிரயோசனமுண்டானாலும்அப்படிப்பட்டதையும், விரோதமான யாதொரு கந்திராக்ட்டு யில்லாத பட்சத்தில், ஒப்படை கொடுத்தவனுக்காவது அவன் செய்யச்சொன்ன படிக்காவது ஒப்படை வாங்கிக்கொண்டவன் ஒப்பித்து விடக்கடவன்.

திருஷ்டாந்தம்.

காப்பாற்றும்படி ஒரு பசுவை - எ - என்பவன் - பி - என்பவன் வசத்தில் விடுகிறான். அந்தப்பசு கன்றுபோடுகிறது. பி - என்பவன் - எ - என்பவனுக்கு பசுவை ஒப்பிப்பதுபோலவே கன்றையும் ஒப்பித்துவிடக்கடவன்.

கசுச. ஒப்படை கொடுத்தவன் அப்படி ஒப்படை கொடுக்கவாவது ஒப்படை வஸ்துக்களை திரும்ப வாங்கிக்கொள்ளவாவது அதுகளைக்குறித்து ஏதாவது செய்யச்சொல்லி உத்தரவு கொடுக்கவாவது அர்ஹனல்லாதிருந்த ஏதுவினாலே ஒப்படைவாங்கிக்கொண்டவனுக்கு ஏதாவதுநஷ்டமுண்டானால் அதற்காக அவனுக்கு ஒப்படை கொடுத்தவன் உத்தரவாதியாகிறான்.

ஒப்படைகொடுக்கிறவன் ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவனுக்கு உத்தரிப்பது.

கசுரு. வஸ்துக்களின் பலகூட்டுச் சொந்தக்காரர்கள் அதுகளை ஒப்படைகொடுத்தால், ஒப்படைவாங்கிக் கொள்ளுகிறவன், விரோதமான யாதொரு உடன்படிக்கை இல்லாதபட்சத்தில் ஒப்படை வாங்கிக்கொண்டவன் அவர்களெல்லோருடைய சம்மதியுமில்லாமல் கூட்டுச்சொந்தக்காரனொருவனுக்காவது அவனுடைய உத்தரவின்படிக்காவது அதுகளைத திரும்ப ஒப்பித்துப்போடலாம்.

பலகூட்டுச்சொந்தக்காரர்களால் கொடுக்கப்பட்ட ஒப்படை.

கசுசு. ஒப்படைகொடுக்கிறவனுக்கு அந்த வஸ்துக்களில் பாத்தியதை யில்லாதிருந்தாலும், ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவன் ஒப்படைகொடுக்கிறவனுக்காவது அவனுடைய உத்திரவின்படிக்காவது அதுகளை நல்ல எண்ணத்தோடு திரும்ப ஒப்பித்துவிடுவானாகில், அப்படி ஒப்பித்து விடுவதைக்குறித்து அவன் சொந்தக்காரனுக்கு உத்தரவாதியல்ல.

பாத்தியதையில்லாமல் ஒப்படை கொடுக்கிறவனுக்குத் திரும்ப ஒப்பித்துவிட்டபின்பு ஒப்படை வாங்கிக்கொண்டவன் உத்தரவாதியல்ல.

கசுஎ. ஒப்படை கொடுக்கிறவனல்லாத வேறொருவன் ஒப்படை கொடுக்கப்பட்ட வஸ்துக்களுக்குதாவாசெய்தால், அவன்-ஒப்படை கொடுத்தவனுக்கு அந்த வஸ்துக்களை ஒப்பித்துவிடாமல் நிறுத்திவைக்கும்படிக்கும், அந்தவஸ்க்களுக்கு பாத்தியதையைத்தீர்மானிக்கும்படிக்கும் கோர்ட்டாருக்கு மனுசெய்துக் கொள்ளலாம்.

ஒப்படை கொடுக்கப்பட்ட வஸ்துக்களுக்கு தாவாசெய்கிற மூன்றா மனிதனுக்குள்ள பாத்தியதை.

கசுஅ. வஸ்துக்களைக் கண்டுபிடிக்கிறவன் அதுகளைக்காப்பாற்றுவதற்கும், சொந்தக்காரனைக்கண்டுபிடிப்பதற்கும் தன்னிஷ்டமாய் எடுத்துக்கொண்ட பிரயாசைக்காகவும் செய்தசெலவுக்காகவும் ஈவுகொடுக்கும்படி சொந்தக்காரன்பேரில் வியாச்சியஞ்செய்வதற்கு அர்ஹனல்ல; ஆனால் அவன் அப்படிப்பட்ட ஈவு பெற்றுக்கொள்ளுகிறவனாயில் அந்தவஸ்துக்களைச் சொந்தக்காரனுக்குக் கொடாமல் நிறுத்திவைக்கலாம்; போக்கடிந்துபோன வஸ்துக்களைத்திரும்ப கொடுத்து விடுவதற்காகச்சொந்தக்காரன் ஏதோ ஒரு வெகுமதிகொடுக்கிறதாய்ச் சொல்லியிருந்தால், கண்டுபிடித்தவன் அப்படிப்பட்ட வெகுமதிக்காக வியாச்சியந்தொடரலாம், அந்த அவன்

வஸ்துக்களைக் கண்டுபிடிக்கிறவனுக்குள்ள பாத்தியதை.

கொடுக்கிறேனென்று குறித்துச்சொன்ன வெகுமதிக்காக வியாச்சியந் தொடரலாம்.

பெற்றுக்கொள்ளுகிறவரையில் வஸ்துக்களையும் நிறுத்தி வைத்துக்கொள்ளலாம்.

சாதாரணமாய்விற்பனைப்பொருளாயிருக்கிற வஸ்துவைக் கண்டுபிடிக்கிறவன் இன்னபடிக்கானால்விற்றுப்போடலாம்.

கசுகூ. சாதாரணமாய் விற்பனைப் பொருளாயிருக்கிற யாதொருவஸ்து போக்கடிந்துபோனால், கிரமமானஜாக்கிரதையோடு தேடியும் சொந்தக்காரன் அகப்படாவிட்டாலும், கேட்டும், கண்டுபிடித்தவனுக்கு அவன்நியாயமானசெலவைக்கொடுக்கமாட்டேனென்றாலும், கண்டுபிடித்தவன்—

(க) வஸ்து அழிந்து போகும்படியாகவாகிலும் அதின் விலையில் வெகுசாய்க்குறைந்து போகும்படியாகவாகிலு மிருக்கும்போதாவது,

(உ) கண்டுபிடிக்கப்பட்ட வஸ்துவின் விஷயத்தில் கண்டுபிடித்தவனுக்குண்டாகிய நியாயமான செலவு அதின்விலையில் மூனறிலிரண்டுபங்கு ஆகும்போதாவது, அதை விற்றுப்போடலாம்.

ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவனுக்கு நிறுத்தி வைத்துக் கொள்வதற்குண்டான முக்கிய பாக்கியதை.

கஎ0. ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவன் ஒப்படை சம்பந்தமானகாரியத்தை அனுசரித்து, ஒப்படை வஸ்து விஷயத்தில் உழைப்போடாவது திறமையோடாவது சேர்ந்த யாதொரு வேலை செய்திருப்பானாகில், விரோதமான கந்திராக்ட்டு யேற்படடிராத படசத்தில் அந்தவஸ்துவிஷயத்தில் அவன்செய்திருக்கிற வேலைக்காக அவன் கிரமமான ஈவு பெற்றுக்கொள்ளுகிறவரையில் அவன் அந்த வஸ்துவை நிறுத்திவைத்துக்கொள்ள பாத்தியதை யுடையவனாகிறான்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் ரத்தின வேலைக்காரனாகிய - பி - என்பவனிடத்திலே பட்டை தீர்த்து மெருகுபோட்டுக்கொடுக்கும்படி ஒரு ரவைதளத்தை ஒப்பிக்கிறான், அது அப்படியே செய்யப்படுகிறது. பி - என்பவன் தான்செய்த வேலைக்காகத் தனக்குப் பணங் கொடுக்கப்படுகிறவரையிலே அந்த ரத்தினத்தை நிறுத்திக்கொள்ள அர்ஹனாகிறான்.

(b). எ - என்பவன் தையற்காரனாகிய - பி - என்பவனிடத்திலே சொக்காய் தைக்கச்சொல்லி துணி கொடுக்கிறான். தைத்தான உடனே சொக்காயை ஒப்பிக்கிறதாகவும் மூன்று மாசம்பொறுத்து கூலிவாங்கிக்கொள்ளுகிறதாகவும் - பி- என்பவன - எ - என்பவனுக்கு வாக்குத்தத்தஞ்செய்கிறான். பி - என்பவன் தனக்குப்பணங்கொடுக்குறவலாயில் சொக்காயைநிறுத்திவைத்துக்கொள்ள அர்ஹனல்ல.

ஸாவுகாரர்கள், வர்த்தக எஜெண்டுகள், துறைமுகக்காரர்கள், அட்டரணிகள், பாலிஸி தரகிரிகள், இவர்களுக்கு நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு

கஎக. ஸாவுகாரர்களும், வர்த்தகர்களுடைய ஏஜெண்டுகளும் - துறைமுகக்காரர்களும், யாதொரு ஹைகோர்ட்டு அட்டாணிகளும், பாலிஸீ தரகிரிகளும் தங்களிடத்தில் ஒப்பிக்கப்பட்டயாதொருவஸ்துவை, விரோதமான கந்திராக்ட்டு ஏற்பட்டிராதபட்சத்தில், கணக்கின்பேரில் நிற்கிற சாதாரணமான நிலுவைக்காக ஈடாய் நிறுத்திவைத்துக்கொள்ளலாம்; ஆ

ண்டாகியசாதாரண பாத்தியதை.

னால் மற்றவர்கள் தங்களிடத்தில் ஒப்பிக்கப்பட்ட வஸ்துவை, அந்த விஷயமாய் வெளிப்படையான கந்திராட்டு யிருந்தாலொழிய, அப்படிப்பட்ட நிலுவைக்காக ஈடாய் நிறுத்தி வைத்துக்கொள்ள பாத்தியதையுடையவர்களல்ல.

அடகாகஒப்படை.

'அடகு', 'அடகுவைக்கிறவன்', 'அடகுவைத்துக் கொள்ளுகிறவன்', என்பதற்குஅர்த்தம்.

௧௭௨. யாதொரு கடனைச்செலுத்துவதற்காகவாவது யாதொருவாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்காகவாவது ஈடாய் வஸ்துவை ஒப்படை கொடுப்பது அடகு என்றுசொல்லப்படுகிறது. இந்தவிஷயத்தில் ஒப்படை கொடுக்கிறவன் அடகு வைக்கிறவனென்று சொல்லப்படுகிறான். ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவன் அடகுவைத்துக் கொள்ளுகிறவனென்று சொல்லப்படுகிறான்.

அடகுவைத்துக் கொள்கிறவனுக்கு நிறுத்திக் கொள்ளும்படியான பாத்தியதை.

௧௭௩. அடகுவைத்துக் கொள்ளுகிறவன் அடகுவைக்கப்பட்ட வஸ்துவை, கடனைச்செலுத்துவதற்காகவாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்காகவாவ தல்லாமலும், அந்தக்கடனைச்சேர்ந்த வட்டிக்காகவும் அந்த அடகு வஸ்துவை தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதைக் குறித்தாவது அதைக் காப்பாற்றுவதைக் குறித்தாவது தனக்குப் பிடிக்கிற அவசியமான சகல செலவுக்காகவும், நிறுத்திவைத்துக்கொள்ளலாம்.

அடகு வைத்துக் கொள்ளுகிறவன் எதற்காகவஸ்து அடகு வைக்கப்படுகிறதோ அந்தவிஷயத்துக்கல்லாமல் வேறே கடனுக்காகவாவதுவாக்குத்தத்தத்திற்காகவாவது அதை நிறுத்தி வைத்துக் கொள்ளக் கூடாது.

பின்னிட்டு பணங் கொடுக்கிற விஷயத்தில் அநுமேயம்.

௧௭௪. வேறொன்றுக்காக நிறுத்திவைத்துக் கொள்ளும்படி கந்திராக்ட்டு ஏற்பட்டிராத பட்சத்தில், அடகு வைத்துக்கொள்ளுகிறவன் எதற்காக வஸ்து அடகு வைக்கப்படுகிறதோ அந்தக் கடன் அல்லது வாக்குத்தத்தத்திற்காக வல்லாமல் வேறே யாதொரு கடனுக்காகவாவது வாக்குத்தத்தத்திற்காகவாவது அந்த வஸ்துவை நிறுத்திவைத்துக் கொள்ளக் கூடாது; ஆனால் அடகு வைத்துக் கொள்ளுகிறவன் பின்னிட்டு பணங் கொடுக்கிற விஷயத்திலே, விரோதமாக யாதொன்று மிலலாத பட்சத்தில், மேற்சொல்லியபடி கந்திராக்ட்டு ஏற்பட்டிருப்பதாகவே வைத்துக் கொள்ளவேண்டியது.

அடகுவைத்துக் கொள்கிறவனுக்கு விசேஷசெலவுசேரிடுவதற்காக உண்டானபாத்தியதை.

௧௭௫. அடகுவைத்துக் கொள்ளுகிறவன அடகு வைக்கப்பட்ட வஸ்துவைக் காப்பாற்றுவதற்காகத் தனக்குப் பிடித்த விசேஷசெலவை அடகுவைக்கிறவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்;

அடகுவைக்கிறவன் தவறிப்போனால் அடகுவைத்துக் கொள்ளுகிறவனுக்குள்ள பாத்தியதை.

௧௭௬. அடகுவைக்கிறவன் எதினிமித்தம் வஸ்து அடகுவைக்கப்படுகிறதோ அந்தக் கடனைச் செலுத்தாமலாவது, எதினிமித்தம் வஸ்து அடகுவைக்கப்படுகிறதோ அந்த வாக்குத்தத்தத்தை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றாமலாவது தவறிப்போவானாகில், அடகுவைத்துக்கொள்ளுகிறவன் அடகுவைக்கிறவன் பேரில் அந்தக் கடன் அல்லதுவாக்குத்தத்தத்தைக்குறித்து வியாச்சியங் கொண்டுவரலாம், மேலும் அடகுவைக்கப்பட்டவஸ்துவை மேல்பலமாக நிறுத்திவைத்துக்கொள்ளலாம ; அல்லது அவன் அடகுவைக்கப்பட்ட வஸ்துவை தான் விற்றுப்போடப்போகிறதாகஅடகுவைத்தவனுக்கு கிரமமான நோட்டீசு கொடுத்தபின்பு அந்த வஸ்துவைவிற்றுப்போடலாம்.

அப்படி விற்பதினால் வருகிற பணம் அந்தக் கடன் அல்லதுவாக்குத்தத்த விஷயத்தில் பாக்கியாயிருக்கிற தொகைக்குக் குறைவுபட்டால், அடகுவைத்தவன் நிலுவையைச் செலுத்துவதற்கு இன்னும் உத்தரவாதியாயிருக்கிறான். விற்றுவருகிற பணம் அப்படி பாக்கியாயிருக்கிற தொகையைவிட அதிகமாயிருந்தால் அந்த அதிகப்பணத்தை அடகுவைத்துக்கொண்டவன் அடகுவைத்தவனுக்குச் செலுத்திவிடவேண்டியது.

அடகு வைக்கிறவன்தவறிப்போவானாகில் மீட்டுக்கொள்ள அவனுக்குண்டானபாத்தியதை.

௧௭௭. எதற்காக அடகுவைக்கப்படுகிறதோ அந்தக்கடனைச்செலுத்துவதற்காகவாகிலும் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்காகவாகிலும் கெடுவு ஏற்பட்டிருந்து, அந்த கெடுவில் அந்தக்கடனைச்செலுத்தாமலாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாமலாவது அடகுவைத்தவன் தவறிப்போவானாகில், அவன்-அடகுவைக்கப்பட்ட வஸ்துவை, அந்த கெடுவுககுப் பின்னிட்டு எப்போதாகிலும் அது வாஸ்தவமாய் விற்கப்படுவதற்கு முன்னமே மீட்டுக்கொள்ளலாம் ; ஆனால் அப்படிசெய்கிற பட்சத்தில் அவன் தான் தவறிப்போனதினால் ஏதாவது செலவு நேரிட்டிருந்தால் அதையும் செலுத்தவேண்டியது.

வஸ்துக்களையாவது வஸ்துக்களில் பாத்தியதையைத் தெரிவிக்கிறதஸ்தாவேஜை யாவது வைத்துக்கொண்டிருப்பவன் அடகுவைப்பது.

௧௭௮. யாதொரு சரக்கையாவது, பில் ஆவ் லேடிங் என்கிற வார்நாமாவையாவது, டாக் வாரண்டு என்னும் அதிகாரபத்திரத்தையாவது, கிடங்குக்காரனுடைய சர்ட்டிபிகேட்டையாவது, துறைமுகக்காரனுடைய சர்ட்டிபைகேட்டையாவது, ஒப்பிப்பதைக் குறித்த அதிகாரபத்திரம் அல்லது உத்தரவையாவது, சரக்குக்கு பாத்தியதையைத்தெரிவிக்கிற வேறே யாதொருதஸ்தாவேஜையாவது தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண் டிருக்கிறவன் அப்படிப்பட்ட சரக்கையாவது, தஸ்தாவேஜுகளையாவது அடகுவைக்கலாம், அது செல்லத்தக்கதே : ஆனால் அடகுவைத்துக்கொள்ளுகிறவன் நல்ல எண்ணத்தோடும், அடகுவைக்கிறவன் அக்கிரமமாய்ப் பிரவர்த்திக்கிறானென்று நியாயமாய் நிச்சயிப்பதற்கு இடங்கொடாத சங்கதிகளிலும் பிரவர்த்தித்திருக்கவேணும் :

11

மேலும் அப்படிப்பட்ட சரக்காவது தஸ்தாவேஜுகளாவது, அவற்றின் நியாயமான சொந்தக்காரனிடத்தி லிருந்தாகிலும் அதுகளை நியாயமாய் தன்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிற யாவனொருவனிடத்திலிருந்தாகிலும், யாதொருகுற்றம் அல்லது மோசஞ்செய்து அதின்மூலமாய் அடையப்படாமலுமிருந்திருக்கவேணும்:

அடகுவைக்கிறவன் மட்டான சுதந்திரமாத்திரமுடையவனாய் வைக்கிற அடகைக்குறித்து.

௧௭௯. சரக்கில் மட்டான பாத்தியதை மாத்திரமுடையவனாயிருக்கிறவன் அதை அடகுவைத்தால், அந்த பாத்தியதை எவ்வளவோ அவ்வளவுக்கு அந்த அடகுசெல்லும்.

ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவர்களாவது ஒப்படை கொடுக்கிறவர்களாவது அக்கிரமம் செய்கிறவர்கள்பேரில் வியாச்சியந் தொடருதல்.

ஒப்படைகொடுக்கிறவனாவது ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவனாவது அக்கிரமம் செய்கிறவர்கள் பேரில் வியாச்சியந் தொடருவது.

௧௮௦. ஒப்படை கொடுக்கப்பட்ட வஸ்துவை உபயோகிக்கவொட்டாமலாவது ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளவொட்டாமலாவது ஒப்படை வாங்கிக்கொள்ளுகிறவனுக்கு மூன்றாமனித னொருவன் அக்கிரமஞ் செய்தாலும், அதற்கு யாதொரு கெடுதிசெய்தாலும், அப்படிப்பட்ட விஷயத்தில் ஒப்படை கொடுக்கப்படாதிருந்தால் சொந்தககாரன் என்ன தேடிக்கொண்டிருக்கலாமோ அப்படிப்பட்டபரிகாரங்களைத் தேடிக்கொள்ள ஒப்படைவாங்கிக்கொள்ளுகிறவன் அர்ஹனாகிறான்; அப்படிப்பட்ட அக்கிரமம் அல்லதுகெடுதிசெய்ததற்காக மூன்றாமனிதன் பேரில் ஒப்படை கொடுத்தவனாவது ஒப்படை வாங்கிக்கொண்டவனாவது வியாச்சியங்கொண்டுவரலாம்.

அப்படிப்பட்ட வியாச்சியங்களினாலே அடைந்த பரிகாரத்தை யாவது ஈவையாவது பாகித்துக்கொள்வது.

௧௮௧. அப்படிப்பட்ட யாதொரு வியாச்சியத்திலே பரிகாரமாயாவது ஈவாகவாவது என்ன அடையப்படுகிறதோ அதை ஒப்படைகொடுத்தவனும் ஒப்படைவாங்கிக்கொண்டவனும் தங்கள் தங்கள் பாத்தியதைக்கு தக்கபடி பகிர்ந்துகொள்ளவேண்டியது.

ஏஜெண்டின் காரியம்.

௧௦-ம் அத்தியாயம்.—ஏஜெண்டுகளின் நேமனமும் அதிகாரமும்.

'ஏஜெண்டு' என்பதற்கும் 'முதலாளி' என்பதற்கும் அர்த்தம்.

௧௮௨. ஏஜெண்டென்பவன் வேறொருவனுக்காக யாதொரு காரியத்தைச்செய்யவாவது மூன்றுமனிதர்களோடு நடத்துங்காரியங்களில் வேறொருவனுக்கு பிரதிநிதியாயிருக்கவாவது அமர்த்தப்பட்டவனாகிறான். எவனுக்காக அப்படிப்பட்டகாரியம் செய்யப்படுகிறதோ அல்லது யாருக்கு அப்படி பிரதிநிதியாயிருக்கலாகிறதோ அவன் முதாளி என்று சொல்லப்படுகிறான்.

இன்னார் ஏஜெண்டை அமர்த்திக் கொள்ளலா மென்பது.

௧௮௩. எவன் தானுட்பட்டிருக்கிற சட்டப்படிககு வயதுவந்தவனும் சித்தஸ்வாதீன முள்ளவனுமிருக்கிறானோ அப்படிப்பட்டவன் யேஜெண்டை அமர்த்திக்கொள்ளலாம்.

இன்னார் ஏஜெண்டா யிருக்கலாமென்பது.

௧௮௪. முதலாளிக்கும் மூன்றுமனிதர்களுக்கும் மத்தியில் எவனாவது யேஜெண்டா யிருக்கலாம்; ஆனால் வயதுவராமலும் சித்தஸ்வாதீனமில்லாமலு மிருக்கிறவன் எவனாவது யேஜெணடாகிற விஷயமாய் இதில் சொல்லியிருக்கிறநிபந்தனைகளின்படி தன்னுடையமுதலாளிக்கு உத்தரவாதியாயிருக்கும்படியான ஏஜெண்டாகக்கூடாது.

பிரதிபலன் அவசியமில்லை.

௧௮௫. ஒருவன் யேஜெண்டாக யேற்படுத்திக்கொள்ளுவதற்கு பிரதிபலன் அவசியமில்லை.

ஏஜெண்டினுடைய அதிகாரம் வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவதிருக்கலாம்.

௧௮௬. ஒரு யேஜெண்டினுடைய அதிகாரமானது வெளியபடையாகவாவது குறிப்பாகவாவதிருக்கலாம்.

வெளிப்படையும் குறிப்புமான அதிகாரமென்பதற்கு அர்த்தம்.

௧௮௭. வாய்மொழியாகவாவது எழுத்து மூலமாகவாவது அதிகாரங்கொடுக்கப்பட்டால், அது வெளிப்படையான அதிகாரமென்று சொல்லப்படுகிறது. சங்கதியின் வயணங்களினாலே அதிகாரம் ஊகிக்கப்பட்டால், அது குறிப்பான அதிகாரமென்றுசொல்லப்படுகிறது; வாய்மொழியாகச்சொல்லப்பட்ட விஷயங்களையாவது எழுதப்பட்ட விஷயங்களையாவது வழக்கமாய்நடக்கிற காரிய தோரணியையாவது சங்கதியின் வயணங்களென்றுகொள்ளலாம்.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் கல்கத்தாவில்வாசஞ்செய்துக்கொண்டு ஸ்ரீராமபுரத்திலே ஒரு ஷாப்பு சொந்தமாய் வைத்துக்கொண்டிருக்கிறான், அந்த ஷாப்பைஅவன்ஒவ்வொருவேளை போய் பார்த்துக்கொள்வதுண்டு. அந்த ஷாப்பை-பி-என்பவன் நடத்திக்கொண்டு, அந்த ஷாப்பினிமித்தம் - எ - என்பவன்பேரால்-சி- என்பவனிடத்திலிருந்து சரக்கு அழைப்பித்துக்கொண்டும், அதற்காக - எ - என்பவனறிய - எ - என்பவனுடைய நிதியிலிருந்து பணஞ் செலுத்திக்கொண்டு மிருக்கிறான். ஷாப்பினிமித்தம் - எ - என்பவனுடைய பேரால் - சி - என்பவனிடத்திலிருந்து சரக்கு அழைப்பிப்பதற்கு - பி - என்பவன் — எ-என்பவனிடத்திலிருந்துகுறிப்பான அதிகாரம் பெற்றவனாயிருக்கிறான்.

ஏஜெண்டுக்குள்ள அதிகாரம்.

௧௮௮. யாதொரு காரியத்தைச்செய்ய அதிகார முடையவனாயிருக்கிற ஒரு யேஜெண்டானவன் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யும்பொருட்டு அவசியமானதாய் சட்டசம்மதமான பிரதிவேலையையும்செய்ய அதிகாரமுடையவனாயிருக்கிறான்.

ஒருவேலையை நடத்துவதற்கு அதிகாரமுடைய ஏஜெண்டானவன் அப்படிப்பட்டவேலையைநடத்தும்பொருட்டு அவசியமானதாகவாவது நட

த்துந்தோரணியில் வழக்கமாய்செய்யப்பட்டதாகவாவதிருக்கிற சட்டசம் மதமான பிரதிகாரியத்தையும் செய்ய அதிகாரமுடையவனு யிருக்கிறான்.

திருஷ்டாந்தம்.

(a). லண்டன் பட்டணத்தில் வாசஞ்செய்கிற - பி - என்பவன் தனக்கு வர வேண்டிய கடனை பொம்பாயில் வசூல்பண்ணும்படி - எ - என்பவனை ஏற்படுத்து கிறான். அந்தக்கடனை வசூல்பண்ணும்பொருட்டு - எ - என்பவன் யாதொருகோர்ட்டு விவகாரம் நடத்தலாம், மேலும் அந்தக்கடனைப் பற்றிக்கொள்வதற்காக செல்லும்படியான ரசீது கொடுக்கலாம்.

(b) எ - என்பவன் கப்பல்செய்கிற தன் வேலையை நடத்தும்படி தன்னுடைய யேஜெண்டாக - பி - என்பவனை யேற்படுத்துகிறான். பி - என்பவன் அந்தவேலையை நடத்தும்பொருட்டு மரமுதலிய சாமான்களைவாங்கலாம், மேலும் வேலைக்காரர்களையும் கூலிக்கு வைத்துக்கொள்ளலாம்.

௧அ௯. ஒரு ஏஜெண்டானவன் – அவசரமானதறுவாயில், தன்னுடைய முதலாளிக்கு நஷ்டம் வரவொட்டாமற்காக்கும்பொருட்டு, சாதாரணமான விவேகசாலி ஒருவன் தன்னுடைய சொந்த விஷயத்திலே அப்படிப்பட்ட தருணங்களில் என்னசெய்வானோ அப்படிப்பட்ட சகல காரியங்களையும் செய்ய அதிகாரமுடையவனுயிருக்கிறான்.

அவசரமான தறுவாயில் ஏஜெண்டுக்குள்ள அதிகாரம்.

திருஷ்டாந்தம்.

(a). விற்பனைசெய்ய நேமிக்கப்பட்ட ஏஜெண்டானவன் அவசியமானுல் வஸ்துக்களை செப்பனிடுவிக்கலாம்.

(b). கட்டாக்கிலிருக்கிற - சி - என்பவனுக்கு உடனே அனுப்பும்படி உத்தரவு சகிதமாய் கல்கத்தாவி லிருக்கிற - பி - என்பவனுக்கு - எ - என்பவன் போஜன சாமக்கிரிகளை அனுப்புகிறான். அந்த வஸ்துக்களை கட்டாக்குக்கு அனுப்புகிற பட்சத்தில் அவ்விடம்போய் சேருவதற்குள்ளே அதுகள் கெட்டுப்போகிறதா யிருந்தால், அதுகளை - பி - என்பவன் கல்கத்தாவிலேயே விற்றுப்போடலாம்.

கீழ்ஏஜெண்டுகள்.

௧௯௦. வியாபாரத்தின் சாதாரணமான வழக்கப்படி கீழ்ஏஜெண்டை நேமித்துக்கொள்ளலாமென்கிற விஷயத்திலும், ஏஜெண்டின் காரியம் எப்படிப்பட்டதோ அந்ததன்மைப்படி கீழ் ஏஜெண்டை நேமித்துக் கொள்ள வேணுமென்கிற விஷயத்திலும் தவிர, ஒரு ஏஜெண்டானவன் தானே சுதாவாய் நடத்த வெளிப்படையாகவாவதகுறிப்பாகவாவது மேற்போட்டுக்கொண்டிருக்கிற காரியங்களைநிறைவேற்றுவதற்கு வேறொருவனை அமர்த்திக்கொள்ளக்கூடாது, அப்படி அமர்த்துவது சட்டசம்மதமாகவு மாட்டாது.

ஏஜெண்டானவன் இன்னபடிக்கானுல் தன் அதிகாரத்தை வேறொருவனுக்குக் கொடுக்கக் கூடாதென்பது.

௧௯௧. கீழ் ஏஜெண்டு என்பவன் ஏஜெண்டு சம்பந்தமான காரியத்தில் பிரதம ஏஜெண்டினுல் ஏற்படுத்தப்பட்டு அவனுடைய அதிகாரத்திற்குள் நடத்துகிறவனுயிருக்கிறான்.

கீழ் ஏஜெண்டு என்பதற்கு அர்த்தம்.

கக௯௨. கீழ் ஏஜெண்டு கிரமமாய் நேமிக்கப்பட்டால், மூன்றுமனிதர்களுக்குச்சம்பந்தப்படுகிறமட்டில், அந்தகீழ்ஏஜெண்டுமுதலாளிக்கு பிரதி நிதியாயிருக்கிறான், ஆகையால் அந்தக்கீழ் ஏஜெண்டு முதலாளியினால் பிரதமத்தில் ஏஜெண்டாக நேமிக்கப்பட்டிருந்தாற்போலவே அவன் நடத்துகிற காரியங்களுக்கு முதலாளி உடன்பட்டிருப்பது மல்லாமல்அதுகளுக்காக உத்தரவாதியாயு மிருக்கிறான்.

கிரமமாய் நேமிக்கப்பட்ட கீழ் ஏஜெண்டு முதலாளிக்குப் பிரதி நிதியாயிருப்பது.

கீழ் ஏஜெண்டு நடத்துகிற காரியங்களுக்காக முதலாளிக்கு ஏஜெண்டுஉத்தரவாதியாகிறான்

கீழ் யேஜெண்டுக்காக யேஜெண்டினுடையஉத்தரவாதம்.

மோசம் அல்லது மனப்பூர்வமான அக்கிரமம் செய்யப்படுகிற விஷயங்களில் தவிர, கீழ் ஏஜெண்டானவன் தான்நடத்துகிற காரியங்களுக்காக ஏஜெண்டுக்கு உத்தரவாதியாகிறானே யல்லாமல் முதலாளிக்கு உத்தரவாதியல்ல.

கீழ்யேஜெண்டினுடைய உத்தரவாதம்.

கக௯௩. ஒருயேஜெண்டானவன் கீழ் ஏஜெண்டாக நடத்தும்படிஒருவனை நேமிக்க தனக்கு அதிகார மில்லாதிருக்கச்சே அப்படி ஒரு நபரை கீழ் யேஜெண்டாகநேமித்தால், முதலாளிக்கு ஒருயேஜெண்டினிடத்திலே என்ன சம்பந்த மிருக்கிறதோ அதே சம்பந்தம் அந்த யேஜெண்டுக்குஅந்தகீழ்ஏஜெண்டினிடத்திலே உண்டாயிருககிறது; அந்த கீழ் யேஜெண்டு நடத்துகிற காரியங்களுக்காக முதலாளிக்கும் மூன்றுமனிதர்களுக்கும் அந்த யேஜெண்டு உத்தரவாதியாகிறான்; அப்படி நேமிக்கப்பட்டகீழ்யேஜெண்டு தான் நடத்துகிற காரியங்களுக்காக முதலாளிக்கு பிரதிநிதியுமாகான், அந்தக்காரியங்களுக்காக முதலாளி உத்தரவாதியுமாகான், அந்த கீழ் யேஜெண்டு முதலாளிக்கு உத்தரவாதியு மாகான்.

அதிகாரமில்லாமல் நியமிக்கப்பட்ட கீழ்யேஜெண்டுக்காகயேஜெண்டினுடையஉத்தரவாதம்.

கக௯௪. முதலாளிக்காக யேஜெண்டாய் காரியங்களைநடத்துவதற்கு வேறொரு நபரைநேமிக்கும்படி வெளிப்படை அல்லது குறிப்பான அதிகாரம் அடைந்திருக்கிற ஒரு யேஜெண்டானவன் அப்பிரகாரமே வேறொரு நபரை நேமித்திருந்தால், அப்படிப்பட்ட நபர் கீழ் யேஜெண்டாகாமல் யேஜெண்டின் வேலையில் எவ்வளவு அவன்வசம் செய்யப்படுகிறதோ அந்த பாகத்திற்கு அந்த முதலாளியினுடைய யேஜெண்டாகிறான்.

யேஜெண்டின்காரியத்தை நடத்துவதற்கு யேஜெண்டினால் கிரமமாய் நேமிக்கப்பட்ட நபருக்கும்முதலாளிக்குமுள்ளசம்பந்தம்.

திருஷ்டாந்தம்.

(a). எ-என்பவன் தன்னுடைய ஆஸ்தியை யேலத்தில் விற்கும்படிக்கும் அதற்காக யேலம்போடுகிறவனை அமர்த்தும்படிக்கும் தன்னுடைய வகீலாகிய-பி - என்பவனுக்கு உத்தரவு செய்கிறான். விக்கிரயஞ் செய்வதற்காக யேலம்போடுகிறவனாய் சி - என்பவனை - பி - என்பவன் நேமிக்கிறான். சி - என்பவன் விற்பனை செய்வது

த்தாக - எ - என்பவனுடைய யேஜெண்டா யிருக்கிறானேயல்லாமல் கீழ் யேஜெண்டு அல்ல.

(b). எ - என்பவன் தனக்கு - சி - அண்டுகம்பேனி என்னும் வர்த்தகக்கூட்டத்தார் பாக்கியாயிருக்கிற பணத்தை வசூல் பண்ணும்படி கல்கத்தாவிலிருக்கிற வர்த்தகனாகிய - பி - என்பவனுக்கு அதிகாரங் கொடுக்கிறான். அந்தப் பணத்தை வசூல் செய்வதற்காக - சி - அண்டு கம்பேனியார்பேரில் கோர்ட்டு விவகாரம் நடத்தும்படி ஒரு வக்கீலாகிய - டி - என்பவனுக்கு - பி - என்பவன் கற்பிக்கிறான். டி - என்பவன் - எ - என்பவனுடைய வகீலேயல்லாமல் கீழ் யேஜண்டாகமாட்டான்.

அப்படிப்பட்ட நபரை நேமிப்பதில் யேஜெண்டின் கடமை.

ககரு. ஒரு யேஜண்டானவன்-தன்னுடைய முதலாளிக்காக அப்படிப்பட்ட ஏஜெண்டை தெரிந்தேற் படுத்துவதில் சாதாரணமான விவேகசாலி ஒருவன் தன் சொந்த விஷயத்தில் எவ்வளவு விவேகத்தோடு பிரவர்த்திப்பானோ அவ்வளவு விவேகத்தோடு பிரவர்த்திக்கக் கடமைப்பட்டிருக்கிறான்; இப்படிசெய்தால், அவன் அப்படி தெரிந்தேற்படுத்தப்பட்ட யேஜெண்டினுடையகாரியங்களுக்காகவாவது அஜாக்கிரதைக்காக வாவது முதலாளிக்கு உத்தரவாதியல்ல.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் தனக்காக ஒரு கப்பலை கிரயத்துக்குக் கொள்ளும்படி ஒரு வர்த்தகனாகிய - பி - என்பவனுக்கு உத்தரவுசெய்கிறான். எ - என்பவனுக்காக ஒரு கப்பலை தெரிந்தெடுக்கும்படி பேர்போன ஒரு கப்பல் பரிசோதகனை - பி - என்பவன் அமர்த்துகிறான். அந்த பரிசோதகன் ஒரு கப்பலை அஜாக்கிரதையாய்த் தெரிந்தெடுக்கிறான். அந்தக் கப்பல் சபருக்கு யோக்கியமற்றதாய்ச் சேதமாய்ப் போகிறது - எ - என்பவனுக்கு உத்தரவாதி அந்தப் பரிசோதகனே யல்லாமல் பி - என்பவனல்ல.

(b). எ - என்பவன் விற்பனைக்காக ஒரு வர்த்தகனாகிய - பி - என்பவன்பேருக்கு சரக்கு அனுப்புகிறான் - எ - என்பவனுடைய சரக்கை விற்பனைசெய்ய மெத்த நம்பிக்கையுள்ள ஒரு யேலம்போடுவோனை - பி - என்பவன் கிரமமானதோரணியில் யேற்படுத்தி, அந்தயேலம்போடுவோனைவிற்பனையில்வருகிறபணத்தைப்பிடிக்க வொட்டுகிறான். பின்பு யேலம்போடுவோன் அந்த விக்கிரயபணத்துக்கு வகை சொல்லாமல் கடனிறுக்கச் சக்தியற்றவனாகிறான். அந்த விற்பனை பணத்துக்கு பி - என்பவன் - எ - என்பவனுக்கு உத்தரவாதியல்ல.

ஒப்புக் கொள்ளுதல்.

தன்னுடைய உத்தரவில்லாமல் தனக்காகச் செய்யப்பட்டகாரியங்களைக் குறித்து தனக்குண்டான பாத்தியதை.

ககசு வேறொருவனுக்காகஅவனுககுத்தெரியாமலாகிலும், அவனுடைய உத்தரவில்லாமலாகிலும் ஒருவன் காரியங்களை நடத்தினால், அப்படிப்பட்ட காரியங்களை அந்த மற்றவன் தனக்கிஷ்டமிருந்தால் ஒப்புக்கொள்ளலாம், இல்லாவிட்டால் ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கலாம். அவன்ஒப்புக்கொண்டால், அவனுடைய உத்தரவினாலே அதுகள் செய்யப்பட்டிருந்தால் எவ்வாறு முடியுமோ அதே முடிவுள்ளதாகும்.

ஒப்புக்கொள்வது இன்னதாகுமென்பது.

௧௯௭. ஒப்புக்கொள்வது வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவதிருக்கலாமென்பது எவனுக்காக காரியங்கள் நடத்தப்படுகிறதோ அவனுடைய செய்கையினால் தெரியவருகிறது.

ஒப்புக்கொள்வது வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது இருக்கலாம்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் அதிகாரமில்லாமலே - பி - என்பவனுக்காக சரக்கைக் கிரயத்துக்கு வாங்குகிறான். பிறகு - பி - என்பவன் தன்னிமித்தம் அதுகளை - சி என்பவனுக்கு விற்கிறான்; எ - என்பவன் - பி - என்பவனுக்காக வாங்கினதை ஒப புக்கொண்டதாக - பி - என்பவனுடைய செய்கையால் தெரியவருகிறது.

(b). பி - என்பவனுடைய அதிகாரமில்லாமல் அவனுடைய பணத்தை - எ என்பவன் - சி - என்பவனுக்கு கடன்கொடுக்கிறான். பிறகு - பி - என்பவன் - சி என்பவனிடத்திலிருந்து அந்த பணத்திற்கு வட்டி வாங்கிக்கொள்ளுகிறான். அந்த கடனை ஒப்புக்கொண்டதாக - பி - என்பவனுடையசெய்கையால்தெரியவருகிறது.

௧௯௮. அந்தவிஷயத்தைச்சேர்ந்தகாரியங்களை எவனறிந்திருப்பது முக்கியமாய்கொத்துங் குறையுமாயிருக்கிறதோ அவன் ஒப்புக்கொள்ளுவது செலாமணியாகமாட்டாது.

ஒப்புக்கொள்வது செலாமணியாவதற்கு அறிந்திருப்பது அவசியம்.

௧௯௯. ஒருவன் அதிகாரமில்லாமல் தனக்காகச்செய்யப்பட்ட யாதொரு காரியத்தை ஒப்புக்கொண்டால், அவன் அப்படிப்பட்டகாரியம் எதைச்சேர்ந்ததாயிருக்கிறதோ அந்த விவகார முழுமையையும் ஒப்புக்கொண்டவனாகிறான்.

அதிகாரமில்லாமல் செய்யப்பட்டு ஒருவிவகாரத்தைச்சேர்ந்ததாயிருக்கிறகாரியத்தை ஒப்புக்கொள்வது இன்னதாகுமென்பது.

௨௦௦. வேறொருவனுக்காக அவனுடைய உத்தரவில்லாமல் ஒருவன் யாதொரு காரியத்தைச்செய்தால், அது அதிகாரம்பெற்றுக்கொண்டுசெய்யப்படுகிறபட்சத்தில் மூன்றுமனிதனை நஷ்டத்திற்கு உட்படுத்தும்படியானதாகவாவது மூன்றுமனிதனுக்கு யாதொருபாத்தியதை அல்லதுபிரயோசனத்தை அற்றுப்போகச்செய்யும்படியான தாகவாவ திருந்தாலும், அத்தன்மையான கெடுதி உத்தரவில்லாமற் செய்த அந்தகாரியம் ஒப்புக்கொள்ளப்படுவதினால் உண்டாகமாட்டாது.

உத்தரவில்லாமல் செய்யப்பட்டகாரியத்தை ஒப்புக்கொள்வதினாலே மூன்றுமனிதனுக்கு கெடுதியுண்டாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

(a). பி - என்பவனுடைய சொத்தாகிய தட்டுமுட்டு சாமானை வைத்துக்கொண்டிருக்கிற - சி - என்பவனை - எ - என்பவன் அதை ஒப்பிக்கச்சொல்லி - பி - என்பவனுடைய உத்தரவில்லாமல் அவனுக்காகக்கேட்கிறான். சி - என்பவன் அதை ஒப்பிக்கமாட்டேனென்றால் அதற்காக அவனை நஷ்டத்திற்கு உள்ளாக்கும்படி - பி என்பவன் - எ - என்பவன்கேட்டதை ஒப்புக்கொள்ளக்கூடாது.

(b). அறிக்கைசெய்த மூன்று மாசத்தில் அற்றுப்போகும்படி - எ-என்பவன் பி - என்பவனிடத்திலே ஒரு குத்தகை பெறுகிறான். அதிகாரம் பெறாத - சி - என்பவன் குத்தகை அற்றுப்போகும்படி - எ - என்பவனுக்கு அறிக்கைசெய்கிறான். அந்த அறிக்கையை - பி - என்பவன் - எ - என்பவனை உடன்படச்செய்யும்படி ஒப்புக்கொள்ளக்கூடாது.

அதிகாரத்தை ரத்துசெய்வது.

உ0க. முதலாளி தன்னுடைய அதிகாரத்தை ரத்துசெய்வதினுலாவது, ஏஜெண்டானவன் ஏஜெண்டு வேலையைவிட்டு விடுவதினுலாவது, ஏஜெண்டு வேலை முடிந்துபோவதினுலாவது, முதலாளியாகிலும் ஏஜெண்டாகிலும் இறந்துபோவதினுலாவது புத்தி மாருட்டக்காரனுவதினுலாவது, இன்ஸால்வெண்டு கடன்காரர்களுடைய நிவாரணைக்காக அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற யாதொரு ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின்படி முதலாளி இன்ஸால்வெண்டாக தீர்மானிக்கப் படுவதினுலாவது, ஏஜெண்டு வேலை அற்றுப்போகிறது.

ஏஜெண்டுவேலை அற்றுப்போவது.

உ0உ. ஏஜெண்டுசம்பந்தமான விஷயத்தைச் சேர்ந்த சொத்திலே ஏஜெண்டுக்கு பாத்தியதையிருக்குமாகில், வெளிப்படையான கந்திராக்ட்டு ஏற்பட்டிராதபட்சத்தில், அப்படிப்பட்ட பாத்தியதைக்கு விரோதமாய் அந்த யேஜெண்டுவேலை அற்றுப்போகமாட்டாது.

ஏஜெண்டுவேலை விஷயத்தில்ஏஜெண்டுக்கு சம்பந்தமிருக்குமாகில் ஏஜெண்டுவேலை அற்றுப்போவதைக்குறித்து.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் தன்னுடைய நிலத்தை - பி - என்பவனைவிற்கச்சொல்லியும் விற்ற பணத்திலேதான் அவனுக்கு பாக்கியிருக்கிற கடனை எடுத்துக்கொள்ளச் சொல்லியும் அவனுக்கு அதிகாரங்கொடுக்கிருன். எ - என்பவன் இந்த அதிகாரத்தை ரத்துசெய்யவுங்கூடாது, அவனுக்கு பைத்தியம்பிடித்தாலும் அவனிறந்துபோனுலும் அதினுலே அந்த அதிகாரம் அற்றுப்போகவுமாட்டாது.

(b). எ - என்பவன் தனக்கு பஞ்சுக்காக முன்பணங் கொடுத்திருக்கிற - பி - என்பவனுக்கு - க,000 - பஞ்சுக் கட்டுகளை அனுப்பி, அந்தப்பஞ்சைவிற்கும்படிக்கும் விற்ற பணத்திலே - பி - என்பவன் கொடுத்திருக்கிற முன்பணத்தை அவன் எடுத்துக்கொள்ளும்படிக்கும் அவனுக்குச்சொல்லுகிருன். எ - என்பவன் இந்த அதிகாரத்தை ரத்துசெய்யவுங்கூடாது அவனுக்கு பைத்தியம்பிடிப்பதினுலாவது அவனிறந்துபோவதினுலாவது அந்த அதிகாரம் அற்றுப்போகவுமாட்டாது.

உ0ங. இதற்கு முந்திய பிரிவிலே இன்னபடிக்கானுல் ரத்தாகாதென்று சொல்லியிருக்கிறபடிக்குத்தவிர, முதலாளியானவன் தன்னுடைய ஏஜெண்டுக்குக்கொடுத்திருக்கிற அதிகாரத்தைத் தன்னை உடன்படுத்தும்படி அது செலுத்தப்படுவதற்குமுன்னமேஎப்போதாகிலும் ரத்துசெய்யலாம்.

முதலாளி ஏஜெண்டினுடைய அதிகாரத்தைஇன்னபடிக்கானுல் ரத்துசெய்யலாம்.

உ0ச. முதலாளி தன்னுடைய ஏஜெண்டுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரம் கொஞ்சமட்டில் செலுத்தப்பட்டபின்பு அந்தயேஜெண்டின் அதிகாரத்தைகொண்டு அதுவரையில் செய்யப்பட்டிருக்கிற செய்கைகள் சம்பந்தமாயுண்டான காரியங்களுக்கும் பொறுப்புக்கும் சம்பந்தப்படுகிறமட்டிலே, அந்த அதிகாரத்தை முதலாளி ரத்துசெய்யக்கூடாது.

அதிகாரம்கொஞ்சமட்டில் செலுத்தப்பட்டிருந்தால் அதைரத்துசெய்வதைக்குறித்து.

திருஷ்டாந்தம்.

(a). ஏ - என்பவன் தன்னிமித்தம் க,000 - பஞ்சுக்கட்டுகள் வாங்கும்படிக்கும், பி - என்பவனிடத்திலிருக்கிற தன் பணத்தில் அதின் கிரயத்தைச்செலுத்தும்படிக்கும் - பி - என்பவனுக்கு அதிகாரங்கொடுக்கிறான். பி - என்பவன் கிரயத்துக்குத்தானே சுதாவில் உத்தரவாதியாகதன்பேராலேயே - க,000 - பஞ்சுக்கட்டுகளை வாங்குகிறான். பஞ்சின் கிரயத்தைச் செலுத்துவதற்குச் சம்பந்தப்படுகிறமட்டிலே ஏ - என்பவன் - பி - என்பவனுடைய அதிகாரத்தை ரத்துசெய்யக்கூடாது.

(b). ஏ - என்பவன் தன்னிமித்தம் - க,000 - பஞ்சுக்கட்டுகளை வாங்கும்படிக்கும் - பி - என்பவனிடத்திலிருக்கிற தன் பணத்தில் அதின் கிரயத்தைச்செலுத்தும்படிக்கும் - பி - என்பவனுக்கு அதிகாரங் கொடுக்கிறான். பி - என்பவன்கிரயத்துக்குத்தானே சுதாவில் உத்தரவாதியாகாதிருக்க - ஏ - என்பவன்பேரால் க,000-பஞ்சு மூட்டைகளை வாங்குகிறான். பஞ்சின் கிரயத்தைச் செலுத்துவதற்கு - பி - என்பவனுக்குள்ள அதிகாரத்தை - ஏ - என்பவன் ரத்துசெய்யக்கூடும்.

முதலாளிரத்துசெய்தாலும் ஏஜெண்டுவிட்டுவிட்டாலும்ஈவுகொடுப்பது.

உ0ரு. ஏதோ ஓர் காலவரையில் ஏஜெண்டுவேலைநடந்துவரவேண்டியதென்று வெளிப்படையான அல்லதுகுறிப்பான கந்திராக்ட்டு ஏற்பட்டிருக்குமாகில், போதுமான காரணமில்லாமல் ஏஜெண்டின்வேலையை அதற்கு முன்னிட்டு, முதலாளி ரத்துசெய்தால் முதலாளி ஏஜெண்டுக்கும், ஏஜெண்டு விட்டுவிட்டால் ஏஜெண்டு முதலாளிக்கும் ஈவுகொடுக்கவேண்டியது.

ரத்துசெய்தாலும் விட்டுவிட்டாலும் அறிக்கைபண்ணுவது.

உ0சு. அப்படி ரத்துசெய்தாலும் விட்டுவிட்டாலும் அதைக்குறித்து கிரமப்படி அறிக்கைசெய்யவேண்டியது, அப்படிச்செய்யாவிட்டால், அதினாலேமுதலாளிக்குநஷ்டமுண்டானால் அவனுக்கு ஏஜெண்டும், ஏஜெண்டுக்குநஷ்டமுண்டானால் அவனுக்குமுதலாளியும் அந்த நஷ்டங் கட்டிக் கொடுக்கவேண்டியது.

ரத்துசெய்வதும் விட்டுவிடுவதும் வெளிப்படையாகவாவதுகுறிப்பாகவாவதிருக்கலாம்.

உ0எ. முதலாளி ரத்துசெய்வதும் ஏஜெண்டு விட்டுவிடுவதும் அவனவனுடைய செய்கையினாலே வெளிப்படையாகவாவதிருக்கலாம்குறிப்பாகவாவதிருக்கலாம்.

திருஷ்டாந்தம்.

ஏ - என்பவன் தன்னுடைய வீட்டைக் குடிக்கூலிக்குவிடும்படி - பி - என்பவனுக்கு அதிகாரங்கொடுக்கிறான். பின்பு - ஏ - என்பவன் தானே அதைக்குடிக்கூலிக்கு விடுகிறான். இதனாலே - பி - என்பவனுடைய அதிகாரத்தை ரத்துசெய்வது குறிப்பாயிருக்கிறது.

ஏஜெண்டின் அதிகாரம்அற்றுப்போவது ஏஜெண்டைக்குறித்தும் மூன்றுமனிதர்களைக் குறித்தும்இன்னகாலத்தில் பயன்படுகிறதென்பது.

உ0அ. ஏஜெண்டின் அதிகாரம் அற்றுப்போவது ஏஜெண்டுக்குச்சம்பந்தப்படுகிற மட்டிலே அது அவனுக்குத்தெரியவருவதற்கு முன்னமே பயன்படாது, மூன்றுமனிதர்களைக் குறித்தோவென்றால் அது அவர்களுக்குத்தெரியவருவதற்கு முன்னமே பயன்படாது.

திருஷ்டாந்தம்.

(a). ஏ - என்பவன் தனக்காக சரக்கை விற்கும்படி - பி - என்பவனுக்குஉத்தரவுசெய்து, அந்த சரக்கைவிற்றுவருகிற பணத்திற்கு நூற்றுக்கு ஐந்துவிழுக்காடு

பி - என்பவனுக்கு கமீஷன்கொடுக்கிறதாய் ஒப்புக்கொள்ளுகிருன். பின்பு-எ-என்பவன் கடிதமூலமாய் - பி - என்பவனுடைய அதிகாரத்தைரத்துசெய்கிருன். பி-என்பவன் அந்தக்கடிதம் அனுப்பப்பட்டபின்பு அது தனக்கு வந்து சேருவதற்குள்ளாக அந்த சரக்கை நூறு ரூபாய்க்கு விற்கிருன். அந்த விற்பனைக்கு - எ - என்பவன் உடன்படவேண்டியவனுகிருன். பி - என்பவன் தனக்குக் கமீஷனுக ஐந்துரூபாய்க்கு அர்ஹனுகிருன்.

(b). சென்னபட்டணத்திலிருக்கிற - எ - என்பவன் பொம்பாயிலே ஒரு கிடங்கிலிருக்கிற கொஞ்சம் பஞ்சை தனக்காக விற்கும்படி - பி - என்பவனுக்குக் கடிதமூலமாய் உத்தரவுசெய்கிருன், பின்பு அவன் விற்கும்படி தான்கொடுத்தஅதிகாரத்தை ரத்துசெய்து, அந்தப்பஞ்சை சென்னபட்டணத்திற்கு அனுப்பும்படி - பி என்பவனுக்கு உத்தரவுசெய்கிருன். தனுக்கு இரண்டாவது கடிதம் வந்துசேர்ந்தபின்பு, பி - என்பவன் - முதற் கடிதத்தைமாத்திரம்அறிந்து இரண்டாவதுகடிதத்தை அறியாம லிருக்கிற - சி - என்பவனுக்கு அந்தப்பஞ்சை விற்கும்படி அவனேடுகந்திராக்ட்டுசெய்கிருன். சி - என்பவன் - பி-என்பவனுக்கு பணத்தைச் செலுத்துகிருன், அதை - பி - என்பவன் எடுத்துக்கொண்டு ஓடிப்போகிருன். சி - என்பவன் செலுத்தினதுகிரமமே, அவன்பேரில் - எ - என்பவன்தொடரக்கூடாது.

(c). சி - என்பவனுக்கு ஏதோ ஒரு தொகை கொடுக்கும்படி - எ - என்பவன் தன்னுடைய ஏஜெண்டாகிய - பி - என்பவனுக்குஉத்தரவுசெய்கிருன். எ-என்பவன் இறந்துபோகிருன், அவனுடைய உயிலுக்கு - டி - என்பவன்புரொபேட்என்னும் அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிருன். எ - என்பவன்இறந்துபோனபின்பு அதைக் கேள்விப்படுவதற்குள்ளாக - பி - என்வபன் - சி - எனபவனுக்குப் பணங்கொடுக்கிருன். அவன் பணங்கொடுத்ததுகிரமமே, அதை எக்ஜிக்யூட்டராகிய - டி - என்பவன் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

முதலாளி இறந்துபோவதினுலாவது அவனுக்குப்பைத்தியம்பிடிப்பதினுலாவது ஏஜெண்டின்வேலைஅற்றுப்போவதின்பேரில் ஏஜெண்டினுடையகடமை.

உ0கூ. முதலாளிஇறந்துபோவதினுலாவது சித்தஸ்வாதீன மில்லாதவனுதலினுலாவது யேஜெண்டின்வேலை அற்றுப்போகும்போது, அந்த யேஜெண்டானவன் தன்வசம் செய்யப்பட்டிருக்கிற பிரயோசனங்களை தனக்கு முதலாளியாயிருந்தவனுடைய பிரதி நிதிகள் பட்சத்தில் காப்பாற்றி பந்தோபஸ்து செய்வதற்கு வேண்டிய கிரமமான சகலவகைகளையும் செய்யக்கடவன்.

கீழ் ஏஜெண்டினுடையஅதிகாரம் அற்றுப்போவது.

உக0. ஏஜெண்டினுடைய அதிகாரம் அற்றுப்போகும்போதே அவனுல் நேமிக்கப்பட்டசகலகீழ்ஏஜெண்டுகளுடைய அதிகாரமும் (ஏஜெண்டின் அதிகாரம் அற்றுப்போவதைக்குறித்து இதில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு) அற்றுப்போகிறது.

முதலாளி விஷயத்தில் ஏஜெண்டு நடந்துகொள்ள வேண்டியகடமை.

முதலாளியினுடைய காரியத்தை நடத்துவதில் யேஜெண்டினுடையகடமை.

உகக. ஏஜெண்டானவன் தன்னுடைய முதலாளியின் காரியத்தை அந்த முதலாளிசெய்த உத்தரவின்படிக்காவது அப்படிப்பட்ட உத்தரவு யாதொன்றுமில்லாவிட்டால், அப்படிப்பட்டகாரியத்தையேஜெண்டுநடத்துகிற இடத்தில் அதேவிதமான காரியம் என்னமாய்நடத்தப்படுகிறதோ அந்தவழக்கப் படிக்காவது நடத்துவதற்குக் கட்மைபூண்டிருக்கிருன் யேஜெண்டானவன் வேறேவித

மாய் நடத்தினால் யேதாவது நஷ்டம் நேரிடுகிறபட்சத்தில் அதை அவன் முதலாளிக்குச்சரிச்சொல்லவேண்டியது, லாபம் யேதாவது வருகிறபட்சத்தில், அதை அவன் முதலாளியின் கணக்கில் சேர்க்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a). ஏஜெண்டாகிய - ஏ - என்பவன் - பி - என்பவனுக்காக ஓர் விதவேலையை நடத்துவதில் அமர்த்தப் பட்டிருக்கிறான், அது கையில் நிற்கிற பணத்தை அப்போதப்போது வட்டிக்குப்போடுகிற வழக்கமுடையவேலை, அப்படி யிருக்க அந்த - ஏ - என்பவன் அப்படி கையிருப்புப் பணத்தை வட்டிக்குப்போடாமலிருக்கிறான்; அவன் அப்படி வட்டிக்குப்போடப்படுவதினாலே வழக்கமாய் கிடைக்கிற வட்டியை - பி - என்பவனுக்குக் கட்டிக்கொடுக்க வேண்டியது.

(b). தரகிரியாகிய - பி - என்பவன் தன்னுடைய வியாபாரத்தில் சரக்கைக் கடனுக்கு விற்கிற வழக்கமில்லாதிருக்க, ஏ - என்பவனுடைய சரக்கை அப்போது மிகவும் மாதுபரியாயிருந்த - சி - என்பவனுக்குக்கடனுக்கு விற்கிறான். சி - என்பவன் பணஞ்செலுத்துவதற்கு முன்னேகடனிறுக்கச்சக்தியற்றவனாகிறான். அந்த நஷ்டத்தை - பி - என்பவன் - ஏ - என்பவனுக்குச் சரிப்படுத்த வேண்டியது.

ஏஜெண்டுக்கு இருக்க வேண்டிய திறமையும்ஜாக்கிரதையும்.

௨௧௨. ஏஜெண்டு திறமையற்றவனென்று முதலாளிக்குத் தெரிந்திருந்தாலொழிய, அவ்விதமான வேலையில் அமர்ந்திருக்கிறவர்களுக்கு சாதாரணமாய் எவ்வளவு திறமையிருக்கிறதோ அவ்வளவு திறமையோடு அந்த யேஜண்டானவன் தனக்கு யேற்பட்டிருக்கிற வேலையை நடத்தக்கடவன். அந்த யேஜெண்டானவன் தகுந்த ஜாக்கிரதையோடு பிரவர்த்திக்கவும் தனக்குள்ள திறமையை உபயோகிக்கவும் எப்போதும் கடமைப்பட்டிருக்கிறான்: மேலும் தன்னுடைய சொந்த அஜாக்கிரதையினாலாவது திறமைக் குறைவினாலாவது துர்நடத்தையினாலாவது நேராய் சம்பவிக்கிற நஷ்டங்களைக் குறித்து தன்னுடைய முதலாளிக்கு ஈவு கட்டிக்கொடுக்கக் கடமைப் பட்டவனேயல்லாமல், அப்படிப்பட்ட அஜாக்கிரதையினாலாவது திறமைக் குறைவினாலாவது துர்நடத்தையினாலாவது அடுத்தாற்போலல்லாமல் தூலவாய் உண்டாகிற நஷ்டத்தைக் குறித்தாகிலும் சேதத்தைக் குறித்தாகிலும் ஈவு கட்டிக்கொடுக்கக் கடமைப்பட்டவனல்ல.

திருஷ்டாந்தம்.

(a). கல்கத்தாவிலிருக்கிற வர்த்தகனாகிய - ஏ - என்பவனுக்கு லண்டன் பட்டணத்திலே - பி - என்கிற ஒரு ஏஜெண்டு இருக்கிறான். அந்த ஏஜெண்டினிடத்திலே - ஏ - என்பவனுக்கு அனுப்பும்படி ஒரு தொகை செலுத்தப்படுகிறது. பி - என்பவன் அந்தப்பணத்தை நெடுங்காலம் நிறுத்திக்கொள்ளுகிறான். ஏ - என்பவன் அந்தப் பணம் தனக்கு வராமையினாலே கடனிறுக்கச் சக்தியற்றவனாகிறான். அந்தப்பணத்தையும் அதைச்செலுத்தியிருக்கவேண்டிய தினமுதற்கொண்டு வழக்கமான வீதப்படி வட்டியையும், வட்டவீதம் மாறுவதுபோன்ற பின்னும் ஏதாவது நேரானநஷ்டமுண்டானால், அதையும்செலுத்துவதற்கு - பி - என்பவன் கடமைப்பட்டிருக்கிறானேயல்லாமல், அதற்கு மிஞ்சி வேறொன்றும் செலுத்தக்கடமைப்பட்டவனல்ல.

(b). சரக்கு விற்பனைசெய்ய யேஜெண்டாயிருக்கிற - ஏ - என்பவன் கடனுக்கு விற்க அதிகாரம்பெற்றுக்கொண்டு, பி - என்பவன் கடனிறுக்க சக்தியுள்ளவனாயிருக்கிறானவென்று வழக்கப்படி கிரமமான விசாரணைசெய்யாமல் அவனுக்கு கடனுக்கு விற்கிறான். அப்படிப்பட்ட விற்பனை காலத்தில் - பி - என்பவன் கட

னிறுக்கச் சக்தியற்றவனுயிருக்கிருன். அதனுலுண்டாகிற யாதொருநஷ்டத்தைக் குறித்து - எ - என்பவன் தன்னுடைய முதலாளிக்கு ஈவு கட்டிக்கொடுக்க வெண்டியது.

(c). ஒரு கப்பலுக்கு இன்ஷியூரான்ஸ் பண்ணிக்கொள்ளும்படி - பி - என்பனுல் அமர்த்திக்கொள்ளப்பட்ட இன்ஷியூரான்சு தரகிரியாகிய - எ - என்பவன் அந்த பாலிஸியிலே வழக்கமான ஷரத்துகள் எழுதியிருக்கிறதாவென்று பார்க்காமல் போகிருன். பின்பு அந்தக்கப்பல்சேதப்பட்டுபோகிறது. அந்த ஷரத்துகள் எழுதியிராததைப்பற்றி இன்ஷியூரான்ஸ் கொடுத்தவர்களிடத்திலிருந்து ஒன்றும் வரப்பற்றக்கூடவில்லை. அந்த நஷ்டத்தை - எ - என்பவன் - பி - என்பவனுக்குக் கட்டிக்கொடுக்கக்கடவன்.

(d). இங்கிலாந்திலிருக்கிற வர்த்தகனுகிய - எ - என்பவன் - யேஜெண்டின் வேலையை அங்கீகரித்து பொம்பாயிலிருக்கிற தன்னுடைய யேஜெண்டாகிய - பி - என்பவனுக்கு யேதோ ஒரு கப்பலில் நூறு பஞ்சு மூட்டைகளை தனக்கு அனுப்பும்படி உத்தரவுசெய்கிருன். பி - என்பவன் பஞ்சை அனுப்ப தனக்குசாத்தியமிருந்தும் அனுப்பாமல் சும்மாயிருந்துவிடுகிருன். அந்தக்கப்பல் க்ஷேமமாய் இங்கிலாந்தில்வந்துசேருகிறது. அதுவந்துசேர்ந்த உடனே பஞ்சின் விலை உயருகிறது. கப்பல் வந்து சேர்ந்தகாலத்தில் - எ - என்பவனுக்கு நூறு பஞ்சு மூட்டைகளால்எவ்வளவு லாபம்வந்திருக்குமோ அவ்வளவு லாபத்தை அவனுக்கு - பி - என்பவன் கட்டிக்கொடுக்க கடமைப்பட்டவனேயல்லாமல், பின்னிட்டு விலை உயருவதினுலே அவனுக்குக் கிடைத்திருக்கும்படியான யாதொரு லாபத்தைக்கட்டிக்கொடுக்கக் கடமைப்பட்டவனல்ல.

ஏஜெண்டின்கணக்குகள்.

௨௧௩. முதலாளி எப்போது கேட்கிருனே அப்போது அவனுக்கு சரியான கணக்கு கொடுப்பதற்கு யேஜெண்டு கடமைப்படடிருக்கிருன்.

முதலாளிக்குத் தெரியப்படுத்துவது ஏஜெண்டின்கடமை.

௨௧௪. கஷ்டமான சங்கதிகளிலே தன்னுடைய முதலாளிக்குத் தெரியப்படுத்தி அவனுடைய உத்தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்குகிரமமான சகல ஜாக்கிரதையோடும் பிரவர்த்திப்பதுயேஜெண்டின் கடமையாயிருக்கிறது.

ஏஜெண்டு அலுவலைச்சேர்ந்தவேலையில்முதலாளியினுடைய சம்மதியில்லாமல்யேஜெண்டானவன்தன்சொந்தத்திற்குப்பிரவேசிக்கும்போது முதலாளிக்குண்டான பாத்தியதை.

௨௧௫. ஏஜெண்டின் அலுவலைச்சேர்ந்த காரியத்தில் ஒரு யேஜெண்டானவன் தன் சொந்தத்திற்குப் பிரவேசிப்பானுகில், அவன் பிரதமத்தில் முதலாளியினுடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமலும், அந்தவிஷயத்தைக்குறித்து தனக்குத் தெரியவந்திருக்கிற சகல முக்கியமான சங்கதிகளையும் அவனுக்குத்தெரியப்படுத்தாமலும் அப்படி பிரவேசித்திருக்கிற பட்சத்தில், யாதொரு முக்கியமான சங்கதியைமுதலாளிக்கு யேஜெண்டானவன் அயோக்கியமாய் மறைத்துப்போட்டானென்ருவது, யேஜெண்டின் செய்கைகள் முதலாளிக்கு பிரதிகூலமாயிருந்ததென்ருவது சங்கதியினுல் தெரியவருமாகில், யேஜெண்டு நடத்தின அந்தக்காரியத்தைத்தனக்கு நிமித்தமில்லையென்று முதலாளி அடித்துப்போடலாம்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் தன்னுடைய பூஸ்திதியை விற்கும்படி - பி - என்பவனுக்கு உத்தரவுசெய்கிருன். பி - என்பவன் தனக்காக அந்த பூஸ்திதியை - சி - என்

பவன்போரல் கொள்ளுகிருன் பி - என்பவன் அவனுக்காகவே அந்த பூஸ்திதியை க் கொண்டானென்று - எ - என்பவன் கண்டு கொள்வதின்பேரில், அவன்யாதொரு முக்கியமான சங்கதியை - பி - என்பவன் அயோக்கியமாய் மறைத்தானென்ருவது, அந்த விக்கிரயம் தனக்குப் பிரதி கூலமாயிருக்கிறதென்ருவது தெரியப்படுத்த மாட்டுவானுகில், அவன் அந்த விக்கிரயத்தைத் தனக்கு நிமித்த மில்லையென்று அடித்துப்போடலாம்.

(b). எ - என்பவன் தன்னுடைய பூஸ்திதியை விற்கும்படி - பி - என்பவனுக்கு உத்தரவு செய்கிருன். பி - என்பவன் அந்த பூஸ்திதியை விற்பதற்கு முன்னமே அதை முழுதும் பார்வையிடுவதின்பேரில் - எ - என்பவனுக்குத் தெரியாதிருக்கிற ஒரு கனியை அதில் கண்டுகொள்ளுகிருன். பி - என்பவன் அந்த பூஸ்திதியை தன் சொந்தத்திற்கு வாங்கிக் கொள்ளத் தனக்கு இஷ்டமிருக்கிறதாய் - எ - என்பவனுக்குத் தெரிவிக்கிருனே யல்லாமல் கனியைக் கண்டுபிடித்ததை மறைத்துப் போடுகிருன். எ - என்பவன் கனியிருக்கிறது தெரியாதவனுய் - பி - என்பவனை அந்த பூஸ்திதியை வாங்கிக் கொள்ளவொட்டுகிருன். பி - என்பவன் அந்த பூஸ்திதியை வாங்கினகாலத்தில் அந்தகனி சங்கதி அவனுக்குத் தெரியுமென்று - எ - என்பவன் கண்டுகொள்வதின்பேரில் அவன் தன்னுடைய இஷ்டானுசாரம் அந்த விற்பனையை அடித்துப்போட்டாலும் போடலாம் யேற்றுக் கொண்டாலும் கொள்ளலாம்.

எஜெண்டின் அலுவலைச்சேர்ந்த வேலையில் யேஜெண்டானவன் தன்சொந்தத்திற்கு நடத்துகிற காரியத்தினுலுண்டாகிற பிரயோஜனத்துக்கு முதலாளிக்குள்ள பாத்தியதை.

உகசூ. எஜெண்டின் அலுவலைச்சேர்ந்த வேலையில் யேஜெண்டானவன் தன்னுடையமுதலாளினிமித்தம் செய்யவேண்டியதை விட்டு தன் சொந்தத்திற்கு முதலாளிக்குத்தெரியப்படுத்தாமல் யாதொருகாரியத்தைச் செய்தால், அந்தக்காரியத்தினுலே யேஜெண்டுக்கு உணடாகும்படியானயாதொரு பிரயோசனத்திற்கு அவனிடத்திலே தாவா செய்ய முதலாளிக்கு பாத்தியதையுண்டு.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் தனக்காக யேதோ ஒரு வீட்டைக் கொள்ளும்படி தன்னுடைய யேஜெண்டாகிய-பி-என்பவனுக்கு உத்தரவுசெய்கிருன். அது விலைக்குக் கிடைக்கமாட்டாதென்று - பி - என்பவன் - எ - என்பவனுக்குச் சொல்லிவிட்டு, அந்த வீட்டைத் தன்சொந்ததிற்கு வாங்கிக்கொள்ளுகிருன். பி - என்பவன் அந்த வீட்டை வாங்கிக்கொண்டானென்று - எ - என்பவன் தெரிந்துகொள்வதின்பேரில், அவன் அதை - பி - என்பவன் வாங்கின விலைக்குத்தனக்கு விற்கும்படி அவனை நிர்ப்பந்திக்கலாம்.

உகஎ. எஜெண்டின் அலுவலைச்சேர்ந்த வேலையில் முதலாளியினிமித்தம் வரப்பற்றிக் கொள்ளப்பட்ட எந்த தொகையிலாவது யேஜெண்டானவன் அப்படிப்பட்ட வேலையை நடத்துவதில் தான் கொடுத்த முன்பணத்தைக்குறித்தாவது தான் கிரமமாய்ச் செய்த செலவுகளைக் குறித்தாவது தனக்குச் சேரவேண்டிய சகலபணத்தையும், குமஸ்தாவாய்ப்பிரவர்த்திப்பதற்காக தனக்குச்செலுத்தப்படத்தக்க ஈவு தொகையையும் நிறுத்திக்கொள்ளலாம்.

முதலாளியி னிமித்தம் வரப்பற்றிக் கொள்ளப்பட்ட தொகையிலே நிறுத்திக்கொள்ளயேஜெண்டுக்குண்டானபாத்தியதை.

உகஅ. எஜெண்டானவன் முதலாளியினிமித்தம் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட தொகைகளில் மேற்கண்டபடி நிறுத்திக் கொள்ளப்பட்டதுபோ

முதலாளிக்காக வரப்பற்றிக் கொள்ளப்பட்ட

தொகைகளைச் செலுத்துவது ஏஜெண்டின் கடமை.

க மற்றப் பணமுழுமையும் தன் முதலாளிக்குச் செலுத்தக்கடவன்.

ஏஜெண்டுக்குச் சேரத்தக்க ஈவு இன்னகாலத்தில் கொடுக்கும் படியானதாகும்.

௨௧௯. பிரத்தியேகமான யாதொரு கந்திராட்டு இல்லாதபட்சத்தில், யாதொரு காரியத்தை நிறைவேற்றுவதற்காகக் கொடுக்கத்தக்க பணத்தை அப்படிப்பட்ட காரியம் பூர்த்தியாகிறவரையில் யேஜெண்டுக்குக்கொடுக்கவேண்டியதில்லை; ஆனால் யேஜெண்டானவன் விற்பனைக்காகத் தன்னிடத்திற்கு அனுப்பப்பட்ட சரக்கு முழுமையையும் விற்றிராமற்போனபோதிலும் வாஸ்தவமாய் விற்பனை பூர்த்தியாகாமற்போனபோதிலும், விற்கப்பட்ட சரக்கின்பொருட்டு தான் வரப்பற்றிக்கொண்ட பணத்தை நிறுத்திவைக்கலாம்.

வேலையை அக்கிரமமாய் நடத்தினால் அதற்காக ஈவு பெற்றுக்கொள்ள ஏஜெண்டு அர்ஹனல்ல.

௨௨௦. ஏஜெண்டின் அலுவலைச்சேர்ந்த வேலையில் அக்கிரமமாய்ப் பிரவர்த்தித்த யேஜெண்டானவன் அந்த வேலையில் எவ்வளவு அவன் அக்கிரமமாய் நடத்தினானோ அவ்வளவிற்கு யாதொரு ஈவு பெற்றுக்கொள்ள அர்ஹனல்ல.

திருஷ்டாந்தம்.

(a). சி - என்பவனிடத்திலே ௧,௦௦,௦௦௦ ரூபாய் வசூல்செய்யவும் அதை தகுந்த ஈட்டின்பேரில் கொடுக்கவும் - எ - என்பவன் – பி - என்பவனை யேற்படுத்துகிறான், பி - பின்பவன் அந்த ௧,௦௦,௦௦௦ ரூபாயை வசூல்செய்து ௯௦,௦௦௦ ரூபாயைத் தகுந்த ஈட்டின்பேரில் கொடுக்கிறான், ஆனால் தகாத ஈடென்று அவன் தெரிந்துகொண்டிருக்கவேண்டிய ஒரு ஈட்டின்பேரில் ௧௦,௦௦௦ ரூபாய் கொடுக்கிறான், அதினாலே - எ என்பவனுக்கு ௨,௦௦௦ ரூபாய் நஷ்டம் வருகிறது. ௧,௦௦,௦௦௦ ரூபாயை வசூல்செய்ததற்காகவும் ௯௦,௦௦௦ ரூபாயை தகுந்த ஈட்டின்பேரில் கொடுத்ததற்காகவும் ஈவுபெற்றுக்கொள்ள-பி-என்பவன் அர்ஹனாகிறான். ௧௦,௦௦௦ ரூபாயை ஈட்டின்பேரில் கொடுத்ததற்காக அவன் யாதொரு ஈவுபெற்றுக்கொள்ள அர்ஹனல்ல, மேலும் அவன் அந்த ௨,௦௦௦ ரூபாயை - பி - என்பவனுக்குச் சரிப்படுத்தவேண்டியது.

(b). சி என்பவனிடத்திலிருந்து ௧,௦௦௦ ரூபாய் வசூல் செய்யும்படி - பி - என்பவனை - எ - என்பவன் அமர்த்துகிறான். பி - என்பவனுடைய அக்கிரமத்தினாலே பணம் வசூலாகவில்லை. பி - என்பவன் தன்னுடைய ஊழியத்திற்காக ஈவு பெற்றுக்கொள்ள அர்ஹனாகாமற்போவதுமன்றி அந்தநஷ்டத்தைக்கட்டிக்கொடுக்கவும் வேண்டியது.

முதலாளியினுடைய சரக்கையும் தஸ்தாவேசுகளையும் நிறுத்தி வைத்துக்கொள்ள யேஜெண்டுக்குண்டான பாத்தியதை.

௨௨௧. அடியில் சொல்லியிருக்கிறபடி செய்யக்கூடாமையைப்பற்றி யாதொரு கந்திராக்ட்டு யேற்பட்டிராதபட்சத்தில், யேஜெண்டானவன்—முதலாளியுடையதாய் தான் வரப்பற்றிக்கொண்டிருக்கிற சரக்குகளையும் தஸ்தாவேசுகளையும் அசையும்பொருளாகவாவது அசையாப்பொருளாகவாவதிருக்கிற வேறே சொத்தையும், அதுகள் விஷயமாய் கமிஷன்செலவுகள் ஊழியம் - இதுகளுக்காகத் தனக்குவரவேண்டிய தொகைசெலுத்தப்படுகிறவரையிலாவது தனக்கு சரிச்சொல்லப்படுகிறவரையிலாவது, தன்னிடத்தில் நிறுத்திவைத்துக்கொள்ள அர்ஹனாகிறான்.

ஏஜெண்டுக்கு முதலாளியின் கடமை.

சட்டசம்மதமான காரியங்களினல் உண்டாகிறவைகளுக்குயேஜெண்டுநிரபராதியாவானென்பது.

௨௨௨. யேஜெண்டானவன் தனக்குகொடுக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு சட்டசம்மதமாய்ச்செய்கிற சகல காரியங்களினு லுண்டாகிறவைகளுக்கு அவனை நிரபராதியாக்குவது அந்த யேஜெண்டை நேமித்துக் கொண்டவனுடைய கடமையாயிருக்கிறது,

திருஷ்டாந்தம்.

(a). சிங்கப்பூரிலிருக்கிற - பி - என்பவன் கல்கத்தாவிலிருக்கிற - எ - என்பவனுடைய உத்தரவுபிரகாரம் — சி - என்பவனுக்கு சிலசரக்குஒப்பிப்பதாய் அவனோடு கர்திராக்ட்டு செய்கிறான். எ - என்பவன் - பி - என்பவனுக்கு சரக்கனுப்பவில்லை, கந்திராக்ட்டுவிக்கினப்பட்டுப்போனதற்காக - சி - என்பவன் — பி - என்பவன் பேரில் வியாச்சியந் தொடருகிறான். அந்த வியாச்சியத்தைக்குறித்து - பி - என்பவன் - எ - என்பவனுக்குத் தெரிவிக்கிறான், எ — என்பவன் அந்த வியாச்சியத்தில் பிரதி வாதஞ்செய்யும்படி - பி-என்பவனுக்கு அதிகாரங்கொடுக்கிறான். பி-என்பவன் அந்த வியாச்சியத்தில் பிரதிவாதஞ்செய்தபின்பு நஷ்டத்தையும் கோர்ட்டுச்செலவையுஞ் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்படுவதுமல்லாமல் அவனுக்கு வேறே செலவுகளும் நேரிடுகிறது. அப்படிப்பட்ட நஷ்டத்திற்காகவும் கோர்ட்டுச் செலவுக்காகவும் மற்றச் செலவுக்காகவும் - எ - என்பவன் - பி - என்பவனுக்கு உத்தரிக்கக்கடவன்.

(b). கல்கத்தாவிலுள்ள தரகிரியாகிய - பி - என்பவன் அவ்விடத்திய வர்த்தகனாகிய - எ - என்பவனுடைய உத்தரவின்படி - எ - என்பவனுக்காக பத்துபீப்பாயெண்ணெய் வாங்கிக்கொள்வதாய் - சி - என்பவனோடு கந்திராக்ட்டுசெய்கிறான். பின்பு - எ - என்பவன் எண்ணெயை வாங்கிக்கொள்ளாமல் நிராகரிக்கிறான், சி-என்பவன் - பி - என்பவன்பேரில் வியாச்சியந்தொடருகிறான். அதைக்குறித்து-பி-என்பவன் - எ - என்பவனுக்குத் தெரியப்படுத்துகிறான், எ - என்பவன் அந்த கந்திராக்ட்டு தனக்கு எவ்வளவேனும் நிமித்தமில்லையென்கிறான். பி - என்பவன் பிரதிவாதஞ்செய்கிறான், ஆனால் அபசெயமடைகிறான், நஷ்டத்தையும் கோர்ட்டுச்செலவையும் அவன் செலுத்தவேண்டியிருப்பதுமல்லாமல் அவனுக்கு வேறேசெலவுகளும் நேரிடுகிறது. அப்படிப்பட்ட நஷ்டத்திற்காகவும், கோர்ட்டுச் செலவுக்காகவும்மற்றச் செலவுக்காகவும் - எ - என்பவன் - பி - என்பவனுக்கு உத்தரிக்கக்கடவன்.

நல்ல எண்ணத் தோடு செய்யப்பட்ட காரியங்களினலுண்டாகிறவைகளுக்கு ஏஜெண்டு நிரபராதியாவா னென்பது.

௨௨௩. ஒருகாரியத்தைச் செய்யும்படி ஒருவன் வேறொருவனை நேமித்தால், அந்த ஏஜெண்டு அந்தக்காரியத்தை நல்ல எண்ணத்தோடு செய்வானாகில், அதினாலே மூன்றுமனிதர்களுடைய சுதந்தரங்களுக்குக் கெடுதியுண்டானபோதிலும். அந்தக்காரியத்தினு லுண்டாகிறவைகளுக்கு அந்த ஏஜெண்டை நிரபராதியாக்குவது அவனை நேமித்துக்கொண்டவனுடையகடமையாயிருக்கிறது.

திருஷ்டாந்தம்.

(a). டிக்ரி பெற்றவனாகிய - எ - என்பவன் - பி - என்பவனுடைய சரக்கின் பேரில் அந்த டிக்ரியை நிறைவேற்ற பாத்தியதை யுடையவனாய், யேதோ சில சரக்குகளை - பி - என்பவனுடையதென்று சொல்லி கோர்ட்டு உத்தியோகஸ்தனை அதுகளைக் கைப்பற்றச்சொல்லுகிறான். அந்த உத்தியோகஸ்தன் அந்த சரக்குகளைக் கைப்பற்றுகிறான், அதனாலே அவன்பேரில் அந்த சரக்குக்கு எதார்த்தமான சொந்தக்கார

ணுகிய - சி - என்பவன் வியாச்சியந் தொடருகிருன். எ - என்பவன் சொல்லியபடி செய்ததைப்பற்றி அந்த உத்தியோகஸ்தன் - சி - என்பவனுக்குச் செலுத்தவேண்டி வந்த தொகைக்கு அவனைக் காட்டிக்கொடுக்காமல் - எ - என்பவன் உத்தரிக்கக்கடவன்.

(b). எ - என்பவன் கேட்டுக்கொள்ளுகிறபடி அவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிற சரக்கை - பி - என்பவன் விற்கிருன், ஆனால் அதை விற்க - எ - என்பவனுக்குச் சுதந்திரமில்லை. அது - பி - என்பவனுக்குத்தெரியாது, விற்றுவந்த பணத்தை அவன் - எ - என்பவனுக்கு கொடுத்துவிடுகிருன். பின்பு அந்த சரக்குக்கு எதார்த்தமான சொந்தக்காரனாகிய - சி - என்பவன் - பி - என்பவன்பேரில் வியாச்சியந் தொடர்ந்து அந்தசரக்கின்கிரயத்தையும் கோர்ட்டுச்செலவையும் வரப்பற்றுகிருன். பி - என்பவன் - சி - என்பவனுக்குச் செலுத்த வேண்டிவந்த தொகைக்கும் - பி- என்பவனுக்குச் சொந்தத்தில் நேரிட்ட செலவுக்கும் அவனைக்காட்டிக்கொடாமல் எ - என்பவன் உத்தரிக்கக்கடவன்.

குற்றசம்பந்தமான காரியத்தைச்செய்ய யேஜெண்டை நேமித்துக்கொண்டவன் உத்தரவாதியல்ல.

௨௨௪. குற்ற சம்பந்தமான யாதொருகாரியத்தைச்செய்ய ஒருவன் வேறொருவனை யேற்படுத்தினால், அந்த காரியத்தினாலுண்டாகிறவைகள் யேஜெண்டைச் சேராமல் அவனை நிவர்த்திசெய்வதாய் வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்தபோதிலும், அதைக்குறித்து அந்த யேஜெண்டுக்கு அவனை நேமித்துக்கொண்டவன் கடமைப்பட்டவனாகான்.

திருஷ்டாந்தம்.

(a). சி - என்பவனை அடிக்க - பி - என்பவனை - எ - என்பவன் நேமித்து, அந்தச்செய்கையினாலுண்டாகும் சகலதகிற்கும் அவனைக்காட்டிக்கொடாமல் தான் உத்தரிப்பதாக உடன்படுகிருன். அதின்பேரில், பி - என்பவன் - சி - என்பவனை அடிக்கிருன், அப்படி அடித்ததற்காக அவன் - சி-என்பவனுக்கு நஷ்டங்கொடுக்க வேண்டியவனாகிருன். அந்த நஷ்டத்திற்காக - பி - என்பவனை நிவாரணைசெய்ய எ - என்பவன கடமைப்பட்டவனல்ல.

(b). ஒருசமாசார பத்திராதிபனாகிய - பி - என்பவன் - எ - என்பவனால்கேட்டுக்கொள்ளப்படுவதின்பேரில் தன்பத்திரிகையில் - சி - என்பவன்பேரிலே ஒரு அவதூறைப்பிரசித்தப்படுத்துகிருன், அந்த பிரசித்தத்தினா லுண்டாகிறவைகளுக்கும், அதைக்குறித்து கொண்டுவரப்படுகிற யாதொருவியாச்சியத்தின் சகல செலவுகளுக்கும் நஷ்டத்திற்கும் - பி - என்பவனைக் காட்டிக்கொடாமல் தானே உத்தரிப்பதாய் - எ - என்பவன் உடன்படுகிருன். பி - என்பவன் பேரில் - சி - என்பவன் வியாச்சியந்தொடர்ந்து அதினால் - பி - என்பவன் நஷ்டஞ்செலுத்தவேண்டி வருகிறதுமல்லாமல் அவனுக்கு வேறே செலவுகளும் நேரிடுகிறது. பி - என்பவனைக்காட்டிக்கொடாமல் நிவாரணை செய்வதற்கு - எ - என்பவன் கடமைப்பட்டவனல்ல.

முதலாளியினுடைய அஜாக்கிரதையினால் உண்டாகிற கெடுதிக்காக யேஜெண்டுக்கு ஈவு.

௨௨௫. முதலாளியானவன் தன்னுடைய அஜாக்கிரதையினாலாவது திறமைக்குறைவினாலாவது தன்னுடையயேஜெண்டுக்கு உண்டாகிற கெடுதியைக்குறித்து அந்த யேஜெண்டுக்கு ஈவுகொடுக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

ஒரு வீடு கட்டுவதில்கொல்லெற்றுக்காரனாகிய - பி - என்பவனை - எ - என்பவன் அமர்த்தி, சாரத்தைத்தானே போடுகிருன். அந்த சாரம் திறமைக் கேடாய்ப்

போட்டப்பட்டதினுலே - பி - என்பவனுக்கு துன்பமுண்டாகிறது. எ - என்பவன் பி - என்பவனுக்கு ஈவு கொடுக்கவேண்டியது.

மூன்றுமனிதர்களோடு செய்யப்பட்ட கந்திராக்ட்டின்பேரில் ஏஜெண்டின் அலுவலினுலுண்டாவது.

எஜெண்டின் கந்திராக்ட்டைநிறைவேற்றும்படி செய்வதும் அந்தகந்திராக்ட்டினுலுண்டாவதும்.

௨௨௬. எஜெண்டுமூலமாய் செய்யப்பட்டகந்திராக்ட்டுகளையும் பேஜெண்டு செய்கிற காரியங்களினுலுண்டாகிறபொறுப்புகளையும், அந்த கந்திராக்ட்டுகளும்அந்தக்காரியங்களும் நேராய் முதலாளியினுல் செய்யப்பட்டிருந்தால் எப்படியோ அவ்விதமாகவேநிறைவேற்றும்படிசெய்யலாம், மேலும்அதுகளுக்கு-முதலாளியினுல் செய்யப்பட்ட கந்திராக்டுகளுக்கும் காரியங்களுக்கும் சட்ட சம்மதமான பிரயோசனம் என்னஉண்டாயிருக்குமோ அதே பிரயோசனங்களுண்டாயிருக்கும்.

திருஷ்டாந்தம்.

(a). சரக்குகளை விற்பதற்கு - பி - என்பவன் யேஜெண்டாயிருக்கிறுனென்று அறிந்து அவனிடத்திலே - எ - என்பவன் சரக்குக் கொள்ளுகிறுன், ஆனல் இவனுக்கு முதலாளி இன்னுனென்று தெரியாது - சரக்கின் கிரயத்தை - எ - என்பவனிடத்திலிருந்து தாவாசெய்ய பாத்தியமுள்ளவன் - பி-என்பவனுடைய முதலாளிதான்; முதலாளிகொண்டு வருகிற வியாச்சியத்திலே, எ - என்பவன் தனக்கு பி - என்பவன் பாக்கியாயிருக்கிற கடனுக்கு அந்த சரக்கின் கிரயத்தைச் செல்லுவைத்துக்கொள்வதாகச் சொல்லக்கூடாது.

(b). பி - என்பவன்பொருட்டு பணம் வரப்பற்றுவதற்கு அதிகாரம்பெற்ற அவனுடைய யேஜெண்டாயிருக்கிற - எ - என்பவன் - பி - என்பவனுக்கு வரவேண்டிய பாக்கிப்பணத்தை - சி - என்பவனிடத்திலிருந்து வரப்பற்றுகிறுன். மேற்படி தொகையை - பி - என்பவனுக்குச் செலுத்தவேண்டிய பொறுப்பு - சி - என்பவனை விட்டுப்போகிறது.

எஜெண்டானவன் அதிகாரத்தை மிஞ்சும்போது முதலாளி எவ்வளவு மட்டில் உடன்பட வேண்டியது.

௨௨௭. ஏஜெண்டானவன் எவ்வளவுசெய்ய தன்க்கு அதிகாரங்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைவிட அதிகமாகச் செய்தால், அவன் செய்கிறதில் அவனுடைய அதிகாரத்திற் குட்பட்டிருக்கிற பாகமானது அவனுடைய அதிகாரத்திற்கு மிஞ்சின பாகத்திலிருந்து பிரிக்கக்கூடுமானதா யிருக்குமாகில் அவன் செய்கிறதில் எவ்வளவு அவனுடைய அதிகாரத்திற் குட்பட்டிருக்கிறதோ அவ்வளவுக்கு மாத்திரம்யேஜெண்டுக்காக அவனுடையமுதலாளி உடன்பட வேண்டியவனுகிறுன்.

திருஷ்டாந்தம்.

ஒரு கப்பலுக்கும் அந்த கப்பற் சரக்குக்கும் சொந்தக்காரனுகிய - எ - என்பவன் அந்தகப்பலுக்காக நாலாயிரம் ரூபாய்க்கு இன்ஷியூரான்சு பண்ணிக்கொள்ளும்படி - பி - என்பவனுக்கு அதிகாரங் கொடுக்கிறுன். அந்த கப்பலுக்காக - பி - என்பவன் நாலாயிரம் ரூபாயிக்கு பாலிஸி பெற்றுக்கொள்ளுகிறது மல்லாமல், அந்த கப்பற்சரக்குக்காக அவ்வளவு தொகைக்கு வேறொரு பாலிஸி பெற்றுக்கொள்ளுகிறுன். எ - என்பவன் அந்த கப்பலைக்குறித்த பாலிஸிக்காகப் பிரீமியம் செலுத்தவேண்டியவனேயல்லாமல் அந்த கப்பற் சரக்கைக்குறித்த பாலிஸிக்காகப் பிரீமியம் செலுத்தவேண்டியவனல்ல.

ஏஜெண்டு அதிகாரத்திற்கு மிஞ்சி செய்தகாரியத்தைப் பிரிக்கக்கூடாதபோது முதலாளிகடமைப்பட்டவனல்ல.

௨௨௮. ஏஜெண்டானவன் எவ்வளவுசெய்ய தனக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைவிட அதிகமாகச்செய்தால், அவன் தன்னுடைய அதிகாரத்திற்குமிஞ்சி செய்கிறதை அந்த அதிகாரத்திற் குட்பட்டதிலிருந்து பிரிக்கக்கூடாதபட்சத்தில், முதலாளி அந்த விவகாரத்தை ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டவனல்ல.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் தனக்காக ௫00 - ஆடு வாங்கும்படி - பி - என்பவனுக்கு அதிகாரங்கொடுக்கிறான். பி - என்பவன் ௫00 - ஆடுகளையும், ௨00 - ஆட்டுக்குட்டிகளையும் ௯,000 - ரூபாய்க்கு மொத்தமாய்ப்பேசி வாங்குகிறான். இந்தக்காரியம் முழுமையையும் தனக்கு நிமித்தமில்லையென்று -எ- என்பவன் அடித்துப்போடலாம்.

ஏஜெண்டுக்கு கொடுக்கப்பட்ட அறிக்கையினாலுண்டாவது.

௨௨௯. முதலாளிக்காக குமஸ்தாவினால் நடத்தப்பட்ட வேலையின் தோரணியில் யேஜெண்டுக்கு யாதொரு அறிக்கை செய்யப்பட்டாலும் யேஜெண்டினால் வர்த்தமானம் தெரிந்துகொள்ளப்பட்டாலும், அந்த அறிக்கையாவது வர்த்தமானமாவது முதலாளிக்கு செய்யப்பட்டிருந்தாலும் அவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தாலும் எப்படியோ அதேபிரகாரம் முதலாளி விஷயத்திலும் மூன்றுமனிதர்கள் விஷயத்திலும் சட்டசம்மதமான பிரயோஜனங்களுடையதாகும்.

திருஷ்டாந்தம்.

(a). சில சரக்குகளுக்குச்சொந்தக்காரனாய்க் காணப்படுகிற-சி-என்பவனிடத்திலிருந்து அந்த சரக்குகளை வாங்கும்படி - பி - என்பவனால் நேமிக்கப்பட்ட - எ என்பவன் அப்பிரகாரமே அதுகளை வாங்குகிறான். விற்பனையைக்குறித்து உடன்படிக்கை நடக்கையில், அந்தசரக்கு வாஸ்தவமாய் - டி - என்பவனுதென்று - எ என்பவன் தெரிந்துக்கொள்ளுகிறான், ஆனால் அந்தசங்கதி -பி- என்பவனுக்குத்தெரியாது - பி - என்பவன் - சி - என்பவனிடத்திலிருந்து தனக்கு வரவேண்டியபாக்கிக்கு அந்த சரக்கின் கிரயத்தைச் செல்லுவைத்துக்கொள்வதாய்ச்சொல்லத்தகாது.

(b). சரக்குகளுக்குச் சொந்தக்காரனாய்க் காணப்படுகிற - சி - என்பவனிடத்திலிருந்து அந்த சரக்குகளை வாங்கும்படி - பி - என்பவன் - எ - என்பவனை நேமித்துக்கொள்ளுகிறான். எ - என்பவன் தான் அப்படி நேமிக்கப்படுவதற்குமுன்னமே - சி - என்பவனுடைய உத்தியோகஸ்தனாயிருந்து அப்போது அந்த சரக்குகள் வாஸ்தவமாய் - டி - என்பவனுதென்று தெரிந்து கொண்டிருக்கிறான். ஆனால் அந்தசங்கதி - பி - என்பவனுக்கு தெரியாது. அவனுடைய யேஜெண்டுக்குத்தெரிந்திருக்கிறது நிமித்தமில்லாமல், பி - என்பவன்-சி - என்பவனிடத்திலிருந்து தனக்குவரவேண்டிய பாக்கிக்கு அந்தசரக்கின் கிரயத்தைச் செல்லுவைத்துக்கொள்வதாய்ச் சொல்லலாம்.

முதலாளிக்காகச்செய்யப்பட்ட கந்திராக்ட்டுகளை நிறைவேற்றுவிக்க ஏஜெண்டானவன்தானே சுதாவில் பிரவர்த்திக்கவுங்கூடாது அதுகளுக்கு அவன் உடன்பட்டவனுமாகான்.

௨௩௦. ஏஜெண்டு சுதாவாய்ப்பிரவர்த்திக்குமபடியாவது நேராய் உடன்படும்படியாவது யாதொரு கந்திராக்ட்டு பிறந்திராத பட்சத்தில், யேஜெண்டானவன் தன்னுடைய முதலாளிக்காகத் தான் செய்த கந்திராக்ட்டுகளை நிறைவேற்றும்படி நிர்பந்திக்க சுதாவாய்ப் பிரவர்த்திக்கவுங்கூடாது, அதுகளுக்கு அவன் உடன்பட்டவனுமாகான்.

அப்படிச்செய்யும்படி கந்திராக்ட்டு பிறந்திருப்பதாக பாவிப்பது.

அப்படிப்பட்ட கந்திராக்ட்டு பிறந்திருப்பதாக அடியில்கண்டிருக்கிற விஷயங்களிலே பாவித்துக்கொள்ளவேண்டியது:—

(க) தூரதேசத்தில் வாசஞ்செய்கிற வர்த்தகனுக்காக சரக்குக்கொள்பவனை விற்பனை செய்வதைக்குறித்து யேஜெண்டினால் கந்திராக்ட்டுசெய்யப்படுகிற விஷயத்திலும் :

(உ) ஏஜெண்டானவன் தன் முதலாளியினுடைய பேரை வெளிப்படுத்தாத விஷயத்திலும் :

(ஈ) பேரை வெளிப்படுத்தி யிருந்தபோதிலும், முதலாளியின்பேரில் வியாச்சியந் தொடரக்கூடாத விஷயத்திலும்.

ஏஜெண்டுயென்று வெளிப்படாதவனால் செய்யப்பட்ட கந்திராக்ட்டில் சம்பந்தப்பட்ட வர்களுக்குள்ள பாத்தியதை.

உகக. ஒரு ஏஜெண்டானவன் தான் யேஜெண்டென்று அறியாமலாவது அனுமானிக்க யேதுவில்லாமலாவதிருக்கிறவனோடு கந்திராக்ட்டுசெய்தால், அவனுடைய முதலாளி அந்தகந்திராக்ட்டை நிறைவேற்றும்படிசெய்யலாம். ஆனால் கந்திராக்ட்டுசெய்கிற மறுபட்சத்தானவன யேஜெண்டே முதலாளியாயிருந்தால், அவன்பேரில் தனக்கு யென்னசுதந்தரமுண்டாயிருக்குமோ அதே சுதந்தரங்களை அந்த முதலாளியின்பேரில் உடையவனாயிருக்கிறான்.

கந்திராட்டு பூர்த்தியாவதற்குமுன்னமே முதலாளி இன்னானென்று வெளிப்பட்டால், கந்திராக்ட்டுசெய்கிற மறுபட்சத்தானவன் அந்தக்கந்திராக்ட்டில் முதலாளிஇன்னானென்று தனக்குதெரிந்திருந்தாலும், அந்த யேஜெண்டு முதலாளி அல்லவென்று தனக்குத்தெரிந்திருந்தாலும், தான் அந்த கந்திராக்ட்டு செய்திருக்க மாட்டானென்று ரூபிப்பானாகில், அவன் அந்த கந்திராக்ட்டை நிறைவேற்றமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

முதலாளியென்று யெண்ணப்பட்ட யேஜெண்டோடு செய்திருக்கிற கந்திராக்ட்டை நிறைவேற்றுவது.

உகஉ. ஒருவன் வேறொருவனை யேஜெண்டென்று அறியாமலாவது அனுமானிக்கத்தகுந்த யேதுவில்லாமலாவது அவனோடு கந்திராக்ட்டுசெய்தால் முதலாளி அந்தக்கந்திராகடை நிறைவேற்றும்படிச் செய்யவேணுமானால், அவன்யேஜெண்டுக்கும் அந்தகந்திராக்ட்டைச்சேர்ந்த மற்றவனுக்குமுண்டாயிருக்கிற சுதந்தரங்களுக்கும் கடமைகளுக்கும் உட்பட்டு மாத்திரமே அப்படி நிறைவேற்றுவித்துக்கொள்ளலாம்.

திருஷ்டாந்தம்.

பி-என்பவனுக்கு ருOO-ரூபாய் பாக்கியிருக்கிற-எ-என்பவன்-பி-என்பவனுக்கு க,OOO-ரூபாய் அரிசி விற்கிறான். அந்தக்காரியத்திலே-எ-என்பவன் சி-என்பவனுக்கு யேஜெண்டாகப்பிரவர்த்திக்கிறான், ஆனால் அவன் யேஜெண்டுயென்கிற சங்கதி-பி-என்பவனுக்குத் தெரியவும் தெரியாது, அப்படி அனுமானிக்க அவனுக்குத்தகுந்த ஆதாரமுங்கிடையாது-பி-என்பவனை-எ-என்பவனுடைய பாக்கிக்குத் தள்ளிக்கொள்ளவொட்டாமல் அவனை அரிசியை எடுத்துக்கொள்ளச்சொல்லி-சி-என்பவன் நிர்ப்பந்திக்கக் கூடாது.

நேராய்உத்தரவாதியாயிருக்கிற யேஜெண்டோடு விவகரிக்கிற நபருக்குள்ளபாத்தியதை.

௨௩௩. நேராய் யேஜெண்டே உத்தரவாதியாயிருக்கிற விஷயங்களில், அவனோடு விவரிக்கிற நபர் அவனையாவது அவனுடைய முதலாளியையாவது அவ்விருவரையுமாவது உத்தரவாதிகளாகக்கொள்ளலாம்.

திருஷ்டாந்தம்.

பி — என்பனுக்கு நூறு பஞ்சுக்கட்டுகளை விற்கிறதாக அவனோடு - எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான் பிறகு - பி - என்பவன் - சி - என்பவனுக்கு யேஜெண்டாக பிரவர்த்தித்தானென்று கண்டுகொள்ளுகிறான் பஞ்சின் விலையைக்குறித்து எ - என்பவன் - பி - என்பவன்பேரிலாவது - சி - என்பவன்பேரிலாவது அவ்விருவர்பேரிலுமாவது வியாச்சியந் தொடரலாம்.

முதலாளியை மாத்திரமாவதுயேஜெண்டை மாத்திரமாவது உத்தரவாதியாகக் கொள்ளலாமென்கிறநம்பிக்கையின்பேரில் ஏஜெண்ட்டையாவது முதலாளியையாவது காரியத்தை நடத்தும்படிசெய்தால் இன்னதாகுமென்பது.

௨௩௪. ஏஜெண்டோடு கந்திராக்ட்டு செய்திருக்கிறவன் முதலாளியைமாத்திரம்உத்தரவாதியாகக்கொள்ளலாமென்கிற நம்பிக்கையின்பேரில் யேஜெண்டை காரியத்தை நடத்தும்படி செய்தால், பின்பு அவன் யேஜெண்டை உத்தரவாதியாகக்கொள்ளக்கூடாது; யேஜெண்டை மாத்திரம் உத்தரவாதியாகக் கொள்ளலாமென்கிற நம்பிக்கையின்பேரில் முதலாளியை காரியத்தை நடத்தும்படிசெய்தால், பின்புமுதலாளியை உத்தரவாதியாகக்கொள்ளக்கூடாது.

ஏஜெண்டென்று நடக்கிறவனுடைய உத்தரவாதம்.

௨௩௫. ஒருவன் தான் வேறொருவனுடைய அதிகாரம்பெற்ற யேஜெண்டென்று அபத்தமாய்ச்சொல்லி, அதினாலே அப்படிப்பட்ட யேஜெண்டாகத் தன்னோடு விவகரிக்கும்படி மூன்றுமனிதனை உட்படுத்தினால், அப்படிப்பட்டவன் அவனுடைய செய்கைகளை அவனை நேமித்துக்கொண்டவனென்று சொல்லப்பட்டவன் ஒப்புக்கொள்ளாவிடில், அப்படி விவகரித்ததினால் மூன்றுமனிதனுக்கு சம்பவித்திருக்கிற யாதொரு சேதம் அல்லது நஷ்டத்தைக்குறித்து அவனுக்கு ஈவு கொடுக்கக்கடவான்.

ஏஜெண்டாக அபத்தமாய் கந்திராக்ட்டுசெய்கிறவன் அதை நிறைவேற்றுவித்துக்கொள்ள அர்ஹனல்ல.

௨௩௬. எவனோடு யேஜெண்டென்கிற ஓதாவிலே கந்திராகட்டு செய்யப்பட்டிருக்கிறதோ அவன் வாஸ்தவமாய் யேஜெண்டாகப் பிரவர்த்திக்காமல் தன் சொந்தத்திற்குப் பிரவர்த்தித் திருப்பானாகில், அவன் அந்த கந்திராக்ட்டை நிறைவேற்றுவித்துக்கொள்ள அர்ஹனல்ல.

அதிகாரம்பெறாமல் ஏஜெண்டு செய்தகாரியங்களை அதிகாரம் பெற்றுச் செய்ததாக நம்பிக்கை யு

௨௩௭. ஏஜெண்டானவன் அதிகாரமில்லாமல் தன்னுடைய முதலாளியின்பட்சத்தில் மூன்றுமனிதர்களுக்குக் காரியங்கள் செய்திருந்தாலும் கடமைகள் பூண்டிருந்தாலும், அப்படிப்பட்ட காரியங்களும் கடமைகளும் ஏஜெண்டின் அதிகாரத்துக் குட்பட்டவைகளென்று நம்பும்படி அந்த மூன்றுமனிதர்களை

முதலாளியானவன் தன்னுடைய சொற்களினுலாவது நடத்தையினுலாவது செய்திருந்தால், அந்த முதலாளி அப்படிப்பட்ட காரியங்களுக்காவது கடமைகளுக்காவது உடன்பட்டவனுயிருக்கிருன்.

ண்டுபண்ணுகிறமுதலாளியின் உத்தரவாதம்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் விற்பனைக்காக - பி - என்பவனுக்கு சரக்குகளை அனுப்பி அதுகளை ஓர் நிஷ்கரிஷையான விலைக்குக் குறைவாக விற்கவேண்டாமென்று அவனுக்கு உத்தரவுசெய்கிருன். சி - என்பவன் - பி - என்பவனுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவை அறியாமல் அந்த நிஷ்கரிஷையான வலையைவிட குறைந்த விலைசகு அந்த சரக்கை வாங்கிக்கொள்ள - பி - என்பவனேடு கந்திராக்ட்டு செய்கிருன். அந்த கந்திராக்ட்டின்படி - எ என்பவன் கடமைப்பட்டவனுகிருன்.

(b). விற்கத்தக்கபத்திரங்களை பிளாங்கி இண்டார்சுபண்ணி - எ - என்பவன் பி - என்பவனிடத்தில் ஒப்பிக்கிருன். எ - என்பவன் உள்ளுக்குள் தனக்கு கொடுத்திருக்கிற உத்தரவைகடந்து - பி - என்பவன் அதுகளை - சி - என்பவனுக்கு விற்கிருன். அந்த விற்பனை செல்லும்.

உ௩அ. தங்கள் முதலாளிகளுக்காக வேலையை நடத்திக்கொண்டிருக்கிற தோரணியில் ஏஜெண்டுகளால் சொல்லப்பட்ட மாறுபாடுகளாவது செய்யப்பட்ட மோசங்களாவது, அந்த ஏஜெண்டுகளால் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் விஷயமாய், அப்படிப்பட்ட மாறுபாடுகளையாகிலும் மோசத்தையாகிலும் முதலாளிகள் செய்திருத்தாற் போலவே பயன்படுகிறது; ஆனல் ஏஜெண்டுகள் தங்களுடைய அதிகாரத்திற்குட்படாத விஷயங்களில் சொல்லுகிற மாறுபாடுகளாவது செய்கிறமோசங்களாவது அவர்களுடைய முதலாளிகளை பாதிக்கமாட்டாது.

ஏஜெண்டானவன் மாறுபாடு சொல்லியாவது மோசடியார்கவாவது செய்கிற உடன்படிக்கை இன்னதாகுமென்பது.

திருஷ்டாந்தம்.

(a). சரக்கு விற்பதற்காக - பி - என்பவனுடைய யேஜெண்டாயிருக்கிற - எ - என்பவன் தான் சொல்லும்படி - பி - என்பவனுல் தனக்கு அதிகாரங்கொடுக்கப்படாத ஒருமாறுபாட்டைச்சொல்லி அதுகளைவாங்கிக் கொள்ளும்படி - சி - என்பவனை உட்படுத்துகிருன், சி - என்பவனுக்கு இஷ்டமானுல் அவன் விஷயத்திலும் பி - என்பவன் விஷயத்திலும் அந்த கந்திராக்ட்டு செல்லத்தகாததாகும்.

(b). பி - என்பவனுடைய கப்பல் காப்ட்டனுகிய - எ - என்பவன் பில் ஆவ்லேடிங் என்னும் வார்னுமாவில் கண்டிருக்கிற சரக்குகளை கப்பலில் வரப்பற்றிக் கொள்ளாமலே அந்த வார்னுமாவில் கையெழுத்து செய்கிருன். அந்த வார்னுமாவானது - பி - என்பவன் விஷயத்திலும் சரக்கனுப்பினதாக மாரீசம்பண்ணினவன் விஷயத்திலும் செல்லாது.

கக— அத்தியாயம்—கூட்டுப்பங்கைக்குறித்து.

உ௩கூ, ஏதோ ஒரு வியாபாரத்தில் கூட்டாய்த் தங்கள் சொத்தை வைத்தாகிலும் கூட்டாய் உழைத்தாகிலும் கூட்டாய் தங்கள் திறமையை உபயோகித்தாகிலும் அதினுல்வருகிறலாபத்தை தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதாக சம்மதிக்கிற நபர்களுக்குளிருக்கிற சம்பந்தமே கூட்டுப்பங்கு எனப்படுகிறது.

கூட்டுப்பங்கென்பதற்கு அர்த்தம்.

வியாபாரக் கூட்டமெ ன்பதற்கு அர்த்தம்.

ஒருவனேடொருவன கூட்டுப்பங்காகப் பிரவேசித்திருக்கிற நபர்கள் தொகுப்பாய் வியாபாரக்கூட்டமென்று சொல்லப்படுகிருர்கள்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவனும் - பி - என்பவனும் - கOO - பஞ்சுகட்டுகளை வாங்கி அதுகளை கூட்டாய்தங்களுக்காக விற்க ஒப்புக்கொள்ளுகிருர்கள்; அவ்விருவரும் அப்படிப்பட்ட பஞ்சு விஷயத்தில் பங்குக்காரர்களாகிருர்கள்.

(b). எ - என்பவனும் - பி - என்பவனும் தாங்கள்வாங்குகிற பஞ்சை தங்களுக்குள்பங்கிட்டுக்கொள்வதாக ஏகோபித்து - கOO - பஞ்சுக்கட்டுகளை வாங்குகிருர்கள். இவர்கள் பங்குக்காரர்களாகமாட்டார்கள்.

(c). எ - என்பவன் பொன்வாங்கி, தட்டானுகிய - பி - என்பவனுக்குகொடுக்கிறதாகவும், அதை அந்தத்தட்டான் நகைசெய்து விற்கிறதாகவும் அதனல் நயம் வந்தாலும் நஷ்டம்வந்தாலும் அதைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதாகவும் - எ - என்பவனுங் - பி - என்பவனும் உடனபடிக்கை செய்துகொள்ளுகிருர்கள். அவ்விருவரும் பங்குக்காரர்களாகிருர்கள்.

(d). எ - என்பவனும் - பி - என்பவனும் ஒன்ருய்க்கூடி தச்சுவேலை செய்கிறதாகவும், ஆனல் - எ - என்பவன் லாபத்தையெல்லாம்தானேயெடுத்துக்கொண்டு பி - என்பவனுக்கு கூலிகொடுக்கிறதாகவும் இருவரும் உடன்படிக்கை செய்துகொள்ளுகிருர்கள், அவ்விருவரும் பங்குக்காரர்களாகமாட்டார்கள்.

(e). எ - என்பவனும் - பி - என்பவனும் ஒருகப்பலுக்குக் கூட்டுச்சொந்தக்காரர்கள். இந்த சங்கதியினுலே அவர்கள் பங்குக்காரர்களாகவில்லை.

லாபத்திலே பங்குவாங்கிக்கொள்வதற்காக முன் பணங்கொடுப்பதினுலே அந்தப்பணங் கடன கொடுக்கிறவன் பங்குக்காரனுகமாட்டான்.

உசுO. யாதொரு வியாபாரத்திலாவது வேலையிலாவது பிரவேசித்தாகிலும் பிரவேசிக்கவாகிலுமிருக்கிறவனுக்கு ஒருவன் கடன்கொடுக்கும்போது, கடன் கொடுக்கிறவன் லாபத்துக்கேற்ற விதப்படி வட்டி வாங்கிக்கொள்ளுகிறதாகவாவது லாபத்தில் ஓர் பங்கு வாங்கிக்கொள்ளுகிறதாகவாவது அவனிடத்தில கந்திராக்ட்டு செய்துகொண்டு பணங்கொடுப்பானுகில், அப்படி கடன்கொடுப்பதினுலேயே கடன்கொடுக்கிறவன் பங்குக்காரனுகவுமாட்டான். பங்குக்காரனுக உத்தரவாதியாகவுமாட்டான்.

பங்கை விட்டுவிடுகிறவனுலாவது இறந்துபோனபங்குக்காரனுடைய பிரதிநிதியினுலாவது வியாபாரத்தில் விட்டுப்போகப்பட்ட சொத்தைக்குறித்து.

உசுக. பங்கை விட்டுவிடுகிறவனுலாவது இறந்துபோன பங்குக்காரனுடைய பிரதிநிதியினுலாவது வியாபாரத்தில் உபயோகிக்கும்படிவிட்டுவைக்கப்பட்ட சொத்தானது, விரோதமான யாதொரு கந்திராக்டடு ஏற்பட்டிராதபட்சத்தில், இதற்குமுந்திய பிரிவின் தாற்பரியப்படிகடனுக எண்ணப்படத்தக்கதாயிருக்கிறது.

லாபத்தில் ஓர்பாகம் ஈவாகக்கொடுக்கப்பெறுகிறஊழியனுவது எஜெண்டாவது பங்குக்காரனுகமாட்டான்.

உசுஉ. யாதொரு வர்த்தகம் அல்லதுவேலையில் பிரவேசித்திருக்கிற யாவனெருவனுடைய ஊழியக்காரனுக்காவது ஏஜெண்டுக்காவது அப்படிப்பட்ட வர்த்தகம் அல்லது வேலையில் கிடைக்கிற லாபத்தில் ஓர்பாகம் பிரயாசைக்கு ஈவாகக்கொடுப்பதாய் கந்திராக்ட்டு யேற்பட்டிருப்பதினுலேயே அப்படிப்பட்ட ஊழியக்காரன் அல்லது யேஜெண்டு அதில் ஓர்

பங்குக்காரனாக உத்தரவாதியாகவுமாட்டான், ஓர்பங்குக்காரனுக்குள்ள சுதந்தரம் அவனுக்குண்டாகவுமாட்டாது.

உசங. ஒருவர்த்தகனோடு பங்குக்காரனாயிருந்து இறந்துபோனவனுடைய விதந்துவாகவாவது பிள்ளையாகவாவதிருந்து, அந்தவர்த்தகனால் அவனுடைய வியாபாரத்தில் சம்பாதிக்கப்பட்ட லாபத்தில் வீதபாகத்தை வருஷாந்தர சுகஜீவனமாகப்பெற்றுக்கொண்டிருக்கிற நபரை அப்படி பெற்றுக்கொள்வதினால் மாத்திரம் அந்த வர்த்தகனோடுபங்குக்காரராகவாகிலும் அந்த வர்த்தகனுக்கு நேரிடுகிற யாதொரு ருணத்திற்கு உட்பட்டவராகவாகிலும் எண்ணக்கூடாது.

இறந்துபோன பங்குக்காரனுடைய விதந்துவாகவாவது பிள்ளையாகவாவதிருந்து லாபத்திலே வருஷாந்தர சுகஜீவனம்பெற்றுக்கொள்ளுகிறவர் பங்குக்காரரல்ல.

உசச. ஒருவன் யாதொரு வியாபாரத்திலுள்ள தன்பேரை விற்று அதற்குப் பிரதிபலனாக அந்த வியாபாரத்தின் லாபத்தில் ஓர்பாகத்தை வருஷவாரியிலாவது மற்றப்படிக்காவது பெற்றுக்கொண்டு வருவானாகில், அவன் அப்படி பெற்றுகொள்வதினால்மாத்திரம் அந்தவியாபாரத்தை நடத்துகிறவனோடு பங்குக்காரனாக எண்ணப்படவுமாட்டான் அந்தவியாபாரி படுகிற ருணத்திற்கு உட்படவுமாட்டான்.

பேரை விற்பதற்காக லாபத்தில் ஓர்பாகம் பெற்றுக் கொள்ளுகிறவன் பங்குக்காரனல்ல.

உசரு ஒருவன் ஏதோ ஒருவர்த்தகக்கூட்டத்தில் தானொரு பங்குக்காரனென்று பேச்சுகளினாலாவது எழுத்துமூலமாயாவது தன்னுடையநடத்தையினாலாவது வேறொருவனை நம்பும்படிசெய்வானாகில், அவன் அப்படிப்பட்ட வர்த்தகக்கூட்டத்தில் ஓர்பங்குக்காரனாக அந்த வேறுமனிதனுக்கு உத்தரிக்ககடவன்.

தன்னை ஒருபங்குக்காரனாக வேறொருவனை நம்பும்படி செய்கிறவனுடைய உத்தரவாதம்.

உசசு. தன்னை ஓர் பங்குக்காரனாகச் சொல்லவொட்டுவதற்குச சம்மதித்திருக்கிறனெவனாவது அதை நம்பி அந்தக் கூட்டுப்பங்கை உண்மையாகக்கொள்ளுகிற மூன்றுமனிதர்களுக்கு பங்குக்காரனாக உத்தரிக்கக்கடவன்.

தன்னை ஒருபங்குக்காரனாகத் தெரிவிக்கவொட்டுகிறவனுடைய உத்தரவாதம்.

உசஎ. தானுட்பட்டிருக்கிற சட்டப்படிக்கு வயதுவாரதவனாயிருக்கிறவனை கூட்டுப்பங்குப்பிரயோஜனத்திற்கு ஏற்றுக்கொள்ளலாம், ஆனல் அந்த வர்த்தகக்கூட்டத்தைச் சேர்ந்த யாதொருபொறுப்புக்கு அவனை சுதாவாய் உத்தரவாதியாக்கக் கூடாது; ஆயினும் அந்தவியாபாரக் கூட்டத்துச்சொத்தில் அந்தச் சிறுவனுக்குள்ள பங்கு அந்தவியாபாரக்கூட்டத்தின் பொறுப்புகளுக்கு உத்தரவாதமுள்ளதாகும்.

வயசுவராத பங்குக்காரன்சுதாவில் உத்தரவாதியாகாமல், அவனுடையபங்கு உத்தரிக்ககடவது.

உசஅ. சிறுவயதிலே கூட்டுப்பங்கின் பிரயோஜனத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறவன் தனக்குவயசுவருவதின்பேரில், அந்தக் கூட்டுப்பங்கைத்தான்நிவர்த்தி

சிறுவயதுள்ள பங்குக்

காரன் வயது வருவதின் பேரில்உத்தரிப்பது

த்துக்கொண்டதாகது தகுந்த காலத்திற்குள் பகிரங்கமாய் அறிக்கைசெய்தாலொழிய, அவன்முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமுதல் அந்தக் கூட்டுப்பங்கினால் நேரிட்ட சகலபொறுப்புகளுக்கும் உத்தரவாதியாகிறான்.

உசகூ. பிரதிபங்குக்காரனும் கூட்டுப்பங்கினாலாவது கூட்டுப்பங்கின் சம்பந்தமாயாவது வியாபாரம் நடந்துகொண்டிருக்கிற வழக்கமான தோரணியில், தான் பங்குக்காரனாயிருக்கும்போது சம்பவித்த சகலகடன்களுக்கும் பொறுப்புகளுக்கும உத்தரவாதியாகிறான்; ஆனால் அதுவரையிலேயே இருக்கிற ஒரு வியாபாரக்கூட்டத்தில் ஒரு பங்குகாரனாக சேர்த்துக்கொள்ளப்படுகிறவன் அதினாலே, அந்த வியாபாரக்கூட்டத்தில் தான் பங்குக்காரனானதற்கு முன்னமே செய்யப்பட்ட யாதொரு காரியத்திற்காக அந்த வியாபாரக்கூட்டத்திற்குக் கடன்கொடுத்திருக்கிறவர்களுக்கு உத்தரவாதியாகான்.

கூட்டுப்பங்கைச்சேர்ந்தகடன்களுக்குபங்குக்காரனுடையஉத்தரவாதம்.

உடுO. வியாபாரக்கூட்டத்தின் வேலையை நடத்துவதில் யாதொரு பங்குக்காரனுடைய அஜாக்கிரதையினாலாவது மோசத்தினாலாவது நேரிடுகிற நஷ்டம் அல்லது சேதத்தைக்குறித்துமூன்றுமனிதர்களுக்கு ஈவு கொடுக்கப் பிரதி பங்குக்காரனும் உத்தரவாதியாயிருக்கிறான்.

உடன் பங்குக்காரனுடைய அஜாக்கிரதைக்காகவாவதுமோசத்திற்காகவாவது மூன்றுமனிதனுக்கு பங்குக்காரனுடைய உத்தரவாதம்.

உடுக. தான் எதில் பங்குக்காரனாயிருக்கிறானோ அப்படிப்பட்ட கூட்டுப்பங்கு விஷயத்தைச்சேர்ந்த வேலையை நடத்துவதற்காக அவசியமானதாகவாவது வழக்கமாய் செய்யப்படுகிறதாகவாவ திருக்கிற யாதொருகாரியத்தைச்செய்கிற பிரதி பங்குக்காரனும் அதற்காகக் கிரமமாய் நேமிக்கப்பட்ட அவர்களுடைய யேஜெண்டாக யிருந்தால், அவனுடைய உடன்பங்குக்காரர்கள் அதற்கு எவ்வளவுமட்டில் உடன்படுவார்களோ அவ்வளவுக்கு உடன்பட்டவர்களாகிறார்கள்.

உடன் பங்குக்காரர்களைக்கட்டுப் படுத்துவதற்கு பங்குக்காரனுக்குள்ள அதிகாரம்.

விலக்கு.—பங்குக்காரர்களில் யாவனொருவனுடைய அதிகாரத்திற்கு யேதாவது வரையறை யேற்படுத்தவேணுமென்று பங்குக்காரர்களுக்குள் ஒரு உடன்படிக்கை யேற்பட்டிருக்குமாகில் அப்படிப்பட்ட உடன்படிக்கைக்கு விரோதமாய்ச்செய்யப்பட்ட யாதொரு காரியத்திற்கு அப்படிப்பட்ட உடன்படிக்கையைத் தெரிந்துகொண் டிருக்கிறவர்கள்விஷயத்தில் வியாபாரக்கூட்டத்தார் உடன்பட்டவர்களாகார்கள்.

திருஷ்டாந்தம்.

(a). எ - என்பவன் இங்கிலாந்தில் வாசஞ்செய்துக்கொண்டும் - பி — என்பவன் இந்தியாவில் வாசஞ்செய்துக்கொண்டும் இருவரும் கூட்டாக வியாபாரஞ்செய்கிறார்கள். எ - என்பவன் வியாபாரக்கூட்டத்தின் பெயரால் ஒருஉண்டியெழுதுகிறான். அந்த உண்டிவிஷயம் - பி - என்பவனுக்குத் தெரியவுந்தெரியாது, அந்தகாரியத்திலே அவனுக்கு எவ்வளவேனும் சம்பந்த மில்லவுமில்லை எதைப்பற்றி அந்தவுண்டியெழுதப்பட்டதோ அந்தசங்கதிகள் அந்த உண்டியை உடையவனுக்குத் தெரி

ந்திராவிட்டால் அந்த உண்டியைக்குறித்து அந்தவர்த்தகக்கூட்டத்தார்உத்தரவாதிகளாகார்கள்.

(b). ஸோலிசிட்டர்களும் அட்டர்ணிகளும் கூட்டுப்பங்காய்ச்சேர்ந்திருக்கிற ஒருகூட்டத்திலொருவனுகிய - எ - என்பவன் அதிகாரமில்லாமல் அந்தக் கூட்டத்தின்பேரால் ஒரு உண்டி யெழுதுகிருன். மற்றப்பங்குக்காரர்கள் அந்த உண்டியைக்குறித்து உத்தரவாதிகளல்ல.

(c). எ - என்பவனும் - பி - என்பவனும் கூட்டுப்பங்கு சாவுகாரர்களாக வியாபாரம் நடத்துகிருர்கள். அந்தவியாபாரக்கூட்டத்தின் பட்சத்தில் - எ - என்பவன் ஒருதொகையை வரப்பற்றிக்கொள்ளுகிருன். அந்த வரவைக்குறித்து - எ - என்பவன் - பி - என்பவனுக்குத் தெரிவிக்காம லிருந்துவிட்டு, பின்பு அந்தப் பணத்தைத் தன் சொந்தத்திற்கு உபயோகித்துக் கொள்ளுகிருன். அந்தப்பணத்திற்கு உத்தரவுசொல்லபங்குக்காரர்கள் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

(d). எ - என்பவனும் - பி - என்பவனும் பங்குக்காரர்கள் - எ - என்பவன் பி - என்பவனை மோசஞ் செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு ஒரு ஷாப்புக்குப்போய் தங்களுடைய கூட்டுவியாபாரத்தின் வழக்கமான தோரணியில் உபயோகிக்கப்படத்தக்க வஸ்துக்களை தங்கள் வியாபாரக் கூட்டத்தி னிமித்தமாக வாங்கி, அதுகளை பிரத்தியேகமாய்த் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு வினியோகப்படுத்திக்கொள்ளுகிருன். அவனும் விற்றவனும் உளவாயிருக்கவில்லை. அந்தவஸ்துக்களின் கிரயத்தைக்குறித்து அந்தவர்த்தகக்கூட்டத்தார் உத்தரவாதிகளாகிருர்கள்.

பங்குக்காரர்களுடைய சுதந்தரங்களும் கடமைகளும் விவரித்துச்சொல்லியிருக்கிற கந்திராக்ட்டை ரத்துசெய்வது.

௨௫௨. பங்குக்காரர்கள் தங்களுக்குள் தங்களுடையசுதந்தரங்களையும் கடமைகளையும் ஒழுங்கு படுத்திக்கொண்டு விவரமாய்க்கண்டு கந்திராக்ட்டு செய்துகொண்டிருக்கிற பட்சத்தில், அப்படிப்பட்ட கந்திராக்ட்டை அவர்களெல்லோருடைய சம்மதியினுல்மாத்திரம் ரத்துசெய்யக்கூடும், அல்லதுமாற்றகூடும் அந்த சம்மதிவெளிப்படையாகவாவ திருக்கவேணும் அல்லது வியாபாரத்தில் நடக்கிற ஒரே ரீதியான தோரணியினுலே குறிப்பாகவாவதிருக்கவேணும்.

திருஷ்டாந்தம்.

எ - பி - சி - என்கிற மூன்றுபேரும் கூட்டுப்பங்கு வியாபாரஞ்செய்ய எத்தனித்து, ஷரத்துகள் கண்டு எழுத்துமூலமாய் உடன்படிக்கை செய்துக்கொள்ளுகிருர்கள். அந்தக் கூட்டு வியாபாரத்தில் வருகிற நிகரலாபத்தை தங்களுக்குள் சமமாய் பங்கிட்டுக்கொள்வதாக அந்த உடன்படிக்கையில் ஷரத்து கண்டெழுதப்படுகிறது. பின்பு நிகரலாபத்திலே பாதியை - எ - என்பவன் பற்றிக்கொண்டும் மற்றப் பாதியை - பி - என்பவனும் - சி - என்பவனும் சமமாய்ப் பகிர்ந்துக்கொண்டும், அந்க்கூட்டுவியாபாரத்தை அவர்கள் அனேக வருஷகாலம் நடத்துகிருர்கள். இந்த யேற்பாட்டை எல்லா ப்ங்குக்காரர்களும் அறிந்தவர்களாய் அதற்கு சம்மதித்திருக்கிருர்கள். இவ்வாறு நடந்துவருவதினுலே, லாபத்தை பங்கிட்டுக் கொள்வதைக் குறித்து ஷரத்துகளில் கண்டிருக்கிற நிபந்தனை அடிபட்டுப்போகிறது.

விரோதமான கந்திராக்ட்டு இல்லாதபட்சத்தில் பங்குக்காரர்களுடையபரஸ்பர சம்பந்தத்தை நிர்னயிக்கிற விதிகள்.

௨௫௩. விரோதமான யாதொரு கந்திராக்ட்டு யேர்ப்பட்டிராத பட்சத்தில், பங்குக்காரர்களுக்குள் ஒருவர்க் கொருவர்க்குள்ள சம்பந்தங்கள் அடியில் வருகிற விதிகளினுலே தீர்மானிக்கப்படுகிறது:—

(க) கூட்டுப்பங்கு ஆஸ்திக்குள் பிரதமத்தில் கொண்டுவரப்பட்டாவது, கூட்டுப்பங்கைச்சேர்ந்த பணத்தைக்கொண்டு வாங்கப்பட்டாவது, கூட்டுப்பங்கு வியாபாரத்தின் காரியங்களுக்காக சம்பாதிக்கப்பட்டாவதிருக்கிற சகலசொத்துக்கும் எல்லாப்பங்குக்காரர்களும் கூட்டுச்சொந்தக்காரர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சொத்து முழுதும் கூட்டுப்பங்கைச்சேர்ந்த சொத்தென்று சொல்லப்படுகிறது. அந்தக் கூட்டுப்பங்கு சொத்திலே பிரதி பங்குக்காரனுக்குள்ள பாகமானது வர்த்தகத்தில் லாபமுண்டாயிருந்தால் அவனவனுடைய பங்காச்சாரமுண்டான லாபம் அவனவன் பிரதமத்தில் வைத்திருக்கிற பணத்தோடு சேர்ந்த மொத்தமாயிருக்கிறது, அல்லது நஷ்டமுண்டாயிருந்தால் அவனவனுடைய பங்காச்சாரமுண்டான நஷ்டம் அவனவன் பிரதமத்தில் வைத்திருக்கிற பணத்தில் கழிந்துபோக நீக்குகின்ற மொத்தமாயிருக்கிறது :

(உ) கூட்டுப்பங்கு வியாபாரத்தில் வருகிற லாபத்தை சமமாய் பங்கிட்டுக்கொள்ள எல்லாப் பங்குக்காரர்களும் பாத்தியஸ்தளாகிறார்கள், கூட்டுப்பங்கினால் வருகிற நஷ்டத்தையும் சமமாய் யெற்றுக்கொள்ள வேண்டியது :

(ங) கூட்டுப்பங்கு வியாபாரத்தை பிரதி பங்குக்காரனும் கூடச்சேர்ந்து நடத்த பாத்தியஸ்தனாயிருக்கிறான்;

(ச) பிரதி பங்குக்காரனும் கூட்டுப்பங்கு வியாபாரத்திலே ஜாக்கிரதையாய்க்கண்ணோட்டம்வைக்க கடமைப்பட்டிருக்கிறான், அந்தவியாபாரத்தை நடத்துவதற்காக வேறே சம்பளமுதலிய யாதொரு பிரயோஜனத்திற்கு அவன் அர்ஹனல்ல :

(ரு) கூட்டு வியாபாரத்தைச் சேர்ந்த சாதாரணமான சங்கதிகளிலே அபிப்பிராயம் வேறுபட்டால், பங்குக்காரர்களில் பெருந்தொகையாருடைய அபிப்பிராயப்படி தீர்மானஞ்செய்யவேண்டியது; ஆனால் எல்லாப்பங்குக்காரர்களுடைய சம்மதியினாலல்லாமல் கூட்டுப்பங்கு வியாபாரத்தின் தன்மையிலே மாறுதலொன்றுஞ் செய்யக்கூடாது :

(சு) எல்லாப்பங்குக் காரர்களுடைய சம்மதியில்லாமல் ஒருவனும் வர்த்தகக்கூட்டத்திலே புதுசாய் வேறொருவனையும் பங்குக்காரனாகச் சேர்க்கக்கூடாது :

(எ) கூட்டுப் பங்கைச்சேர்ந்த யாதொரு பங்குக்காரன் எந்தக்காரணத்திலாவது தான் அப்படி பங்காயிருப்பதை விட்டுவிட்டால், மற்றப் பங்குக்காரர்களெல்லோருக்கும் அந்தக் கூட்டுப்பங்கு அற்றுப்போகிறது:

(அ) ஓர் நிஷ்கரிஷையானகாலத்திற்குக் கூட்டாய்ப்பங்கு சேர்ந்திருந்தாலொழிய, யாதொருபங்குக்காரன் எப்போதாவது அதைவிட்டு நீங்கிவிடலாம் :

(கூ) ஓர் நிஷ்கரிஷையான காலத்திற்குகூட்டாய்ப்பங்கு சேர்ந்திருந்தால், அந்தகெடுவு காலத்திலே யாதொரு பங்குக்காரனும் எல்லாப் பங்

குக்காரர்களுடைய சம்மதியில்லாமல் நீக்கிவிடக்கூடாது, மேலும்யாதொரு பங்குக்காரனை கோர்ட்டாருடைய உத்தரவினாலன்றி யாதொருகாரணத்தைப்பற்றி அவனுடைய பங்குக்காரர்கள் தள்ளிவிடக்கூடாது:

(கo) யாதொரு நிஷ்கரிஷையான காலத்திற்குக் கூட்டாய்ப் பங்கு சேர்ந்திருந்தாலும் இராவிட்டாலும்யாதொரு பங்குக்காரன் இறந்துபோனால் அதினாலே அந்தக் கூட்டுப்பங்கு கலைந்துபோகிறது.

இன்னபடிக்கானால் கூட்டுப்பங்கை கோர்ட்டார் கலைத்துப்போடலாம்.

உருச. ஒரு பங்குக்காரன் வியாச்சியங் கொண்டுவந்தால், அடியில் வருகிற விஷயங்களிலே கோர்ட்டார் அந்தக்கூட்டுப்பங்கைக் கலைத்துப்போடலாம், அதாது:—

(க) ஒருபங்குக்காரனுக்கு புத்தி மாறுட்டமுண்டானால்:

(உ) வியாச்சியங்கொண்டுவருகிற பங்குக்காரன்தவிர வேறே யாதொரு பங்குக்காரன் இன்ஸால்வெண்டு கடன்காரர்களைக்குறித்த யாதொரு சட்டப்படி இன்ஸால்வெண்டாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தால்:

(ங) வியாச்சியங் கொண்டுவருகிற பங்குக்காரன்தவிர வேறே யாதொரு பங்குக்காரன் யாதொருகாரியத்தைச்செய்து அதினாலே அப்படிப்பட்ட பங்குக்காரனுடைய சகலசம்பந்தமும் மூன்றுமனிதனுக்கு சட்டசம்மதமாய் திரான்ஸ்பராயிருந்தால்:

(ச) யாதொரு பங்குக்காரன் கூட்டுப்பங்கு கந்திராக்ட்டிலே தன்னுடைய பாகத்தை நிறைவேற்ற அசக்தனாய்விட்டால்:

(ரு) வியாச்சியங்கொண்டுவருகிற பங்குக்காரன்தவிர வேறே யாதொரு பங்குக்காரன் அந்தக் கூட்டுப்பங்கைச்சேர்ந்த காரியங்களிலாவது அவனுடைய பங்குக்காரர்கள் விஷயத்திலாவது கொடியதுர்மார்க்கமாய்ப் பிரவர்த்தித்தவனாயிருந்தால்:

(சு) கூட்டுப்பங்கு வியாபாரத்தை நஷ்டப்பட்டே நடத்துவதாயிருந்தால்.

வியாபாரம் நடத்தக்கூடாததானால் கூட்டுப்பங்கைக்கலைத்துப்போடுவது.

உருரு. கூட்டுப்பங்கு வியாபாரமானது சட்டப்படி நடக்கக் கூடாததாயிருந்தால், அந்தக் கூட்டுப்பங்கு சகல விஷயங்களிலும் கலைத்துப் போடப்படுகிறது.

நிர்னயித்துக்கொண்ட காலம் கழிந்தபின்பு நீட்டிக்கப்பட்ட கூட்டுப்பங்கைச்சேர்ந்தபங்குக்காரர்

உருசு. ஓர் நிஷ்கரிஷையான காலத்திற்கு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கூட்டுப்பங்கானது அந்த கெடுவுகாலம் கழிந்தபின்பு நடத்தப்பட்டால், பங்குக்காரர்களுடைய சுதந்தரங்களும் பொறுப்புகளும், விரோதமான யாதொரு உடன்படிக்கை யிலலாதபட்சத்தில், யாதொரு பங்குக்காரனுடைய இஷ்டத்தின்

களின் பாத்தியதையும் கடமையும்.

பேரில் கலைத்துப்போடத்தக்க கூட்டுப்பங்குக்கு அப்படிப்பட்ட சுதந்தரங்களும் பொறுப்புகளும் சம்பந்தப்படுகிறமட்டிலே அந்தகெடுவுகாலம் கழிந்தபோது எப்படியிருந்ததோ அவ்வாறேயிருக்கும்.

பங்குக்காரர்களுடைய பொதுவான கடமைகள்.

௨௫௭. பங்குக்காரர்கள் கூட்டுப்பங்கு வியாபாரத்தை அதிமேலான பொதுப்பிரயோஜனத்திற்காக நடத்தவும், ஒருவருக்கொருவர் நியாயமாயும் நம்பிக்கையாயுமிருக்கவும், கூட்டுப்பங்கைச்சேர்ந்த சகல காரியங்களையுங்குறித்து உண்மையான கணக்கையும் பூர்த்தியான சங்கதியையும் யாதொரு பங்குக்காரனுக்காவது சட்டசம்மதமான அவனுடைய பிரதிநிதிகளுக்காவது தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கூட்டுப்பங்கைச்சேர்ந்த யாதொரு காரியத்தினாலுண்டாகும் லாபத்தைவியாபாரக் கூட்டத்திற்குச் சேர்பிக்கவேண்டியது.

௨௫௮. கூட்டுப்பங்கைச்சேர்ந்த காரியத்தினாலுண்டாகும் யாதொரு பிரயோஜனத்தை யாதொரு பங்குக்காரன் அந்தவியாபாரக்கூட்டத்திற்குச் சேர்ப்பிக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) ஏ - பி - சி - என்கிற மூவரும் வர்த்தகத்தில் பங்குக்காரர்கள் - ஏ - பி - என்பவர்களுக்குத்தெரிவிக்காமல் - சி - என்பவன் கூட்டுப்பங்கு வியாபாரம் நடக்கிற வீட்டிற்குத் தன்னொருவனுடைய பிரயோசனத்துக்காகவே குடிக்கூலி உடன்படிக்கை பெற்றுக்கொள்ளுகிறான். ஏ - என்பவனும் - பி - என்பவனும் தங்களுக்கு இஷ்டமானால் அந்தக்குடிக்கூலி உடன்படிக்கையின் பிரயோசனத்தில் பாகங்கொள்ள அர்ஹராளாகிறார்கள்.

(b). ஏ - பி - சி - என்கிற மூவரும் பொம்பாய்க்கும் லண்டனுக்கும் வியாபாரம் நடத்துகிற வர்த்தகர்களாகக் கூட்டுப் பங்காய்ச் சேர்ந்து வியாபாரம் நடத்துகிறார்கள். லண்டனிலிருக்கிற வர்த்தகனாகிய - டி - என்பவன் பேருக்கு தங்கள் சரக்குகளை அனுப்புகிறார்கள். அவன் அந்த சரக்கின்பேரில் தனக்குக் கிடைக்கிற கமீஷனில் ஓர் பாகத்தை அந்த சரக்கு தன் பேருக்கு வரும்படி - சி - என்பவன் செய்ததற்குப் பிரதிபலனாக, சி - என்பவனுக்கு ரகசியமாய்க் கொடுக்கிறான். சி - என்பவன் தான் அப்படி பற்றிக்கொள்ளுகிற பணத்தை அந்த வியாபாரக்கூட்டத்திற்குச் சேர்ப்பிக்கக்கடவன்.

போட்டியாய் வியாபாரம் நடத்துகிற பங்குக்காரன்வர்த்தகக் கூட்டத்துக்கு உத்தரிப்பது.

௨௫௯. யாதொரு பங்குக்காரன் மற்றப் பங்குக்காரர்களுக்குத் தெரிவிக்காமலும் அவர்களுடைய சம்மதியில்லாமலும்; அந்த வியாபாரக் கூட்டத்தைச்சேர்ந்த வர்த்தகத்திற்குப் போட்டியாகவாவது பாதகமாகவாவது யாதொரு வியாபாரத்தை நடத்தினால், அப்படிப்பட்ட வியாபாரத்தில் கிடைக்கிற சகல லாபத்தையும் அவன் அந்த வியாபாரக் கூட்டத்திற்குச் சேர்ப்பிக்க வேண்டியது, மேலும் அதினாலே யாதொரு நஷ்டமுண்டானால் அதை அந்த வர்த்தகக் கூட்டத்திற்குக் கட்டிக்கொடுக்கவேண்டியது.

வியாபாரக்கூட்டத்தில் மாறுதலுண்டாவதினாலே தொடர்ச்சியாய் நடக்கிற பிணையை ரத்துசெய்வது.

௨௬௦. ஒரு வியாபாரக்கூட்டத்தைச்சேர்ந்த காரியங்களின் விஷயத்தில் ஒரு வியாபாரக்கூட்டத்திற்காகிலும் மூன்றாமனிதனுக்காகிலும் கொடுக்கப்பட்டதாய் தொடர்ச்சியாய் நடக்கிற பிணையானது, விரோதமான உடன்படிக்கையில்லாதபட்சத்தில், எந்த வியாபாரக் கூட்டத்திற்கு அல்லது எந்த வியாபாரக் கூட்டத்தைச்சேர்ந்த காரியங்களின் விஷயத்தில் அப்படிப்பட்ட பிணை கொடுக்கப்பட்டதோ அந்த வியாபாரக்கூட்டத்தின் ஏற்பாட்டிலே யாதொரு மாறுதலுண்டானால், அதினாலே இனி நடக்குங் காரியங்களைக்குறித்து ரத்தாய்ப்போகிறது.

இறந்துபோன பங்குக்காரனுடைய ஆஸ்தியானதுபின்னிட்ட பொறுப்புகளுக்கு உத்தரிப்பதல்ல,

௨௬௧. இறந்துபோன யாதொரு பங்குக்காரனுடைய ஆஸ்தியானது, வெளிப்படையான உடன்படிக்கை இல்லாதபட்சத்தில், அவனிறந்தபின்பு அந்தவர்த்தகக் கூட்டத்தாருக்கு நேரிட்ட யாதொரு பொறுப்பைக்குறித்து உத்தரிக்கதக்கதல்ல.

கூட்டுப்பங்கைச்சேர்ந்த கடன்களையும் பிரத்தியேகமான கடன்களையும் செலுத்துவதைக்குறித்து.

௨௬௨. கூட்டுப்பங்கு நிமித்தஞ் செலுத்தவேண்டிய கூட்டான கடன்களும் யாதொரு பங்குக்காரன் கொடுக்கவேண்டிய பிரத்தியேகமான கடன்களுமிருந்தால், கூட்டுப்பங்கைச்சேர்ந்தசொத்தை அந்த வியாபாரக் கூட்டத்தின் கடன்களை செலுத்துவதற்கு முதலில் உபயோகிக்கவேண்டியது, ஏதாவது மீதியிருந்தால் பின்பு அந்தந்த பக்குக்காரனுடைய பாகத்தை அவனவனுடைய பிரத்தியேகமான கடனுக்காவது செலுத்தவேண்டியது அல்லது அவனுக்காவது செலுத்திவிடவேண்டியது. யாதொரு பங்குக்காரனுடைய பிரத்தியேகமான சொத்தை அவனுடைய பிரத்தியேகமான கடன்களைச் செலுத்துவதற்கு முதலில் உபயோகிக்கவேண்டியது, பின்பு மிகுதி ஏதாவதிருந்தால் அந்தவியாபாரக்கூட்டத்தின் கடன்களைச் செலுத்த உபயோகிக்கவேண்டியது.

கலைந்துபோனபின்பு பங்குக்காரர்களுடைய சுதந்தரமும் பொறுப்பும் அப்படியேயிருப்பது.

௨௬௩. கூட்டுப்பங்கு கலைந்துபோனபின்பு, பங்குக்காரர்களுடைய சுதந்தரங்களும் பொறுப்புகளும் கூட்டுப்பங்கு வியாபாரத்தை முடிவுசெய்வதற்கு அவசியமான சகலகாரியங்களிலும்முன்போலவே நடந்துவருகிறது.

பங்குகள் கலைந்துபோவதைக்குறித்த அறிக்கைகள்.

௨௬௪. ஒரு வியாபாரக்கூட்டம் கலைந்துபோவதைக்குறித்து பகிரங்கமாய் விளம்பரஞ் செய்யப்பட்டிராத பட்சத்தில், அது கலைந்துபோவதைக்குறித்து அந்தவியாபாரக்கூட்டத்தோடு வர்த்தகஞ்செய்கிறவர்களுக்கு அறிக்கையா யிருந்தாலொழிய, அது கலைந்துபோவதினாலே அவர்களுக்கு பாதகமுண்டாகமாட்டாது.

உகூ௫. கூட்டுப்பங்கு அற்றுப்போனபின்பு, விரோதமானயாதொரு கந்திராக்ட்டு இல்லாத பட்சத்தில், அந்தந்த பங்குக்காரனுவது அவனுடைய பிரதி நிதிகளாவது அந்த வியாபாரக்கூட்டத்தின் வர்த்தகத்தை முடிவுசெய்யும்படிக்கும் அதின்கடன்களைச் செலுத்துவதற்கு ஏற்பாடுசெய்யும்படிக்கும் மிகுதியை பங்குக்காரர்களுடைய பங்காச்சாரம் பகிர்ந்து கொடுக்கும்படிக்கும் கோர்ட்டாருக்கு மனுவுசெய்து கொள்ளலாம்.

கூட்டுப்பங்கு அற்றுப்போனபின்பு வர்த்தகத்தை முடிவுசெய்யும்படி கோர்ட்டாரைக் கேட்டு கொள்வதற்கு பங்குக்காரர்களுக்குள்ள பாத்தியதை.

விவரம்—இந்தப்பிரிவிலே கோர்ட்டென்பது யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அந்த வியாபாரக்கூட்டத்தின் வர்த்தகம் நடக்கிற இடமாவது பிரதான இடமாவது இருக்கிறதோ அந்த டிஸ்திரிக்ட்டு ஜட்ஜியினுடைய கோர்ட்டுக்குக் கீழ்படாத கோர்ட்டென்று அர்த்தமாகும்.

உகூகூ. வரையறையான பொறுப்புள்ள கூட்டுப் பங்குகளையும் சட்டப்படி சேர்ந்திருக்கிற கூட்டுப்பங்குகளையும் கூட்டாகமுதற்பணம் வைத்திருக்கிற ஜாயிண்டு ஸ்டாக் கம்பேனிகளையும் போன்ற விசேஷமான கூட்டுப்பங்குகள் அதுகளைக்குறித்து அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற சட்டப்படி ஒழுங்காய் நடத்தப்படும்.

வரையறையான பொறுப்புள்ள கூட்டுப்பங்குகளும் சட்டப்படி சேர்ந்திருக்கிற கூட்டுப்பங்குகளும், ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளும்.

ஷிடியூல்.

ரத்துசெய்யப்பட்ட சட்டங்கள்.

ஸ்ட்டாட்டியூட் என்னும் சட்டங்கள்.

ஸ்டாட்டியூட் ஆக்ட்டின் வருஷமும் லக்கமும்.	பெயர்.	இவ்வளவு ரத்து.
உ-வது சார்லஸ் ஆளுகையின் உகூ-ஸூ த்து ஸ்ட்டாட்டியூட், கூ-ம் அத்தியாயம்.	மோசங்களையும் பொய்ப் பிரமாணங்களையுய் தடுப்பதற்கான ஆக்ட்டு.	க, உ, கூ, ச, கஎ-வது பிரிவுகள்.
விக்டோரியா அவர்களுடைய ஆளுகையின் கக-வது கஉ-வது-ஸூ த்திய ஸ்ட்டாட்டியூட், உக-ம் அத்தியாயம்.	இந்தியாவிலே இன்ஸால்வெண்டு கடன்காரர்களைக்குறித்த சட்டங்களைத் திருத்தி ஒன்றுய்ச்சேர்ப்பது.	சஉ-வது பிரிவு.

ஆக்ட்டுகள்.

ஆக்ட்டின் வருஷமும் லக்கமும்.	பெயர்.	இவ்வளவு ரத்து.
கஅ௲சஂ-ஸூ கங-வது ஆக்ட்டு.	இங்கிலீஷ் லாப்படி நடத்தப்பட்ட விஷயங்களில் ஈஸ்டிண்டியாகம்பேனியாருடைய ராச்சியங்களுக்கு ச-வது ஜார்ஜினுளுகையின் கூ-வதுவருஷத்து ஸ்ட்டாட்டியூட் கூச - ம் அத்தியாயத்தினுலே மாற்றித்திருத்தப்பட்டபடி ச-வது ஜார்ஜினுளுகையின் ச-வது வருஷத்து ஸ்ட்டாட்டியூட் அகூ-ம் அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளை வியாபிக்கச்செய்வதினுலே வியாபார காரியஸ்தர்களைக்குறித்த சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட்டு.	முழுவதும்.

ஆக்ட்டுகள்.—(தொடர்ச்சி.)

ஆக்ட்டின் வருஷமும் லக்கமும்.	பெயர்.	இவ்வளவு ரத்து.
௧௮௪௦ ௵ ௧௪-வது ஆக்ட்டு.	இங்கிலீஷ் லாப்படி நடத்தப்பட்ட விஷயங்களில் ஈஸ்டிண்டியா கம்பேனியாருடைய ராச்சியங்களுக்கு ௪-வது ஜார்ஜினுடைய ௯-ம் வருஷத்து ஸ்ட்டாட்டியூட் ௧௪-ம் அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளை வியாபிக்கச் செய்வதினாலே சில வாக்குத்தத்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஊர்ஜிதப்படுத்துவதற்கு எழுத்துமூலமான யாதாஸ்து அவசியமென்கிற ஆக்ட்டு.	முழுவதும்.
௧௮௪௪ ௵ ௨௦ வது ஆக்ட்டு.	இங்கிலீஷ் லாப்படி நடத்தப்பட்ட விஷயங்களில் ஈஸ்டிண்டியா கம்பேனியாருடைய ராச்சியங்களுக்கு இந்த ஆக்ட்டினாலே திருத்தப்பட்டபடி விக்டோரியா அவர்களுடைய ஆளுகையின் ௫ வது-௬-வது வருஷத்து ஸ்ட்டாட்டியூட் ௩௯-ம் அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளை வியாபிக்கச் செய்வதினாலே, சரக்குகள் ஒப்பிக்கப்பட்ட எஜெண்டுகளுக்கு மோசடியில்லாமல் கொடுக்கப்பட்ட முன்பணத்தைக்குறித்த சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட்டு.	முழுவதும்.
௧௮௪௮ ௵ ௨௧ வது ஆக்ட்டு.	பந்தயங்களை விலக்குவதற்கான ஆக்ட்டு.	முழுவதும்.
௧௮௫௫ ௵ ௩-வது ஆக்ட்டு.	பில்ஸ் ஆவ் எக்ஸ்சேஞ்சி என்னும் உண்டிகளைக்குறித்து சுருக்கமானநடவடிக்கை நடத்தும்படி நிபந்தனை யேற்படுத்துவதற்காகவும், பிரிடிஷ் இந்தியாவின்வர்த்தகசட்டத்தை சிலவிஷயங்களிலே திருத்துவதற்காகவும் உண்டான ஆக்ட்டு.	௯-வது ௧௦-வது பிரிவுகள்.
௧௮௫௫ ௵ ௧௫ வது ஆக்ட்டு.	இந்தியாவிலே வியாபாரத்தில் பங்காயிருப்பதைக்குறித்த சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட்டு.	முழுவதும்.
௧௮௫௭ ௵ ௮-வது ஆக்டுட்.	இந்தியாவிலே குதிரைப் பந்தயத்தைக் குறித்த சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட்டு.	முழுவதும்.

☞ *Please intimate to your Official friends.*

READY FOR SALE.

IN ENGLISH.

	Rs.	As.	P.	
The **Indian Evidence Act,** No. 1 of 1872, with the **Amendment Act. 19 of 1872,** with copious Index	1	4	0	Inclusive of Postage.
The **Code of Criminal Procedure, Act** No. X of 1872, with copious Index	3	0	0	
The **New Indian Registration Act,** No. VIII of 1871, with copious Index	0	14	0	
Do. Limitation Act, No. IX of 1871, with copious Index	0	14	0	
The **Contract Act or Act** No. IX of 1872	1	12	0	
Supplement to the Standing Orders of the Board of Revenue for 1871	0	8	0	

Gentlemen requiring any of these are requested to apply as early as possible to the undersigned, with a remittance of their value either in currency notes, money order, or postage stamps of only half and one anna value, with an addition of an anna for each rupee on account of discount, as only a limited number of copies has been struck off. Orders should always be accompanied with remittance, or half of the parcel rate should be borne by purchasers.

Copies once sent to purchasers will not be received back on any account. Application to be made for the exact number of copies required.

If reply or an acknowledgment is required, an Half anna label should be forwarded to prepay the same.

Advantage to Purchasers.

One copy will be given free of charge if Ten (10) copies are purchased by one party and at the same time.

Application to be made to

C. MOONESAWMY MOODELLY.

Messrs. MASELAMANEY BROTHERS,

Photographers Broadway.

MADRAS.

தமிழ்.

ரிவினியூ சட்டபுத்தகம்,

இதனால் சகலமானபேருக்கும் தெரியப்படுத்துவதுயாதெனில் இப்பவும் வெளியிலிருக்கப்பட்ட தாசில்தார், டிப்டி தாசில்தார், தாலூக்கா சிரஸ்ததார், இன்னம் தமிழில் ஸ்பெஷல் டெஸ்ட்டு பரிக்ஷையில் ரிவினியூவில் ஐயர் லோயர் கிரேடுக்கு போகப்பட்டவர்களுக்கு மிகவும் உபயோகமாக யிருக்கும்படியாய் ரிவினியூவைச்சேர்ந்த எல்லா சட்டங்களையும், ஆக்ட்டுகளையும், இப்பொழுது ரத்தாய்ப்போனதுகளை எல்லாம்நீக்கிவிட்டு, இன்றையதேதியில் எவ்வளவு உபயோகத்திலிருக்கின்றதோ, அதுகளை எல்லாமாத்திரம் ஒன்ருய்ச்சேர்த்து ரிவினியூகோட் என்னும் பெயர்வைத்து, இப்பொழுது முடிந்து விற்பனைக்கு தயாராயிருக்கின்றது.

இப்புத்தகத்தை மூன்றுபாகமாய் பிரித்து, முதல்பாகத்தில் சட்டங்களையும் இரண்டாம்பாகத்தில் ஆக்ட்டுகளையும், மூன்ரும்பாகத்தில் மதிராசு ஆக்ட்டுகளையும், வெவ்வேறுபாகமாய் அச்சிட்டு ஒரேபுத்தகமாய் பயிண்டாயிருக்கின்றது.

இப்புத்தகத்தை ரிவினியூபோர்ட்டாருக்கு அனுப்பித்ததின்பேரில், அவர்களுடைய அபிப்பிராயத்தை அடியில் சொல்லப்பட்டது.

ரிவினியூடிபார்ட்டுமெண்டு.

ரிவினியூ போர்ட்டில் நடவடிக்கை.

௲௮௱௭௰௨ ௵ நவம்பர்மீ ௨௨.

௲௮௱௨ ௵ முதல் ௲௮௱௭௰௨ ௵ த்திய ரத்துசெய்யாத ரிகுலேஷன்களும் சட்டங்களுமடங்கிய ரிவினியூகோடின் தமிழ்பதிப்பை அனுப்பிய ௲௮௱௭௰௨ ௵ ஆகஸ்டுமீ [illegible] யுள்ள சென்னபட்டணம் மெசர்சு. காான்ஸ்பிரதர்ஸ், என்பவர்களுடைய கடிதத்தைவாசிக்க:—

போர்ட்டாரவர்கள் யிந்தவேலையை பரிக்ஷித்ததில் வெளிவிஷயங்களுக்கு போதுமானவனாக்கும், பூர்த்தியானதாயும், இங்கிலீசுபாஷை தெரியாத ரிவினியூவுத்தியோகஸ்தர்களுக்கும், தமிழ்பாஷையில் ஸ்பெசியல் பரிக்ஷைக்குப்போகப்பட்டவர்களுக்கும் உபயோகமுள்ளதாய் காணப்படுகின்றது.

*   *   *   *

அசலுக்கு சரியான நகல்.

(Signed) H. E. STOKES,
Aq. Sub-Secretary.

காப்பி ஒன்றுக்கு தபால்கூலிஉள்பட ரூபா (௭) ஏழு யாருவது (௮) காப்பிகளுக்கு ஒரேதண்டவையில் பணம் அனுப்பிவைத்தால் ஒருகாப்பி இனுமாகக் கொடுக்கப்படும். இப்புத்தகம் அல்லாமல் அடியில்கண்ட புத்தகங்களும்அகப்படும்.

தமிழ் புத்தகங்கள்.

	Rs.	A.	P.	
போர்ட் சர்குலர் 1866௵வரைக்கும் ...	5	0	0	தபால் கூலி உள்பட
புதிய கிரிமினல் புரோசீடர்கோட்	2	8	0	
இந்துதேசத்து புதிய சாட்சி ஆக்டு ...	0	14	0	
புதிய ரிஜிஸ்திரேஷன் ஆக்டு	0	14	0	
புதிய லிமிடேஷன் ஆக்ட்டு	0	14	0	
புதிய கன்ட்ரக்ட் ஆக்ட்டு	1	8	0	
கிராமமுனிசீப்பு சட்டம்	0	14	0	

இப்புத்தகங்களில் எதையாவது ஒரு காப்பீ யொன்றுக்கு பத்துகாப்பிகள் ஒரே தடைவையில் வாங்கினால் ஒரு காப்பி இனுமாக கொடுக்கப்படும்.